I.D.R. [illegible] No. 3 [illegible]
[illegible] 77-4-77.

O+,892M.K
M77
116393

உ

ஸ்ரீராமஜெயம்

இராமநாடகமென்று

வழங்குகின்ற

# குசலவ நாடகம்

0*0

இராவணன், ஸ்ரீராமர் அரசிருத்தல்-சீதைபிரிதல்
வால்மீகிஆசிரமத்திற்பிள்ளைபெறல்
லவன்-குசலன்-யுத்தம்-அஸ்வமேதயாகம்
குசலனுக்குத்திருக்கலியாணமும், இளவரசுபட்ட
மும் அடங்கியிருக்கின்றன.

இஃது

திருவண்ணாமலை

வேங்கடாசலமுதலியார்

அவர்களால்

பரிசோதித்தபிரதிக்கிணங்க

கோகுலாபுரம்

அருணாசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சேலம்

சுப்பராயபிள்ளை அவர்களால்

கொன்னூர்

மாணிக்கமுதலியார்

கம்பெனியாரவர்களது


மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

ஈஸ்வர வரு - வைகாசிமீ.


ஐந்தாம்பதிப்பு காப்பி - ௲

ரிஜிஸ்டர் காப்பிரைட்.



உ

கடவுள் துணை.



# குசலவநாடகம்.

## விநாயகர்தோத்திரம்.

காப்பு.

வெண்பா.

தவநாடகத்தவர்கடாயினிதுபோற்றுகுச *
லவநாடகத்தமிழியம்புதற்குச் சிவனருளும் *
அடரவப்பூணுடையானன்பிணுதலைவங்கரன்றன் *
குடலையிற்றூடுதலத்தால் *

முருகர் துதி-திபிதை.

மயிற்பரியமர்ந்தேதெய்வமயிலொருபுறத்திற்கொஞ்ச *
மயிற்குறவள்ளிநாட்டவடிவழகொருங்கேகொண்டு *
மயிர்ச்சமர்புரியும்வஞ்சவசுரசாசரரைமாய்க்கு *
மயிற்கரத்தணிந்தவேலரருள்பதந்துதித்துவாழ்வாம் *

சங்கரர் துதி-திபிதை,

பூமுடிச்சுமந்தசேடன்புகழுஞ்சிவனார்கொன்றைப் *
பூமுடிபுனைந்தவீசன்புரமொருமூன்றுஞ்செற்றோன் *
பூமுடிதிருமாலொன்றாய்ப்புணர்ந்தவெம்பெருமான்பாதப் *
பூமுடிதரித்தேயானும்புகலுவேனிசையத்தானே *

திருமால் துதி-திபிதை.

மாகரங்கூப்பித்துதித்துமாணடியிற்சேவிக்கமகிழ்ந்தன்பாலே
மாகரங்கொண்டெடுத்தன்னுடன்கொஞ்சுமாகுணத்தோன்றத்
தேமுன்னாள், மாகரத்தைமுடிமிசைக்கொண்டுரைசொலவந்தரு

விக்கிரசாகரத்தில்,மாகாந்தவெனப்பணியபரிந்தமுதமளிக்கவென்
றுள்வணங்குவேனே, *

பார்வதி துதி திபிதை,

குலிசனருமகளெனுநற்குயின்மொழியாள் மாமிமலைக்குமாரியாம்
வலிசலனக்கடல்படியுமடமைதவிரடியர்தமைவளுவிற்காக்குந்த
மலிசடையவள்ளல்பரசிவனிடதுபாகத்தேவயங்குந்தூய *
கலிசதங்கைப்பதசரணக்கமலமுடிமிசைக்கணிபுக்கவசந்தானே *

இலக்குமி துதி,

பின்முடுகுவெண்பா.

நெஞ்சமலர்மீதினித நின்றுசுகபோகநல *
மிஞ்சவுதவித்தருளவேண்டுமே கிஞ்சுகநேர் *
சொற்புகலுமைக்கணுயர் சொற்கபதமுற்றிலகு *
விற்பனமுகுந்தனுராமின் *

சரஸ்வதி துதி திபிதை

வல்லிநான்கணிடையாளெங்கள்மறைக்கொடிகலைகளாய்ந்த *
வல்லிவெண்சலமுசற்ற மலர்க்கொடிமறையோருவின் *
வல்லிபெண்டிருவாமின்னற் கொடிசரஸ்வதிபதச்செவ் *
வல்லியெம்முடிமேற்சூடி வணிபெறவன்றருவேனே *

குருதுதி-கொச்சகம்,

பாசமிகும்ராஜர்மிகப் பரவிநிதம்போற்றிசெயும் *
வாசமிகும்ஸ்ரீராமர் மைந்தனெனவேயுதித்த *
தேசுமிகுங்குசலவன்றன் றிகழ்கதையைநாடகமாய்ப் *
பேசுதற்குக்குரவனடி பிரியமுடனேபணிவாம் *

அவையடக்கம்-திபிதை,

சந்தமிலக்கணத்தோடிலக்கியத்தின் *
சாரமுறும்ஆரணங்களாகமங்கள் *
பந்தமிகுஞ்சோதிடங்கள்ஜோசியங்கள் *
பழுதின்றிக்கற்றபெரியோர்கள்முன்னே *
சுந்தரஞ்சேர்குசலவன்றன்நாடகத்தைச் *
சுதனன்னையப்பன்முனந்துள்ளியாடி *
அந்தமிகுமதலைச்சொற்கூறும்வண்ணம் *
ஆடினோனவர்தாட்கொண்டாடினேனே. *

முருகர்-வணக்கம்-தரு-இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்

பல்லவி.

வேலாவுனைநம்பினேன்-அசுரர்குல - காலாவுனைநம்பினேன்

அநுபல்லவி.

வேலாவுனைநம்பினேன்-வேறுவினைதராமல் *
சீலாவள்ளிதெய்வானைலோலாபிழைவாராமல் (வேலா)



சரணங்கள்.

பத்தர்கள்பணியாதா அடியவர்-சித்தமகிழு நீதா
உத்தமகுரு நாதா வறுமைபிணி யற்றிடவருள்போதா
முத்தமிழ்பாடத்தெரியாதமூடர்வாய்க்
குற்றநவின்றாலுங்கொண்டருள்செய்குவாய் (வேலா)

சங்கரியருள்பாலா வஞ்சகரைச் சங்கரித்திடுமேலா
இங்கிதபரி பாலா தேவர்களிதையத்துதய சீலா
திங்களணிந்தஅரன் செவியிற்பிரணவத்தை
மங்காமலுச்சரிக்கும் வானேயருள்தவத்தை (வேலா)

பரமசிவன்வணக்கம்-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்

பல்லவி.

சம்போசதாசிவ-சம்போசதாசிவ-சம்போசதாசிவ-சம்போசதா.

அநுபல்லவி:

சம்போஅரகர தவபுரகர
துங்கசிதாகர தேவதிவாகர (சம்போ)

சரணங்கள்.

கங்கைபண வாளா-மறலியையுதைதாளா
பொங்கரவணிதோளா புனிதகங் காளா (சம்போ)
மானுமழுவு-மலர்க்கையிலேந்திய
மாதவனேசிவ-போதகனே (சம்போ)
வெள்ளிவிடைமீதில்-மெள்ளநடந்திடுங்
கள்ளமறவுட-னுள்ளவனே (சம்போ)
வாசாகயிலையில்-வசாபிரகாசா
நேசாவனுதினம்-வாசகனே (சம்போ)
காடிமுனிவோர்கள்-நாடித்தொழுவோர்க்கு
காய்த்தவனே-கிருபை-பூத்தவனே (சம்போ)
அத்தியுரித்தருள் வித்தகனேதினம்
பத்தியனுக்கிரகம்வைத்தருள்வாய் (சம்போ)
பொங்கியகங்கையுந் திங்களுங்கொன்றையும்
பூண்டவனே யென்னை யாண்டவனே (சம்போ)
காமன்றனைச்சுட்டு மாமன்றனைவெட்டும்
சூத்திரனே திரி நேத்திரனே (சம்போ)
ஆலந்தனைத்தின்றும்காலன்றனைவென்றும்
அம்பரனேநற் றிகம்பரனே (சம்போ)

பிள்ளைநகர்வாழும் புலிநகங்காளா
பொற்கொடியம்பிகைபோற்றுங்குருனா (சம்போ)

நாட்டை-தரு-தாளம்-திரிபுடை.

கண்ணிகள்.

ஜெயஜெயவம்பிகை நாதா-ஜெயஜெயவும்பர்கள்போதா
ஜெயஜெயவன்பர்கள் நீதா-ஜெயஜெயகண்ணியபாதா
ஜெயஜெயசுந்தரி பாலா-ஜெயஜெயகுஞ்சரி லோலா
ஜெயஜெயசம்மர சீலா-ஜெயஜெயசெவ் வேலா (ஜெய)
ஜெயஜெயகுசலவராஜன்-ஜெயநாடகந்தன்னை
ஜெயஜெயவென்றேநாடி-ஜெயஜெயவென்றேபாட ஆ - ஆ
ஜெயஜெயவெண்கமலம்பிகை ஜெயஜெயவென்றேவிளங்கும்
ஜெயஜெயசரஸ்வதியே-ஜெயந்தருகத்தனையே. (ஜெய)

மங்களம்.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடை-தாளம்.

பல்லவி.

மங்களம்-ஜெயமங்களம்-சுபமங்களம்

அநுபல்லவி.

அங்குசபாசர்க்கும் ஆறுமுகவர்க்கும்
அருள்தந்திடு சங்கரர்க்கும்
அழகுற்றிடு முமையவளுக்கும்(மங்களம்)

சரணங்கள்.

சங்குசக்கரங்கையிற் றரித்தநெடுமாற்கும்
சகமுற்றுந் துதிபெற்ற தாயார்திருவிற்கும்
பொங்குங்கலைமகட்கும் புலோமிசைமுதலோர்க்கும்
புகழும்பன்னிருவர்க்கும் போதத்தபோதனர்க்கும்
பொற்புற்றிடு புலவர்களுக்கும்
புகழ்பெற்றிடு தலைவர்களுக்கும் (மங்கள)
அண்டமெங்குனும்புக ழார்ந்தகுசலவர்க்கும்
ஐயர்வால்மீகர்க்கும் அம்பரத்தவர்கட்கும்
மண்டலத்தவர்கட்கும் மறையவர்தங்கட்கும்
வாழ்த்தும்ஆரணத்திற்கும் வளருமாகமங்கட்கும்
வந்திப்பொடு மன்னவர்கட்கும்
வளமாயிதைச் சொன்னவர்கட்கும் (மங்கள)
அம்புவியினிலிதை அழகாயாடுபவர்க்கும்
அகமிகமகிழ்ந்தோங்கி அன்பாய்ப்படிப்பவர்க்கும்



சம்பிரமதாயிருந்து தயவாய்க்கேட்பவர்கட்கும்
தாம்பூலத்துடனொரு தக்ஷிணைதருவோர்க்கும்
தக்கதாம்சௌபாக்கியஞ் சேருமே
தனகனகமுண்டாகும் பாருமே (மங்களம்)

விக்நேஸ்வரவணக்கம்-இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

கண்ணிகள்

கோதண்டராமா-கோதண்டராமா ✻
கோதண்டரவிகுல-கோதண்டராமா ✻

மூவருமோருருவாகி நின்றீரே
முத்தித்தசரதன்மைந்த னென்றீரோ (கோதண்ட)
தேவர்கள்வல்வினைதீர்க்க வந்தீரோ
ஜெகதலம்போற்றியராம னென்றீரோ (கோதண்ட)
கோசிகன்வேள்வி முடிக்க வந்தீரோ
கோலதாடகைதன்னைவென்றுநின்றீரோ (கோதண்ட)
கல்லைப்பெண்ணாக்கியேசொல்லி நின்றீரோ
காதல்ஜனகன்றனில்லை யென்றீரோ (கோதண்ட)
வல்லிசீதைதன்னைமணங்கள் செய்தீரோ
வாகாயயோத்தியில்வந்து நின்றீரோ (கோதண்ட)
மாதாமொழியால்வனங்கள் சென்றீரோ
வனத்திற்கந்தமூலந்தின்று வென்றீரோ (கோதண்ட)
சூதானவாலியைக்கொல்ல நினைந்தீரோ
சுக்கிரீபனுக்குமகுடந் தந்தீரோ (கோதண்ட)
வாதானராவணன்மாள வென்றீரோ
மங்கைசீதைசிறைமீட்டு விட்டீரோ (கோதண்ட)
நாதாசரணம்விநோதா சரணம்
நான்மறைபோற்றியபாதா சரணம் (கோதண்ட)
ஐயாசரணம்மெய்யா சரணம்
ஆலிலைமேற்றுயில்செய்யா சரணம் (கோதண்ட)

கதையின்வரலாறு - சிந்தைகள்.

ராமருமயோத்திதன்னில் ரசகன்றன்வார்த்தைகேட்டு ✻
தாமிஷமில்லாமற்றுன் தம்பிமார்களையழைத்து ✻
காமியஞ்சீதைதன்னைக் காட்டினில்விடுமென்றார் ✻
பூமியின்மகளார்தன்னைப் பூவனந்தனிலில்விட்டார். ✻

மாலிட்டதேவியான மகாலக்ஷ்மிசீதைதானும் *
கோரமாம்வனத்தில்விட்டகுணமயிலுற்சவித்திருக்க *
வால்மீகரவ்வனத்தில்வந்துலட்சுமியைக்கண்டு *
சீலமாமாசிரமத்திற் செயனுடனழைத்துப்போனார் *
போயுருஞ்சீதைதானும் புத்திரனைப்பெற்றநாளில் *
மாயவனுருவினுமேல்வால்மீகர்பேர்குறித்து *
ஆயுகவலவனெனவே யழைத்திடும்மாவென்று *
ஆயுகவில்வின்வித்தை அவர்தமக்கோதிவைத்தார் *
அப்படிவனத்திருக்க அயோத்தியில்ராமசந்திரர் *
செப்பமாயகவயாகஞ் செய்யவேவேணுமென்று *
கொப்பெனக்குதிரைதன்னைக் குணமுடன்விட்டபோது *
நற்பதிவனத்தைநாடி நண்ணியதந்தவஸ்வம் *
வந்திடுங்குதிரைதன்னை வாழையிற்சேர்த்துக்கட்டி *
முந்தவேசேனைதன்னை முறியவேசிறதடிக்க *
சந்தமாய்லவனைத்தேரிற் சத்துருக்கர்பிடித்துக்கட்டி *
இந்திரர்முனிவர்பார்க்க பேகிறாரயோத்திநோக்கி *
சடுதியிற்குசலனீதச் சத்துருக்கனைசெயித்து *
முடுகிலட்சுமணர்பரதர் முடியுள்ளராமரோடும் *
படைதனில்வீழ்ந்தபோது பரிவில்வால்மீகர்வந்து *
கடுகியேயெழுப்பிவிட்ட கதைதனைப்பார்டுவோமே *

விநாயகர்வருகிறபோது இயிதை

மூஷிகந்தன்மேலதிமுகக்களிமுகனுட்கொண்டு *
பாசமாயன்பர்மீதிற் பரிவுடனிருடைசூர்ந்து *
நேசமாயாள்வதற்கு நீகரில்லைகைலாசவாச *
மாகிலாயிசரீனவ வைங்கரர்வருகின்றாரே *

விநாயகர்-வருகிற-தரு இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி:

நிர்த்தகணபதிவந்தார்-மூஷிகமேறி-நிர்த்தகணபதிவந்தார் *

அநுபல்லவி.

நிர்த்தகணபதிவந்தார் நிரோத்தவரப்ரியக
தத்திமிதத்திமிதக்கிட திக்கிட
ஜெம்தரிகுணதிரி திரிதிரியெனவே (நிர்த்தக)
தந்திமுகமுத் துதிக்கையும்வெண்கோடுந்
தொந்தியுஞ்செம்பவள மெய்யுந்தடனமாக
அங்குசபாசமிலங்கிலங்கிடத்
தங்கும்பதங்கிங்கிண் சதங்கைகளுமங்க



தந்தாகத்துதிக்க வந்துசொரூபமாய்
சிந்தைகலங்கக்குற மங்கமைய துறவே
தொந்தோந்தொந்தோந்திரிகிட திமியென
திந்தோத்திந்தோமெனவந்துவாந்தர (நிர்த்தக)

கோவில்குருக்கள்வருகிற-இயிதை

வண்ணமாமயோத்திதன்னில் வாசித்திவிநாயகர்க்குத் - - *
திண்ணமாம்பூசைசெய்யுஞ் சிவயோகத்தினிலுயர்ந்த - *
அண்ணனுநேமநிஷ்டைதனைப்பாய்முடித்துக்கொண்டு - *
பண்ணுநங்குருக்களங்கே பாங்குடன்றோன்றுவரே - - *

கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

கோவில்பூசைசெய்யும் பிராமணக் குருக்களையர்தோணினரே *
காவிக்காஷ்டமல நல்ல தரித்துப்பூணூலுந்தானசைய
மாவிக்குயில்மொழிபோல்பேசிவகையுள்ளகுருக்களுந்தோணின
நித்திகளாடிகுருக்கள்ஜெபதபநேமந்தான்முடித்து (ரே
சாத்துமலரெடுத்துக்குருக்கள் சனுதியில்வந்துந்தோணினரோ
உடுத்தகாவியுடன் பல ருத்திராக்ஷங்கள்தானசைய
வெடித்தசொல்லுடனேகு க்கள்வேடிக்கையாகவேதோணினரோ
பண்டுபலாப்பழமும் நல்ல பச்சரிசிக்கனிமாம்பழமும்
கொண்டுவிநாயகர்க்குப் பெரியகுருக்கள்வந்துதோணினரோ
அதலிச்சிறுகரும்பாம் நல்ல கற்கண்டுசீனிசர்க்கரையாம்
பதந்தருங்கரிமுகற்கு கொண்டுபடைக்கக்குருக்கள்தோணினரோ
அரியதாளையுடனேகுருக்கள் அதிகுல்லரிசியத்தானெடுத்து
கருவாட்பூசைசெய்ய குருக்கள்கடுகியேவந்துதோணினரோ
தாயார்தகப்பனுக்குக்குருக்கள்கண்மணிரொருதான்வார்த்தரியான்
ஆயாளோமுயவன் தம்பிட ஐயாகுருக்கள்தோணினரோ
சீத்தரசாஸ்திரியாம் நம்பிட சுப்புகுருக்களுந்தோணினரோ (ரோ
குத்துகாலுட்பார்ப்பான் நம்பிட கோவில்குருக்களுந்தோணின

வேறு-தரு

தண்டவன்றனை அர்ச்சனைசெய்யுந்தாண்டவகுருக்களுந் தோணின
வடையுடனதிரசமாம் நல்ல வாழைபலாச்சுளைமுக்கனியாம் (ரே
வடையுடன்றோசையைப்பொடிபொடியாய்ப்புட்டு
வகையுடன்விநியோகப்பண்ணினரே
மாட்டியவகைதனில்குடலைமல்லிகையாய்பலமுல்லையுடன்
கோட்டியகரிமுகநாதற்குப் படைத்திடகுருக்கள்கொண்டு வந்து
தோணினரே,ஆருக்குமில்லையென்றுகுருக்கள் அடக்கமாகக்கொண்
டுவந்துசிருடனேபந்தத்தேவடியாளுக்குத்திருட்டுத்தனமாவடை
கொடுத்தனரோ சுடகுக்காரியவள் நல்ல கன்னங்கருப்பிவளவுதனில்

கண்டுங்காணுமற்போய் வருவார் தம்கச்சிக்குருக்களுந்தோனின
ரோ! ஆண்டவன்றன்னை அர்ச்சனைசெய்யும் தாண்டவ குருக்களும்
தோணினரோ. *

குருக்கள்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

அந்தணர்போருரோ உல்லாசமாய்
அந்தணர்போருரோ

அநுபல்லவி:

அந்தணர்போருரோ சந்தனஞ்சாத்தியே
அக்குளில்பிள்ளையாரை பக்குவமாய்த்தூக்கி (அந்தணர்)

சரணங்கள்:

காதிற்கடுக்கன் கனத்துடனேயாட
கருதுமார்பில்ருத்திராட்சமணிகளைசத்திட (அந்தண)

ஆமைவடக்கிஉளுந்துமெத்தவேணும்
அன்னசத்திரொருதொன்னைநிறையவேணும் (அந்தணர்)

சோமனில்லைமேல்போர்க்கவேஷ்டிவேணும்
சும்பிச்சொருவிக்கைத்துண்டம்வேணுமென்று (அந்தணர்)

நாகரீகத்தோடுநார்மடிகட்டியே
யேகபோகத்துடனிருகைவீசிக்கொண்டு (அந்தணர்

தின்டாதேதின்டாதே! தாண்டியெட்டிபோங்கள்
வேண்டாமருகில்வந்தால் தின்டியடிப்பேனென்று (அந்தணர்)

கட்டியக்காரன்-வருகிற-திபிதை.

அட்டதிக்கெங்கும்போற்றும் அயோத்திமாநகர்க்குவேந்தன்
கொட்டமிட்டவலரவெல்லுங் கொடிஜெயிராமபத்ரா
பட்டணத்தன்னிலுள்ளபரிசனங்களுக்கிதஞ்செய்ய
கட்டியக்காரன்வந்து களறியிற்றோன்றினனே

கட்டியக்காரன்வருகிற-தரு இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

கட்டியக்காரனும்வந்தான்-ஐய்யாராமதாசவே
கட்டியக்காரனும்வந்தான்

அநுபல்லவி

கட்டியக்காரனும்வந்தான் திட்டமாயயோத்தியாளும்
நிட்சயராமராண்ணை உச்சிதச்சேவகனான (கட்டி-

சரணங்கள்

கண்டத்திற்சரப்பளியும்-கதித்தவிரல்மோதிரமும் (றே
செண்டுவாப்பதக்கங்கொண்டுசெகணகசெகணகசெகணக்வென்



கொத்துப்பதக்கம்பூண்டு கோலமாய்த்தடியுங்கொண்டு
சத்துசெய்தாலுங்களை நான்கொத்திக்கொத்திக்கொல்வேனென்று

ஓரச்சிகையுங்கட்டி உல்லாசமாய்க்கையைவீசி
கோரரூபமுங்கொண்டு கோணக்கொம்புநாமமிட்டு (கட்டி)

சட்டமாய்த்திலர்தமிட்டு சரிகைசாலுவைபோட்டு
பட்டுகம்பிபாகைசிரம் பளபளவென்றேஜொலிக்க (கட்டி)

ஆஸ்தானசந்தோஷீவருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

விந்திவிந்திக்கொண்டு வேடிக்கையாகவே *
சுந்தர ஆஸ்தான சந்தோஷீவந்தான் *
மெத்தசொக்குக்காரன் நித்தியமங்களமென்று *
சொத்தைபல்லாஸ்தான சந்தோஷீவந்தான் *
இளசானசுரக்காயை யிருதுண்டமாய்வெட்ட *
தளகர்த்த ஆஸ்தான சந்தோஷீவந்தான் *
கோவைக்கள்ளிமேலேகொழுந்துக்காய்க்குமென்று *
குறிசொல்லுமாஸ்தான சந்தோஷீவந்தான் *
பாவற்காகசப்பென்று பதமாயறிந்துசொல்லும் *
பார்புகழாஸ்தான சந்தோஷீவந்தான் *
கோணப்புளியங்காயைக் கோடாலியால்வெட்டும் *
ஆனவஆஸ்தான சந்தோஷீவந்தான் *

ஆஸ்தானசந்தோஷீசொல்-திபிதை.

நன்றுநன்றிரைச்சலிட்டு நாட்டின்மாடுகள்போல்சோற்றைத் *
தன்றுவந்துரையிட்டுத் திரிகிறீராற்றில்வாழும் *
நன்றிபோலிங்குகூட்டம் பண்ணுமற்களறிபார்த்து *
வென்றியாமேன்மைகொண்டு வீட்டிற்குப்போகுவீரோ *

தரு-இ-ம்-சங்கராபரணம்-மிசரதாளம்.

பல்லவி.

கூப்பிடாதிருங்கள் ஜனங்களே
கூப்பிடாதிருங்கள்

அநுபல்லவி.

சாப்பிட்டுவந்திரோதாம்பூலங்கொண்டுவாரோ *
சட்டமாயுட்கார்ந்துதிட்டமாய்ப்பாருங்கள் (கூப்பிடா)

சரணங்கள்.

வெட்கஞ்சிக்கிக்கெட்டு மேன்மைதனையும்விட்டு *
இக்கட்டுக்குட்பட்டு இரைச்சலேனிடுகிறீர் (கூப்பிடா)

அண்டரண்டம்புகழ் மையோத்திதனையாளும் *
மண்டலீகராமர்வருகிறார்சேர்வைசெய்வீர் (கும்பிடா)
பட்டவர்த்தனர்முதல் படைமன்னர்புடைசூழ *
திட்டமாய்த்தம்பிமார் சேனையுடனேவாரார் (கும்பிடா)

கட்டியக்காரன்சொல்-திபிதை.

அரக்கரைசெயித்தபின்பு ஸ்ரீரகுராமர்தானும் *
இரக்கமாமனுஜர்சூழ யிறைவர்கள்வந்துபோற்ற *
தரைக்குள்வாழ்மனிதரெல்லாம் சதிருடன்வந்துதாழ *
நரபதியயோத்தியாளும் ரகுராமர்வருகின்றாரே *

வசனம்.

அகோதேப்பருயென்றால் ஸ்ரீராமரானவர் தம்பிமார்களிற் ராக்ஷசாளைச் சம்மாரஞ்செய்தபிறகு ஒருநாள் அனுமார் அங்கதன் சுக்கிரீவன் சாம்புவான் முதலானவர்களிவர்கள்முதல் பதினெட்டுப்படைத்தலைவர்களும் இராஜராஜர்களும் எழுபதுவெள்ளஞ் சேனையோடு பின்னையும் அளவற்ற சேனைகளுடனே கொலுவுக்குவருகிறார் எச்சரிக்கை எச்சரிக்கை.

ஸ்ரீராமர்-கொலுவுக்குவருகிற-தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ராமர்வந்தாரே-தசரத-ராமர்வந்தாரே *

அநுபல்லவி.

ராமர்வந்தார்வெகு நேமமதாகவே *
தாமணியாடத் தடங்கையிற்சிலைகொண்டு *

சரணங்கள்:

லக்ஷ்மணர்பரதரும் சத்துருக்கருங்கூட *
இஷ்டமுடனேசூழ அஷ்டதிசையும்போற்ற (ராமர்)
சுக்கிரீவன்சாம்புவன் அங்கதனுமங்கதன்சூழ *
உக்கிரவெள்ளங்கோடி யிசைத்தவானவர்சூழ (ராமர்)
நவரத்னக்கிரீடம் ஞாயிறொளியெனவே *
அவமுத்தப்புகீர்த்தி ஜோதியனபடின்ன (ராமர்)
காவலர்சேவகர் கட்டியங்கூறவே *
மேவியதாவலர் விஜயங்கொண்டாடவே (ராமர்)
பேரிகையொலிபது வாரிபோல்திரையவே *
பூரிமேவதான வெம்பொம்பம்மென்றாடவே (ராமர்)
அண்டராவணன்றன்னைக் கண்டனஞ்செய்தபின் *
பண்டுஅயோத்திவந்து கண்டுரட்சித்திட்ட (ராமர்)
மடமயில்போலமாதர் நடனங்களாடவே *
திடமாய்மங்களஞ்சொல்லித் திருத்தியாலமேந்த (ராமர்)



கொலுவிருத்தல்-ஓரடி-தரு-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

ராஜ ராஜ ராஜ ராஜ ராஜ தசரதராஜகால்ச

சரணங்கள்.

ராமரும்லக்ஷ்மணரும் நலமுள்ளதம்பிமாரும் *
பரதரும்சத்துருக்கர் பாங்குள்ளஅனுமாரும் *
சுக்கிரீபருஞ்சாம்புவரும் சுகிர்தமுள்ளஅங்கதரும் *
மிக்கராஜர்புடைசூழ விருதுகொடிதானபதாகை *
சித்திரக்கொடிபிடிக்க ஸ்ரீராமர்கொலுவாறார் *
முத்துவெண்சாமரம்வீச மௌனமானசீதைகூட *
ரத்னசிம்மாஸனத்தில் ரகுராமர்கொலுவார் *
வெற்றியுள்ளராமரென்று மிகுசின்னந்தானமுழங்கி *
எத்திசைமன்னரும்வந்து யிணையடியைப்போற்றிசெய்ப
பத்தியுடன்முனிவர்வந்து பன்புடனேமலர்கள்தூவ(ய
அங்கவளநாட்டோர்போற்ற ஸ்ரீராமர்கொலுவாறார்
துங்கமுள்ளராஜரெல்லாஞ் சுற்றிலுமேசூழ்ந்துவர *
முடிமன்னர்புடைசூழமுழங்கிஞர்பேரிமெல்லாம் *
படைமன்னர்புடைசூழ பலவெண்சாமரம்வீச *
சேடியர்கள்சூழ்ந்துவர ஸ்ரீராமர்கொலுவாறார் *
கூடியமன்னர்சூழ கொலுவாறார்ராமபத்திரர் *

ஸ்ரீராமர்சொல்-திபிதை.

வேதமோர்நான்கும்வாழ்க விண்ணவர்மிகவும்வாழ்க *
பூதலமன்னர்தங்கள் புகழுஞ்செங்கோலும்வாழ்க *
மேதினிகுடிகள்வாழ்க விளைபலபயிர்கள்வாழ்க *
யாதொருதுயரில்லாம லியாவரும்வாழ்கத்தானே *

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபிதை.

அரியதாமரன்மனைக்கு அன்புடன்காவற்காக்கும் *
கரியநின்பலத்தையோதிக் கட்டியக்காரனேயிய
அரிதமாய்க்கொலுவில்வந்து அலங்கியநடனஞ்செய
பிரியமாய் நடனசாலைப் பெண்களைவரச்செய்வாயே *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா அதிசீக்கிரத்தில் நமது நடனசாலைப்பெண்களை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

அகிடமிக்கதனிற்செங்கோ லணிந்திடுமரசரெல்லாம் *
இஷ்டமாய்வணங்குமன்று யிணையடிபோற்றியுந்தன் *

கட்டளைப்படியேநாட்யக் கன்னியர்தம்மைநானும் *
அட்டியில்லாமலிப்போதழைப்பிப்பேனெடியிற்றனே.

வசனம்.

இராஜாதிராஜராஜபரமேஸ்வரராஜமார்த்தாண்ட ராஜவுத்தண்ட ராஜகெம்பீரா அயோத்தியாபுரிமகிபா ளுக்கு தேவரீருத்தரப்படி நடனசாலைப்பெண்களை அழைப்பிப்பேன்சுவாமி.

கட்டியக்காரன்-நடனமாதருக்குச்சொல்-கவி.

மாதர்கட்கரசே-பூதலமாளும் *
கோதிலாவரசன்-நீதிலாதழைத்தார் *

வசனம்.

அகோகேளும்நடனமாதர்களேஉங்களைஸ்ரீராமர்வரச்சொன்னார் உங்களுடையகருவிகளையெடுத்துக்கொண்டுவாருங்கள்மாதர்களே

நடனமாதர்சொல்:கவி.

இராஜாதிராஜன்-தேசமான்போஜன்
வாசகந்தனக்குப்-பேசியுமுண்டோ

வசனம்.

அப்படியேவருகிறோமையா.

நாட்டியப்பெண்கள் வருகிறபொது-திபிதை.

அயிலெனும்விழியார்திவ்ய அணிமதிமுகத்தார்கூவும் *
குயிலெனும்மொழியாரன்பற் குதவிசெவ்வேளெறு *
மயிலெனுநிறத்தரான வாசங்கொள்நடனமாதர் *
ஒயிலுடனிராமச்சந்திரர் ஒளிர்சபைவருகின்றனரே. *

வசனம்:

அகோதெப்படியென்றால் வேலாயுதத்தைப்போன்ற கண்ணையும் சந்திரனைப்போன்றமுகத்தையும் குயிலைமருட்டுஞ் சொல்லையும் மயிலைப்போன்றசாயலையுமுடைய நடனமாதர்கள்ஸ்ரீராமர்கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

நாட்டியப்பெண்கள்-வருகிறதரு-இ-ம்-புன்னாகவராளிஆதிதாளம்.

பல்லவி

நாட்டியப்பெண்களும்வந்தாரே-நடனஞ்செய்ய *
நாட்டியப்பெண்களும்வந்தாரே *

அநுபல்லவி

நாட்டியப்பெண்களும்வந்தார் ஆட்டங்கவிலுயர்ந்த
பாட்டுமத்தளங்களுடன் மீட்டும்வீணைமுழங்க *

சரணங்கள்:

கொங்கைகுடங்குலுங்கவே இருகரமதுவளையுடன் *
கோர்வைமணியிலங்கவே *
தங்கப்பதுமையென்னத் துங்கக்கலையணிந்த (நா



சோமன்முகத்தினழகும் சுதிலயைகியானங் *
சொகுசுமிருகன்னழகும் *
காமன்மருளுமிகு கனமும்படைத்தநல்ல (நாட்)
காலிற்சிலம்புகொஞ்சவே சமகமென்றுமணங் *
கமழ்ந்துநடனமிஞ்சவே *
ஆலித்தரசமெல்லாம் பாலித்துடன்மயங்க (நாட்)
திக்கிடஜெகுணகுதரிகடதிமியென *
தகதிக்கிடஜெகுணகுதரிகடதிமியென *
தக்கிடதித்திம்தளங்குதோமென (நாட்)

நாட்டியப்பெண்கள் - ஸ்ரீராமனைப் பணிகின்ற - திபிதை.

தேட்டமாய்மறைவிளங்க சீருடன்பயிர்தழைக்க *
நாட்டமாய்தருமமோங்க நவநிதிமிகச்செழிக்க *
வாட்டமொன்றன்றியாரும்வாழ்ந்திடவேயயோத்தி *
நாட்டினைக்காக்குமிராமச்சந்திரரேநின்றாட்போற்றி *

வசனம்.

இராவணசம்மாரா லட்சுமிமனோகரா நாரணகிருபாகரா ஸ்ரீரணகெம்பீரா நாகலோகத்தேவா அக்ஷயதேவா அயோத்தியாபுரி சந்திராதித்தியதுரந்தரா சகலலோகேந்திரா ஸ்ரீராமச்சந்திர சுவாமி ளுக்குசுவாமிளுக்கு.

நிர்த்தனத்தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நிர்த்தனஞ்செய்கிறோம்பாரீர்-ராமச்சந்திரரே *
நிர்த்தனஞ்செய்கிறோம்பாரீர்

அநுபல்லவி.

தத்தரிகிடதக தகதரிகிடத *
தளங்குதத்திமி தஜெங்கணத்தோமெ (நிர்த்தனஞ்)

சரணங்கள்.

சததகோடிபாஸ்கரரே தனியில்கிருபாகரரே
சாமங்களாகரரே சர்வசிவாதாரரே
தச்ஜெம்ஜெதக தரிதகணகஜெணு
தரிதகணகஜெணு ஜெககணஜெம்தரி
தரிததணுதெய் தரிதஜெணுதெய்
தரிததணுதஜெணு ததிமிதகிடதரி
தளங்குதகதிமி தஜெங்கணதோமென (நிர்த்)
ததியிதருடகண்பாரும் தற்காத்தெங்களைக்காரும்
தருமமென்பதுசேரும் தக்ஷணங்கருணைகூறும்
தாட்டுதணந்தரிதா தெய்தரிதகணந்தரிதெய்தெய்

தாட்டுதனந்தரி — தரிதனந்தரிததந்த
கிரிபுரமெரித்த மதகரியுரித்த தியாகேசா
தக்கதின்னதின் தரிதகணகஜெணு
தகுர்தச்செணுதந் திமிதக்கிடதக
தளங்குதகதிமி ததிங்கணதோமென (நிர்த்தன ஞ்)

ஸ்ரீராமர் கட்டியனுக்குச்சொல்-திபிதை.

மிஞ்சிநன்னடனஞ்செய்யு மின்விழிமாதருக்கு *
கொஞ்சிமிஞ்சுசதங்கைமுத்துக்கோர்வையுப்பதக்கமாதி
கஞ்சமென்மதிமுகத்திற் கட்டிடுஞ்சுட்டிதொங்கல் *
அஞ்சனவர்னப்பட்டு மளித்துடனனுப்வாயே *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா இங்கேநடனஞ்செய்த சேற்கெண்டையைப் போன்ற கண்களையுடைய இப்பெண்களுக்குக்காலுக்கிசைந்த சதங்கையும் முத்துதாவடம்ஆடையாபரணமுதலாகியதுங்கொடுத்து அனுப்பிவையும் பிள்ளாய்கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல் வசனம்

அப்படியேகொடுத்தனுப்புகிறேன்சுவாமி

கட்டியக்காரன்-நாட்டியைப்பெண்களுக்குச்சொல்-வசனம்

அகோகேளும் நாட்டியைப்பெண்களே உங்களுக்குநம்முடைய ஸ்ரீராமமூர்த்தி ஆடையாபரணங்களைக்கொடுக்கும்படியாய் ஆக்கியாபித்தார் அப்படியேதருகிறேன் நீங்கள்ஸ்ரீராம மூர்த்தி மகிழும்படியாய் சந்தோகும்மியடியுங்கள் பார்ப்போம்.

நாட்டியப்பெண்கள் ஸ்ரீராமர்முன் - கும்மியடிக்கிற தரு.

கும்மியடிபெண்காள்-கும்மியடி கரங் *
கூப்பியேநன்றாய்க் கும்மியடி *
நம்மையாளும் ராமமூர்த்தியை *
நாடிக்கும்மியடியுங்கடி அவரைப் *
பாடிக்கும்மியடியுங்கடி *
சந்தமிகும் அயோத்தியாபுரியையா *
சாக்ஷிசெய்திடும் பானுலகுச் *
சந்திரராமச்சந்திரமூர்த்தியைத் *
துதித்துக்கும்மியடியுங்கடிநன்றாய் *
மதித்துக்கும்மியடியுங்கடி. *
மல்லிகைமுல்லைமணங்குப் பெண்காள் கர *
ங்களைகுலுங்கவுமார்ப்பரித்து *



நல்லியராமச்சந்திரர்பாதத்தைத் *
தொழுதுகும்மியடியுங்கடி-இப் *
பொழுதுகும்மியடியுங்கடி *

கட்டியக்காரன்-நடனப்பெண்களுக்குச்சொல்-வசனம்.

ஆ-ஆ-நன்றாயிருக்கின்றது இதோமுத்தாரமோகனஆரம் வஸ்திரம் சொர்ன முதலாகியதுங் கொடுத்தேன் சலுசிசலுநடவுங்கள்.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் கட்டியக்காரா நமதுபட்டணத்திலிருக்கப்பட்ட மல்லுஜெட்டிகளை யழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன் மல்லுஜெட்டிகளுக்குச்சொல்-கவி.

ஜெட்டிகாளும்மை-திட்டமாயரசன் *
பொட்டெனவரவே-கட்டளையிட்டார் *

கட்டியக்காரன்சொல்-வசனம்.

வாரும்பிள்ளாய் ஜெட்டிகளே உங்களை நம்முடைய ஆண்டவராகியஸ்ரீராமர்அழைத்துவரச்சொன்னார்ஓடிவாருங்கள்பிள்ளாய்.

மல்லர்-வசனம்.

அப்படியே வருகிறோமையா.

ஜெட்டிகள்-வருகிறபொது-திபிதை.

கல்லிருப்புகளையெல்லாங் சரத்தில்நீராகச்செய்யும் *
வல்லவராகிவீறு மதங்கொண்டகெஜங்கள்போலே *
வெல்லவேவிருதுகட்டி யிகுராமர்கொலுவைநாடி *
மல்லுகஜெட்டிமார்கள் வாகுடன்தோன்றினரோ *

மல்லுஜெட்டிகள்-வருகிறதரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

ஜெட்டிகள்வந்தாரோ-மல்லுசெய் ஜெட்டிகள்வந்தாரோ

அநுபல்லவி.

ஜட்டிகள்வந்தார் திட்டமாயரசாளும் *
மட்டிலாராமர் பட்டணந்தன்னில் (ஜெட்டி)

சரணங்கள்.

மீசைகள்படபடென்ன மல்லர்கள் *
மேல்மீசைதுள்ளிடவே *
கோசலைராமர்முன்னே மல்லர்கள் *
கும்பிடுபோட்டுக்கொண்டு (ஜெட்டி)

கிருநாமமிட்டு மல்லர்கள் *
கிரியெனவிம்பட்டு *
டீருசதைகொழுப்பும் மல்லர்கள் *
தானுமாருகவேதான் (ஜெட்டி)
பூச்சல்லடந்தொடுத்து மல்லர்கள் *
புலியெனவேகுத்தி *
இச்சுக்குறவுடனே மல்லர்கள் *
கூச்சலாகவந்தனரோ (ஜெட்டி)

மல்லுஜெட்டிகள் -ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

கொடிபெருநீதிதன்னிற் கீர்த்திகொண்டேயகண்ட *
புடைதிரைக்கடசூழ்வையப் புரவலர்தன்னில்துஷ்ட *
அடையலர்தமையடக்கி அயோதியைக்காக்கும்வச்ர *
முடியணிராமச்சந்திர மூர்த்தியேநின்றாட்போற்றி *

வசனம்.

அகோராஜாதிராஜ ராஜகெம்பீரா ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே சரணஞ் சரணஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்-திபிதை

பரதரோசொல்லக்கேளும்பாங்குள்ள அயோத்திதன்னில்
அரசர்கள்மற்றுமுள்ளோ ரனைவருஞ்சுகமதானே *
திறமதாய்ராஜர்தங்கள் சேவகமதையெனக்கு *
விரகுடனின்னதென்று விளம்புவாய்விரைவிற்றானே *

வசனம்.

அகோவாருந் தம்பிபரதா நம்முடைய அயோத்தியாபுரி பட்டணமும் ஐம்பத்தாறுதேசமும் சேனசமுத்திரமும் குடிபடைகள் யாவரும் சுபேக்ஷமோ சொல்லுந்தம்பிபரதா.

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

கதிர்குலத்தரசர்கோவே காரணசொல்லக்கேளும் *
அதிபடகள்ளர்தம்மைத் தூக்கியேசிரந்துணிந்தோம் *
மதிபடையரசர்மூடர் வானவரிஷிகளானோர் *
மதிகதிமுலகீரேழு மன்னவாசுபேக்ஷையா *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி நம்முடைய அயோத்தியாபுரி பட்டணமும் ஐம்பத்தாறு தேசமும் சேனசமுத் திரமும் குடிபடைகள் யாவரும் சுபேக்ஷக்ஷஞ் சுபேக்ஷக்ஷஞ்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்-வசனம்.

ஆனால் நம்முடையசமுகத்திலேயிருந்து தம்பிபரதா



ஸ்ரீராமர்லக்ஷமணருக்குச்சொல்-திபிதை.

இலக்ஷ்மணசத்துருக்கா யிளையனுமாரேகேளீர் *
குலக்ஷமாயாக்கரிச்சனைக்குலத்தைநாம்வேரறுத்தோம்
துலக்கமாஞ்சனங்களெல்லாஞ் சுகமுடன்றழைக்கவேணு
மலர்க்கணைகுனிலுமே மனமகிழ்ந்திருப்பீர் *

வசனம்.

அகோவாருந்தம்பிலக்ஷ்மண சத்துருக்கா அனுமாரே நீங்களனைவருஞ்சுகமோசொல்லுந்தம்பி லக்ஷ்மணா.

இலக்ஷ்மணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

உங்கள் தன்கிருபையாலே வுகந்தநம்மயோத்திராச்யம் *
எங்கெங்குமனிதரெல்லாம் இன்பமாய்த்தழைத்துப்பின்னும்
மங்களமாகவாழ்ந்து வருகிறார்சுவாமியானும் *
இங்குந்தனருளினாலே யில்லையொருகுறைவும்போற்றி *

வசனம்.

அகோஜெகதீசா ரகுநாயகரே அயோத்தியாபுரிபட்டணம்யாவும் க்ஷேமம் உங்கள் கிருபையினாலே அடியேனுஞ்சுகந்தான் சுவாமி

ஸ்ரீராமர்சொல்-வசனம். ஆனால் நம்முடைய அருகாமையிலிருப்பீராய்-லக்ஷமணர்வசனம். மகாபாக்கியஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய விபீஷணனைஅழைப்பியும்பிள்ளாய் (கட்டியக்காரன் வசனம்) அப்படியே அழைப்பிக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-விபீஷணருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் விபீஷணரே தங்களைஸ்ரீராமமூர்த்திவரச்சொன்னார்சுவாமி (விபீஷணர்வசனம்) ஆனால்இதோவருகிறேன்

ஸ்ரீராமர்-விபீஷணருக்குச்சொல்-திபிதை.

விறுசேரிலங்கையாளும் விபீஷணசொல்லக்கேளீர் *
தேறவேயைம்பத்தாறு தேசத்தார்தரும்பணத்தைப் *
பேருளதேவதாயம் பிராமணர்தங்களுக்குந் *
கூறியேதானஞ்செய்தாற் குலமதுதழைத்துவாழ்வீர்

வசனம்.

அகோவாருந்தம்பிவிபீஷணா மன்னர்கள்தரும் பகுதிப்பணத் வேதியருக்கும் ஆலயங்களுக்கும் தருமஞ்செய்வாய் மேலும் முடைய இலங்காபுரிபட்டணம்சுபேக்ஷமோசொல்லுந்தம்பி ஷிணா.

விபீஷணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

வண்டணிநிறத்தையுள்ள மானிடவடிவையுள்ள *
தண்டுசேர்கரத்தையுள்ள தனுவினில்வலிமையுள்ள *
தொண்டனானுமிலங்கை சுகத்துடன்கேடிமமையா *
தெண்டனானுந்தன்றிவ்ய திருவடிபோற்றிபோற்றி *

வசனம்:

அகோவாருஞ்சுவாமி அப்படியேஆலயங்களுக்கும்பிராமணர்களுக்குங்கொடுக்கிறேன் அதுவுமன்றி நம்முடையலங்கையும்ஐம்பத்தாறுதேசமும் சேனைசமுத்திரமும் குடிபடைகள்யாவரும் அடியேனுந் தங்களுடையகிருபாகடாட்சத்தினுல் சுகந்தான்சுவாமி

ஸ்ரீராமர்சொல்-வசனம்.

ஆனால் நம்முடைசமுகத்திலிருந்தம்பிவிபீஷணா.

விபீஷணர்-வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி,

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்கட்டியக்காரா நம்முடையஅங்கதனை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன் அங்கதனுக்குச்சொல்-வசனம்.

அகோவாருமையாஅங்கதரோ ஸ்ரீராமமூர்த்திவரச்சொன்னாரையா

அங்கதன்சொல்-வசனம்.

இதோவருகிறேனப்பா.

ஸ்ரீராமர்-அங்கதனுக்குச்சொல்-திபிதை:

அங்கதாசொல்லக்கேளாய் ஆனதோர்கிஷ்கிந்தைராச்சியம் *
மங்களசுபேக்ஷந்தானோ வைரிபெய்கேனுமுண்டோ *
எங்குமேதானஞ்செய்தா லென்னிடசீர்மைபோலே *
பொங்கமாய்ச்செல்வமுண்டாய்ப் பூதலந்தன்னையாள்வீர் *

வசனம்.

அகோவாருந்தம்பிஅங்கதா நம்முடையகிஷ்கிந்தாபுரிபட்டணம் சுபேக்ஷமோ சொல்லும்பிள்ளாய்.

அங்கதன்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

ஜானகிசமேதரான சற்குணமாலேகேளீர் *
ஆனதோர்கிஷ்கிந்தைராச்யம் அடியேனுக்களித்தமட்டில் *



வானவர்தேசம்போல மனமதுமகிழ்ந்துவாழ்வார் *
தானவர்தேவரோதின் னுளினைசரணமையா *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி கிஷ்கிந்தாபுரிபட்டணமும் அடியேனுந் தேவரீருடையகிருபாகடாட்சத்தினுலே சுபேக்ஷந்தான்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்-வசனம்.

ஆனால்நம்முடைய அருகாமையிலிரும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைசுக்ரீபனை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி நான்போயழைத்தால் வரவில்லைசுவாமி.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அதுயேது வாலியைச்சங்கரித்த ராமபாணமிருக்கிறதென்று சொல்லும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-சுக்ரீபனுக்குச்சொல்-வசனம்.

அகோவாருமையா சுக்ரீபரோ ரகுநாயகர்வரவில்லையோவென்று கேழ்க்கச்சொன்னார் சுவாமி.

சுக்கிரீபர்சொல் வசனம்.

இதோவருகிறேனப்பா.

சுக்கிரீபர்ஸ்ரீராமரைப்பணிந்து சொல்-தரு

இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி

சரணஞ்சரணமையா ஸ்ரீராமச்சந்திரா-சரணஞ்சரணமையா.

அநுபல்லவி

சரணஞ்சரணமையா கோபாலராமா
கருணையாயெங்களைக்காத்துரட்சித்திரோ (சரணஞ்)

சரணங்கள்:

வர்னவில்லைவளைக்க வந்துமிதிலைக்கேகி
தருணையுடனேநல்ல கலியாணந்தீர்த்தோமே (சரண)

அக்ஷயரகுராமா பட்சமென்மீதில்வைத்து
ரக்ஷியுமெந்தனை அட்சயவைகுந்தா (சரண)

ஜனகன்மகள்சீதை தன்னைமணம்புணர்ந்தீர்
கனத்தஅயோத்திவந்து காத்துரட்சித்திரோ (சரண)

சுக்கிரீபர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

வண்டணிதுளபத்தானே மரகதமகுடத்தோனே *
கண்டனுனதன்பாதங்கண்களாற்காட்சிபெற்றேன் *
தெண்டிரையயோத்தியாளுந் தசரதமைந்தாயானும்
அண்டினேனுந்தன்பாதம் ஆபத்தைக்காருமையா *

ஸ்ரீராமர்-சுக்கிரீபருக்குச்சொல்-வசனம்.

அகோவாருந்தம்பி சுக்கிரீபா இந்தமோகனமாலையைத் தரித்துக்கொள்ளும்பிள்ளாய்.

சுக்கிரீபர் ஸ்ரீராமருக்குச்சொல் வசனம்.

அப்படியே தரித்துக்கொண்டேன் சுவாமி

ஸ்ரீராமர் சுக்கிரீபனுக்குச்சொல்-வசனம்.

ஆனால்நம்முடையசமுகத்திலிருப்பிள்ளாய்.

சுக்கிரீபர்சொல் வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி.

பொது திபிதை.

முனிவர்களருளினாலே மொய்குழல்சிதைகூட *
தனிவிறல்வலிமையுள்ள தம்பிமாரீவர்கூட *
அனைவரும்போற்றவந்து அயோத்திமாநகர்தன்னில்
மனமகிழ்ந்திருந்த வையகத்தரசாளும் *

இதுவுமது.

வெற்றியாம்ரவிகுலத்தில் வெகுசனைதிபட ஸ்ரீராமர் *
புத்திரனில்லார்சொர்க்கம் புகுவரோ [illegible] *
மெத்தவேசோபமாகி வியாகூலமனதிலெண்ணி *
உத்தமராமச்சந்திர குணமையாய்ப்படவிட்டாரே *

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோசெப்படியென்றால் ரகுநாயகருக்கு ஒன்றுபதினாயிரம் வருடஞ்புத்திரனில்லாமற்போனபடியினாலே புத்திரசோபம்ப டுகிறவிதங்காண்க.

ராமர் புத்திரசோபத்தால் வியசனப்பட்டு [illegible] கண்ணிகள்.

ரு-ம்-கண்டா ஆதிதாளம்

ஞாலம்புகழயோத்தியாளும் நல்மொழி[illegible]யாரிக்கு *
பாலகனில்லாதுசொர்க்கம் பாருவ[illegible]ன்னடோசொல்வீர் *
வள்ளலயோத்தியில்வாழுமான்விழி[illegible]யாரிக்கு *
பிள்ளையில்லாதுசுவர்க்கம் பெறுவதுமுன்னடோசொல்வீர் *



எத்திசைபுகழுந்திவ்ய இளங்கொடியாள்சீதையார்க்குப் *
புத்திரனில்லாதுசொர்க்கம் பெறுவதுமுன்னடோசொல்வீர்
அக்கிரமங்களாகவேதான் யரசுபதியாண்டோமோநான் *
விற்கும்விலைகுறைத்தோமோ வேதியர்பூசைதவிர்த்தோமே
ஆலமரம்வைத்திடாமலாண்பனைமரம்வைத்தோமோ *
கூலிகளைகுறைத்தோமோகுறைமரக்காளளந்தோமோநாம்
அங்காடிகூடைகளை அதிரவிலையிட்டோமோநாம் *
பங்கல்லாப்பங்குகளைப் பற்றியெடுத்தோமோநாம் *
சத்தியந்தவறித்தீதை சரசங்கள்செய்தோமோநான் *
பத்தினிமார்களுக்கோர் பழுதுகளைசொன்னோமோநான் *
வாழைமரம்வெட்டினோமோவழியில்முள்ளையடைத்தோமோநா
ஏழைபநாதிகட்குவெண்ணபழிசெய்தோமோநாம் *
நித்திரையைத்தவிழ்த்தோமோநாம் நீரிலேமணஞ்செய்தோமே
பத்தியோடுதவம்புரிந்தாற் பாலகனில்லாமற்போமோ *

ஸ்ரீராமர்-தம்பிகளுக்குச்சொல்-திபிதை.

இணைபிரியாதிருக்கு மென்னுயிர்த்துணைவரோகேள் *
குணமுடனுறையிப்போகூறுநித்திரையேசெய்வேன் *
துணையெனவிருந்துநீங்கள் தொந்தமாய்பிரிந்திடாமல்,
அணையெனக்காத்துசுற்றி யனைவருமிருந்திடீரோ *

வசனம்.

அகோவாருந் தம்பிமார்களே எனக்கானால் நித்திரைவருகின்றது ஆனகையால்நீங்கள் என்னைப்பாது காத்திருங்கள் தம்பிமார்களே.

லட்சுமணர்சொல்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

நித்திரைபோமோ-ரகுராமர்-நித்திரைபோமோ

அநுபல்லவி.

நித்திரைபோமோ திருபன்றசரதர் * 
புத்திரராகிய பூபதிரகுராமர் (நித்தி)

சரணங்கள்.

சங்கத்திலே சமைத்தபீதாம்பரம் * 
தங்கவளையிற் சொலித்துப்பிரகாசிக்க (நித்தி)

சந்திரசூரிய ரொன்றாய்விளங்கிப் * 
சுந்தரகளையிற் சொலிக்கசங்காழியும் (நித்தி)

இங்கிதமான புனுகுசவ்வாதுகள் * 
எங்குங்கமகமென் றெப்புறமும்வீச (நித்தி)

தேசத்திலுண்டான திரளான ராஜர்கள் *
பாசத்துடன்வந்து பட்சமாய்சேவிக்க (நித்தி)
காக்குமிரவிகுல தசரதமகராஜன் *
போர்க்குமகிழ்ந்த புஜபலரகுராமன் (நித்தி)
மார்க்கமதாகவே வைகுந்தவாசகர் *
பாற்கடல்மீதினிற் பள்ளிகொள்வாறுபோல் (நித்தி)
சுற்றுமுத்துநிறைப்பவளக் கால்களமைத்த *
சித்ரமணிமண்டப மெத்தையின்மீதினில் (நித்தி)
ஒன்பதினாயிரம் வருஷம்புத்திரனில்லை *
யென்பதுமனதினி லெண்ணிவிசாரமாய் (நித்தி)

துள்ளியெழுந்தாரோரகுராமருள்ளமகிழ்ந்தாரோஅவர்,
சொற்பனங்கண்டலவோரகுராமர்திடுக்கிட்டெழுந்தாரோ *

ஸ்ரீராமர்.சொற்பனங்கண்டு லட்சுமணருடன்சொல்லுகிற-தரு
இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டேனடா லக்ஷுமணநானுஞ் *
சொற்பனங்கண்டேனடா *

அநுபல்லவி.

சொற்பனங்கண்டேனே சேர்திபிலேநானும் *
பற்பலவாறுகப் பான்மையதாயிப்போ (சொற்ப)

சரணங்கள்:

அன்னமெனுஞ்சீதை ஐத்துமாதங்கெர்ப்பம் *
மன்னியவயிற்றினில் வலதாயிருக்கவே (சொற்ப)
கோலமுறுஞ்சீதை கொஞ்சிகொஞ்சிக்கொண்டு *
நீலவனம்பார்க்க நின்றுவரங்கேட்கக் (சொற்ப)
வர்னமுலையாளும் வனம்பார்க்கவேணுமென்று *
உன்னதமாகவேயொருவரங்கேட்கவே (சொற்ப)

பொது-திபிதை.

துயிலிற்றுயிலுமாயன் ஹரிரகுராமனானும் *
வாழியாந்தம்பிக்கும் வசந்தநித்திரையேசெய்ய *
தாழ்விலாச்சீதையார்க்குத் தனியிலாகெர்ப்பமமைந்தாம்,
வேழ்வியைமுடித்தராமர் விருதுசொற்பனங்கண்டாரே,

வசனம்.

அகோதெப்படியென்றால் திருப்பாற்கடலில் யோகநித்திரைசெய்யும் ஸ்ரீராம மூர்த்தியானவர் நித்திரைசெய்துகொண்டிருந்தவர் திடுகிட்டெழுந்திருந்து தான்கண்டகனவை தனதுஅனுஜனாகிய இலட்சுமணரோடு சொல்லுகிறவிதங்காண்க.



ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

நலந்திகழ்லட்சுமணாகேள் நான்விழிவளரும்போது *
நிலந்தனிற்சீதையார்க்கு நிறைந்திடுகெர்ப்பமைந்தாம்,
கலங்கிடுகனவிலே நான் கண்டதையறியவேணும் *
மலந்தனைக்கடந்தமென்னி வசிஷ்டரையழைப்பிப்பாயே

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா அவசகுணமாகச் சொற்பனங்கண்டபடியால் அதைப்பரிசோதிக்கவேணும் நம்முடையகுலகுருவாகியவசிஷ்டரைச் சீக்கிரமாய் அழைப்பியும் பிள்ளாய் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்சொல்-வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் சுவாமி.

இலட்சுமணர்-வசிஷ்டருக்குச்சொல்-போற்றிகவி-

அல்லலையகற்றி வல்லமையிருத்த *
தொல்லைமாதவத்தி னெல்லையீர்போற்றி *

இதுவுமது.

அரசினையாளும் வரகுணராமர் *
திரமுடனும்மை வரவழைத்தனரோ *

வசனம்.

வாருஞ்சுவாமி என்தமையனாகிய ரகுநாயகர் தங்களைஅழைத்துக்கொண்டுவரச்சொன்னார் சுவாமி.

வசிஷ்டர்சொல்-கவி!

அப்படித்தானே இப்பொழுதியானுஞ் *
செப்பமாஞ்சபைக்குக் கொம்பெனவருவேன் *

வசனம்.

அப்படியேபோவோம் வாரும்பிள்ளாய் லட்சுமணா.

வசிஷ்டர்வருகிற பொது திபிதை.

விதித்தமுன்னூலும் பூண்டு விளங்கவேநாமமிட்டு *
துதித்திடுங்காவிவேஷ்டி சொகுசுடனணிந்துநன்றாய்,
பதித்திடுங்கொறடுபூண்டு பரிவுடன்தருப்பையேந்தி *
மதித்திடுராமர்முன்னே வசிஷ்டருவருகின்றாரோ *

வசிஷ்டர்-சிஷனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சிஷியா நம்முடைய தண்டுகமண்டலத்தை எடுத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்.

சிஷ்யன்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்

அப்படியே யெடுத்துக்கொண்டுவருகிறேன் சுவாமி.

வசிஷ்டர்-வருகிறதரு-இ-ம்-சாவேரி-மீசரதாளம்.

பல்லவி.

வசிஷ்டர்வந்தாரோ-குருகுல-வசிஷ்டர்வந்தாரோ

அநுபல்லவி.

வசிஷ்டர்வந்தாரோ யிதஷ்டமாகவே *
மாமுனியோர்குரு வாகவிளங்கிய (வசிஷ்டர்)

சரணங்கள்.

அண்டர்முனிவர்கள் கண்டுபணிந்திட *
குண்டலமாடக் குளிர்ந்தநடையுடன் (வசிஷ்டர்)
தண்டுகமண்டலங்கொண்டு கரத்தினில் *
தெண்டனையோர்களுங் கண்டுதொழுதிட (வசிஷ்டர்)
பாதக்குறடு பளீல்பளீலென்னவே *
பாரித்தபுலித்தோல் நேருடன்மின்னவே (வசிஷ்டர்)

வசிஷ்டர்-கட்டியக்காரனுக்குச்சொல்வசனம்.

அகோவாரும்பிள்ளாய்கட்டியக்கார ரகுநாயகருடன் வசிஷ்டமகாமுனி வந்திருக்கிறோமென்று சொல்லும்பிள்ளாய்.

கட்டியக்காரன் ஸ்ரீராமருக்குச்சொல்வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி நம்முடைய குலகுரு வாகிய வசிஷ்டமகாமுனி ஆசாரவாசலில் வந்திருக்கிறார்சுவாமி.

ஸ்ரீராமர்-தம்பிமார்களுக்குச்சொல்-இவிருத்தம்.

வருத்தமாய்வசிஷ்டர்தாமும் வந்துமாமணிமுகப்பில்
இருக்கிறாரென்றுகாவற் காரனுமியம்புகின்றான் *
கருத்துள்பரதசத்துருக்க லட்சுமணநாமுஞ்சென்று *
அருத்தியாயவரையிங்கே அழைத்துடன்வருவோமீண்டு

வசனம்.

அகோவாருந்தம்பி மார்களே நம்முடைய குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவர் வந்திருக்கின்றாராம் நாம்போய் வந்தனம் பண்ணிக்கொள்வோம் வாருங்கள் தம்பிமார்களே.

தம்பிமார்கள்-ஸ்ரீராமருக்குச்சொல்வசனம்

அப்படியே வருகிறோம் அண்ணாவே.

ஸ்ரீராமருந்தம்பிமார்களும்வசிஷ்டரைப்பணிகிறஆனந்தக்களிப்.

பல்லவி.

சரணஞ்சரணமுனிநாதாஎங்களைத்தற்காத்திரக்ஷியுஞ்சற்குருநாதா

அநுபல்லவி.

கருணையாயெங்களைக் காத்துரக்ஷிப்பீர் (சரணஞ்)



சரணங்கள்.

குலகுருவாகியபொருளே-உம்மைக் *
கொண்டாடவினையெல்லாங்-குடியோடவருளே (சரணஞ்)
வேதாவெங்கடகிரிவாசா-அந்த *
விமலர்க்குச்சரியான வசிஷ்டமுநீசா (சரணஞ்)
நாதாவுன்பாதமேபோற்றி யென்னை *
ரக்ஷிப்பதுயுந்தன் மலரடிபோற்றி (சரணஞ்)
புண்டரீகப்பதத்தாளா-எங்கள் *
புருவம்சத்திருவ்வந்தோனேயாளாய் (சரணஞ்)
அண்டர்கள்போற்றியஐயா இப்போ *
அடியோங்களையாளத்துதிபுரிமெய்யா (சரணஞ்)

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல் இவிருத்தம்.

வேதங்களுணர்ந்தஞான வித்தகாபோற்றிபோற்றி *
நாதங்களுமுயர்ந்த நாயகாபோற்றிபோற்றி *
பாதங்கள்பணிந்தோமிந்தப் பன்மணியாசனத்தில் *
மாதவவசிஷ்டரேநீர் மகிழ்ச்சியாயிருந்திடீரே *

வசிஷ்டர்சொல்-வாழி இவிருத்தம்.

சுபமஸ்துராமசந்திரா சுபமஸ்துபரதாயின்னம் *
சுபமஸ்துலக்ஷ்மணாநீ சுபமஸ்துசத்துருக்கா *
சுபமஸ்துசீதையாரும் சுபமஸ்துஅயோத்திநாடு *
சுபமஸ்துயானைசேனை சுபமஸ்துவாழிநாளே *

இதுவும்-வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல் இவிருத்தம்.

சூரியகுலத்தரசரேவே சுந்தரராமசந்திரா *
திடமுடனமையழைத்துச் செய்தியாதெனக்கிப்போது
அடல்பெறும்பூசைவேளை யாகுதுபோகவேண்டும் *
தடையெனச்செய்திடாமற் சடுதியிற்சொல்லுவீரோ

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா நமக்குப் பூசைவேளை யாகின்றது நாம்போகவேண்டும் நம்மை யழைப்பித்தகாரியம் இன்னதென்றுசொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர் வசிஷ்டருக்குச்சொல்-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-மீசரதாளம்.

பல்லவி.

கண்டேனன் சொற்பனங்கள் நித்திரையிற்சுவாமி *
கருத்தாகச்சொல்லுகிறேன் கேளுமையா *

சரணங்கள்.

கெண்டைநிகர்விழியான சீதையாரும் சுவாமி *
கெர்ப்பனையாயிருக்கவுங் கண்டேனையா (கண்)
வண்டணிசீதைதனைக் காட்டிலிட சுவாமி *
வருத்தமாய்க்கண்டேனையா சொற்பனத்தில் (கண்)
கொண்டல்நிகர்கொண்டையுள்ள சீதையாரும் சுவாமி *
கொடும்பெரியகானகத்தில் விழுந்தழுவே (கண்)
கண்டதோர்முனிநாதர் ஆசிரமத்தில்வனக் *
கன்னிகளுடன் கூட யிருந்திட்டுவே (கண்)
சிந்தைமகிழ்மைந்தச் சீதைவயிற்றிற்சுவாமி *
சிறுவரிருவர்களும் பிறக்கக்கண்டேன் (கண்)
விந்தைமிகுந்தசிறு பயல்களாலே சுவாமி *
மிருதியாய்ச்சேனையெல்லா மடியக்கண்டேன் (கண்)
சந்தமிருத்த அந்த வால்மீகர்தருணத்தில் *
வந்துயென்னையெழுப்பவுங் கண்டேனையா (கண்)
கந்தமலர்ச்சூடிய சீதையுடனேகூட *
கனமான அயோத்திவந்து சேரக்கண்டேன் (கண்)

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-திபிதை.

சொற்பனம்வசிஷ்டரேநாம் சொல்லுவோஞ்சீதையார்க்கு
அப்பொழுதைந்துமாதம் ஆகவேவயிற்றிற்கெர்ப்பம் *
செப்பருஞ்சீதைதன்னைத் தெண்டகாவனத்திலோட்ட *
இப்படியாகக்கண்டே னிதனைநீர்சொல்லுவீரே. *

வசனம்.

சரணஞ்சரணம் குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரே நா ன் சப்பிரகூடமஞ்சத்தில் நித்திரைசெய்கிறபோது சீதாலட்சுமி ஐந்துமாதகெர்ப்பமாயிருக்கத்தக்கதாகவும் லக்ஷுமணப்பெருமா ள் தெண்டகாரண்யங்கொண்டுபோய் விடத்தக்கதாகவும் இப்ப டி அதிசயமான சொற்பனங்கண்டேன் அதனைப்பரிசோதித்து சொல்லுஞ்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல் தரு இ ம் தோடி அடதாளம்

பல்லவி.

பாக்கியம் ரகுராமா கண்டகனு போக்கியம் ஹரிராமா

அநுபல்லவி.

பாக்கியமனதுடன் பைங்கிளிசீதைக்கு *
வாக்கின்படியேபுத்திரன் வந்துகிடைத்தது (பாக்கியம்)

சரணங்கள்:

கண்டசொற்பனமிப்போ கைகூடுந்தடையில்லை *
தொண்டன்லட்சுமணராலே சேதிபறியவேணும் (பாக்கிய)



29

ஊருடயபார்த்தாலும் ஆமாமென்றுசொல்லுது *
மாறுட்டமாகாது மகிழ்ச்சியடையவேணும் (பாக்கியம்)
நல்லோர்கள்சொற்பனங் கல்லின்மேலெழுத்தாமே *
இல்லாதுகாணுது சொல்லாலறியவேணும் (பாக்கியம்)

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

அன்றிடாதிராமாயித்தச் சொற்பனம்பொய்யாகாது
இன்றுந்தன்றாய்மார்கிட்ட இயலுடனினியதாகச் *
சென்றுந்தனதம்பிமாரைச் செய்திதையறியச்சொல்லும்
நன்றுடன்சீமந்தங்கள் நாடவேமுடிக்கவேண்டும் *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா உன்தம்பியாகிய லட்சுமணப்பெருமானை உன் தாய்மார்களிடத்திற்கனுப்பிச் சீதை கெர்ப்பமாயிருக்கிறது மெய்தானோவென்று விசாரித்துவரச்சொல் அப்பிள்ளாய் ராமச்சந்திரா.

ஸ்ரீராமர் வசிஷ்டருக்குச்சொல் வசனம்.

அப்படியே விசாரிக்கச்சொல்கிறேன் சுவாமி

ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல் திபிதை.

தம்பிலக்ஷுமணனேகேளாய் தையலாள்சீதைக்கிப்போ
சம்பிரமாயைந்துமாதந் தனிவளர்கெர்ப்பமென்று *
கம்பிதஅனந்தலிற்கண்டதால்தாயைக்கண்டு *
இன்பமாயறிந்துநீயு மிக்ஷணம்வருகுவாயே *

வசனம்

அகோவாருந்தம்பிலட்சுமணா நீ நம்முடைய தாய்மார் அரண்மனைக்குப்போய் சீதை கெர்ப்பமாயிருக்கின்றது மெய்தானோ வென்று விசாரித்துவாருந்தம்பி லட்சுமணா.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அப்படியே விசாரித்துவருகிறேன் சுவாமி.

இலட்சுமணர்சொல்-தரு- இ-ம்- எதுகுலகாம்போதி- ரூபகதாளம்.

பல்லவி.

அறிந்துவருவேனே அந்தரங்கம் அறிந்துவருவேனே *

அநுபல்லவி.

அறிந்துவருவேனே அந்தரங்கந்தன்னில் *
வருந்துந்தாயாராலே மாதுசீதைசேதி (அறிந்து)

சரணங்கள்.

ஞாயிறுகுலத்தினில் ரகுநாதர்ப்போங்கும் *
சேயிழைலட்சுமிக்குச் செலித்தவிபரத்தை (அறிந்து)
தந்தைநிகராம்ராமர் தனதுரைசிரங்கொண்டு *
தாயர்ச்சீதைகெர்ப்பந் தன்னைக்ஷணத்தினில் (அறிந்து)

அம்புவியினிலார்க்கும் அன்னைசீதையாட்குச் *
சம்பிரமகெர்ப்பத்தை தாயார்வாக்கினுலே (அந்நது)

லட்சுமணர்-தாயாருக்குச்சொல் திபிதை.

எங்களைபெற்றதாயேயிணையடிகமலம்போற்றி *
மங்களராமபத்ரர் வாய்மைகளறியச்சொன்னுர் *
பொங்கமாய்ச்சீதையார்க்குப்பொருந்தவேகெர்ப்பமாக *
இங்கிதகனவுகண்டாரிதையரிந்துரைத்திடீரே *

வசனம்:

கேளுந்தாயேரகுநாயகர் சொற்பனத்தில் சீதைக்குக்கெர்ப்பமாகக் கனவுகண்டாராம் அது வுண்மைதானேசொல்லுமம்மா

தாய்மார்கள் லட்சுமணர்க்குசொல்திபிதை

ஆமிதுமெய்தான்மைந்தா அருங்கிளிசீதையார்க்கு *
வாமனனருளினுலே வயிற்றினிற்கெர்ப்பமானுள் *
ஓமெனஸ்ரீமந்தங்க ளுவுமையாய்ச்செய்யவேணும் *
பூமகன்ராமனேடே போயிதைப்புகலுவாயே *

வசனம்.

அகோகேளுமைந்தாலட்சுமணு சீதைக்குஐய்ந்துமாதங்கெர்ப்பமாயிருக்கிறதுமெய்தான் சீக்கிரமாய் ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்யவேணுமென்று சொல்லும்பிள்ளாய் லட்சுமணு

லட்சுமணர் தாய்மாருக்குச்சொல் வசனம்

அப்படியேசொல்லுகிறேன் அம்மா

இலட்சுமணர்சொல்-கண்ணிகள்-இ-டு-முகாரிஆதிதாளம்

தாய்மொழியைக்கேட்டவுடன்மூன்களித்துலக்ஷ்மணரன் *
பாயண்ணனெதிரில்வாரார் பக்ஷமுடனே *
தரைபுகழ்சீதைகெர்ப்ந் தானுனசேதிசொல்ல *
வரமிகுலக்ஷ்மணரும் வாருடன்வர்ரார் *
அன்னைசொன்னவார்த்தைக்கேட்டுஅனுஜனிலட்சுமணன் *
தன்ஸ்ரீராமரந்தோடிவாரார் தமையனண்டையில் *

இலட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

அழிந்துவாவென்றுரைத்த அண்ணுவேபோற்றிபோற்றி *
வருந்தியேதாயைக்கண்டு வாய்மொழிகளறியும்போது *
பரத்திமுகத்தாள்சீதை பாங்குடன்கெர்ப்பமைந்தாம் *
தரைபுகழ்தாயார்சொல்லச் சந்தோஷமாகவந்தேன் *

வசனம்.

கேளும் அண்ணுவேசீதாலட்சுமிக்குஐந்துமாதக்கெர்ப்பமெய்தானென்று-சொன்னுர்கள்சுவாமி



ஸ்ரீராமர் வசிஷ்டருக்குச்சொல் திபிதை

குலகுருவசிஷ்டரேநீர் கூறியபடிக்குத்தானே *
கலகமில்லாமற்சீதைக் காவதுகெர்ப்பமைந்தாம் *
இலகியவதனைவிப்போ தியாய்செய்யும்விபரமென்ன *
துலக்கமாயெந்தனுக்குச் சொல்லுநீர்சொல்லுவீரே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரேஉம்முடையபிஷ்டபடிக்குச் சீதைக்கு ஐந்துமாதங்கெர்ப்பம் மெய்தான் இனிமேல் நடக்க வேண்டியகாரியம் அருளிச்செய்யுஞ்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல் வசனம்

ஆனால் மகாபாக்கியந்தான் ஸ்ரீமந்த முகூர்த்தஞ்செய்யவேணும் சீதையையழைப்பியும் பிள்ளாய் ராமபத்திரரே

ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல் திபிதை

இந்திரஜித்தைவென்ற யென்னுயிர்த்துணைவாகேளாய்
சுந்தரச்சீதையாளைத் துலங்கவிப்போதுதானே *
அந்தமாந்தாதிசூழ அழகுதன்னடிகையில்வைத்து *
தொந்தமாயழைத்துக்கொண்டு சுருக்கினில்வருகுவாயே

வசனம்.

கேளுந்தம்பி லட்சுமணு நீ அந்தப்புரத்திற்குப்போய்ச் சீதையைஅதிசீக்கிரமாய் அழைத்துவாருந்தம்பிலட்சுமணு

லட்சுமணர்ஸ்ரீராமருக்குச்சொல்வசனம் அப்படியே நல்லதையா

லட்சுமணர்சீதைக்குச்சொல் திபிதை.

அருந்ததிக்கிணையாய்வந்த அன்னையேயென்றுய்ச்சீதாய் *
பரிந்துடன்ராமபத்திரர் பட்சமாயுன்னையிப்போ- *
வருந்தியேவரவேசொல்லி வண்மையாய்ச்சிலவுதந்தார் *
மருங்கிலிலதிகமானமங்கையேவருகுவாயே *

வசனம்.

கேளுமம்மாசீதாய் உன்னை ரகுநாயகர் அதிசீக்கிரமாய் அழைத்துவரச்சொன்னுர் வருவாய்தாயே

சீதை-லட்சுமணருக்குச்சொல் வசனம்

அப்படியேவருகிறேன் இளையபெருமாளே

சீதாதேவிவருகிறபொது-திபிதை.

ஒயில்நடையாய்விசித்திரவொளிவுகள்பளபளென்ன *
குயிலிசைமடவார்சூழக்கொஞ்சுங்காளாஞ்சியேந்த *
கயல்விழிகண்களிப்பாய்க் கனத்தபொற்பணியிலங்கச்
சேயமதாய்ரதியேப்பசீதாதேவியுங்கொலுவில்வந்தாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் குயிலைப்போன்ற குரலையுடையதாதிகள்சாளாஞ்சியேந்தவும் வெகுவேடிக்கையான பொன்னாபரணங்கள் பிரகாசிக்கவும் சீதாதேவியானவள் கொலுவுக்குவருகிறவிதங்காண்க

சீதைவருகிற-தரு-எதுகுல்காம்போதிசாபுதாளம்

பல்லவி.

சீதைவந்தாளே கொலுவுக்குத்தேவிவந்தாளே

அநுபல்லவி

சீதைவந்தாளே மாதுசிரோன்மணி *
தாதியர்கள்வந்து பாதம்பணியவே *(சீதை)

சரணங்கள்

கொத்துசரப்பளி ரத்நபதக்கங்கள் *
முத்துமூக்குத்தி விசித்திரமாய்மின்ன *(சீதை
எத்திசையும்புகழ் பெற்றசீதாதேவி *
பத்தரைமாத்துப் பசும்தங்கமென்னவே *(சீதை)
சுந்திரராமச் சந்திரன்றேவி *
மந்திரவேத வசிஷ்டனாகாணச் (சீதை)
தண்டைசிலம்பு கலீர்கலீரென்ன *
பண்டுபருவம் பளபளென்றேமின்ன (சீதை)
மேவியவெண்சா மரங்களும் வீசவே *
தாவியநிர்த்தன் தானதுபுரியவே (சீதை)
சிற்றிடைதுவளவே யெதிர் சைபுகீர்த்தி *
பெற்றராகுராமர் சித்தமகிழவே (சீதை

சீதை-ஸ்ரீராமரைப்பணிதல்-கண்ணிகள்

இ-ய்-எதுகுல்காம்போதி-அடதாளம்

பல்லவி

பொற்பாதமேசரணம் அடியாள்போற்றும் *
பொற்பாதமேசரணம் *

அநுபல்லவி

பொற்பாதஞ்சரணங்கள் போற்றித்துதிசெய்யும் *
தப்பிலாரகுபதிதாளிணைசரணம் (போற)
அண்டபுவனமெல்லாம் ஆளும்ரகுபதியே *
யெண்டிசையுந்துதிக்குமிணையடிசரணம் (பொற்
வேதம்முறைமைகளை மிகவுமறிந்திட்ட *
மாதவவசிஷ்டமாமுனியேயுத்தம் (பொற்)
ஐயாகுலகுருவே ஆளுந்தவப்பொருளே *
பொய்யாமொழியுடைய புண்ணியமுனிவரே (பொற்)



சீதை-ஸ்ரீராமருக்குச்-சொல்-விருத்தம்.

வாதுசேராக்கர்தம் வமைவதைத்துமேகீர்த்திகொண்டு *
மாதவர்தம்மைக்காக்கு மகிபதியரசர்கோவே *
ஏதுகாரியத்தாலென்னை யிவ்விடமழைத்தீர்சொல்லுந்:
சீதளமலர்பொற்பாதஞ் சென்னியிற்சூடினேனே *

வசனம்

அகோவாரும்சுவாமி அடியாளை இவ்விடம் வரவழைத்த விபரந்தெரிவிக்கவேணும் பிராணநாதா,

ஸ்ரீராமர்-சீதைக்குச்சொல்-விருத்தம்,

அன்னமேதேனேமானே அழகுறுங்கிளியேவர்ணச் *
சொர்ணமேயெனதுபிராணத் தோகையேவருவாயிப்போ
கன்னலேவாய்மணக்குங் கஸ்தூரிக்கலவையேவாணின *
மின்னலேபருத்தநிதிக்கு மேன்மையாய்வாழ்வாய்பெண்ணே

வசனம்.

கேளாய்ஜானகி சதாகாலமும் கலியாணகுணத்தோடும் வாழ்ந்திருப்பாய்பெண்ணே,

ஸ்ரீராமர் வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி ஸ்ரீமந்தமுகூர்த்தந்திற்கு ஒருநாள்பார்த்துச் சொல்லவேணுஞ்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்.

தரு-இ-ய்-கேதார-கௌளம்-அடதாளம்

பல்லவி

பார்த்துச்சொல்வேனே முகூர்த்தங்கள் *
பார்த்துச்சொல்வேனே *

அநுபல்லவி

பார்த்துச்சொல்வேனந்த பைங்கிளிசீதைக்கு *
யேற்றபடிமுகூர்த்த மிருவர்க்குமொருமையாய்ப் (பார்த்

சரணங்கள்:

அஸ்வனிரோகணி யானபுனர்பூசம் *
வச்சமானதிதி வாய்த்தபஞ்சமிதனில் (பார்த்துச்)
அட்டமிசதையந்தன்னி ஆனவாரந்தேடி *
இஷ்டமானசுக்ர வாரந்தேடிநான் (பார்த்துச்)
சாமாவுன்றமைப்பும் சாசியுமொன்றாக *
வாமாமுகூர்த்தஞ்சொல்வேன் வல்லவனேகேள் (பார்த்துச்)
தலைமகடகமே தான்மெத்தநல்லது *
நிலைமையானநவமி நேரிப்போசொல்லுது (பார்த்துச்)

இராமர்க்குஞ்சீதைக்கும் நன்றாயிருக்குது *
பூமாபார்த்தசாஸ்திரம் பொய்யேதோவாராது (பார்த்து)
அஞ்சுமாதங்கெர்ப்ப நூண்டாயிருக்கிது *
பிஞ்சுமக்களிருவர் பிறக்கவேதோணுது (பார்த்துச்)
சந்ததிபிறக்கிறார் சண்டைக்கழைக்கிறார் *
மைந்தனபிறக்கிறார் மலைலுக்கழைக்கிறார் (பார்த்துச்)
வனத்தில்வனவாச மாகவேகாணுது *
கனத்தவால்மீகரிஷி காக்கவேதோணுது (பார்த்துச்)

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை,

சூடர்குலத்தரசர்கோவே சுந்தராமபத்திரா *
திடமுடன்முகூர்த்தம்பார்க்கத் தேர்ந்ததையென்னகேள்வேன் *
கடகமாம்ராசிகனிலி கனத்ததோர்சிட்பத்தனி *
அடல்புநர்பூசமொன்று மானநாள்வெள்ளிதானே *

வசனம்

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா ராமசீதாவென்கிற நாமநக்ஷத்திரத்திற்குத் தகுமான முகூர்த்தம் புநர்பூசநக்ஷத்திரம் கடகலக்கனம் சுக்கிரவாரம் நன்மையாகையால் நாளைவெள்ளிக்கிழமையில்முகூர்த்தமாயிருக்கின்றது சகலதேசத்தரசர்களுக்கும்முகூர்த்தவோலையெழுதியனுப்பி வரச்செய்யும் ராமபத்திரா.

ஸ்ரீராமர்சொல்-வசனம்.

அப்படியேசெய்கிறேன்சுவாமி,

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

பாசமாய்லக்ஷ்மணாநீ பாக்குடனிருபமொன்று *
நேசமாயெழுதியிந்த நில்த்திராஜாக்களையெல்லாம் *
வாசமாய் நாளைசுக்ர வாரத்தில்முகூர்த்தமென்று *
விசியேவருவதாக விரைவாய்நீயனுப்பு தந்தான் *

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களுக்கும் நாளைதமாசம் வெள்ளிக்கிழமை உதையத்திற்கு ராமருக்கும் சீதாங்கனிக்கும் ஸ்ரீமந்தமுகூர்த்தமென்று திருபமெழுதியனுப்பிவையுந்தம்பி லட்சுமணா

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல் வசனம்.

அப்படியேயெழுதியனுப்பிவைக்கிறேன் சுவாமி

லட்சுமணர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய ராயசக்காரனையழைத்து ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் நாளை வெள்ளிக்கிழமை உதையத்திற்கு ஸ்ரீமந்தமுகூர்த்தமென்று ஓலையெழுதியனுப்பிவையும்பிள்ளாய் கட்டியக்காரா



கட்டியக்காரன்சொல்-வசனம்.

இதோ தங்கள்சொற்படிக்கு இராயசக்காரனை அதிசீக்கிரமத்தி லழைப்பிக்கிறேனையா.

கட்டியக்காரன்-இராயசக்காரனுக்குச்சொல்-கவி.

மட்டமைசேர்லட்சுமணரிப்போதுன்னை *
அட்டவுடனழைத்தா ராகக்குவாவே *

லட்சுமணர்-இராயசக்காரனுக்குச்சொல்-கவி.

நல்லதப்படியே நடத்திடுமெயின்றல் *
ஒல்லையில்யானு முயர்சபைவருவேன் *

இராயசக்காரன்வருகிற-பொருந்-திபிதை.

தாய்மொழிதவறாராமர் தலைமையாய்க்கொலுவினின்று *
சாய்வுறாராயசத்தில் சமர்த்தனென்றழைத்தபின்னே *
காயமேசுத்திபண்ணி களபகஸ்தூரிபூண்டு *
நேயமாங்கணக்கெடுத்து நிமிஷத்திவ்வருகின்றானே *

ராயசக்காரன்வருகிற-தரு-இராகம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேராயசக்காரன் வெகு
வகையுடன்கணக்குகள் தொகையுடன்சொல்ல (வந்தா)

சரணங்கள்.

பொன்றுலெழுத்தாணிகொண்டு ராமர்
பொக்கிஷகணக்கெழுத ஆக்கலைகள்கொண்டு (வந்தா)
சுக்கிட்டுப்பாகைகள்கட்டி நல்ல
சிறப்பாய்சரப்பணிகள் சொருகட்டிமாட்டி (வந்தா)
கையிலுருமாலையாட வெகு
காரியமெல்லாமிவனைக் கண்டவுடன்கூட (வந்தா)
ஒய்யாரமாகவேநடந்து மிக
வோங்கியேயம்பயிட்டு லூணக்கடந்து (வந்தா)
காதிற்சோடுகடுக்கன்மாட்டி அதிக
கல்லைகன்கண்டமுண்ட னரிகுளிப்பாட்டி (வந்தா)

கட்டியக்காரன்-ராயசனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராயசக்காரா ரகுநாயகருக்கும்சீதாங்கனிக்கும் நாளைவெள்ளிக்கிழமை உதயத்திற்கு ஸ்ரீமந்தமுகூர்த்தமென்று ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும்வரும்படி ஓலையெழுதும்பிள்ளாய்.

இராயசக்காரன்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அப்படியேயெழுதுகிறேன்பிள்ளாய் கட்டியக்காரா

ஸ்ரீராமருக்கும்சீதாங்கனிக்கும்-ஸ்ரீமந்தமுகூர்த்த திருபம்.

ஜனகமகாராஜருக்கும்-மற்றராஜர்களுக்கும் அறிக்கை.

வசனம்.

ஸ்ரீராஜமானிய ராஜவுத்தண்ட ராஜசெம்பீர ராஜமார்த்தாண்டராஜநவகண்ட ஸ்ரீராஜாதிராஜர்களுக்கும்:ஜனகமகாராஜாவுக்கும் நிருபமான தென்னவென்றால் நாளதுமாசம் இத்தனையாந்தேதி வெள்ளிக்கிழமை உதையத்திற்கு ராமச்சந்திரமூர்த்தியான ரகுநாயகருக்கும் சீதாங்கனிக்கும் ஸ்ரீமந்தமுகூர்த்த மானபடியால் ஐலே-வங்களர்-கொங்களர்-லாடர்-மராட்டியர்-கற்றுடர் -மச்சதேசம்.கொச்சதேசம்-சவுராஷ்டதேச முதலாகிய சர்வத்திராஜும் வரவேண்டியது-

கட்டியக்காரன்-தூதருக்குச்சொல்-திபிதை,

ஆடாதூதரேழிவ்வதிசயதிருபந்தன்னைத் *
தாரணிபுபத்தார்ஜனக ராஜர்க்குமின்னஞ்சொல்லுந். *
திரங்கொள்ளைப்பத்தாறு தேசராசர்க்குமிப்போ *
சிரதாட்காட்டிநீங்கள் சீக்கிரம்வருகுவீரே *

வசனம்.

அகோவாருங்கள் தூதர்களே இந்தத்திருமுகத்தை ஜனகமகாராஜருக்கும் ஐம்பத்தாறுதேசராசர்களுக்குங் காண்பித்துசீக்கிரமாக இவ்விடம்வந்துசேருங்கள் தூதர்களே,

தூதர்கள்-வசனம்.

அப்படியே காண்பித்துவருகிறோமையா.

பொருத்தண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-மீசரதாளம்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீமுகங்கண்டானே | ஜனகர் | மெத்த |
| சிந்தை | மகிழ்ந்தானே | * |
| பட்டணத்தாற்புரஞ் | சோடிந்தான் | ஜனகன் |
| பாங்குடன்பேரிகை | யடித்தான் | * |
| எட்டுத்திசையெங்குந் | காட்டினான் | ஜனகன் |
| எல்லோருப்வாருமென் | றோட்டினான் | * |
| பவழத்தாற்கால்களை | காட்டினான் | ஜனகன் |
| பட்டாற்றுசங்கொண்டு | சூட்டினான் | * |
| வாழைத்தருமலரை | நாட்டினான் | ஜனகன் |
| மலர்தொடுத்தேமுகத்தைச் | சூட்டினான் | * |
| ஒட்டைமேற்பேரிகை | கட்டினான் | சனகன் |
| உலகமதிரவே | தட்டினான் | * |
| ஆனைமேலம்பாரி | கட்டினான் | சனகன் |
| ஆர்ப்பரித்தேதானத் | தட்டினான் | |



| | | |
|---|---|---|
| குதிரைமேல்பங்காளை | நீட்டினான் | சனகன் |
| கோவென்றுவேரங்காரம் | பூட்டினான் | * |
| ஸ்ரீமுகங்கண்டானே | ஜனகன் | மெத்த |
| சிந்தை | மகிழ்ந்தானே | * |

பொருது-திபிதை-

ஆங்கமிருந்ஜனகராஜருமற்றேருஞ் *
சூழவிருந்துகளொலிக்கத்தாதைமாரும் *
மங்களமாய்நடனமிடராஜரியாரும் *
வரிசையுடனயோத்திநகரதனில்வந்து *
தங்கியபின்முனிவர்பலர்நெருங்கவேயந் *
ஜனர்சிலர்சூழவசிஷ்டருமப்போது *
பொங்கமுடனஸ்ரீமந்தமுகூர்த்தந்தனைப் *
புகழ்பெறவுமுடித்திடவேபுகலுவாரோ *

வசனம்:

அகோதெப்படியென்றால் ஜனகமகாராஜரும்ஐம்பத்தாறுதேசத்ராசர்களும் அயோத்தியாபுரிவந்து சேர்ந்தபின்பு வசிஷ்டமகாமுனிவரால் ஸ்ரீராமருக்கும் சீதாங்கனிக்கும் ஸ்ரீமந்தமுகூர்த்தம் நடக்கிறவியங்காணக

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்,

அகோவாரும்பிள்ளாய் ராமச்சந்திரா தேசகாலமாகின்றது சீக்கிரமாகநீயும் சீதாலட்சுமியும் மணக்கோலமாய் அலங்கிரதஞ்செய்துக்கொள் வாரும்பிள்ளாய் ராமபத்திரா.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்,

அப்படியே செய்துவருகிறேன்சுவாமி,

வசிஷ்டர்-ஸ்ரீமந்தமுகூர்த்தஞ் செய்துவைக்கிற-கண்ணிகள்,

இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

ஸ்ரீராமாஜெயஜெய சீதைமனோகரா *
காருண்யசாகரா கருணைகடாட்சகரா (ஸ்ரீராமா)
சீதையுடன்ரகுபதியைச் சிம்மாசனத்திருத்தி *
போதமுடனலங்கிட்டார் புண்ணியமாதர்கள்வந்து (ஸ்ரீராமா)
வண்டுமொய்க்குஞ்சண்பகபூ வாசமுள்ளமருக்கொழுந்து
குண்டுமல்லிஅலரிசரம் கொண்டைமீதில்தான்முடித்தார் (ஸ்ரீரா)
குங்குமமுஞ்சந்தனமுங் கோரோசனைபுனுகுமஞ்சள் *
மங்கையர்கள்கிண்ணியினில் வகைவகையாய்தானெடுத்தார் (ஸ்ரீரா)
மாணிக்கத்தால்கால்நிறுத்தி மரகதத்தாற்பந்தலிட்டு *
ஆணிமுத்தால்மணைபரப்பி அலங்கிரதஞ்செய்தாரோ (ஸ்ரீராமா)
மல்லிகைப்பூமுல்லையுடன் மருவுமிருவாட்சியினால் *
செல்வியெனுஞ்சீதையார்க்குச் சிறப்புதனைச்செய்தாரே (ஸ்ரீராம)

தேவர்களுமுனிவர்களுஞ் சிறப்புடையஅந்தணரும் *
நாவலர்கள்பாடிவர ராமரிடஶ்ரீமந்தத்தில் (ஶ்ரீராமா)
கௌசலையுஞ்சுமித்திரையுங்கனமுடையமாதவரும் *
ஜனகருடன்மற்றவருஞ்சந்தோஷங்கொண்டாரோ (ஶ்ரீராமா)
கஸ்தூரிகந்தபொடி கதம்பஞ்ஜவ்வாதுடனே *
எத்திசையுங்கமகமென யிருவர்க்குமலங்கரித்து (ஶ்ரீராமா)
புண்ணியர்கள்பார்த்திருக்கப் புட்பவனம்பூர்த்திருக்க
கன்னியமுடன்மாதரெதிர் காணவந்தாரகுபதியை (ஶ்ரீராமா)
அத்தன்ரவிகுலத்தில்வந்த அரியரகுநாதருக்குச் *
சித்தர்கின்னர்புடைசூழ ஶ்ரீமந்தஞ்செய்தாரோ (ஶ்ரீராமா)
செந்திருவாஞ்சீதையர்க்குந்தசரதனார்பாலனுக்கும் *
கந்திருவர்புடைசூழ கலியாணஞ்செய்தாரோ (ஶ்ரீராமா)
மங்களமாம்ராமருக்கும் வாகுள்ளசீதையர்க்குஞ் *
சிங்காரமாகவேதான் ஶ்ரீமந்தஞ்செய்தாரோ (ஶ்ரீராமா)

மங்களம்-கன்னிகள்-இ.ம்.பைரவி-ஆதிதாளம்,

தசரதசுதபதி ஶ்ரீராமச்சந்திரர்க்குஞ்
ஜனகன்றன்மகள் சீதைசெல்வியர்க்கும்
அசைவில்லாஅண்டருக்கும் ஆதிமாலவர்தனக்கும்
வகைபுரியுமிலட்சுமிக்கு மாமறைக்கும்(ஜெயமங்களம்)
தாய்மொழிதவறாத சத்தியஹரிராமருக்கும்
தாடகைதனைவதைத்த தாஷ்டிகர்க்கும்
உபாயமாகவாலிக்கு உம்பர்பதிதந்தவர்க்கும்
சகாயமாய்தேவ ரிடர்தனைத்தீர்த்தோர்க்கும்(ஜெயமங்களம்)
ராவணசம்மாரனுக்கும் நான்முகனையீன்றவர்க்கும்
தேவரனுகூலனுக்கும் ஶ்ரீராமற்கும்
பூமகள்திருசீதை புகழுமம்பிராட்டியர்க்கும்
தாமரைதரித்தோர்க்குந் தார்வேந்தற்கும்(ஜெயமங்களம்)

ஶ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபதை,

மனுநெறிப்படிக்கியாமு மன்னுஞ்செய்தபடியாலிப்போ
தனமுடனன்னஞ்சொர்ணந் தவித்திடுமியாசகர்க்கும்
மனதுபொருந்திநீயும் வந்தவர்க்குண்டென்றிப்போ
கனம்பெறவேயளித்துக் கடிதினிலோடிவாராய்

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நமக்கு ஶ்ரீமந்தமுகூர்த்தமானபடியினாலே ஏழைபரதேசிகளுக்கு வெகுமதிகொடுத்தனுப்பிவையும்பிள்ளாய்,



கட்டியக்காரன்சொல்-வசனம்

அப்படியே கொடுக்கிறேன்சுவாமி

தானம்வாங்கப் பண்டாரமும் பண்டாரச்சியும்வருகிறது.

கன்னிகள்-தொண்டிச்சிந்து,

பண்டாரச்சி பண்டாரத்துக்குச்சொல்லல்.

பண்டாரமே ஓய் பண்டாரமே
பரமனைக்காணுத பண்டாரமே
உண்டானபோதல்லோ பண்டாரமே-கை
யொடுங்கிருமென்னவுண்டு பண்டாரமே
மாலையிட்டுக்கோலம்வந்தீர் பண்டாரமே-ஒரு
மணிக்குவழியைக்காணேம் பண்டாரமே
கூலிக்குக்குத்தினாலும் பண்டாரமே-ஒரு
குழிவிக்கசுறப்பேனையா பண்டாரமே
பழனியில்தேவாயா பண்டாரமே-நாம்
பார்த்துவருவோங்காணும் பண்டாரமே
அன்னமலையைக்கண்டு பண்டாரமே-நாம்
அநேகநாளாச்சுதுகாண் பண்டாரமே
சும்மாகிடந்தாலும் பண்டாரமே-நமக்கு
துட்டார்கொடுப்பார்கள் பண்டாரமே
அயோத்திரகுநாதர் பண்டாரமேஇப்போ
அரியமணஞ்செய்கிறார் பண்டாரமே
கைகோர்த்துநான்வருவேன் பண்டாரமே-நாம்
கடுகெனவேபோய்வருவோம் பண்டாரமே

பண்டாரம்-பண்டாரச்சிக்குச்சொல்-கன்னிகள்

இதுநல்லதிவசமோ ஆண்டிச்சாயி-இனி
யென்றுமேலையாவதில்லை ஆண்டிச்சாயி
மாங்காய்போலிருந்ததெல்லாம் ஆண்டிச்சாயிஎனக்கு
தேங்காய்போலாச்சுதடி ஆண்டிச்சாயி
தேங்காய்போலிருந்தெல்லாம் ஆண்டிச்சாயி-பெரிய
சித்தைபோலாச்சுதடி ஆண்டிச்சாயி
பருஞ்சித்தைபோலிருந்த ஆண்டிச்சாயிஇப்பே
பஞ்சுபொதியாச்சுதடி ஆண்டிச்சாயி

எடுத்துநடப்போமென்றால் ஆண்டிச்சாயி-எனக்கு
இடுப்புவிட்டுப்போகுதடி ஆண்டிச்சாயி

தூக்கிநடப்போமென்றால் ஆண்டிச்சாயிபெருஞ்
சுமையாகக்காணுதடி ஆண்டிச்சாயி

ஒருமூட்டையிருந்தாக்கால் ஆண்டிச்சாயி-இந்த
உலகமறிக்காதடி ஆண்டிச்சாயி

இருமூட்டையாயிருந்தால் ஆண்டிச்சாயி-உலகில்
எல்லவருப்புகழ்வார்கள் ஆண்டிச்சாயி

கட்டியக்காரன்சொல்-வசனம்.

ஆஆ பண்டாரமே இதென்னஅப்பாகிழேயிருக்குதுசுவாமி இதுவாபஞ்சுபொதி அப்படியா மெத்தசந்தோஷம் உங்களுக்கு ட்டரிசுதந்தரத்தை வாங்கிக்கொள்ளுங்கள்.

பொது-திபிதை,

பரிவுடனந்தரங்கம் பஞ்சணைதன்னிற்றின்று *
பருமணிமாலைபூண்டு பைங்கிளிசீதையோடும் *
ஸ்ரீரகுராமர்தானும் ஆனந்தக்களிப்பாய்சேர்ந்து *
உருகிபவிரகத்தாலே பொன்னொடிகூறுவாளே *

சீதை-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை,

நவமணிவைத்திழைத்த நாகரீகங்கள்பெற்ற *
துவமுமுடியைப்பூண்டசுவாமிகேளென்வயிற்றில் *
தவமுறவுதித்தகற்பந் தம்மைப்போற்செளரியதீரம்
விவரமாய்பெறுவதாக வெனக்கருள்செய்குவீரோ *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரேஎன்வயிற்றில் தரித்தகெர்ப்பம் உம்மைப்போல சவுரியபராகிரமம் உண்டாகும்படியாய் அனுக்கிரகம் பண்ணவேண்டுஞ்சுவாமி-

ஸ்ரீராமர்-சீதைக்குச்சொல்திபிதை,

சிந்தையுமகிழ்ந்தேன்மானே தேசத்திற்கெர்ப்பமுள்ள,
சுந்தரமாதர்க்காசை தோன்றுமெய்ப்பொருளிலாவ *
தந்தனுகதினமேவிச்சை சொல்லுவாய்தருவேன்திவ்ய
கொத்துளகொடியினுளே கோகிலவாணிநீயே *

வசனம்

அகோவாரும்பெண்ணே சீதாய்உலகத்திலே கெர்ப்பிணியாயிருக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு எதன்பேரிலாகிலும் இச்சையாயிருருக்கும் ஆகையால் உனக்கு யெதின்பேரில் இச்சையுண்டாயிருக்கிறதோ அதைத் தெரியச்சொல்லுபெண்ணே



சீதைக்கும்-ஸ்ரீராமருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளம்,

சீதை சொல்லல்,

வனம்பாக்கவேணும் அடியாள்நானும் *
வனம்பார்க்கவேணும் *
வனம்பார்க்கவேதானும் வள்ளலேயிப்போது *
சினத்துக்கொள்ளாமல்நீர் செலவுகொடுக்கவேணும் (வனம்)

உம்மைப்போல்ரூபமும் உமதுசவுரியமும் *
எங்குநான்கண்டதில்லையெனக்கருள்செய்யவேணும்
நேசமாகினனே.என்சுவாமி ரவிகுலத்தரசே-இந்தவரந் *
தருவீரோயானால்-அடியாள்மெத்த-சந்தோஷிமாவேன் *

ஸ்ரீராமர் சொல்லல்,

அந்தப்படியேயுனக் கருள்செய்கிறேன்பெண்ணே
என்னவரங்கள்வேணு மென்னேநீகேளாயிப்போ *
கோகிலப்பெண்ணேபெண்ணேகண்ணே-சந்தோஷிமானேன்
அன்னமேசீதாய் தையலேமானே *

இதுவும் ஸ்ரீராமர்சொல்லல்,

நினைத்தநெஞ்சந்தன்னில் நீவனம்போகத் *
துணிந்தவகையெனக்குச் சொல்லடியயிலே (கோகில)

சீதை சொல்லல்,

அந்தவனத்திற்சென்று அருமுனிவரைக்கண்டு *
தெண்டஞ்செய்துநானுந் திரும்பியேவருகிறேன் (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்.

அந்தவனத்திலுள்ள தந்திகரடிபுலி *
முந்தியேசெனறுநாம் மோகமாய்ப்பார்த்தோமே(கோகி)

சீதை சொல்லல்,

கந்தமலைகளும் காவிற்குயில்களும் *
கண்டுமகிழ்ந்துநான் கடுகவருகிறேன் (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

கந்தமலையிலுள்ள கல்லுமுள்ளுகளெல்லாங் *
காலிற்றைக்குநாம் கடுகநடந்தோமே (கோகில

சீதை சொல்லல்,

ஆடுமயில்களும் அன்பாய்க்குயில்களும் *
நாடும்வனங்களும் நான்கண்டுவருகிறேன் (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

ஆடுமயில்களும் அன்பாய்க்குயில்களும் *
அன்னங்களிங்குண்டுவனங்கண்டுபோவாமேன் (கோகில)

சீதை சொல்லல்,

வேணும்படியாளுக்கு வேண்டியவாமிது *
அன்றுமகிழ்ந்தாப்போ லின்றுமகிழ்ந்தேனே (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

மதிபோல்மலர்முகமும் மயிலின்வளமெகாண்ட *
ரதியேயுதவாதுரஞ்சிதமேசீதாய் (கோகில)

சீதை சொல்லல்,

தேசம்புகழவந்த ஜெயராமச்சந்திராநீ *
பாசம்வையும்தன் விஸ்வாசமாயென்மேல் (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

ஆகமாய்வேதமாய் வேதப்பொருளாயெந்தன் *
மோகமானசீதா போகு ஜனகன்பெண்ணே (கோகில)

சீதை சொல்லல்,

அதிபதிநீராச்சே சதிசர்ப்பனைகளாமோ *
மதியிலிலொருநாளும் நெறிதப்பிநடவேனே (நேச)

ஸ்ரீராமர்-சொல்லல்,

சின்னநாளையிற்பெண்ணே சீதையேயுன்னைமணஞ் *
செய்யவந்தபோது ஜனகன்வில்லொடித்தேனே (கோகில)

சீதை சொல்லல்,

தெண்டகாவனத்தினில் ரிஷிகளென்பவர்தம்மை *
கண்டுமனமகிழ சருத்தில்நினைத்தேனையா (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

பாலப்பிராயத்திற் பரிந்துன்னைமணஞ்செய்தேன் *
கோலப்பொருந்துஞ் சீதை தேனேயென்மானே(கோகில)

ஸ்ரீராமர்-சீதைக்குச்சொல்வசனம்

அகோவாரும்பெண்ணே சீதாய் அப்படியே வனம்போகவு னக்குச் செலவுதருகிறேன் நீஅந்தப்புரம் போம்பெண்ணே,

சீதைசொல்.வசனம்:

ஆனல்மகாபாக்கியம் நான்போய்வருகிறேன் சுவாமி,

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபதை

கட்டியக்காராகேளாய் கடுகியேயோடியிப்போ *
சட்டமாய்க்காவலோரைச் சந்நிதியில்வரவேசொல்லி *



திட்டமேசெய்துசீயுஞ் சிறியபுலியைப்போலப் *
பொட்டெனக்கொலுமுன்பாகப்புகழுடனேடிவாடா *

ஸ்ரீராமர்,கட்டியக்காரனுக்குச்சொல்,வசனம்,

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய அயோத்தியா புரியைக்காக்கப்பட்ட தலையாரிகளை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அப்படியே யழைப்பிக்கிறேன்சுவாமி

கட்டியக்காரன்-தலையாரிகளுக்குச்சொல்-கவி,

நிலைமைசேரயோத்தித் தலையாரிகளும்மை, *
கொலுவுக்குவரவே வலுவினிற்சொன்னர் *

வசனம்:

அகோகேளும் தலையாரிமார்களே நமதரசனாகிய ஸ்ரீராமர் உங்களை அதிசீக்கிரமாயழைத்து வரச்சொன்னர் ஓடிவாருங்களப்பா,

தலையாரிமார்கள்-கட்டியக்காரனுக்குச்சொல்-கவி,

திட்டமாயரசுசெய்யும் பட்டாபிராமர்சொன்ன *
கட்டளைதனக்கேதேனு மட்டியுமுன்னேடேவாறோம் *

வசனம்.

கேளுமப்பாகட்டியக்காரா நமதரசன்சொல்லுக்கு-மோரம்டியா,இதோவருகிறோமப்பா

தலையாரிகள்வருகிற-பொது-திபதை.

கெட்டியதடியுங்கொண்டு கேரிசக்கையிலேந்தி *
மட்டின்றியாரப்பரித்து மகிபதியழைத்தாரென்று *
தட்டியேதுடைகடன்னைத் தாண்டியேவருகெடுத்து *
கட்டேடி காவலாளர் களறியில்வருகின்றாரே *

தலையாரிகள்-வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்,

பல்லவி:

காவற்காரர்நாங்களே-ஊரிற்-காவற்காரர்நாங்களே.

அநுபல்லவி.

கோபக்காரர்போல விழிகளைக் *
கட்டிமுழித்துநாட்டேக்குள்வருங் (காவ]

சரணங்கள்.

தன்னளிர்மேலடிக ளெடுப்போம்-மெள்ளத் *
தவழ்ந்துகள்ளரைப்பிடிப்போம் *
உன்னிதமாக கடந்தடியைப்பற்றி *
பின்னுரின்னுமென்றுமன்னர்முன்னேசெல்வோம் [காவ]

அயோத்திமுழுதுந் திரிவோம் - பகல் *
அர்த்தராத்திரியில்வருவோம் *

கீ

வையகந்தோரெல செம்மைப்புதிதாலும் *
வாட்டுவேமெங்கள் பேர்காட்டுவோம்பூமியில் [காவற்]

நிகண்டதடி[illegible] பிடிப்போம் - கையில் *
சேரிசம்பல்லையக் தொடுப்போம் *
அகண்டமாநியாம் அயோத்திவாழ்ராமர் *
ஐயன்பாதத்தன்னை மெய்யென்றுநம்பியே [காவற்]

தலையாரிகள்-ஸ்ரீராமருக்குச்சொல்லுகிறதை,

மெய்ப்பொருளானசேனை மிகுதியாய்ப்படைத்தவீரா *
செப்பமாயடியார்தம்மைச் சீக்கிரமாயழைத்ததென்ன *
செப்பினைச்சொல்லுவீரெங்கள் செம்மலாயோத்திராமா *
கற்பகாச்சரணம்ராமச் சந்திரசேகரணையயா *

வசனம்.

அசேகாளாகுக்கலயாரி ரகுநாயகரே எங்களை அழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-தலையாரிகளுக்குச்சொல்-றதை.

தலையாரிமாரேவாரீர் சாற்றுமென்மொழியைக்கேளீர் *
நிலைமையாங்கமழ்நாட்டில் நிகன்பலருரைக்கும்பேச்சும் *
மலையதோர்பட்டணத்தின் வாய்மையுமுளவாய்க்கேட்டு *
கலமுடன்வந்தெனக்கு நவிலுவீர்காவலாளரே *

வசனம்.

அசேகாளாகுக்கலயாரிமார்களே நீங்கள்நகரிசோதனைக்குப்போய் அவரவர்கள் என்னசொல்லிக்கொள்ளுகிறார்களோ அந்தவார்த்தையை ஒன்றும்ஒளியாமல் என்னுடன்வந்து அறிக்கையிடுவீர்களப்பா.

தலையாரிகள்சொல்-வசனம்.

அப்படியேவந்து அறிக்கையிடுகிறோம் சுவாமி.

தலையாரிகள்-ஊர்உளவறிகிற-தரு

இ-ம்-ஏதுகுலகாம்போதி-சாபுதாளம்.

பல்லவி.

அறிந்துவருவோம்வாரீர் நகரின்சேதி
அறிந்துவருவோம்வாரீர் *

அநுபல்லவி.

அறிந்துவருவோம்வாரீர் அவனிதன்னிலேசேதி *
வருசேதியவர்சொல்லும் வார்த்தையையிப்போது [அறி]

சரணங்கள்.

நாலுதிசையெங்குந் தேடுவோம்-மெள்ள *
நயமபாஷைசொல்லிக் கூடுவோம் *
மேலும்நகரிலுள்ள காரியத்தைக்கொண்டு *
பாரில்ராமருக்கிப்போ பகருவோமன்னையரே * (அறி)



பல்லிகளைப்போலே பதுங்குவோம்-நல்ல *
பழையச்சுவரினிடைமறைந்து தங்குவோம் *
கெல்லியேபல்லைக்கடித்தாற்போல்பூமியில் *
வல்லமையாகவே கல்லின்மேற்பாயுவோம் (அறிந்து)

ராஜரங்கனார்வீதி செல்லுவோம் *
கன்னாரும்வீதியினிற் புல்லுவோம்-மகேர் *
மாசில்லவைசியர்வீதி வணிகர்வீதிகளும் *
வாகானமற்றவர்வாழ்வீதியுஞ்சென்று (அறி)

வண்ணான் வருகிற-பொது-திபதை.

அசைவிலாதயோத்திதன்னி லனுதினங்கலைவெளுக்கும் *
இசைபெறும்ரசகனுமே னெடுபடாமூட்டை தூக்கி *
வசையுடன்பேசிக்கொண்டு மனைவியுங்காதலமாகப் *
புஜபலராமர்காட்டிற் பொருந்தியேவருகின்றானே *

வசனம்.

அசேகாதெப்படியென்றால் இந்தச்சமையத்திலே தலையாரிகள்-நகர் சோதனைக்குப்போய் உளவாயிருக்கிறபோது அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கப்பட்ட வண்ணான்வருகிறவிதங்காண்க.

வண்ணான்வருகிற-தரு-இ-ம்-ஏதுகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

வண்ணான்வந்தானே-அயோத்தியில் *
வண்ணான்வந்தானே *

அநுபல்லவி.

வண்ணான்வந்தான்வெகு விண்ணாணம்பேசியே *
வண்ணானயோத்தியிற் கலைகள்வெளுக்கின்ற (வண்ணான்)

சரணங்கள்.

வாட்டமாகப்பெரு மூட்டை முதுகில்வைத்து *
மேட்டிப்போட்டியாகவாட்டம்பேசிக்கொண்டு (வண்ணான்)

கந்திகெந்தியுடமர் கெந்திக்கெந்திவாக்கி *
கொந்திக்கொந்தியவன் மிந்திசலவைசெய்யும் (வண்ணான்)

வண்ணானுடன்வந்தானே மனையாளைபேசியே *
என்னுடன்ராமர்க்கு மினங்கள்பேசியே (வண்ணான்)

மன்னவர்மெச்சிட மரியாதையாகவே *
துன்னிதுவைக்கிறேன் சேயனேநானென்று (வண்ணான்)

அழையுங்கும்பிட்டுக்கொண்டு நூபாவுங்கள்குடி *
அடிமைமென்னுதெருமட்டுஞ்சத்தம்போட்டு (வண்ணான்)

தன்னைத்தன்னாடிக்கொண்டு தயவும்பின்னையுமாகக் *
கொள்ளைவார்த்தைதன்னைக் கூறவுபாயங்கொண்டு (வண்ணான்

வன்னான்-தன்மனைவிக்குச்சொல்-திபிதை.

இந்தநற்றுணிகளெல்லாம் இபறுடன்கொண்டுபோய்நீ *
அந்தந்தவீடுதோறும் அடங்கலுங்கொடுத்துப்பின்பு *
விந்தையாய்ப்பாண்டங்கொண்டு வீடுகள்தோறும்போய்நீ *
தொந்தமாய்ச்சோறுவாங்கிச் சுறுக்கினில்வருவாய்பெண்ணே *

வசனம்.

அகோவாரும்பெண்ணே இந்தத்துணியைக்கொண்டுபோய் அந்தந்தவீட்டிற்கொடுத்துவிட்டுப் பிற்பாடு பானையை யெடுத்துக்கொண்டுபோய் அந்தந்தவீட்டில் சோறுமெடுத்துக்கொண்டு ராத்திரிகாலமானபடியால் சீக்கிரம் நிமிஷத்திற்குள் வருவாய்பெண்ணே.

வன்னாத்தி-வன்னானுக்குச்சொல்-வசனம்,

நீர்சொன்னபடியே செய்துவருகிறேன் பிராணநாயகா

வன்னாத்தி வீதிகளில் சோறுவாங்குகிற-தரு,

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

சோறுபோடம்மா-ஆ அம்மா-கொஞ்சஞ் *
சோறுபோடம்மா *

அநுபல்லவி.

நீறையுடன்பகற் கறியிருந்தாலிடு *
நேரமாகுது ஆரம்மாகூழ்கொடு (சோறு)

சரணங்கள்.

பல்முளைகாத் தண்ணி-யிருந்தாலிப்போ *
பரிவாய்தந்திடம்மணி *
நகவுடன்பழங்கஞ்சி யிருந்தாலுந்தந்திடுவாய் *
சட்டியில்மீந்தக்கறியை இட்டமுடன்தந்திடுவாய் (சோறு)
கம்புக்களி தருவாய்-வாருச்சோற்றைக் *
காக்கொண்டு நீவருவாய் *
கும்பலென்னம்மா கூவிக்கூவித்தாவுதேனே *
கம்பியுங்கனைகாலும் காடிகாடிமேவுதேனே சோறு]
புளித்த கூழானும் அம்மாஅம்மா *
போடாய் நீதானும் *
களித்துக்கலைதனை வெறுக்குதுக்கருகிறேன் *
கஞ்சிகொஞ்சக்தஞ்சியம்மாகலைக்கியிடுவருகிறேன் (சோறு)

வன்னாத்தி-வன்னானுக்குச்சொல்-திபிதை.

என்னிடகணவாநீயு மியம்பியவாறேநானும் *
சொன்னவர்வீடுதோறுஞ் சுறுக்கிலிற்கலைகள்தந்து *



பன்னியபாண்டங்கொண்டு பரிவுடன்சோறுவாங்கி *
முன்னமேவந்தேனையா வுன்னவேவந்திடாயே *

வசனம்,

அகோவாருமென்கணவா நீசொன்னபடியே கலைகளைக்கொடுத்து சோறுவாங்கிவந்தேன் சாப்பிடவாருமென்கணவா,

வன்னான்-வன்னாத்திமீதுகோபம்-கொண்டடித்தல்-திபிதை.

எத்தனைநேரமன்று யிங்கிருந்தேகையில்நீ *
பத்திகானில்லையோடி பயமுனக்கில்லையோடி *
சித்திரிகாயைப்போலத் திரிகிறாயுன்னைக்கைபாற் *
குத்தியேமயிர்பிடித்துக் குப்புறவிழவுதைப்பேன் *

வசனம்,

அகோவாரும் பெண்ணே நீஇங்கேயிருந்து போகிறபோது என்னேரமன்று இப்போது எவ்வளவுநேரமாச்சு கொஞ்சமாகிலும் பயமில்லாமற் போச்சுதல்லவா இராக்காலமென்று சீக்கிரமாய் வரச்சொன்னால் சித்திரிகாயைப்போல் ஊரைச்சுற்றியிருந்து வந்தாயல்லவா என் முகத்தின்முன் வரவேண்டாம் அப்புறத்தேபோடி இனிமேல்வரத்தேவையில்லை இதோ அடித்தேன் உதைத்தேன் ஓடிப்போடி ஓடிப்போ,

வன்னாத்தி-புலம்பல்-கன்னனிகள்-இ ம்-கண்டா-ஆதிதாளம.

என்னும்நோவுதே அடித்தஅடி ரத்தமேவுதே *
பொங்கிமீறுதே கண்ணீரண்டும்போதச்சோருதே *
பெற்றதா யிலையே எனக் குற்றநோயிலையே *
சுற்றத்தாரிலையேஇவ்வுலகில் துணைத்தனத்தாரிலையே *
பக்கம்நோவுதே வுதைத்தவுதை பார்க்கவேகுதே *
திக்குன்காணேனேதெய்வமேயிந்தச்சனனம்வீண்தானோ

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோதெப்படி யென்றால் வன்னாத்தி முறையிடும்போது வன்னான் மாமனார் மன்மகனுக்காகச் சொரிகலருக்கும விதங்காண்க

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி,

இப்படியடிக்கலாமோ நான்பெற்றபெண்ணை *
இப்படியடிக்கலாமோ

அநுபல்லவி,

இப்படியடிக்கலாமோ-தப்பிலிபறப்பயலே *
வொப்பனவோழியென்று குப்புறப்போட்டுதையாமல் (இப்)

சரணங்கள்,

ஒச்சியென்றிழுத்து சீதேவிபோய்விடாதே *
சோவேவராவழைத்து செருப்பால்லடித்திடாமல் (இப்)

காலையுங்கையையுங்கட்டிக் கழுத்துக்குச்சுருக்கிட்டு *
கோலமுடன்கொண்டுபோய்குளத்திலேதள்ளாமல் (இப்)

பெற்றஅருமையென்ன பேரிட்டநேத்தியென்ன *
வளர்த்தஅருமையென்ன வைத்திருந்தநேத்தியென்ன [இப்]

ஓடியொளித்திட்டாலும் உலக்கைதடியெடுத்து *
பாடிப்பாடியடித்தானே பச்சுடம்புபச்சிவா (இப்)

வண்ணான் தாயார்-வண்ணானுக்குச்சொல்.திபிதை

மட்டியாமகனேநீயும் வாயுரைசெய்யாமல்வீணாய் *
இட்டெனவடித்தத்தாலச் சிறுக்கியும்விட்டைவிட்டுப் *
பட்டனைக்கோடிதன்னிம்பருத்தவோரகம்போயுற்றாள் *
சட்டெனச்சென்றேயுன்றன் றாரத்தையழைத்துவாடா *

வசனம்,

அகோவாடா யென்மகனே உன்மனைவியை வாயால்திட்டாமல் அடிஅடியென்று நீயடித்தபடியால் அவள் இத்தப்பட்டணைத்துக் கடைக்கோடியில் ஒருவீட்டில் போயிருக்கிறாள் நீபோய் அழைத்துவாடாமகனே.

வண்ணான்-தாயாருக்குச்சொல்-திபிதை,

இன்னியவளையழைக்க நீ யின்றைக்குவீட்டிடேபோன *
பன்னிதானே துக்காரும் பாராளுமராமனல்லால் *
மன்னிபசீதைபோலே வருந்துனாளழைக்கேனாகில் *
என்னிடகுலத்துக்கெல்லாம் ஈனத்திவருமேதாயே *

வசனம்,

அகோகேளுந்தாயே பெண்சாதியானவள் அயல்வீடுபோனால் அழைக்கலாமோ ரகுநாயகரானவர் சீதையை பெத்துக்கொண்டுபோன ராவணனைச் சங்காரம்பண்ணி சீதையை அழைத்துக்கொண்டு வந்து அயோத்தியில் ராச்சியபாரம் பண்ணுகிறோ அவருக்கு அடுக்குமோ பிற அயல்வீடுபோனபெண்சாதியை நானழைக்கேனாகில் என்னுடைய ரசகுலவம்சத்திற்கு யீனத்துவம் வருந்தாயே

தலையாரிகள்-ஒருவரோடொருவர்சொல்-திபிதை.

கேட்டீரோரசகன்வார்த்தைக் கேட்டீரோயெல்லோருந்தான் *
தேட்டமாம்ராமபத்தர் தேவிமேல்தோஷஞ்சொன்னான் *
வாட்டியேயவனைநாமும் வாய்கொழுப்படக்கவேணும் *
நாட்டியபட்டணத்தல் நகரிசோதனைகள்நாமே *

வசனம்,

அகோவாருங்களண்ணமாரே ரசகனானவண்ணான் என்னவார்த்தை சொன்னான். அந்த வார்த்தைக்கு அவனையென்ன செய்யவேணும் ஒன்றுஞ் செய்யப்போகாது ரகுநாயகருடனே இந்தவார்த்தையைச் சொல்லுவோம் வாருங்களண்ணமாரே,



தலையாரிகள்சொல்-தரு-இ-ம்ஈ தருகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி,

நாவெழுந்தென்னசொல்வோம்-ராமரோடே *
நாவெழுந்தென்னசொல்வோம் *

அநுபல்லவி.

நாவெழுந்தென்னசொல்வோம் நகைக்கப்புவியின்மீதில்
பாவிரசகன்வார்த்தைப்பாராமற்சொன்னத்தை (நா)

சரணங்கள்,

என்னென்று சொல்லப்போறோம்,ராமரோடே *
ஏதென்று சொல்லப்போறோம் *
எனவென்றுசொல்வோ யிந்தச்சேதிதன்னைக் *
காதினில்கேட்கவுங்காரணமோஹரி (நா)

சொல்லுவ - தெப்படிநாம்-ராமரோடே *
சொல்லுவ - தெப்படிநாம் *
சொல்லுவதெப்படி துஷ்டரசகன்வார்த்தை *
தொல்புவியுள்ளவர் செவிதனிற்கேட்குமோ (நா)

தலையாரிகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை,

ஞாயகோர்ந்துயிப்போ அஞ்சுவோஞ்சேதிசொல்ல *
உய்யவோரசகன்பேச்சை உலகினிலடாதுகண்டீர் *
வையகமளிர்வாய்மை வாய்த்ததோர்சீதைக்கென்று *
டையவேகுற்றஞ்சொன்னான் பாதமேசரணமையா *

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி எங்களை நகரிசோதனைக்கனுப்பிவைத்தீர்களே நம்முடையபட்டணத்தில் ரசகனானவண்ணான் சீதாலட்சுமியின்பேரில் தோஷஞ்சொன்னான் அதையெப்படி சொல்லப்போகிறோம் சுவாமி,

ஸ்ரீராமர்-தலையாரிகளுக்குச்சொல்-திபிதை.

ஏதுதான்சொன்னான்சொல்வீ ரென்மீதுபழுதல்வண்ணான் *
பாதகனல்லகண்டீர் பரிவுடனிங்கேயுள்ளோரன் *
சீதைதானானுமென்ன திட்டிவோர்குற்றமாகில் *
நீதியாய்ச்சொல்லும்வார்த்தை நியஷத்திலுரைத்திடீரே *

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் தலையாரிகளே ஆராகிலும் என்னகுற்றங்களிருந்தால் சொல்லுவார்கள் ரசகனானவண்ணான் என்னவார்த்தைசொன்னான் ஒன்றும்மொளியாமற் சொல்லுங்கள்தலையாரிகளே.

தலையாரிகள் ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை

ரசகனுடனையாள்தன்னை காடியேயடித்தானென்று *
வசையறப்பிணங்கிப்போனாள் மாநிலத்தன்னிலிந்த *

அசலகம்போனபெண்ணை அழைப்பனோவழையேனந்த *
தசரதராமக்கல்லோ தகுமிதென்றுரைத்தானையா *

வசனம்,

அகோவாருஞ்சுவாமி ககிரிசோதனைக்குப் போனகயில் ரசகனை வன்ஞன் தன்பெண்சாதியை அடித்தான் அவள் பிணங்கி அயல்வீடு போனாள் அவன்தாயாரும் மற்றுமுண்டான பேரும் அவனைத்தன்பெண்சாதியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப்போகச்சொன்னார்கள் அதற்கந்தவன்னான்சொன்னது ரகுநாயகரல்லவோசீதைசயையெடுத்துக்கொண்டுபோன ராவணனைச் சம்மாரம்பண்ணி சீதையைக்கொண்டு வந்து தொடையின்பேரில் வைத்துக்கொண்டு ராச்சியபாரம்பண்ணுகிறார் அப்படிக்கொற்ற ராமருக்கேசெல்லுமேயல்லாமல்அயல்வீடுபோன பெண்சாதியையழைத்தால் தன்ரசகுலத்துக்கு ஈனம்வருமென்று சொன்னான்சுவாமி.

ஸ்ரீராமர்-தலையாரிகளுக்குச்சொல்-வசனம்,

ஆனால்உங்கள்விடுத்திக்குப்போய்வாருங்கள்பிள்ளாய்தலையாரிகளே,

தலையாரிகள்-வசனம்-மகாபாக்கியஞ்சுவாமி,

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்,

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரதம்பிபரதனை அழையும் பிள்ளாய்.

கட்டியக்காரன்.வசனம்,அப்படியே அழைக்கிறேன்சுவாமி,

கட்டியக்காரன்-பரதருக்குச்சொல்.வசனம்·

அகோவாரும் பரதமகாராஜாவே தங்களைரகுநாயகர் அழைத்துவரச் சொன்னார்சுவாமி,

பரதர்-வசனம்.ஆனால்போவோம்வாரும்பிள்ளாய்

பரதர்வருகிற-தரு-இராகம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி,

கதிர்குலபதிபரதன்வருகிறான்-ஸ்ரீராமர்க்கிளைய *
கதிர்குலபதிபரதன்வருகிறான் *

அநுபல்லவி.

அதிபதியெனவரு - குணபதி *
திசைதரும்புகழ்வித - ரணபதி (கதிர்கு)

சரணங்கள்.

அண்டரண்டமெங்கும் கடுங்கவே எக்காளமூதி *
அதிகசின்னமூரக மூதவே *
கண்டபேர்கள்தெண்ட னிடவே *
களித்தக்கவிஞர்கவிகள் பாடவே *
வண்டணிகுழல் மாதர்காட்டியம் *
வரிசையாய்ன்றெதிர்கைகாட்டவே *



பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்சொல் கண்ணிகள்-இ-ம்புந்நாகவராளி- ரூபகதாளம்.

பல்லவி

அல்லவே தம்பிமாரே நானொருசேதி *
சொல்லுகிறேன்கேளுந்திரோ *

அநுபல்லவி

வல்லவராகநாமும் வாழ்ந்தவெல்லாம்வசையாச்சே *
மெல்லிசீதையாலே நம்பிட *
வெட்கமெல்லாம் வீணாய்ப்போச்சே (அல்லவே)
சீதையென்றழைத்தபேர்க்கு உலகத்தில் ஓதுவர்க்கிடமாச்சே
மாதுசீதையாலிப்போ மானபங்கம்வரலாச்சே
ஏதுகாரியமுனாயாமலேகிளிவிலிர்வனத்திற்கு (அல்லவே)

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்-திபதை.

எத்தனிமீதினைத்தந்த மிருக்கவேபரதாகேளாய். *
முத்தியேசொன்னாகில் மோசமேயாகிடாதோ *
செந்திருவானசீதை செகந்தனிலீன்மானுள் *
வந்திடும்விதிவசத்தை மலரயன்றடுக்கமாட்டான் *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் தம்பிபரதா இந்தசீதையிருக்கிறபடியினாலே நம்முடையவம்சத்திற்கு ஈனத்துவம்வருகிறது தசரதராமனென்கிற கீர்த்திபோகின்றது அப்படிக்கொத்த சீதையிருந்தாலும் நமக்காகாது பொழுதுவிடியுமுன்னமே சீதையையழைத்துக்கொண்டுபோய் வனத்தில்விட்டுவாரும் தம்பிபரதா.

பரதர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்

ஐயையோசீதைதன்னை அடுக்குமோவனத்திலேவிட *
விண்ணுலகினுள்ளதேவர் வேந்தருமதிக்கலாரோ *
சென்றுடனே இலங்கைவிட்டுத்திரும்பிவரும் வேளைதன்னில்
திண்மையான அக்கினியிலே சென்றுடனுருவாய்வந்தாள் *
என்னசெய்வேன்ராகவரே யிணையடிசரணமையா *

பரதர்சொல்-வேறு-கண்ணிகள்.

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

மல்லிகைமாமலர் வாசம்பொருந்திய *
வாருள்ளசீதையாளை (என்னண்ணா)
சல்லியஞ்சொல்லித் தவிக்காடுபோகத் *
தயங்கவிடலாமோ (என்னண்ணா)

முன்னாளிற்பட்டகலக்கங்களிப்போது *
முகமுந்தெளிவில்லையே (என்னண்ணா)
இந்நாளிற்கானகத்தேகுமென்றேசொன்னீர் *
இவ்விதிக்கென்னசெய்வேன் (என்னண்ணா)
பாருக்குள்ளேசீதைலட்சுமியைப்போலே *
பதியிலிருந்தவளை (என்னண்ணா)
கானகந்தன்னில்மயில்போலேசீதையை *
கலங்கவிடலாமோ (என்னண்ணா)
முத்தானமேனி முழுதுங்கறுகறுத்து *
முகமுந்தளர்ந்திடுமே (என்னண்ணா)
பத்தினிசீதைபதிவிரதைதன்னைப் *
பதைக்கவிட்லாமோ (என்னண்ணா)
குற்றங்கள்சொல்லிநீ காட்டினிலோட்டினால் *
குலத்திற்குத்திங்குவரும் (என்னண்ணா)
இது-யாராலேவந்தவனர்த்தமோவறியேனே *
ஹரிகரிதெரியேனே (என்னண்ணா)

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

என்னிடஅண்ணாகேளீ ரேதுதானீர்சொன்னாலும் *
கன்னியாஞ்சீதைதன்னைக் காட்டினில்விடவொண்ணாது
முன்னமேரவிகுலத்தில் முக்கியமாய்வந்தராமா *
என்னிடமனுவைக்கொண்டே இக்கோபமாறவேணும்

வசனம்.

அகோவாருஞ்சுவாமி அக்கினிச்சுரூபமாயிருக்கப்பட்ட சீதையின்பேரில் குற்றஞ்சொல்லிக் காட்டில்விடலாமோ இப்பிழையை என்னைக்கொண்டுமன்னியுஞ்சுவாமி,

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்-திபிதை.

யானைகள்தேர்களென்ன அடர்ந்திடும்பரிகளென்ன *
ஞானிதானுமென்ன தம்பிமார்மூவரென்ன *
மானமில்லாதாரென்று வையகத்தவர்களேச *
நானென்னநீயுமென்ன நன்றல்லகடக்கநில்லாய் *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் தம்பிபரதா அதேது ஒருநாளுமில்லாதவார்த்தை உத்திரத்திற்கு உத்திரஞ்சொல்லுகிறாய் சீதையை வனத்தில்விட்டுவந்தாலாயிற்று இல்லாவிட்டால் என்முகத்தின்முன்வரவேண்டாம் அப்புறத்தேபோம்பிள்ளாய்.

பரதர்சொல்-வசனம். ஹரிகரிகோதண்டபாணி.



ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணனை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியன்-வசனம்.

அப்படியேஅழைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-லட்சுமணருக்குச்சொல்,வசனம்

சரணஞ்சரணஞ்சுவாமி லட்சுமணப்பெருமானே தங்கள் ரகுநாயகர் அழைத்துவரச்சொன்னார் சுவாமி.

லட்சுமணர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

ஆனால்போவோம் வாரும்பிள்ளாய்.

லட்சுமணர்வருகிற-ஓரடிதரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

தந்திரந்தனிலுயர்ந்த இந்திரஜித்தைவென்ற *
சுந்திரலக்ஷ்மணரும்வந்தார் ஜெயசூர (சுந்தி)

அநுபல்லவி.

அந்தரந்தனிலுயர்ந்த சந்திரனெனும்வதனர் *
சுந்தரஸ்ரீராமரனுவிந்தைதசேர்வைசெய்ய (தந்திர)

சரணங்கள்:

அன்னதிந்திரைதன்னை வெறுத்தோன்.வன *
ரண்ணனஞ்சொற்படிவனை முழுத்தோன் *
பன்னும்பலகனியைப் பறித்தோன்-என்னும் *
பரிவாய்தமையன்கரங் குவித்தோன் *
மலர்க்கும்படைத் தலர்க்கும்-வெகு *
துடிக்குங்களை யெதிர்க்கொண்டவன் *
அடிகள்பணிட்கொடை கவிரிவிசிறிகள் *
சுருளும்அலைமுனை நிகருமொளிபெற (சுந்தி)

லக்ஷ்மணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

வன்னமாய்லட்சுமணாயென் வார்த்தையைநன்றாய்க்கேளு *
என்னிடசீதைதானு மேகாந்தவேளைதன்னில் *
பின்னமில்வனந்தான்பார்க்கப்பிரியமாயிருக்குதென்றாள் *
மன்னியவவளையிப்போ வனத்தினில்விட்டுவாராய் *

அகோவாருந்தம்பி லட்சுமணா சீதையானவள் வனம்பார்க்கவேணுமென்று சொல்லியிருந்தாள் இப்போது அழைத்துக்கொண்டுபோய் பொழுதுவிடிய ஜாமத்துக்குள் வனத்தில்விட்டுவாருந்தம்பி லட்சுமணா.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-கண்ணிகள்.
இராகம்-கண்டா-ரூபகதாளம்.

நன்றல்லஅயோத்தியாளும் நாயகரேநீதியல்ல (ராமராமா)
வென்றிதேவரொன்னசொல்வார்மேதினிக்குவார்த்தையல்லோ (ரா
வண்ணமானமேனிசீதைமனமெலிந்துபோகொணு-ராமராமா
எண்ணமல்லராமபத்திராயேதுசெய்வேன்ராகவரே (ராமராமா)
பார்க்குள்ளஅயோத்திமன்னு பால்மொழியாள்சீதைதன்னை (ராம)
நீங்கியேவனத்திலோட்ட நீதியல்லராகவரே (ராமராமா)
தேங்கியஅக்கினிதன்னிற் சீதையாருமூழ்கிவந்தாள் (ராமராமா)
தீங்குகள்நீர்சொல்லவேண்டாந் தேவரீர்மனம்பொறுப்பீர் (ராம)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

அக்கினிமூழ்கிவந்த அலங்கிர்தச்சீதைதன்னை *
உக்கிரமானவார்த்தை யுரைப்பதுநீதியல்ல *
இக்குலந்தனனில்வந்து மியனுடன்வாழ்ந்திருந்தோம் *
மிக்கதோர்வனத்திற்போனால் மீண்டுபோஞ்செல்வமெல்லாம் *

வசனம்.

அயோவாருஞ்சுவாமி ரகுநாயகரே அக்கினிவளர்த்தி அதில் மூழ்கிவந்தசீதையின்பேரில் தோஷஞ்சொல்லிக்காட்டில்விடலாமோ நம்முடைய குலத்திற்குத் தீங்குவரும் இந்தவார்த்தையை எண்ணிக்கொண்டு மன்னியுஞ்சுவாமி,

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல் திபிதை,

தம்பிநீகேளாயிப்போ தாரணிமனிதரெல்லாம் *
வம்புரைசொல்லவும்நம் வமிஷத்திற்கீனமாகும் *
பின்பதைபரிகரிக்கப் பிரமர்க்குமெளிதேயாகும் *
என்னுயிர்த்துணைவாதம்பி யென்சொல்லைகடக்கதில்லாய்.

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா நம்முடையகுலத்திற்குயீனம்வருமென்று சீதையை வனத்தில்விட்டுவரச்சொன்னால் ஒருநாளுமில்லாதவார்த்தை சத்திரத்துக் குத்தாஞ்சொல்லுகிறாய் சீதையை வனத்திலேவிட்டு வந்தாலல்லாமற் விடாமற்போனால் என்முகத்தின்முன்னே வரவேண்டாம் அப்புறம்போம்பிள்ளாய்

ஸ்ரீராமர் கட்டியக்காரனுக்குச்சொல் வசனம்

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணப்பெருமாள்போய்விட்டாராபாரும்பிள்ளாய்

கட்டியக்காரன்சொல் வசனம். போய்விட்டார்சுவாமி

ஸ்ரீராமர் வசனம்

ஆனால் நம்முடைய சத்துருக்கனை அழையும்பிள்ளாய்

கட்டியன்-வசனம்.

அப்படியே யழைக்கிறேன் சுவாமி,



கட்டியக்காரன்-சத்துருக்கருக்குச்சொல்வசனம்

சரணஞ் சரணஞ் சுவாமி சத்துருக்கமகாராஜரே தங்களைரகுநாயகர் அழைத்துவரச்சொன்னார் வாருஞ்சுவாமி.

சத்துருக்கர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

ஆனால் போவோம் வாரும்பிள்ளாய்.

சத்துருக்கர்வருகிற-ஓரடிதரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி.

சத்துருக்கர்வந்தார் சபைதனில்-சத்துருக்கர்வந்தார்

அநுபல்லவி.

மித்துருக்கள்புகழ் எத்திசைதனிலுயர் *
வுத்திருக்கமணிமுடிமிசையிலங்கவே (சத்துருக்)

சரணங்கள்.

தசரதமகிபாலன் தோள்வலி - தாவுமதிகசீலன்
அதிரதற்கதிகாரன் புகழ்பெறும்யானைசேனைவீரன்
திசைகடலொலியாக யிருபுஜமோசைகள் *
ஜெயஜெயஜெயவென முரசுவொலிபெற (சத்துருக்கர்)

சத்துருக்கர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்தகாரியந் தெரியச்சொல்லுமென்சுவாமி,

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல் திபிதை,

தம்பிசத்துருக்காநீதான் சதிருடன்ரதத்தைக்கொண்டு *
வம்பெனுஞ்சீதைதன்னை வனந்தனில்விட்டுவாராய் *
அம்புவிக்கேச்சாதாயிற் றுகையால்நீயுமிப்போ *
துன்பமாய்வார்த்தையொன்றுந் துடுக்கெனச்சொல்லவேண்டாய்

(வ-ம்) அகோவாருந்தம்பி சத்துருக்கா நீயாகிலும் துன்பமாய் ஒன்றுஞ் சொல்லாமல் சீக்கிரமாய் சீதையை வனத்திலேவிட்டுவாருந்தம்பி சத்துருக்கா.

பெரா-கொச்சகம்.

அய்யமெல்லாங்கொங்கை தோகையாஞ்சீதைதனை *
வையகத்திலுள்ளவர்கள் வழுத்தும்வசைபறிந்து *
வெய்யவனந்தனில் விட்டுவாவென்றவுடன் *
ஐயாவெனச்சத்துருக்கர் அழுதுபுலம்புவரே *

சத்துருக்கர்சொல்-கண்ணிகள்-இ-ம்-கண்டா-மிசரதாளம்

மாதவா சீதையைவனந்தனில்விடச்சொன்னீர்- அண்ணாவே-இந்த
வங்கிஷத்துக்கெல்லாம் வார்த்தைகளல்லவோ - ரகுராமா
பேதையாஞ்சீதையை யேதுசொன்னீரையா-அண்ணாவே - நல்ல
பெருப்பெருவாழ்வும் பெண்களாலல்லவோ - ரகுராமா
செந்திருமாதை தியக்கவிடிப்போது - அண்ணாவே அவள்

அன்னை சீதைதன்னை யென்னசொன்னீரையா - அன்றுவே-இது
யாராலேவந்த வனர்த்தமோஅறியேனே - - ரகுராமா

சத்துருக்கர்சொல்-நிபிதை.

இந்தமாமொழிகள்கேட்கயென்செவியுற்றதையோ *
சிந்தையிற்சிவனேமுன்னே செய்திடும்பாவந்தானோ *
எந்தனுக்கிந்தபாவமிருந்ததோயினியென்செய்வேன்
விந்தையாம்சீதையார்க்கு விதியின்வாறறிகிலேனோ *

சத்துருக்கர்சொல்-கண்ணிகள்-இ-ம்-ஆனந்தபைரவி ஆதிதாளம்.

அன்னையெனுஞ்ஜானகியை *
அடுக்குமோவனத்தில்விட ஹரிநாதா (அன்னுறு)
என்னமாய்மனந்துணிந்து *
யேகுவேனுன்கானகத்தில் ஹரிநாதா (அன்னுறு)
தன்னலானமுகங்களெல்லாங் *
கருகிடுமேயென்செய்வேன் ஹரிநாதா (அன்னுறு)
தின்மையான்வார்த்தையொன்றுந் *
சீதைபேர்சொல்லலாமோ ஹரிநாதா (அன்னுறு)
வர்ன்னமானமேனியெல்லாம் *
வாடிடுமேயென்னசெய்வேன் ஹரிநாதா (அன்னுறு)
அன்றிலங்கையதனிற்று *
அக்கினியில்மூழ்கிவந்தாள் ஹரிநாதா (அன்னுறு)
பாங்குடன்சீதையைக்காட்டில் *
பரிவாய்விடுதல்தீது ஹரிநாதா (அன்னுறு)
இங்குகள்சொல்லவேண்டாம் *
தசரதராமச்சந்திரா ஹரிநாதா (அன்னுறு)

சத்துருக்கர்சொல்-வசனம்.

ஹரிஹரி யென்னபாதகஞ் செய்தேன் இந்தவார்த்தையைக் கேட்க்க நான்முன்செய்தபாவந்தானோ இனி யென்னசெய்யப் போகிறேன்சீதாதேவிக்கு என்னகாரணம் வந்தது ஹரிஹரி,

சத்துருக்கர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்

என்னசெய்வேன்ராகவனே-யேதுசெய்வேன்ராகவனே *
தின்மையான்வார்த்தைதன்னைசெவிதனிலேகேட்டனோனே
என்னமாய்மனந்துணிந்து யேகுவேனுன்காட்டகத்தில் *
மன்னவனேராமச்சந்திரா மனதிரங்காடாதையா *
அன்றிலங்கைதனையழித்து அக்கினிதனில்மூழ்கிவந்தாள் *
மன்னவாஅயோத்தியாளும் மாதவாசரணமையா *

சத்துருக்கர்-ஸ்ரீராமருக்குச்சொல் நிபிதை.

பாங்குள அயோத்தியாளும் பால்மொழிசீதைதன்னை *
நீங்கியே வனத்திலோட்ட நீதியோசொல்லுமண்ணே *



தேங்கியேயக்கினிதன்னிற் சீதையுமூழ்கிவந்தாள் *
இங்குகள்சொல்லவேண்டாந் தசரதராமச்சந்திரா *

வசனம்.

அகோகேளுமையா ரகுநாயகனே சீதையின்பேரில் குற்றமிருக்கிறதென்று சித்தப்பிரமரித்தீரோ பதிவிரதையாயிருக்கப்பட்ட சீதையைக்குற்றஞ்சொல்லிக் காட்டிலேவிடலாமோ இந்தக் கோபத்தைமாத்திரம் என்னைக்கொண்டு மன்னியுஞ்சுவாமி.

ஸ்ரீராமர் சத்துருக்கருக்குச்சொல்-நிபிதை

சத்தமாயுங்களைத்தான் தம்பியென்றிருந்ததெல்லாம் *
செந்தனைற்பூவென்றெண்ணிச் சேர்ந்ததோர்வண்டதானேன்
முந்தவக்குலதகளெல்லா முடிந்திடவேணுமாகில் *
எந்தன்கைவாளினாலே யெனதுயிர்மாய்த்துக்கொள்வேன் *

வசனம்:

அகோவாருந்தம்பி சத்துருக்கா இதுவரைக்கும்நானுங்களைத் தம்பிமாரென்று நினைத்திருந்ததெல்லாம் எனக்கே இங்குவந்தது சீதையைக் கொண்டுபோய் வனத்திலே விட்டுவந்தாலாயிற்று இல்லாவிட்டால் என்னுயிரைப் போக்கடித்துக் கொள்ளுகிறேன் அப்புறத்தைப்பேர்ப்பிள்ளாய் சத்துருக்கா

பொதுநிபிதை.

வாளதுவருகும்போதுவகைகொளட்சுமணர்தானும் *
நீள்கரங்குவிந்துசிந்தை நிலைகலங்கியுமெய்சோர்ந்து *
கேளவேசெய்யும்ராமர் சொல்லுஞ்சிலையேந்துங்கையை
மீளவேயோடிவந்து விசையுடன்பிடித்திட்டாரோ *

ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்,

இராகம்-முகாரி-அடதாளம்,

கையைப்பிடித்த தம்பி-ஒரு *
காரியமுண்டானாற் சொல்லுந்தம்பி *
செங்கைப்பிடித்த தம்பி - ஒரு *
சேதிகளுண்டானாற்சொல்லுந் தம்பி *
வாளைப்பிடித்த தம்பி - ஒரு *
வார்த்தைகளுண்டானாற் சொல்லுந்தம்பி *
அரிவாள்பிடித்த தம்பியென்னால் *
ஆருங்காரியமென்னசொல்லுந் தம்பி - *
கூர்வாள்பிடித்த தம்பி - என்ன *
கூறுகின்றதைச்சொல்லுந் தம்பி - *

இதுவும் ஸ்ரீராமர்லட்சுமணருக்குச்சொல் கண்ணிகள்,

இராகம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்

எதுக்கடாதம்பி யென்னைவிடுக்கிறாயிப் *
போவெனக்குச்சொல்லிப்போடா அப்புறத்தே (எதுக்)
சுத்தசுத்தராத்தால் தன்னுயிர்மாய்க்கவும் *
எத்தனைகைவானிறு லென்னுயிர்போக்கிறேனி (எதுக்)
சீதையாலேயெந்தன் சீவனைப்போக்கிறேன் *
கோதையாளுயிரைக்கொடுப்பாருக்கின்றுசெய்வேன் ()

லட்சுமணருக்கும் ஸ்ரீராமருக்கும் தர்க்கம் கண்ணிகள்

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

லட்சுமணர் சொல்லல்.

அவமாதகநாட்டில் ஆரோசொன்னொன்று *
நிவமாய்சீதைதனைவிட நீதியோராமா *

ஸ்ரீராமர்சொல்லல்.

நீதிநீதியென்று நீங்களின்னேரமும் *
வாதுகளென்றோடு வசிக்கலாமா *

லட்சுமணர்சொல்லல்.

மாயப்பொய்வார்த்தையை வண்ணான்சொன்னென்று
நேயசீதைதனைத்தள்ள நீதியோராமா *

ஸ்ரீராமர்சொல்லல்,

நீதியல்லவென்றும் நீர்மனப்பொறுமென்றும் *
வாதித்தெதிதனோடு வசிக்கக்கூடாது *

லட்சுமணர் சொல்லல்,

வசிக்கக்கூடாதென்றீர் வனத்திற்சீதையைவிடச் *
செய்யாதகுற்றங்கள் செய்தாளோ அண்ணா *

ஸ்ரீராமர்சொல்லல்.

செய்யாமலேகுற்றஞ் சேருமோவுலகத்தில் *
எய்யாதவார்த்தையை யேன்சொல்லுவாராய் *

லட்சுமணர்சொல்லல்.

எய்யாதவார்த்தையை யினித்தள்ள தர்மமோ *
ஐயாநீர்பிழைபொறும் அவள்தமக்கெதிரோ *

ஸ்ரீராமர் சொல்லல்.

எதிரில்லையென்றவ ளில்லாத்தைச்சொன்னாலும் *
அதிகாரிநானென்று அவளைத்தள்ளேனோ *

லட்சுமணர்சொல்லல்.

தள்ளுவதுநமக்குத் தர்மமோசீதையைத் *
தெள்ளும்புகழயோத்தி திசரதராமா *



ஸ்ரீராமர்-சொல்லல்,

பாவப்பாவமென்று பரமார்த்தம்பேசுறாய் *
கோபமானவார்த்தை கூறுதேபோடா *

லட்சுமணர்-சொல்லல்.

சொல்லுவதேகுற்றஞ் சொன்னரோநாட்டினில் *
எல்லோருமக்கினியி லிரங்கினதறியாயோ *

ஸ்ரீராமர்- அறிந்தாலுமுலகவாய் ஆராலேமூடலாம் *
தருசாகவண்ணானைச் சொல்லச்சொன்னேனோ *
லட்சுமணர். என்னசெய்தாளென்று யேந்திழைசீதையை *
வனக்காட்டில்விட வகுத்திரோ அண்ணா *
ஸ்ரீராமர். வகுத்துச்சொல்வதென்ன மாதுசீதையாலே *
அவத்தினிற்கோத்திரம் அசடாகுதப்பி *
லட்சுமணர். அசடாகச்சொல்வது ஆரெனக்குச்சொல்லும் *
கசடரைவாளினாற்கண்டிப்பேன் அண்ணா *
ஸ்ரீராமர். கண்டிப்பதேதினி காரிழைசீதையைக் *
கொண்டுபோய்வனத்தினிற் குதித்துவிடாயோ *
லட்சுமணர் விடுவதென்னகுற்றம்வந்தது சீதைமேல் *
கொடுமையானகாட்டில் கொண்டுவிடேனே *
ஸ்ரீராமர் கொண்டுவிடேனென்றுகுலபத்தோராண்மை *
கண்டபடிநகைக்க காட்சியேதப்பி *
லட்சுமணர் காட்சியாவதென்ன கலக்கமில்லாச்சீதை *
யிஷ்டமுடனேதீயில் மூழ்கிவந்தாளே *
ஸ்ரீராமர் மூழ்கிவந்தாளென்று மேன்மைகள்சொல்லுறாய் *
வழைவண்ணான்சொன்ன திகழ்ச்சிகேளாயோ *
லட்சுமணர் வண்ணானேகோபித்தன்வாயாலுளறினான் *
வண்ணமற்குற்றங்க ளேர்லைகொள்வீரோ *

லட்சுமணர்சொல்-தரு.-ம் கியால்-ஆதிதாளம்

பல்லவி.

பொறுங்களண்ணா அண்ணா
பொறுங்களண்ணா மனம் பொறுங்களண்ணா கோபம்
பொறுங்களண்ணா மலர் பாதகண்ணா *

சரணங்கள்

கலிவுசற்றுமில்லாமற் கலந்துமொழிபேசாமல் *
தனியேபுத்திசொல்லாமல் தர்மநீதியில்லாமல் (பொறு)
கண்டபேர்கள்நகையாரோ காவலர்கள்பழியாரோ *
அண்டர்முனிவோரறிந்தால் பண்புபாவமென்பாரோ (பொறு)
கொண்டபெண்டுக்காகநீர் [illegible] கொண்டுநீர் *
தெண்டிக்கும்வாளாலுயிரைகண்டதுண்டஞ்செய்கிறீர் (பொ)

பாதமலர்பணிகிறேம்பணிந்தும்மைத்தொழுகிறேம் *
எதுமரியாச்சீதையை யிதோவனம்விடுகிறேம் (போது)

லட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

கொண்டிடும்பெண்டுக்காகக் கொற்றவாயுயிரைமாய்த்தால்,
ஆண்டர்மாமுனிவர்க்கெல்லாம் அடுக்குமோயிந்தவார்த்தை
வண்டணிசீதைதன்னை வனத்திலேவிட்டுவாறேன் *
தெண்டனுனுந்தன்பாதந்திருவுளமகிழுமையா *

(வசனம்)அகோவாருஞ்சுவாமி கொண்டபெண்சாதிக்காகஉயிரைப் போக்கடித்தாலுலகத்திலுண்டானபேர்களெல்லாம்நகைப்பார்கள் அதுநமக்குப் பக்குவமல்ல சீதையை வனத்தில்விட்டுவருகிறேன் கோபமில்லாமற் சந்தோஷமாகச் செலவுகொடுஞ்சுவாமி

ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல் வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணமுன்னாற்சீதையானவள் தண்டகாவனம்பார்க்கவேணுமென்று என்னுடன் சொல்லியிருந்தாள் அந்த அடையாளஞ் சொல்லி சீதையைரதத்தின்பேரிலேற்றிக்கொண்டு பொழுதுவிடிய ஜாமத்துக்குமுன்னே வனத்தில்விட்டுவாருந்தம்பிலட்சுமணா

(லட்மணர்சொல் வசனம்)அப்படியேசெய்கிறேன்சுவாமி

லட்மணர்துயரத்துடன்சொல் கண்ணிகள்

இம் எதுகுலகாம்போதி அடதாளம்

தென்திசைராவணனுரீ அண்ணா *
சீதைவனத்திற் சிறையிருந்தாள் *
செந்தணல்மூழ்கிவந்தாள் அண்ணா *
செந்திருவாகிய கண்மணியே *
சந்தேகமென்பார்களோ அண்ணா *
ஜானகியாளென்னும்நாயகியை *

நிந்தனைசொன்னாலே வெகுதோஷங்கள்வந்திடும்நீதியல்ல (ல்)
தாயானசீதையருஞ்செய்ததர்மங்கள்பொய்த்துதோகாரணந்தாமாயமோஸ்ரீராமா, சொன்ன-வாக்குத்தவறுதுமன்னரசே *
கண்ணாலேநீர்சொரிய சீதை-காடுதனிற்போகவேண்டாமண்ணா *
மன்னாவும்ஸ்ரீராமாஅண்ணாமனுக்களெக்கார்த்திடும்கிபதியே *
காதாலேகேட்பார்களோ-ஐயோ கண்டகனவின்படியிதுவோ *
சூதாடும்வித்தைகளும் நம்மிட சூரியகுலத்தினுக்கேற்காது *
வேதாளமுள்ளவனம்அதுவெங்கொள்ளிவாய்ப்பேய்கருமுனிகள்
பூதப்பிசாசுகளும் நல்ல பூமலர்க்கன்னிகளுள்ளவனம் *
யாளிசிங்கம்சர்ப்பங்கள் கருடியானைப்புலிகள்கரடிகளும் *
கெண்டபேரண்டங்களும் நல்லகாண்டாமிருகங்களனேகங்களும்
அண்டப்பிசாசுகளும்நல்ல அஷ்டமிருகங்கள்தானுமுண்டு *



பெண்தோஷம்பொல்லாது அதைப் பேதமையாகவேசெய்குவாரோ, செந்தாமரைமுகத்தாள் சீதை சந்திரகுலத்திலுதித்தவள்காண், இதுவும்லட்சுமணர்சொல்-கண்ணிகள்இ-ம்கண்டா-சாபுதாளம்
பெண்மடவாரைக்காட்டில்விட்டுப்பேருலகையாள்வதுண்டோ ராமா
கண்டோரோசொல்லுமென்பார்க்காட்டில்விடநீதியுண்டோ ராமா
வண்ணானுவமைகேட்டு வனத்தில்விடநீதியல்ல ராமரா
பெண்ணோரமாகநிந்தைபேசவுமென்னாதுகாண் ராமராமா
புலியும்பசித்தாலந்தப்புல்லைபொசித்திடுமோ ராமராமா
மயிலஜானகிதன்னைவனத்தில்விடநீதியல்ல ராமராமா
மூத்தப்புடம்போட்டாலும்இரும்புபசும்பொன்னுமோ ராமரா
மத்தனைமாதருள்ளேசங்கம் பழுதென்றுசொல்லலாமோ ராமா
திக்குத்திசைகளெங்கும் ஜெயமானகீர்த்திபெற்ற ராமராமா
அக்கினியில்மூழ்கிவந்த அன்புடையசீதையாரை ராமராமா
ஈனமாய்வனத்தில்விட யேகுவேனோகானகத்தில் ராமராமா
அனியாயமாய்க்காட்டில்விட அடுக்குமோயிவ்வையகத்தில் ராமரா
ஐயோநானென்னசெய்வேன் அன்னியவார்த்தைக்குளானேன்ரா
தாயனேயிந்தவார்த்தைசொல்லவொண்ணுதேஐயோ ராமராமா
வையகம்புகழ்சீதையை உய்யவனம்மேவுகிறீர் ராமராமா
மெய்யனேகாட்டில்விட வேந்தனே முறைமையல்ல ராமராமா
குரங்குகள்குறைகளவன் மெத்தவும்மைச்செய்தாளோ ராமராமா
சித்ரமூற்றிடுஞ்சீதையை மெத்தவனமேவுகின்றீர் ராமராமா
சிறையாகலங்கைதன்னில் சீதையாரிருந்தபோது ராமராமா
குறையில்லாப்பாணமேவிகோதைசிறைமீட்டுவந்தீர் ராமராமா
லங்கைதனையழித்திட்ட நாயகியாள்சீதையாரை ராமராமா
இங்கிரதத்திலேற்றியேகுவதுநீதியுண்டோ ராமராமா
என்னமாய்மனந்துணிந்து யேகுவேனோகானகத்தில் ராமராமா
முன்னமேசீதைக்குஆயன் என்னமெழுதினானோ ராமராமா
தத்தளித்திடுதேமனந் தாமரைதண்ணீர்போல் ராமராமா
இத்தலத்தையாள்சீதையைக்குற்றஞ்சொல்லிப்போட்டோனது ரா
ஆதியில்முனிவோரிட்ட சாபமோவறிகிலேனே ராமராமா
ஜோதியாகியசீதைக்கு யேதுகாரணம்வந்ததோ ராமராமா

லட்சுமணர்சொல் திபிதை

ஜானகியென்னைப்பெற்ற தாயினுமதிகமான *
மானெனுமயிலாள்தன்னை மனமதுதுணிந்துராமர் *
கானகத்தேகுமென்றூர் காரணவிதியினாலே *
நானென்னசெய்வேனையா நடப்பதேநீதிதானே *

(வசனம்)ஹரிஹரிசீதாதேவியை வனத்திற்கொண்டு-போய்விடச் சொன்னாரேஎன்னமாய் மனந்துணிந்துசொன்னார் நானெனமாய் விடப்போகிறேன் விடாமற்போனால் அண்ணனுக்கே

னதிற்கோபமாயிருக்கும் அழைத்துக்கொண்டுபோய் விட்டுவரு வோம்ராகவா

லட்டமணர் சீதைக்குச்சொல். திபிதை
என்னிட்டதாமேகேளி ரியனுடனியுமுன்பு
பின்னியேவனங்கள்பார்க்கப்பிரியமாயிருக்குதென்று
சொன்னதுமுண்டோவம்மா தோகையேராமரோடு *
அன்னையேசிலவுதந்தார் அடவியினபுதுமைபார்க்க *

(வசனம்) அகோவாருந்தாயே தண்டகாரண்ணியம்பார்க்கவே ணுமென்று ரகுநாயகருடனே சொன்னீயாம் இப்போதுவனபார்க்கச் செலவுகொடுத்தார் போவோம் வாருந்தாயே

லட்சுமணர் சீதையை அழைக்கிற தரு
இ-ம்-எதுகுலகாம்போதி-மிசுர்தாளம்.
பல்லவி.

அன்னையேவாருமம்மா-வனம்பார்க்க-அரிவையேவாருமம்மா. *

அநுபல்லவி.

அன்னையேவாருமம்மா அடவிப்புதுமைபார்க்க *
சொன்னபடியேராமர்-என்னையனுப்பிவைத்தார் (அ)

சரணங்கள்.

அஞ்சுகாஞ்சிதமே ராமருடன் கொஞ்சுங்குயிலன்னமே *
பஞ்சவர்ணக்கிளியைவனந்தனில்பார்க்கலாம்வேடிக்கையாய் (அ)
மானுமயிலினங்கள் வனந்தன்னில் வாழ்கின்றபட்சிகளும் *
கானகந்தன்னில்போயென்னமணி கண்டுதெரிசிக்கலாம் (அ)
மாடப்புறாவினங்கள்-வனந்தனில்வாழ்கின்றபக்ஷிகளும் *
ஜோடுஜோடாகவேதான் என்னம்மணி சொகுசுடன்விளையாடும்

சீதை-லட்சுமணருக்குச்சொல் திபிதை.

என்னிடவதிர்ஷ்டந்தானோயினுடன்வனங்கள்பார்க்க
சொன்னதுமுண்டுநானும் ஜோபிதராமரோடே. *
இன்றுதான்மாமிமார்க்குமியனுடன்சொல்லிவாறேன்.
நன்றிதாய்நீயுந்தம்பி லக்ஷ்மணாயிங்கிருப்பாய் *

(வ-ம்) அம்காவாரும்தம்பி லட்சுமணா முன்பு ரகுநாயகருடனே தண்டகாரண்ணியவனம் பார்க்கவேணுமென்று நான்சொன்னதுண்டுஇப்போதுசெலவுகொடுத்தாரோநான்செய்தபாக்கியந்தான் இப்பவும் கமுசலை சுமித்திரை கைகேசியாகிய அத்தைமார் மூன்றுபேருக்கும் நான்சொல்லி செலவு வாங்கிக்கொண்டுவருகிறேன் ரதத்தைச் சிங்காரியுந் தம்பிலட்சுமணா.

சீதை-லட்சுமணருக்குச்சொல் கண்ணிகள்.
இ-ம் எதுகுலகாம்போதி அடதாளம்.

உம்மைத்துணைபோமென்றுஉத்தாரஞ்சொன்னாரோலக்ஷ்மணரே
என்மீதிலுமக்குப்பக்ஷமுள்ளென்றுமுண்டோசொல்லும் லக்ஷ்மணரே



வேடிக்கையாகவேதேரை விளங்கச்சோடியுந்தம்பி-லக்ஷ்மணரோ
அத்தைகமுசலைக்கும் அடிபணிந்துவாறேன்தம்பி லக்ஷ்மணரோ
அம்மாமிகைகேசிக்கு அடிபணிந்துவாறேன்தம்பி லக்ஷ்மணரோ
மாமிசுமித்திரையாள் மலரடிபோற்றிவாறே லக்ஷ்மணரோ
அத்தைமார்மூவருக்கும்அடிபணிந்துவாறேன்தம்பிலக்ஷ்மணரோ
ஆலோசனையுன்னுநீர் ஐயையோயேதோ தம்பிலக்ஷ்மணரோ
பொன்னும்ரதத்தையிப்போபூட்டசொல்லுந்தம்பி லக்ஷ்மணரோ
தங்கரதத்தையிப்போதாள்பூட்டச்சொல்லு - தம்பிலக்ஷ்மணரோ
முத்துரதத்தையிப்போமுடுக்கிநடத்திவாரும் லக்ஷ்மணரோ
வச்சிரரதத்தையிப்போ வாசலில்வரவநழுயும் லக்ஷ்மணரோ
மைச்சினர்பரதருக்குப்பத்திரங்கள் சொல்லிவாறேன் லக்ஷ்மணா
தம்பிசத்துருக்கனருக்குத்தைரியங்கள் சொல்லிவாறேன் - லக்ஷ்மணா
சீதைமாமிமாரிடம்வருகிற கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி.
ஜம்பை-தாளம்.

சீதையாள்கமுசலையாள்தேவிதன்னண்டைக்கு *
மோகத்துடனேவாராள்முல்லைநகையாள் *
அன்னநடையானமாது அரிவையாள்சிரோன்மணி *
மின்னலெனுங்கமுசலையாள் வீடுதிக்குவாராள் *
சின்னமலர்கொண்டுசில சேடியர்கள்சூழ்ந்துவர *
வர்னமானசீதையாரு மாமிவீட்டுக்குப் *
பொன்னிறவுளையில்மின்ன பொருதினயிடைதுவள *
மின்னலெனுங்கமுசலையாள் வீடுதிக்குவாராள் *
கன்னியராலாத்தியேந்த காரிழைமார்சூழ்ந்துவர *
மின்னியசிலம்பசைய மெள்ளநடந்தாள் *
நித்தநித்தஞ்சுத்தமான பத்தினியாள்சீதையாரும் *
அத்தையினற்பாதம்போற்றிவெற்றிபெறவே *
தண்டையுஞ்சதங்கைமிகத் தாளிசையவேபூட்டி *
வெண்டையப்புலம்பிடவே மெள்ளநடந்தாள் *
பொன்னின்மணிகிண்கிணி சிலம்புபுலம்பிடவே *
மின்னுமேகலைகள் மேனிதலமுக்க *
அன்னமென்னவடிவழகி அரிவையர்கள் சிரோன்மணி
மின்னலெனுங்கமுசலையாள் வீட்டுக்குவாரான [யும்

பொது-திபிதை.

சீரடனயோத்தியாண்ட தசரதன்பாரியான *
காரிழைகமுசலியாளும் கைகேசிசுமித்திரையோடு *
சீருள்ளமூன்றுபேருஞ் சிலரடிபோற்றவேதான் *
தாரணிதன்னில்மீது தானிதோவருவதானார் *

(வசனம்) அகோதெய்படியென்றால் ஸ்ரீராமருடையதம்மாரிகள்வருகிறவிதங்காண்க.

மாமிமார்கள் மூவர்வருகிற-த-ரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி

தாய்மார்கள்மூவரும்வந்தார்-ஸ்ரீராமச்சந்திரன் *
தாய்மார்கள்மூவரும்வந்தார் *

அனுபல்லவி

தாய்மார்கள்மூவர்வந்தார்-தாக்குடனயோத்தியாளும்
மாயவன்ராகவனை-மைந்தனைப்பெற்றெடுத்த (தாய்)
சீருள்ளஅயோத்தியாண்ட-தசரதர்க்குப்பாரியான *
காரிழைகவுசலையாள் -கைகேசிசுமித்திரையாள் (தாய்)
சத்தியமுள்ளராகவர்க்கும் தயவுள்ளலக்ஷ்மணர்க்கும்,
அக்ஷயபரதருக்கும் அன்புள்ளசத்துருக்கருக்கும் (தாய்)
வருத்தமதாகவேயிருக்கிறடைநடைந்து *
ஒருத்தியிதொருத்தியாய்த்திருத்தமதாகவே (தாய்)

சீதை-மாமிமாருக்குச்சொல்-அமிரிக்கை.
எதுகுலகாம்போதி மீசுரதாளம்-பல்லவி.

சரணஞ்சரணமம்மா-மாமிமாரே தாயேசரணமம்மா

அனுபல்லவி:

சரணஞ்சரணமம்மா-தாயேகவுசலை *
தரணிகாடுபார்க்கத் தாயேவிடைதாரும் (சரணஞ்)

சரணங்கள்.

எந்தன்மனக்கவலை ஸ்ரீராமர்நீர்த்து *
சந்தோஷித்தனுப்பிவைத்தார் *
உந்தனிருபதத்தை உகந்துநான்பணிகிறேன் *
சிந்தைமகிழ்ந்துநீங்கள் செலவுகொடுக்கவேணும் (சரண)
அந்தப்புறத்திலொருநாள் ராமருடன் *
சிந்தைமகிழ்ந்துரைத்தேன் *
எந்தன்மனதைப்போல யிருந்துதவரீமனதும் *
அந்தப்படிக்குநீங்கள் அருள்செய்யவேணுமே (சரண)
அச்சுதரகுராமரும் மனமகிழ்ந்து *
லட்சுமணனையனுப்பினார் *
அட்சரதங்கொண்டுமைச்சுனர்வந்தார் *
இட்சணம்போய்வாரேனினையடியாள்சரணம் (சரணஞ்)

சீதை-மாமிமாருக்குஞ்சொல்-திபிதை.

உந்தன்மாமைந்தன்றன்னை யொருவரங்கேட்டுக்கொண்டேன்,
எந்தனற்கவலைராம பத்ரரோதீர்த்தாரம்மா *
மூர்த்தியேவனத்திற்சென்று முனிவரைசரணம்பண்ணி *
சிந்தைதான்றெளியப்பார்த்து திரும்பியேவருவேனம்மா *

(வ-ம்) அகோகேளுங்களம்மா மாமிமார்களே மூன்றுலோகு நாயகருடனே நான்தண்டகாருண்ணியவனம் பார்க்கவேணுமெ



ன்றுசொல்லி யிருந்தேன் இப்போது செலவு கொடுத்து தம்பியாகியலட்சுமணப்பெருமாளையும் அழைப்பித்தார் இளையபெருமாள் அதோவாசலில் வந்திருக்கிறார் நான்வனத்திற்குப்போய் ரிஷீஸ்வரரைத் தரிசனஞ்செய்து வருகிறேன்நீங்கள்சந்தோஷமாய்ச் செலவுகொடுத் தனுப்பவேணும்அம்மா மாமிமார்களே.

மாமிமார்கள்-சீதைக்குச்சொல்-திபிதை

அன்னையேசீதாயிப்போ அடுக்குமோவனத்திற்கேக *
பன்னியவயிற்றிற்கெர்ப்ப பாக்கியமிருக்கும்போது *
மன்னவன்ராமச்சந்திரன் மனமகிழ்ந்தனுப்பினானோ *
என்னமாய்மனந்துணிந்து ஏகுவாயிப்போதம்மா *

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் உன்வயிற்றில் ஐந்துமாதங்கெர்ப்பபாக்ய மிருக்கையில் ரகுநாயகருன்னை என்னமாய்மனம்வந்துவனம்போகச் செலவுகொடுத்தார் நீதான்எப்படிபோகபோறாய் சீதாய்

சீதை மாமிமார்களுக்குச்சொல்-திபிதை.

தவமதுசெய்யும்ராமர் தருக்குடனனுப்பிவைத்தார் *
மவுனமாயுங்களுக்கு மனதிலேகிலேசம்வேண்டாம் *
இவையினால்ரிஷிகள்பாத மியலுடன்காணவேணும் *
அவமதுசெய்திடாம லனுப்புவீர்சந்தோஷமாக *

(வ-ம்) அகோவாருங்களம்மா மாமிமார்களே ரகுநாயகர்செலவுகொடுத்தபோது நான்வனத்திற்குப் போகாமலிருந்தால்அவருக்குக்கோபம்வாராதாநான்போகவேணும் சந்தோஷமாய் அனுப்பவேணுமம்மா மாமிமார்களே.

மாமிமாருக்கும் சீதைக்கும்-தர்க்கம்-கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி மீசுரதாளம்.

மாமிகள் அடிபணிந்துவனத்திற்குஅனுப்புமென்றேசொல்ல *
அங்கமுருகுதடி சீதையாரோ
சீதையார் அடியாளைரகுராமர்ஆரண்ணியப்பார்க்க *
அன்பாய்வரமளித்தார் என்னிடமாமி
மாமிகள் கடியவிருக்ஷஞ்சூழ்ந்த கானகந்தன்னிற்போகக் *
காரணமோசொல்லடி சீதையாரோ
சீதையார் கடியவிருக்ஷஞ்சூழ்ந்தகானகந்தன்னிற்சென்று *
கடிதில்வருவேனே என்னிடமாமி
மாமிகள் கொடியமிருகம்யாளி கூளிகள்சூழ்வனத்தில் *
குறித்தங்கேசெல்லலாமோ சீதையாரோ
சீதையார் கொடியமிருகமென்னை அணுகாமலிளையவரும் *
கூடவருகிறாரோ என்னிடமாமி
மாமிகள் வாடித்தேன்மொழியுன்னை வனம்போய்வாவென்றிட
மனந்துணியுமோகண்ணே சீதையாரோ

சீதையார் வடிவானதேரிலேறி மந்திரிசுமந்திரனுடனே *
வருவேனித்தக்ஷணை மென்னிடமாமி
மாமிகள் எய்யுங்கணைகள்போலேயிருசெவியில்தாராச *
மேற்றிவிட்டாப்போலாச்சே சீதையாரே
சீதையார் எய்யுங்கணைகளென்றுமெண்ணவேண்டாமம்மா *
இக்ஷணம்போய்வாறேன் மாமிமாரே
மாமிகள் செய்யுந்தவங்கள்பொய்யோ தெய்வமிப்படிதானோ *
செய்வதென்றறியேனே சீதையாரே
சீதையார் செய்யவேநீங்களிப்போதியங்கவேண்டாமம்மா *
திருப்பிவருகுவேனே மாமிமாரே
மாமிகள் ஐயோதானென்செய்வே னாரண்யந்தனிலுன்னை *
அனுப்பவோதானிருந்தேன சீதையாரே
சீதையார் அயோத்தியாளும்ராமர் ஆரண்யம்பார்க்கவென்னை *
அனுப்பினார்போய்வாறேன மாமிமாரே
மாமிகள் மெய்யெனதிருந்ததெல்லாம்விழலுக்குநீரிறைத்து *
விட்டகதைபோலாச்சே சீதையாரே
சீதையார் செய்யவனத்தினில்மேவுங்கன்னிமாரின் *
வேடிக்கைபார்த்துவாறேன் மாமிமாரே

சீதை மாமிமாருக்குச்சொல்-திபதை

வெடிநேரமாகுதிப்போ மெல்லியேமாமிமாரே *
தேடியகானகமேசென்று நிமிஷத்தில் வருவேனிப்போ,
தடையொன்றுஞ்சொல்லிடாமற் சந்நிதியிற்செலவுதாரீர்,
அடியிணைபணிவேனென்னை யனுப்புவீர்விரைவிற்றானே

(வ-ம்) கேளுமாமிமார்களே பொழுதுவிடியப்போகின்றது சீக்கிரமாகச்செலவுகொடுத்தனுப்பவேணும் மாமிமார்களே

மாமிமார் சீதைக்குச்சொல்-கண்ணிகள்,

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

மாடத்துக்கேற்றமணிவிளக்கல்லவோ சீதையாரே- எங்கள்
கூடத்துக்கேற்ற குயிலனமல்லவோ சீதையாரே-
மாமனத்துக்கேற்ற பூமணமல்லவோ சீதையாரே-உலகில்
நாமணத்துக்கேற்ற பாமணமல்லவோ சீதையாரே
தோடுகெடாதகோகிலமேகண்ணே சீதையாரே- இந்தப்
பாடுபடபிர்மன்பாவித்துவைத்தானோ சீதையாரே
அஞ்சுமாதமிளம் பிஞ்சலவோகெர்ப்பம் சீதையாரே- உன்னை
அஞ்சாவனத்தினிற்கொஞ்சிவிடுவமே சீதையாரே
போவென்றுசொல்லவும்நாவும்வருமோதான்சீதையாரே- பூமி
மேவுவோருக்கெல்லாம் காவென்றிருந்தோமேசீதையாரே

சீதை மாமிமார்களுக்குச்சொல்-திபதை,

விடையேதருகவேணு மிக்கோர்வனத்திற்கேக *



தடையதுசொல்லவேண்டாம் தாயேகௌசல்யாதேவி *
படையதுமிகுத்தராமர் பாதமேநம்பிமெய்யோன் *
புடையதுகுழக்காட்டிற் போய்வாரேன்சரணமம்மா *

வசனம்,

அகோவாருங்களம்மா மாமிமார்களே உங்களுடைய கிருபாகடாட்சத்தினால் இப்பவும் கானவனத்திற்குப்போகவேணும் தடைசெய்யாமல் அனுப்பிவையுங்களம்மா,

மாமிமார்கள்-சீதைக்குச்சொல்-திபதை.

அரிவையேசீதாகேளாய் அதிகமுமேவனத்திற்போக *
தெரிவையர்தோழிமார்கள் சேரவேகூட்டிக்கொண்டு *
அருவனக்கன்னிற்சென்று அருமுனிவோரைக்கண்டு *
நிரமுடன்சரணஞ்செய்து சீக்கிரந்திரும்புவாயே *

வசனம்,

அகோவாருமம்மாசீதாய் இப்போதுநீவனத்திற்குப் போகவேணுமென்றபடியினால் நம்முடையதாதிமார்களையழைத்துக்கொண்டு சென்று ரிஷீஸ்வரர்களைக்கண்டுதெரிசனஞ்செய்து சீக்கிரம்வருவாய் சீதா.

(சீதையார்வசனம்) மகாபாக்கியமம்மா மாமிகளே.

சீதை-பரதசத்துருக்கருக்குச்சொல்-திபதை,

மைத்துனபரதசத்துருக்கா வார்த்தைதான்சொல்லக்கேளும்
அச்சுதருங்களண்ணர் அருளினால்வனமேபார்க்க *
இக்ஷணஞ்சென்றங்குற்ற யிருடிகடமைப்பணிந்து *
பட்சமாய்வருவேனீங்கள் பதலமாயிருந்திடுமே *

வசனம்.

அகோவாருங்கள் மைத்துனமாராகிய பரதசத்துருக்கரே கானவனஞ்சென்று ரிஷீஸ்வரர்கள் தெரிசனஞ்செய்து வருமளவும் பத்திரமாயிருங்கள் மைத்துனமாரே.

பரதசத்துருக்கர்-சொல்-வசனம்,

அப்படியே போய்வருவாய் அம்மா. *

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபதை.

என்னிடதாபேவாராய் யித்தனைநேரமட்டும் *
என்னதாய்செய்தாயம்மா யிக்கிமிஷத்தில்தானும் *
திக்கிலக்கன்னிற்றேனை யியனுடனோட்டுதற்கு *
கன்னியேலட்சுமிதேவி கடிகினிலரதத்திலேறாய் *

வசனம்.

அகோவாருந்தாயே எத்தனைநேரமாச்சுது பொழுதுவிடியப் போகின்றது சீக்கிரமாய்வந்து ரதத்தின்பேரிலேறுந்தாயே.

பொது-திபதை.

மத்தியாய்மாமிமாரைப் பணிந்தவர்விடையுங்கொண்டு *
முத்திசேர்வாமும்பெற்று மொய்குழற்சீதையாரும் *
லஸ்தாமட தக்குமூத்து மாலையுமெய்த்துக்கொண்டு *
சித்திரதமதின்மீது சீதையுமேறினாளே *

சீதை-தேரில்ஏறுகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

சீதாலட்சுமி மாதுசிரோன்மணி *
தேரினிலேறினளே-என்னம்மா-தேரினிலேறினளே *

அநுபல்லவி.

மாதுலட்சுமிமங்கைசிரோன்மணி வனசாரிபோராளே (சீதா)

சரணங்கள்,

ஏதுகாரியமென்று மனிதர்க ளெங்கித்தியங்கிடவே *
நீதுகாரியமென்று மனதில் தியக்கங்கள்கொள்ளாமல் (சீதா)
வாதுபேசியராவணன்சேனையை வதைத்திடநாயகியாள் *
சூதுபோலேநடந்திடுங்காரியந் தோகையறியாமல் (சீதா)
வெற்றிபேசியராவணன்சேனையை வேரறுடனேபிடுங்கி *
சுத்தமற்றிடலங்கையழித்திட தோன்றியநாயகியாள் [சீதா)
முத்துமார்பிலணிந்தபதக்க மொய்த்துநெருங்கிடவே *
கொத்துமோகனமாலையசையவே கொந்தளமோலையின்னவே()
பூமிதன்னிலுதித்திடுஞ் ஜானகி போகதுரந்தரியாள் *
மாமிமார்கள்வழிவிட்டனுப்ப மனமதுதான்மகிழ்ந்து (சீதா)
கானகந்தன்னில்வாழும்ரிஷிகளின் கன்னிமார்தங்களுக்கு *
மானமொய்த்திடும் ஆடைகள் பூஷணமாலைகள்கைபிடித்து ()
வீடுதோறுமிருக்கின்றமாதர்கள் தேடியேவந்துதொழ *
காடுதன்னிலிருக்கும்ரிஷிகளைக் காணவேவேணுமென்று [சீதா
வேதநாதமுழங்கிடமெல்லியர் வெண்சாமரம்வீச *
நாதகீதந்தொனித்திடகாரியர் நாட்டியஞ்செய்திடவே (சீதா)

சீதை-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணா கானகத்தில்வாழும்ரிஷிகளின்கன்னிமார்களுக்கு ஆடையாபரணம் பூஷணவர்க்கங்களெடுத்துக்கொள்ளுந்தம்பி மைத்துனா.

(லட்சுமணர்-வ-ம்) அப்படியேயெடுத்துக்கொண்டேனம்மா.

லட்சுமணர்சொல்-தரு-இ-ம்-கல்யாணி-ஜம்பதாளம்.

என்னதுரிதமம்மா வனம்போக ஏதுதுரிதமம்மா
கன்னல்மொழியாளே கானகந்தனைநோக்கி *
உன்னிதமாகரதமோடிவருகுதே (என்ன)
கோட்டைக்கொத்தளந் தாண்டினேம் தாயேசீதாய் *
பாட்டைபேட்டைகள்தாண்டினேம்
நாட்டுக்குநாயகமான சீதாதேவி *
காட்டுக்குப்போகரதங் கடினமாய்வருகுது (என்ன)

பொது-இப்போது.

ஐயையோவொருகாலத்தும் அசைந்திடாதக்காளிப்போ *
பையவேஅச்சொடிந்து பாரினில்விழுந்ததென்று *

---



கைதனைமுறித்துக்கொண்டு கனத்ததோரச்சைப்பூட்டி *
உய்யவேநின்றதேரை யோட்டினார்வனத்தைநோக்கி *

வசனம்,

அகோதெப்படியென்றால் ஒருகாலத்திலும் ஒடியாதஅச்சு இன்றையதினம் ஒடிவானேன் சீதையைஅநியாயமாய்க்காட்டில்விடப்போகிறபடியினாலே ஒடிந்ததுவென்னபிழைவருமோ நல்லது வேறே அச்சுபூட்டி வனத்தைநோக்கி யோட்டுவோமென்று லட்சுமணர்மனதிலெண்ணிப்பூட்டி யோட்டுகிறவிதங்காண்க.

லட்சுமணர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

என்னசெய்யப்போறேன் என்னுயிர்பாங்கனே ராமராமா
முன்னாள்செய்தவினை முடிந்துதேயிங்குமே ராமராமா
கற்பெனுஞ்சானகி கழியும்படியாவமோ ராமராமா
உன்வாக்குதவறாமல் வந்தேனேவனத்திற்கு ராமராமா
கல்லைப்பெண்ணாக்கிய காரணமோராகு ராமராமா
எல்லைகடக்கையில் அச்சுமுறிந்துதே ராமராமா

சீதைசொல்-இப்போது.

வன்னீமாஞ்சிகரத்தேரும் வனமதிற்போகும்போது *
புன்னைமாமாமுந்தேக்கும் பொருந்தியவனத்தில்வாழும் *
தன்னிகரிணையில்லாத சற்குணபட்சியெல்லாம் *
துன்மைசேர்சகுனமாகத் தோன்றுதுலட்சுமணாரே *

வசனம்,

அகோவாருந்தம்பிலட்சுமணா அயோத்தியைவிட்டு வனத்திற்குப்போகிறபோது இந்தவனத்தில் வாழப்பட்டபட்சிகளெல்லாம் அவசகுனமாகுது பாருந்தம்பி மைத்துனா.

சீதைசொல்-சகுனக்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பூனைகுறுக்கிடுது தம்பி *
போகவொண்ணாதுகாமுங்கானகத்தில் நான்
என்னசெய்வேனேதுசெய்வேன் தம்பி *
போகவொண்ணாதுகாமுங்கானகத்தில் அய்யோ
மொட்டைப்பாப்பாத்தியிதோ-வாரான் தம்பி *
மோசம்வருங்காட்டிற்கேகொண்ணாது இதவும்
என்றாலேவிதிப்படியோ தம்பி *
போகவொண்ணாதுகாமுங்கானகத்தில் இதோ
பார்ப்பானொருவனிதோ வாரான் *
யாருமையாபெண்ராக வோத கெட்ட
இந்தசகுனம்பொல்லாது தம்பி *
போகவொண்ணாதுகாமுங்கானகத்தில் இப்போ
விறகுத்தலையனொருவன் வாரான் *
பெண்டாட்டிகொண்ணாது கானகத்தில் நல்ல

என்னைக்குடமெடுத்துச்செக்கான் *
எதிராகவருகிறான்பாருமிதோ தம்பி
ஊரில்நகைகள்செய்யும் தட்டான் *
ஒன்டியாகவருகிறான்பாரும் தம்பி
கூவியழுகிறாள்வேடச்சி தம்பி *
கூசாமலோட்டுநீரதத்தையுமே தம்பி
வருகுதையாபாம்புமெதிராக *
வழிதடைகண்டுநாமும்போகொண்ணாது இதுவும்
என்றலைவிதிப்படியோ தம்பி *
யேகவொண்ணாதுநாமுங்கானகத்தில் *

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்.

இ-ம் காம்போதி-சாப்புதாளம்,

சீ. துன்மையாய்ச்சகுனங்கள் தோற்றுதுபாரையா லக்ஷ்மணரே
நன்மையோவனம்போக நன்றல்லவேகாணும் லக்ஷ்மணரே
ல அன்னமேநீயொன்றும் அஞ்சிடவும்வேண்டாந் தாயேசீதாய் *
மன்னராகுராமனை மனதில்நினைந்துகொண்டுதாயேவாரும் *
சீ. வலியனுக்கட்டுது மனத்துயராகுதே லக்ஷ்மணரே
மெலிவானகாட்டினில் மேவவொண்ணாதையா லக்ஷ்மணரே
ல, நலிவானவார்த்தைகள் நவின்றிடவும்வேண்டாந்தாயேசீதாய் *
சலியாதேயுனக்கொருநாட்சிவாராதொன்றுந்தாயேவாரும் *
சீ. கருடனுக்கட்டுது நரிகுறுக்கோடுது லக்ஷ்மணரே
பரிவுடன்வனம்பார்க்க பதறிடக்கொணாது லக்ஷ்மணரே
ல, தெரிவையேநீயொன்றுஞ்சிந்தனைபடவேண்டாந்தாயேசீதாய் *
குருவருளாலே குறையொன்றும்வாராது தாயேவாரும்
சீ. வாட்டமாய்நாயானும் மாறிடமாகுதே லக்ஷ்மணரே
காட்டுக்குள்ளேபோகவுங் காரணமல்லவோ லக்ஷ்மணரே
ல, காட்டிலுள்ளராஜர் நம்மைத்தடுத்தாலுங் தாயேவாரும்
வாட்டியுயிரையும்வாங்கிடுவேன் தாயேவாரும்
சீ. விச்சுளிகட்டுதமைத்துனாஇதோபாரும் லக்ஷ்மணரே
இட்சணம்நாயோத்தி போகுவதேநன்மை லக்ஷ்மணரே
ல, அச்சம்நீயென்ணாதே அடவிபோவோமென்று தாயேசீதாய்
இட்சணமிருகத்தை யேற்றமேலோகங் தாயேவாரும்
சீ. காகொன்றுகூவியே காசறுக்குதே லக்ஷ்மணரே
வாவென்றுநீ நும்வனத்தில் லக்ஷ்மணரே
ல, ஆவென்றுநீரும் தாயேவாரும்
உன்னுவானொன்று மேனியுக் தாயேவாரும்
சீ. நெருப்புமெதிர்வாகின்றதனர்க்கேனோ லக்ஷ்மணரே
திருப்புமென்றுல்தனை திருப்பாம்போநீரே லக்ஷ்மணரே
ல, விருப்பமாய்க்கானகமேவிவந்தோமம்மா தாயேசீதாய்



வெம்பிஅயோத்திசேர்ந்தால் ஸ்ரீராமரேதுசொல்வார்தாயேசீதாய்
சீ, என்னசொன்னாலுமிதங்காமம்போநீரே லக்ஷ்மணரே
என்னவகைசொல்லுநீர் ஏதுமறிகிலேன் லக்ஷ்மணரே
ல, என்னசொல்வேனம்மா இன்பமாய்முனிவரைத்-தடேசீதாய்
முன்னேகாலைவேணும்முடுகிநடந்துவாரும் தாயேவாரும்

சீதைசொல்கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-மிசுரதளம்

இந்தசகுனமெத்த விந்தையாய்க்காணுது *
என்னலக்ஷ்மணரே என்னையா ஏதைநாமைத்துனரே
வந்தபொழுது வலியனுங்கட்டுது *
வர்னமோலட்சுமணரே வனம்போக தர்மமோமைத்துனரே
குந்திகுந்தியாந்தை கோவென்றுகூவுதே *
கோலமோலக்ஷ்மணரே இதுவென்ன-நலமோமைத்துனரே
கோவென்றுவேடர்கள் கூடியழுகிறார் *
குறியிர்லக்ஷ்மணரே அதோயெதிர் அறியிர்லக்ஷ்மணரே
இன்றுமனதிற் கவலைக்குள்ளாகுதே *
என்னசெய்வேன்லக்ஷ்மணரே அல்லாமலஞ்சுரேனமைத்துனரே
மிஞ்சிவனத்தினிற் போவதுநல்லதென் *
விதியோலக்ஷ்மணரே அல்லாமல் மதியோமைத்துனரே
நாடிநாரையிட மாகவருகுது *
கோலக்ஷ்மணரே மெனத்துயர் ஆகாமைத்துனரே
உத்தமாராமருக்குக் குற்றம்வருகுது *
ரியோலக்ஷ்மணரே வரும்விதியேன்மைத்துனரே

சீதை-லக்ஷ்மணருக்குச்சொல்,விருத்தம்.

லக்ஷ்மணாசொல்லக்கேளீர் நலமல்லயிவ்வனத்தில் *
துட்சணநிமித்யந்தானுந் தோன்றிட்டதாகாதையா *
பட்சிகள்சகுனந்தள்ளிப் பார்வனம்போகொணாது *
இட்சணமயோத்திநோக்கி யியலுடன்திருப்புந்தேரை, *

(வசனம் அகோவாருந்தம்பி லக்ஷ்மணரே சகுனங்களெல்லா மெ
வாயிருக்கின்றது ரதத்தைத்திருப்பி அயோத்திக்கு நடத்துந்தம்பி
மைத்துனரே,

சீதை-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்,

அயோத்திவிட்டு நான்வரவேகாடதனில்
ம்புகுழக்காச்சுதையோபக்ஷமுள்ளலக்ஷ்மணரே *
காட்டிலுள்ளபட்சியெல்லாங் கனைத்ததையாகுதையோ *
காட்டிலெல்லாவிதவசமோகானிதற்குபென்னசெய்வேன் *
கமாயக்கோட்டான்கூவ தர்லமல்லவனத்திற்போக *
காட்டிலியன்விறத்தயழுத்திதுவே யென்னசெய்வேன் *
காட்டில்முயல்குறுக்கிடுதே கறங்குறுமான்கட்டுதையோ *
நல்லசகுனமிதோ நாயானுங்கட்டுதையோ *

அருமையானசகுனமைய்யா அதோபாரும்லட்சுமணரே *
சருடன்வலமாகுதையோவிதற் கென்னசெய்வேன்லட்சுமணரே *
கட்டுகொடைவலமாகக் காகமுந்தான்கட்டுதேயோ *
மட்டில்லதசகுனமையா வனத்திற்போகவொண்ணுதையா *
வாதுபோல்சகுனமெல்லாம் வழியில்தடையாகுதையோ *
ஏதுசெய்வேன்லட்சுமணரே யென்மனதுவேகுதையோ *
சாகிறபோராகுலுந்தான் சகுனங்கள்ளிப்போவதுண்டோ *
ராகவரேயென்னசெய்வேன் லட்சுமணரேயேதுசெய்வேன் *

சீதை லட்சுமணருக்குச்சொல்-நிமைத.

நன்றல்லசகுனமெல்லாம் லட்சுமணரேநீர்கேளீர் *
இன்றைக்குமே மதிரும்பி யிராவுக்குநின்றுதங்கி *
நன்றுடனேநாங்களெல்லாம் லட்சுமணாவருவோங்கண்டாய் *
சென்றிடவயோத்திநோக்கித்திருப்புவீர்தேரைநேரே *

(வசனம்) அகோவாருந்தம்பி லட்சுமணா சகுனம்நன்றாயிருக்கவில்லையென்று நான்சொன்னால் அதற்குப்பிரதி உத்தாரஞ் சொல்லாமல் ரதத்தைநடப்பிக்கிறாய் இன்னையத்தினம்அயோத்திக்குப்போய்நாளையத்தினம்வருவோமேயல்லாமல் இன்றைக்குப்போகப் போகாது ரதத்தைத்திருப்பி அயோத்திக்குஓட்டுந்தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-நிமைத,

தற்பனவனமித்தந் தோன்றுதுதிருப்புந்தேரென் *
இப்படிசொல்லலாமோ யென்னிடதாயேவாரீர் *
அற்பமாய்வருவதெல்லாம் அலறிபேசிதறுங்கண்டாய் *
கற்பதம்பணியும்ராமர் நல்லருள்நினைத்திடுமே *

(வசனம்) அகோவாருமம்மாசீதாய் என்னவார்த்தை சொல்லுகிறாய் இப்படிசொல்லலாமோ அற்பமாய்வரப்பட்ட பட்சிசாதிகளுக்குப் பயந்து அயோத்திக்குப் போய் விடுகிறதா அதுகெட்டது நீரகுநாயகனை மனதிற்தியானம்பண்ணினால் ஒருதீங்கும்வராது தாபந்திரியப்பட வேண்டாம் சும்மாவாருந்தாயே,

சீதைசொல்-பிரலாபக்-கண்ணிகள்-இம்-முகாரி-ஆதிதாளம்.

என்னதீங்குவருகுதைபோபெண்ணுக்கு - லட்சுமணரே *
என்னமென்றெழுநினைந்தேனென்னசொல்வேன்மைத்துனரே *
நாட்டிலில்லாவிதியின்வாரோ நானிதற்குஎன்னசெய்வேன் *
எட்டினிலயன்விதித்த யெழுத்திதுவோவழிகிலேனே *
பெண்பிறந்துபட்டகுறை போதுமையாபெண்ணுக்கு *
அன்னைன்வார்த்தைதள்ளாமலே அருமைப்படவிட்டீரையா *
வனம்பார்க்கவந்திடத்தே மனதுபரம்போதுமையா *
கனத்ததோரயோத்திவிட்டுக்கலங்குறேன்மைத்துனரே *

சீதை-லட்சுமணருக்குச்சொல்-கொச்சகம்,

இன்னிமித்தங்கண்டீரோ பிள்ளைவரோநம்மூருக்கும் *
மன்னவர்க்குநன்மையுண்டோமற்றவர்க்குமேதகந்தான் *



துன்னுமுகத்திராசர்களுஞ் சோவின்றிவாழ்வடைவார் *
கன்னியாமெந்தனிட்ட காரணத்தின்செயலறியேன் *

(வ-ம்) அகோவாருந்தம்பிலட்சுமணா இந்தச்சகுனத்தின் குணம் அயோத்தியாபுரியாளப்பட்ட ரகுநாயகருக்கு ம்மற்றுமுண்டான வர்களுக்கும் ஒன்றுமில்லை என்னுடையவிதியின் வலைமைதான் அறியமாட்டேன் தம்பிமைத்துனரே.

சீதைசொல்-பிரலாபக்கண்ணிகள் இம்-கண்டா-சாபுதாளம்,

வருகிறவிதியிது வழியில்தங்காதென்பார் லட்சுமணரே அந்த
மலரயன்சொற்படி யெவராலுந்தவறாது லட்சுமணரே
அருமொழிவார்த்தைக்கு அறியநீர்சொல்லுவீர் லட்சுமணரே
ஐயோபெண்பிறப்புஆகுமாகாதென்பார் லட்சுமணரே
வையகத்தார்சொல்லும்வார்த்தைவேலாச்சுதே லட்சுமணரே இப்போ
ஒருத்திபெண்பிறந்துஉரொம்பலானேனே லட்சுமணரே
பாருத்திப்படர்தபாகிபட்டுழல்கிறேன் லட்சுமணரே ஐயா
திருப்புந்தேரைஅயோத்திக்குப்போய்ச்சேர்வோம் லட்சுமணரே
இனிசெய்வதறியேனுன்தெரியச்சொல்லும் [illegible] லட்சுமணரே

சீதை லட்சுமணருக்குச்சொல்-நிமைத.

அடவியில்வந்தோமிப்போ ஆனதோரிஷியைக்காணேன் *
படிமதிமன்னர்கோவே பெரும்புலியிருக்கக்கண்டேன் *
வடிவுள்ளரிஷிகள்தம்மை வனத்தினிற்காணகிலேனே *
திடமுடனெந்தனுக்குச் செப்பிடாயிளங்கோவே *

(வ-ம்) அகோவாருந்தம்பி மைத்துனா இந்தவனத்தில் முனிவர்களைக் காணவேணுமென்றுவந்தோம் ஒருவரையுங் காணகிலோமே துஷ்டமிருகசாதிகளைக்கண்டோம் ரிஷிகளிருக்கப்பட்ட வனம்இன்னம் எத்தனை தூரமிருக்கின்றதோ யெனக்குத்தெரியச் சொல்லுமைத்துனரே.

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்,

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

லட்ச. தாயேசீதாகேளுமம்மா இந்தத்
தழைத்தவனந்தோப்புக்கப்புறந்தான் *
தூயதோர்முனி ஆசிரமங்கள் இதோ
தோணுதுபாரம்மா தூரமில்லை *

சீதை தூரமெட்டா தூரம்வந்தோந்தம்பி இங்கே
தோணுதுக்கங்கள்தோணுதையா *
ஆருங்காணேன்பேருங்கானேன் ஒரு
அருமைரிஷி பேச்சுங்காணேன் *

லட்ச. செய்யலாவதென்னவம்மா முன்பு
செய்தவிதிப்படிதப்பாது *

அய்யப்சீயென்னுதே மனதில்
அனந்தம்ரிஷிகளைச்சேர்வைசெய்வோம் *

சீதை வனத்திலுள்ளவந்துரிஷிகளை காம்
வண்மையுடனேசேர்வைசெய்வோம் *
இனிதான்றிருப்புந்தேனை தம்பி
யின்னேரம்போய்ச்சேர்வோம்து யோத்திக்கு

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

முன்னம்காமடவிதன்னில் மூவரும்வந்தபோது *
இன்னிலத்தந்செய்க்க ளியானையுங்கண்டோமிப்போ *
வன்னமாமன்னப்பட்சி வனத்தினிற்காணேனையா *
என்னகாரணெனக்குமிப்போ தினையாவாவுரைசெய்வீரே *

(வ-ம்) அகோவாருந்தம்பிமைத்துனா முன்னாலுங்கள்தமையனாகு காயகரும் நீரும்நானும் மூவரும்வனத்திற்கு வந்தபோது அங்கேரிஷிகளுடைய பன்னசாலைகளும் பூங்காவனங்களும் அன்னப் பட்சிகளும் ரிஷிகளையுங் கண்டோமே இப்போதொரு அதிசயமுங்காணேம் அந்தனைபஎந்தவனம் சொல்லுந்தம்பிமைத்துனரே,

லட்சுமணர் சீதைக்குச்சொல்-திபிதை,

தாயேகேள்சீதாயிப்போ சந்தேகப்படவேவேண்டாம் *
நேயமாய்வனங்கடந்து மீண்டிடும்போதிலப்பால் *
தூயதோர்தென்னந்தேக்குத் துலங்கியேமயிலுமன்னம் *
நேயமாய்நதியுந்தோப்பும் விசேஷத்திற்காண்பபேனே *

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் நீ விசாரப்படத்தேவையில்லை இந்தமூங்கில்வனங்கடந்து அப்பாற்போனால் பூங்காவனங்களும் நதிகளும் ரிஷிகளுடைய பன்னசாலைகளும் ஆசிரமங்களும் விசேஷமானபட்சிகளும் ஒருநிமிஷத்திற்குள்ளே காண்பிக்கிறேன் சும்மாவாருமம்மாசீதாய்.

லட்சுமணர்சொல்லுங்கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி, ஆதிதாளம்,

அன்னையேவாருமம்மா அடவியில்முன்னமேவாருமம்மா *
உன்னிதமாகமுனிவோர்கள் வாழ்கின்ற *
உண்மையாய்ப்பாருமம்மாஎன்மதனி உண்மையாய்ப்பாருமம்மா *
சம்பகச்சோலைகளும்அடவியிலற்புதஆலைகளும் *
தற்பரர்வாழ்கின்ற ஆசிரமங்காணுது *
மெல்லியபாருமம்மா என்மதனிமெல்லியேபாருமம்மா *
சந்தனதேக்குமாம் அடவியில்செந்தூரப்பாக்குமாம் *
இந்தவனத்திலதிசயமாய்க்காணுது *
என்றேவாருமம்மா என்மதனி என்றேவாருமம்மா *
வேதமுனிவோர்கள் தவஞ்செய்யும் வேள்விகள்சாலையிது *



போதாரவாகிறோர்ஸ்நானஞ்செய்யும் *
புண்ணியதடாகமிது என்மதனி புண்ணியத்தடாகமிது *
சத்தரிஷிகளெல்லா மிவிடத்தில் நித்தந்துதிகள்செய்வார் *
உத்தமியேசீதாய் பத்தியுடன்றொழுதேன் *
சித்தமகிழுமம்மா என்மதனி சித்தமகிழுமம்மா *

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

நதியிதுகண்டோமிப்போ லட்சுமணாநீதான்பாராய் *
விதம்பெறக்குயில்கள்கூவும் வேதனையிவர்களுக்கும் *
முதியதாயிருந்தபேர்க்கு முழங்கியதபோதனர்க்கும் *
கெதிபெறயிவர்கட்கெல்லாங் கிளர்த்துகைகூட்டுவேனே *

(வ-ம்) அகோவாருந்தம்பிலட்சுமணா இதோ நதியைக்கண்டேன் இதோ யாகசாலைகளைக்கண்டேன் ரிஷிகள்வாசஞ்செய்யும் ஆசிரமங்களைக்கண்டேன் ரிஷிகள்படிக்கப்பட்ட வேதகோஷங்கள் என்காதிலேஅடிபடுகுது இந்தரிஷிகள் தெரிசனம்பண்ணவேணுமென்றால் இந்தகங்காநதி பெருக்கெடுமாய்ப் பெருகிவருகின்றது நானென்னசெய்யப்போகின்றேன் தம்பிலட்சுமணரே.

(லட்சுமணர்சொல்வசனம்) அகோகேளுந்தாயே சீக்கிரமாக இந்தநதியில் ஸ்நானஞ்செய்து ஜெபதபமுடித்துக்கொள்ளும் இதோ ஓடக்காரரைஅழைப்பிக்கிறேனம்மா சீதாய்.

பொது-திபிதை.

தெரிசனைகண்டபோது தேன்மொழிசீதையாரும் *
பெருகியகங்கைதானும்பொட்டெனவெழுந்துநிற்க *
பரிவுடன்தீர்த்தமாடிப் பாங்குடன்பூஜைசெய்து *
அரிகினிலிருக்கும்போது அண்டையிற்குகன்வந்தானே

ஓடக்காரர்வருகிற-பொதுதிபிதை.

கோபமாய்க்குகனைப்பார்த்துகொள்கையாய்க்கங்கைக்கப்பால் *
போகவேகாரியமுண்டு பொட்டெனவோடந்தள்ளும் *
பாசனையழையுமென்ன பரிவாய்ப்போதுதானே *
ஆசையாயோடக்காரர் சூழ்ந்திடக்குகன்பால்வந்தார் *

குகனும்-ஓடக்காரனும்-வருகிறகண்ணிகள்.

இ-ம்-சங்கராபரணம் அடதாளம்.

தலையிலுருமாலைவளைதடியும்-நல்ல-தாழச்சடையுஞ்சல்லடமும் *
வனமாலிகைகொண்டு-நல்லகுகனும்-வந்துதோணியேன் *
ஆணிமுத்துபவழங்களாம்-நல்ல-ஆயிரமாத்துத்தங்கங்களாம் *
காணிக்கையாகக்கொண்டு-நல்லகுகனும்வந்துதோணியேன் *
அம்புவில்லெடுத்துக்கொண்டு-நல்ல-ஆறுமூன்றாயிரந்தொடுத்துக்
கொண்டுகொட்புத்தேனுங்கொண்டு-நல்ல-குகனும்வந்துதோணி

ளுன், தாமலராமலர்கொண்டு-எங்கள்-தாயார்சீதையைக் காணவெ
ன்று,ராமர்க்கடிமையென்று-கங்கா-நதியோடக்காரர்தோணிஞர்,
ஓடக்காரர்சொல்-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம் - மீசுரதாளம்.

ஆருங்காணுயிப்போநம்மையழைத்தது *
அகத்தியருசொல்காணும் நீங்கள்
உனைவிட்டுயிந்தப் பாரில்வந்ததேது *
உண்மையைச்சொல்வீர்காணும் (ஆருங்)
இந்தஅம்மையிட அழகுமொயிலும்தா *
னெங்குங்காணேனகாணும் (ஆருங்)
இருட்டுவேளைதன்னிற் பிருட்டுத்தனமாக *
யெங்கேபோதீர்காணும் (ஆருங்)
ராஜாதிராஜரோ நகரைவிட்டுக்குடி *
தாடியேபோவோரோ (ஆருங்)
மெய்யுரைசொன்னல்வைகைக்குவோடங்கள் *
வேண்டித்தருவேன்காணும் (ஆருங்)
வானவர்தேவரோ வழிதப்பியிந்த *
வனத்திலேவந்தீரோ (ஆருங்)
அன்னநடையாளும் ரதிபோலுங்காணுது *
மகாலட்சுமிதானே (ஆருங்)

லட்சுமணர்-குகனுக்குச்சொல்-திபிதை.

வைகையிலோடந்தள்ளும் வன்மையாங்குகனேகேளாய் *
செய்கைகொள்ராமர்தேவி சீதையாம்லோகமாதா *
உய்யவேவனங்கள்பார்க் உதிக்குமுன்போகவேணும் *
ஐயமில்லாமலோட மருகினிலழைத்திடாயே *

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய்குகனேரகுநாயகருடையதேவியா
கிய சீதாங்கனியம்மன் சூரியோதயத்திற்குமுன்னே தெண்டகா
ரண்ணியவனத்திற்குப்போய் ரிஷிபத்தினிமார்களைச்சேர்வைசெ
ய்யவேணுமென்றுபுறப்பட்டபடியால்சீக்கிரமாகஓடத்தைக்கொ
ண்டுவாருங்குகனே (குகன்-வ-ம்) அப்படியேநல்லதையா.

ஏலப்பதம்-கண்ணிகள்

ஏலேலோ - ஏலேலோ-ராமஜெயம் *
ஏலேலோ - ஏலேலோ (ராமஜெயம்)
தேக்குமரங்களினலே ராமசெயம்
திரள்பலகைதனைச்சேர்த்து *
வாகானஆச்சணித்து-வகைவகையாய்வட்டமிட்டு *
தீர்க்கமுடன்கறுங்காலி திரட்டியதிற்றாணிருத்தி (ஏலேலோ
ஏக்கமுடன்பொன்னதனல் இசைந்துஅதில்மச்சணித்து *
(து) சிங்காரமாய்ச்சமைத்த-ஓடத்தின்மீதில் *



சீதையும்லட்சுமணரும் வந்திமேற்கொள்ள *
வங்காரமாகவேகுகன்மனுஷீர்வந்து *
ஓடமேதள்ள-அலைமோதிருள்ள அடிமெள்ளமெள்ள *
ஆடிக்க பாடிக்க தேடிக்க-கூடிக்க (ஏலேலோ)
விசையானகங்கைதனில் விட்டுவருமோடந்தன்னை *
அசையாமல்நாற்புறமும் அமர்திருக்குமோடக்காரர் *
இசையானகுகனுடனில் இடமுடனேகற்றிநிற *
(து) அலைக்குதடாஒருபுறமாய் அடிமரத்தைச்சாயித்து, *
நிலைக்குதில்லையிவ்விடத்தில் நங்கூரம்பாய்ச்சி *
இதோஆச்சுது யிவடம்விட்டுப்போச்சுது (ஏலேலோ)
கருணிதரும்தாமரையும் நல்ல-கடல்தழைக்கும்அல்லிகளும் *
படல்போலேஆமைகளும்-பவழக்-கொடிநண்டுகளும் *
திடமுடனேபாம்புகளும் திரளானநதிதனிலே *
(து) லட்சுமணர்சீதையை நிறுத்திமெள்ளயேற்றி *
இக்கணம்ஓடம்விட்டு யெடுத்துப்பிடிமுழுக்கி *
முழுதடியைக்குறுக்கி முனையடித்துப்பூட்டி *

இதுவுமது ஓடக்காரர்சொல்லல்.

ஸ்ரீராமாராம ஜெயம்-சீதா பதிராமாராமஜெயம் *
சீர்மேவுங்கோசலையில்வாழ் சீர்பெருகுங்கனகவல்லி *
கார்மேவுமேனியுள்ள கமலமாதுபாதந்தன்னை *
(து) அச்சுதானந்தனெனு மேச்சுகோவிந்தன் *
ஆலிலையின்மேற்றுயிலும்அமரர்கள்முகுந்தன் *
நச்சரவின்மீதுதுயில் பச்சைநிறவண்ணன
நம்பினேன்வைகுந்தன் செம்பொன்மலர்பாதம் (ஸ்ரீராமா)
படல்போலேஆமைகளும் பவழக்கொடிநண்டுகளும் *
திடமுடனேபாம்புகளுந் திரளானவோடநீதயினில் *
(து) லட்சுமணருஞ்சீதையரை நிறுத்தியேமெள்ள *
நாற்புறமும்லங்கரைப் போடவேசொல்ல *
ஆஷணங்குகன்மனிதர் ஆர்ப்பரித்துநல்ல
அரிவையைசீதையரு மேறிவருங்கப்பல் (ஸ்ரீராமா)
வேலுநிகர்விழியதினல் வெருட்டுகின்றமாதரொனும் *
காலதிடவலைநீக்கிக் கார்த்தென்னைக்கடத்தேற்றும் *
(து) தாரணியிலோலமெனும் யானையுயர்தீர்த்த *
நாரணனே பூரணனே ஆரணனேகேசவே *
வேதாகமப்பொருளே யென்றுமேதேவர் *
மேவிபணிவைகுந்தன் பதஞ்சதஞ்செஞ்சே (ஸ்ரீராமா)

ஓயாமல்மோதுகின்ற ஓசைநீர்க்கடல்தனிலே *
சாயாமலோடுகின்ற சமுசாரமரக்கலத்தில் *
(து) வீழாமலெந்தனை நின் பாதத்திற்சேர்க்கும் *
விண்மண்ணும்போற்றரிய மன்னுமணிவண்ணன் *
நீடாழியிற்றுயிலும் நீலமணிவண்ணு *
நித்தம்பணிவைகுந்தன் முத்திதருபாதம் (ஸ்ரீராமா)
பார்புகழுங்கோசலைவாழ் பரந்தாமன்பதம்பணியும் *
சீர்மிகுந்தவால்மீகர் திருவடியைப்போற்றிசெய்து *
(து) ஆசையெனுமோடமதை நேசமாய்க்காட்டி *
அடியனுக்கடியனெனு மொருவன்பதம்பற்றி *
மீகாமனாகவரும் வாசையைநிறுத்தி *
யின்பமுடன்வைகுந்தன் செம்பொன்மலர்ப்பாதம் (ஸ்ரீராமா)
தேக்குமரமதனுலே தீர்க்கமிந்தக்கப்பலிது *
நித்தையாம்ஓடமது லட்சுமணருஞ்சீதை *
(து) தள்ளவேஓடமதை மெள்ளவேஅம்பால் *
கங்காநதிவாழும் கனமிகுந்தபச்சைக் *
கிள்ளையும்பஞ்சவர்னக் கிள்ளைகள்சூழும் *
மங்களமதாகவேதான் ஓடத்தைப்பாயிடாயிப்போ (ஸ்ரீராமா)
கங்காநதியிலேவிஷ்ணுவைவைத்து *
சூஸ்திரப்பலகைதொண்ணூற்றொன்பதுகட்டி *
(து) அக்கானுந்தங்கையொரு ஸ்ரீரங்கிபெற்றி *
அடிமத்தளமொன்று யிலையாய்ப்பரித்து *
நிசுயமாகவே கோலமீனும்பாள் *
ஞானமுடன்போகுதடி வால்மீகர்வனமே (ஸ்ரீராமா)

சீதை-லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்-இ-ம்
எதுகுலகாம்போதி-அடதாளம்.

நாமுங்கலாயேதிங்காநதியோடமுந்தாண்டி *
நாமும்வருகையிலே சகுனங்கள்-நன்றாகத்தோற்றவில்லை *
நானும்வரமாட்டேன-லக்ஷ்மணரோ-நன்றாகத்தோற்றவில்லை *
நாளைவருவாயையா-அயோத்திக்கு-ரதத்தைத்திருப்புமையா *
யாளிகள்கூளிகளும் வனங்களில்-கண்டபேரண்டங்களும் *
கூளிகள்யாளிகளும் வனத்தினில்-கூவுதம்மா குண்டையா *
இளையபெருமாளே லக்ஷ்மணரே யிந்தசகுனமெல்லாம் *
பிழையாகக்காணுது-வனந்தனில்-போகவுமொண்ணுது *
வனம்பார்க்கபோகையிலே லக்ஷ்மணரோ-வழிதடையாகாது *
இனமாகவூர்சேர்ந்து லட்சுமணரோ-யின்னொருநாள்வருவோம் *
அச்சமுறிந்ததுவோ-லட்சுமணரோ-ஆகாது-ஆகாது *
இட்சணமயோத்திக்கு-லட்சுமணரோ-யியனுடன்போவோம்வாரீர் *



லட்சுமணர்சொல்-கண்ணிகள்-இ-ம்-அமகாரி-சாபுதாளம்
ஏனம்மாயென்தாயே-என்னம்மணி-யிந்தசகுனமெல்லாம் *
கானகம்போகையிலே-யென்னம்மணி கண்டதோஷமில்லை *
அம்மம்மாயென்தாயே-யென்னம்மணி-ஆலோசனைபண்ணுநீர் *
எம்மாநடவுமம்மா.வனத்திற்கு வெகுதூரம்வந்துவிட்டோம் *
(பொது) சீதைமனங்கலங்க லக்ஷ்மணரும்- தீப்பாயிருக்குதென்று
பாதைவழியைவிட்டுக்-குறுக்கே-தேரைநடத்திவிட்டார் *

சீதை லட்சுமணருக்குச்சொல்-திபிதை,

அக்கரைதாண்டியிப்போ அடவியில்நடக்கும்போது *
திக்கெனச்சாலைசோலை சீருடன்கண்டோமிப்போ *
நற்குணமுடையயெந்தன் ரகுபதிக்கிளையகேளவோ *
பக்குவத்துடனேயென்முன் பகருவாய்நன்றாய்த்தானே *

(வ-ம்) ஆனால்கேளுந்தம்பி லட்சுமணு தமக்குமுன்னாலே இருண்டசோலைகள் தோற்றுகிற படியால் அந்தவனம்யார்வனம் எனக்குத்தெரியச்சொல்லுந்தம்பி மைந்தனே,

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கண்ணிகள்-இ.ம்,
புந்நாகவராளி-சாபுதாளம்.

அன்னையேகுருவசிஷ்டாசிரமனை பாராய்
அத்தனைத் துதிக்குஞ்சித்திர ஆசிரமம் பாராய்
பண்ணுடனையோர்வாழும்பாரவனம் பாராய்
பத்தியுடன்யாகசாலைபர்ணகம் பாராய்
கன்னல்விளைசூழுஞ்சோலை அன்னையே பாராய்
காசிபர்வாழ்கின்றவனங்காணுது பாராய்
உன்னிதயிருண்டவனமுன்னிலே பாராய்
கன்னிகளுறையுந்திவ்யகானகம் பாராய்
தென்றிசையுந்தெற்குவனநீதோணுது பாராய்
சிறியவிஸ்வாமித்திரமுனிசூழ்வனம் பாராய்
வர்னமானமாமரவனங்களைப் பாராய்
மாதவதூர்வாசமுனிவாழ்பதி பாராய்

பொது-திபிதை,

அக்கனாதன்னிலேறி ஆரண்யம்பார்த்தபோது *
துக்கிதராகவேதான் தூறவும்வழிநடந்து *
அச்சின்றியெரியவங்கோ ராவதுபயந்தேயோட *
சிக்கெனவிருண்டகாட்டிற்சீனதையைக்கொண்டுசென்றார்

(வ-ம்) அந்தச் சமையத்தில் சீதையம்மன் நதியிலேஸ்நானம்பண்ணி ரதத்தின்மீதேறினபோது லட்சுமணப்பெருமாள்ரதத்தை முடுக்கிக்கொண்டு தண்டகாருண்ணியம்வருகிறபோது அங்கே

க்கினிக் குயில்குயி லென்றரிகின்ற இரவிகாருகானகத்தைக் கொண்டுபோனவிதங்காண்க,

பொது-இயிதை

அரியதாம்புலிகள்சிங்கம் யானையுங்கரடிமானும் *
நரியுடன்சிவிங்கிபன்றி நாடியவனத்தில்வந்து *
அருவையையிவ்வனத்தி லகலவிட்டேகவென்று *
பிரியமாய்க்கருத்திலப்போபிரியவும்வகைநினைந்தார் *

(வ-ம்) அந்தச்சமையத்தில் தெண்டகா ரண்ணியவனத்தில் மனிதர்களுக்குப் பகையாயிருக்கப்பட்ட அநேகமிருகஜாதிகளிருக்கலட்சுமணப்பெருமாள்கண்டுஇந்தவனத்தில்தானேரகுநாயகர்லட்சுமி தேவியைவிட்டுவரச்சொன்னாரென்று மனதில்வியா கூலப்படுகிறவிதங்காண்க:

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

என்னசொன்னார்தம்பி யென்னசொன்னார்சுவாமி *
என்னசொன்னார்நாத ரேதுசொன்னார் *
முன்னேபாவிராவணனென்னைச்சிறையெடுத்தான் *
சொன்னகலகத்தாலே உன்னைவிடச்சொன்னாரோ (என்ன)
மன்னரகுராமருக்கென்னகுறைசெய்தேனோ *
தன்னந்தனியாளாக வென்னைவிடச்சொன்னாரோ (என்ன)
துன்னுங்குசலவைகேளிகபித்திரைக்குத் *
துன்பஞ்செய்தேனென்றுயின்பம்விடச்சொன்னாரோ (என்ன)
பரதர்சத்துருக்கருக்குப் பழுதுசெய்தேனென்று *
திரையக்காட்டிலென்னைத் துறையாய்விடச்சொன்னாரோ (என்ன)
நிறையும்வசிஷ்டர்பாதம் உரையாய்மறந்தேனென்று *
மறையும்புகழும்ராமர் அறையாய்விடச்சொன்னாரோ (என்ன)
மறையவனெழுதிய குறையோநானதியேனே *
பிறையணியீசன்விட்ட சிறையோநான்குடியேனே (என்ன)

சீதை-லட்சுமணருக்குச்சொல்-இயிதை,

எத்தனைக்கொண்டுவந்த யிளையவரசொல்லக்கேளும் *
உத்தனல்மனதிற்றுக்க முகந்துமேயிருப்பதேனோ *
சுத்தரமுங்களெல்லாரும் சேர்ந்திடக்கருமமேது *
எந்தனுக்கறிய நன்று யிஷணமியப்புவீரோ *

(வ-ம்) அக்காவாருத்தம்பி லட்சுமணா அயோத்தியிலிருந்து தெண்டகாரண்ணியவனம் வருகிறபோது உன்னுடையமுகமெல்லாம் செந்தாமரைப்புஷ்பம்போ லிருந்ததே இங்கேவந்தமாத்திரத்தில் முகங்களெல்லாம் வியாகூல மானதென்ன எனக்குத்தெரியச் சொல்லுந்தம்பி லட்சுமணா;



லட்சுமணர்-சீதைக்குச்சொல்-தரு-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்

பல்லவி:

என்னசொல்லுவேனென்னம்மாயேதுசொல்லுவேன் *

அநுபல்லவி.

அன்னமேயென்னண்ணர்சொன்னசொல் *
வாய்வழியில்மெழுகாயுருகுதே (என்ன)

சரணங்கள்.

பாவியானேனேஎன்னம்மா *
ஆவியானவென்னண்ணருரைத்தசொல்செப்புவதெப்படி (என்ன)
வாய்திறந்துயான்சொல்வோமென்றால் *
மனதுபிதறுதுவலுமைசிதறுதுவகையுமெப்படிசெப்புவேன் (எ)
தசரதர்குலமுன்றாலேஇங்குவரிகுதென்றே *
ராமருமுங்கில்வனத்தில்விடுமென்றார் (என்ன)

இதுவும்-லட்சுமணர்சொல்-தரு,எதுகுலகாம்போதி-மிச்ரதாளம்,

பல்லவி.

எப்படிசொல்லப்போறேன்-ராமர்சொன்னதை *
யேதென்றுசொல்லப்போறேன் *

அநுபல்லவி,

எப்படிசொல்லப்போறே னிசைந்தவொருவார்த்தையை
நற்படியாய்ச்சொல்லநாவெழுமோதாயே *

சரணங்கள்.

மன்னவன்ராமச்சந்திரன்மனமகிழ்ந்துசொன்னதை *
யென்னமாய்மனம்வந்து யியம்பிடுவேனம்மா *
மானமே அண்ணன்சொன்னவார்த்தையோ *
சின்னமாயிருக்குதுசெவிதனிற்கேட்கலாமே (எப்படி)
சொல்லவென்றாலென்மனந் துடிக்குதுதிரோகமெங்கு
மூலிலைநகையாளே மொழிவேனோயிவ்வசனம் *
அனலிலெழுந்தசீதா யடுக்குமோயிந்தவார்த்தை *
மனம்வந்துராமர்சொன்ன வசனமேறுதக்கண்டீர் (எப்ப)

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கொச்சகம்,

என்னுடையதாயேகேளிசைந்தவொருவார்த்தையைநீ *
மன்னரகுராமருன்னை வனத்தில்விடச்சொன்னாரே *
சொன்னமொழிகூறநெஞ்சந் துடிக்குதம்மாதிரோகமெங்கும்,
இன்னவசனங்கள்சொல விசைந்திடுமோமனமதுவும் *

(வ-ம்) அக்காகேளுமம்மா ரகுநாயகர்சொன்னவார்த்தையையென்னவென்று சொல்லப்போகிறேன் சொல்லவேணுமென்றால் நாக்கூசுகின்றது எப்படிசொல்லப்போகிறேன் ரகுநாயகருக்கு வேண்டியபிரியவசனஞ்சொன்னேன் கேளாமல் உன்னைவனத்தில் விட்டு என்னையயோத்திக்குவந்து சேரச்சொன்னாரம்மா

பொது-திபிதை,

உரைத்ததோர்வசனங்கேட்டு வொண்டொடிசீதையாரும் *
அறுத்ததோர்கதலிபோலே அலறியேகீழ்விழுந்து *
வெறுத்துமேகலையுமாகி மேதினிதனிற்பணிந்து *
வருத்தமாய்த்துயரத்தோடே யாயனைநினைந்துசொல்வாள்

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திருதை,

விதியெனக்கிதுவோவையா விமலனேயிளையகோவே *
மதியிகுமிராமருக்கு வன்பிழைசெய்ததுண்டோ *
துதியிகுமுங்களண்ணர் சொல்வினைத்தவறிடாமல் *
மதிமயக்கத்தாலியனும் வனம்பார்க்கவந்திட்டேனே *

(வம்) அகோவாருந்தம்பிலட்சமணா என்னுடையவிதிஇப்படியிருந்து ரகுநாயகருக்கு நான்செய்த அபசாரங்களேதேதவுண்டோ அவருடையவார்த்தையைத் தள்ளாமல்வனம்பார்க்கவந்தேனிவ்வனத்தில்பெண்சேவகிகையநான்என்னசெய்வேன்மைத்துனா.

சீதை-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-கண்டா-டீசர்தாளம்

திருந்தியவனத்திலன்று சீதான்பிறந்தபோது
ராகவாஹரிராகவா *
வருந்தியஅரக்கனென்னைவலுமையாலெடுத்தபோது *
ராகவாஹரி ராகவா *
பரங்களைத்தரூவிக்கொண்டுவெஞ்சியென்றெனையழைத்த
ராகவா அரி-ராகவா *
திரமுடனேயந்தவார்த்தை சிந்தையில்நினைவில்லையோ
ராகவா அரி ராகவா *
கன்றிழந்தபசுவைப்போல்கானகத்திற்றேடினீரே *
ராகவா ஹரி-ராகவா *
வண்ணமானஅயோத்திதனில்வாழ்ந்துநாமிருந்தோமே
ராகவா ஹரி ராகவா *
இன்றவர்பிரிந்தவகையெவ்வகையோவறிகிலேன் *
ராகவா ஹரி ராகவா *
என்னசெய்வேன்மைத்துனரேஏதுசெய்வேன்லக்ஷ்மணரே
ராகவா ஹரி ராகவா *

சீதைக்கும்-லட்சுமணருக்கும் தர்க்கம் கண்ணிகள் இ-ம்,

முகாரி ஆதிதாளம்,

(சி) ஐயையோதம்பிலக்ஷ்மணரே இவ்
வன்னீதயிந்தவுலகிலுண்டோ *

(ல) செய்தவினையாலேயம்மா *
தீங்குகளானதையென்சொல்வேன் *



(சீ) என்னகுற்றஞ்செய்தேனென்று சுவாமி
விந்தவனத்தில்விடவேசொன்னார் *

(ல) அன்னையேவன்றனொருவனம்மா உன்னை
அரக்கனெடுத்தஅரவஞ்சொன்னான் *

(சீ) மாசிலாதஅக்கினியில் தம்பி
மனிதர்வருவதுண்டோலக்ஷ்மணரே *

[ல) ஏசுறுருலகமென்று ராமர்
இந்தவனத்தில்விடச்சொன்னார் *

(சீ) அன்னமாஞ்சந்திரவதியாள் பட்ட
ஆபத்தைச்சொல்லிடவாய்வருமோ *

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபிதை.

காட்டினிலோட்டிவிட்ட காரணஞ்சொல்லுமென்றீர் *
வாட்டமாஞ்சீதையாரே வன்றானென்மொழியைக்கேட்டு *
நாட்டினிலுள்ளபேர்கள் நமையேசுகின்றாரென்று *
தேட்டமாம்புகழ்சேர்ராமர் செப்பினாரென்னசெய்வேன் *

(ல-ம்) அகோகேளுமம்மாசீதாய் நாட்டிலுண்டானபேர்களெல்லாம் நம்மைநகைக்கிறார்களென்று ரகுநாயகர் மகாகோபமாய் உன்னை இந்த வனத்திலே விட்டுவரச்சொன்னாரம்மா.

பொது-திபிதை.

மைத்துனர்மொழியைக்கேட்டு மயங்கியேமூர்ச்சையடைந்து *
மெத்தவேமனதுவேறாய் மேதினிதனில்விழுந்து *
பித்தனைப்போலுமையோ பிதற்றியேயுளறிநின்று *
சித்தமும்ராமாவென்று சீதையும்புலம்புவாளே *

சீதை-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

என்னசெய்வேன்மைத்துனா-இதற்குநான் *
ஏதுசெய்வேன்லக்ஷ்மணா-ராமர் *
சொன்னதங்கொழுந்திருந்து-என்னையிந்தச் *
சூதுகள்செய்தீரே (என்ன)

சூதுகளறியாத-என்பாவி-சொன்னேனொருவார்த்தை-அதை *
வாதென்றெண்ணாமலே-என்னைப்பிந்த-வனத்தினிற்றள்ளிவிட்டார் (

சித்திரக்கூடந்தனிலே-இருவரும்-சேர்ந்தங்கிருக்கையிலே-அப்போ
தத்தித்தத்தியொன்று-காகாசுரன்-ஸ்தனியத்தைக்குத்தினனே (என்)

குற்றமேசெய்தானென்று-ரகுராமர்-கோபத்துடனேழுந்து-பிரம
அஸ்திரமிதுவென்று-தர்ப்பையெடுத்-தருங்கனையுங்தொடுத்தார் (எ)

எத்திசையுமோடி-காகாசுரன்-எங்குங்கதியில்லாமல் *
சத்தமுள்ளவனென்று-ரகுராமனைச்-சரணமடைந்தானே (என்ன

சரணமடைந்தவனை-ரகுராமர்-தற்காக்கவேணுமென்று *
மரணமடையாமல்-லொருகண்ணை-வாங்கியேவிட்டாரே (என்ன)

பிள்ளையுமில்லாமல்-ரகுராமர்-வெகுநாள்தவமிருந்தார்-இப்போ *
பிள்ளையுண்டானபோதே-வனந்தனிற்-போவென்றுதள்ளிவிட்டார் (எ)

எத்திசையுந்துதிசெய்-ரகுராமர்-எங்கும்பரந்தஜோதி *
புத்திரனில்லாத்தயாம்-என்னைப்-போவென்றுதள்ளினாரே (என்ன)

குதையறியாமல்-நான்பாவி-செய்தேனொருகோடி-எங்கள் *
மகிழ்ச்சியறியாமல்-ரகுராமர்-வனந்தனிற்றள்ளிவிட்டார் (என்ன)

மாயிகமுசலையாள்-என்னை-வனம்போகவேண்டாமென்றாள்-அவர்கள் *
சொல்லைத்தடுத்துவிட்டு-வனம்பார்க்கத்-தாரவேவந்தேனையா (என்ன)

பாதகத்துருக்கருடனே-நானும்-பட்சமாய்சொல்லிவந்தேன் *
பாதகத்துருக்கருடனே-என்மீதிற்-பட்சமாவைத்திருப்பார்களோ (என்)

மஞ்சினைமீதிலே-ரகுராமர்-பரிவாயிருக்கையிலே *
அஞ்சலிசெய்துக்கொண்டு-ரகுராமர்-அடைக்கலஞ்செய்துதந்தார் [எ

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

கருணைசேராமபூரா கட்டுளைமறந்திட்டாரோ *
வருவதாமுனைபுகானு மாதவர்க்குறைசெய்தேனோ *
இருவருமகிழ்ச்சியாக யிருந்திப்போவனத்திலோட்ட *
குருவருள்கிருபைதானோ கொடியபாதகஞ்செய்தேனோ *

[வ-ம்] ஆகோவாருந்தம்பிலட்சுமணா ரகுநாயகர் கிருபாகடாட்சமில்லாமல் இந்தவனத்தில்விடச்சொன்னது நான்முன்புசெய்த தவக்குறைவோ அல்லது குருகடாட்சமோ நான்செய்தபாவமோ என்னை யிப்படி மோசஞ்செய்யலாமோ தம்பிலட்சுமணா.

சீதைக்கும்-லட்சுமணருக்கும்- தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-மிசாதாளம்

லட்சுமணர்-சொல்லல்

எப்படிசொல்லுவதோ-என்னம்மா-என்மனம்-யான்துணிந்தது *
உன்னைக்கைப்பிடியாக-அண்ணருன்னைக்காட்டில்விடச்சொன்னார் *

சீதைசொல்லல்,

காட்டில்விடவோஎன்னை-அரக்கரைக்கண்டித்துச்சிறைமீட்டினார் *
தாஷ்டிகமாய்வனத்தில்-என்னைத்-தள்ளிவிடுவதற்கோ *



லட்சுமணர்-சொல்லல்

நாட்டிலுள்ளோர்களும்-மற்ற-ராஜர்களேசலென்று-உன்னை *
கூட்டியென்னைத்தொடர்ந்திந்தக்கொலவனம்விடச்சொன்னார் *

சீதைசொல்லல்.

மாரினிற்பெண்களிலே-என்னைப்போல்-பாவியொருவரில்லை *
வாராவிதியெனக்கு-ஐயோ-வருகுதேயென்னசெய்வேன் *

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

என்னசெய்வேன்ராகவரே யேதுசெய்வேன்லக்ஷுமணரே *
மன்னவர்தன்னைக்காணேன் வண்மைசேர்யோத்திகாணேன் *
என்னுடையமாமிகாணே னினிமையுள்ளபரதர்காணேன் *
உன்னியகுருவதிஷடரொருவரையுங்காண்கிலேனே *
பொன்னுமண்யசனத்தைப் புகழுநான்காண்பதெங்ஙன் *
கன்னியர்களவேறெகாணேன் கானகத்திலொருத்தனேன் *
உன்னிதமாம்நகரிபோல வொருநாகங்கள்கண்டிலேனே *
என்னுடையநெஞ்சுதானும் இரும்பினால்வருத்ததுவோ *
மன்னரைமறந்துநானும் மடியவோயிங்குவந்தேன் *
நன்மையேயாவனத்தில்விட ஞாயமோகாரணமைத்துனரே *
கன்னலாவமேனியெல்லாங் கருகிறதையாறுமையா *
மன்னரகுராமர்சொன்ன வார்த்தையைத்தவறிடாமல் *
என்னையிந்தக்காட்டில்விட்ட கிளையவரேஎன்னசெய்வேன் *

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபதை

தவமதுசெய்தகெர்ப்பந் தரித்ததோராறுமாதம் *
மவமதிமயக்காற்காடு பார்க்கவேவந்தேனையா *
கவலையிலவன்சொல்லைக் கருதிநீர்தயையில்லாமல் *
அவலமாய்வனத்திலோட்ட வடுக்குமோவிளையகோவே *

வசனம்.

ஆகோவாருந்தம்பி லட்சுமணா என்வயிற்றில் ஆறுமாதத்திய கெர்ப்பபாக்கியமிருக்க நான் மதியமக்கமாய் வனம்பார்க்கவந்தேன் உங்கள் தமையனார் வார்த்தையைத்தள்ளாமல் நீர்தான் என்னமாய்மனம்வந்து காட்டில்விட்டுப்போறீரையா லட்சுமணா.

சீதைக்கும்-லட்சுமணருக்கும்-தர்க்கம் ஐம்பை-கண்ணிகள்.

சீதைசொல்லல்.

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லட்சுமணரே *
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகுறீரோவையா *

லட்சுமணர்சொல்லல்

என்னமென்றுசொன்னீரம்மா யிப்படியுஞ்சொல்வீரோ
மன்னவர்க்குவார்த்தையிக் வருந்திறன்சொன்னேன் *

சீதை-சொல்லல்.

உன்னிதமாம்ராகவர்க்கு மொருகுறையுஞ்செய்தறியேன் *
அன்னிதமாய்காட்டில்விட்டாரிலையவிதியாச்சே *

லட்சுமணர்சொல்லல்.

அலையவேவிதியென்ன அஞ்சிடவேண்டாமம்மா *
நிலையுடனேமுனிவர்வந்து நீறுத்துவார் துயரம் *

சீதை-சொல்லல்.

செந்தணலிற்புகுந்தியானும் வந்துலங்கள்தருந்தேன் *
சந்தேகமாகினரோ சதிர்புனையும்ராயர் *

லட்சுமணர்சொல்லல்.

சதிர்புனையும்ராமரென்னைத் தயவுடனாய்வரவழைத்து *
அதிதுரையாய்வனத்தில்விட்டு அயோத்தியாச்சொன்னார் *

சீதை-சொல்லல்

மைந்தனைநான்பெற்றபின்பு வனந்தனிலேபோயென்றாரோ *
சிந்தையிகத்தளர்ந்தியானும் திகைக்கிறேனேஐயா *

லட்சுமணர்-சொல்லல்

திகைத்திடவேண்டாமம்மா தேவாருளாலே *
மகத்வமுள்ளரிஷிகள்வந்து மாற்றுவார் துயரை *

சீதை-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

ஐயனேமுன்னிருக்க அருஞ்சிறையும்போகாமல் *
வையகத்தோர்பேச்சுப்போ வனத்தினில்விடச்சொன்னாரோ *
உய்யுமிடல்பறியா துதித்தகர்ப்பாக்கியத்தைச் *
செய்யனேயுந்தன் திருக்கண்ணாற்பாருமையா *

வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணா நான்பெண்பிறந்தது எனக்குப்போதும் முன்புலங்கையிற்சிறையிருந்தேன் இப்போதுஉங்களண்ணர் ரகுநாயகர்வார்த்தையைத் தள்ளப்போகாதென்று வனத்தில்விட்டுப்போறீர் என்வயிற்றிலிருக்கும் கர்ப்பத்தைப்பாருந்தம்பிலட்சுமணா.

லட்சுமணர்சொல்-கொச்சகம்.

ஐயையோயிப்படியை அன்னையேதொலைக்கவென்றால் *
வையகந்தன்னிலிந்த வார்த்தைவொவ்வாதுகண்டாய் *
செய்வதொன்றில்லையையோ சிவனையும்போக்குவனேன் *
வையகத்தையாள்ராமர் மனதினில்மாழ்குவரே *

வசனம்,

அகோவாருமம்மா சீதாய் இப்பேர்ப்பட்டவார்த்தையை நீசொல்லலாமா உன்வயிற்றின்கர்ப்பத்தை நான் பார்க்கிறேனோ என்னசெய்யப்போகிறேனம்மா மதனி,



லட்சுமணர்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-பைர-வி-சாபுதாளம்

ஏதுகாரணத்தினாலே யிவ்வசனங்கேழ்க்கலானேன் *
இந்தப்பழிக்காளாகினேன் அரிகரிராமச்சந்திரா *
பாதகனாகிவிட்டேன் பாதனைப்போலெளியமற் *
பரதேசியாகினேன் அரிகரிராமச்சந்திரா *
சிதாஞ்செய்கையினாற் சிவனைவிடவும்நன்று *
பேதூரன்கெட்டேனையா அரிகரிராமச்சந்திரா *
இளங்கொடிசீதையாரோ பெத்தனுக்கு இந்தப்பாவம் *
வந்திதென்றறியேனையா-அரிகரிராமச்சந்திரா *
சிந்தையில்நினைந்துசொல்ல திருமேபழிபாவங்கள் *
விந்தையாகவந்ததையோ அரிகரிராமச்சந்திரா *
இந்தனையாயிந்தவார்த்தை பெத்தனுக்குநீசொல்லவும் *
உந்தன்மனதுயிசைந்ததோதான் அரிகரிராமச்சந்திரா *

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபதை

ஏனம்மாஉந்தன்சிந்தைக் கித்தனை துயரம்வேண்டாம் *
கானகம்வந்தோமென்று கருத்தினிலஞ்சவேண்டாம் *
வானவரிஷிகளானோர் வந்துமேதுணையேசெய்வார் *
நானுமேஅயோத்திக்கேக நன்மையாய்வாக்குத்தாராய் *

(வ-ம் அகோவாருமம்மாசீதாய்இந்தவனத்தில்வந்தோமென்று நீதாபந்திரியப்படவேண்டாம்உனக்குயிவ்வனத்தில் தேவரிஷிகள்வந்துதுணைசெய்வார்கள் நான்அயோத்திபோய்ச் சேர்வதற்குச் சந்தோஷமாகச் செலவுகொடுமம்மா மதனி.

சீதை-லட்சுமணருக்குச்சொல்,திபதை.

உந்தனைவெறுப்பதேனோ வுலகமேயாண்டார்தன்னை *
சிந்தையில்நினைத்துக்கொண்டு திமெழுசலதல்லால் *
எந்தவிதியேயல்லா லெவரையும்வெறுப்பதேனோ *
இந்தனையானேனென்று விரதம்கொண்டுசெய்வீர் *

(வ-ம்.) அகோவாருந்தம்பி லட்சுமணா என்தலைவிதி இப்படியிருந்தால் எவரையு மனம்நோகப்போகாது ரகுநாயகரை என்றைக்குக்காணப் போகிறேன் தம்பிமைத்துனா,

சீதை-பிரலாபக்-கண்ணிகள்-இ-ம்-கண்டா-அடதாளம்,

பொல்லாததாடகைபுஜபலந்தன்னையே-ராமராமா உந்தன் *
வில்லாற்செயித்தோனே மீண்டெங்கரன்பதெப்போராமராமா *
எல்லையிலொருவருமெதிரில்லையென்றீரேராமராமா-என்னை *
நல்லமனஞ்செய்து நம்பிக்கைதந்திரே-ராமராமா *
ஐயாதிரும்பிஅயோத்தியில்வந்தோமே-ராமராமா-நீர் *

அன்றுவில்வளைத்தென்னை அருமணஞ்செய்திரே-ராமராமா *
அகலிகைபாகைகல்லைப்பெண்ணாக்கிவைத்தீரே-ராமராமா-அந்த *
வல்லையயாலேமனதுகுளிர்ந்தேனே-ராமராமா *
வையகம்புகழ்கின்றஅயோத்தியில்வாழ்ந்தோமே-ராமராமா-நாம் *
எல்லாரையும்போலேயிபலாகவாழ்ந்தோமே-ராமராமா *
மாமிசொல்லாற்காட்டில் துவிஷுடன்போனோமே-ராமராமா-அன்று *
மாரீசன்மானாகவனந்தனில்வந்தானே-ராமராமா *
பொன்னிறமானைப்பிடியென்றுசொன்னேனே-ராமராமா-அப்போ *
வந்தமானைத்தேடிவனந்தனிற்போனீரே-ராமராமா *
அன்றுராவணன்கையிலகப்பட்டசிறைபோல-ராமராமா நீர் *
இன்றுகாட்டில்விடவெந்தன்விதிப்படியோராமராமா *
விமலர்பாதந்தன்னைவிட்டுக்காட்டில்வந்தேன்-ராமராமா-அந்தக் *
கமலபொற்பாதத்தைக்காண்பதென்றைக்கையோ-ராமராமா *

சீதைசொல்-சீசபத்தியம்-இ-ம்-புந்நாகவராளி,

ஓகோலக்ஷுமணாவுமக்கிதுஞாயமோ *
ஒவ்வுமோவும்பிடமனதாதாவும் *
வேகுதேயென்மனம்விகற்பங்களாகுதே *
யென்னகாரணமோயென்கர்மந்தானோ *
ஆனின்றன்வயிற்றினிற்பிறந்தோஷமோதான் *
தசரதன்மகனுக்குவாய்த்தஜனனமோதான் *
அசலகவன்னுனசொல்புதனைமகேட்டு *
அலைமுத்துவந்துவிடலாமோலக்ஷுமணாலக்ஷுமணா *

சீதைசொல்-கண்ணிகள் இ-ம்-காப்போதி-ஆதிதாளம்.

பெண்பாவமென்றிதை யெண்ணுமல்ராமனென்னைப் *
புண்போலேமனம்நோகச்சொன்னாரே *
இல்லறத்திருந்தயென்னைலக்ஷுமணாநீதான் *
இவடத்தனில்விட்டுப்போறீரோ *
எல்லாரையும்போல்வாழ்ந்துவந்திருப்போமென்று *
யெண்ணினதுக்களவாய்முடிந்ததையோ *
கோட்டைக்குள்ளேவுலகிற்பழித்தசொல்லைராமர் *
கேட்டவுடன்வனத்தில்தான்விடவும் *
காட்டிலேகீர்த்திபெற்றமைத்துனரேநீங்கள் *
காட்டிலென்னைவிட்டுப்போறீரோ *
யேநலகில்தவங்கோடி செய்தாம்பிள்ளை *
பெற்றபின்புகாட்டில் விடலாகாதோ *
காருள்ளவனந்தனில்விட்டு வந்தேனென்று *
கமுசலைதேவியார்க்குச்சொல்லுமையா *



தாரணிபுகழுமயோத்திராமருக்குஞ்சீதை *
சரணம்பணிந்தாளென்றுசொல்லுந்தம்பி *
சேணிபாதசத்துருக்கருக்கு இந்தச் *
சேதியெல்லாந்தெரியச்சொல்லுமையா *
ஐயர்குருவசிஷ்டமாமுனிக்குஞ்சீதை *
அடிதொழுதாளென்று சொல்லுந்தம்பி *
அங்கதன்குமுதனனுமார்சாம்புவர்க்கும் *
ஆயிரந்தெண்டஞ்சொல்லுந்தம்பிலட்சுமணரே *

சீதை,லட்சுமணருக்குச்சொல்லியவை

பூமியிற்பிறந்தவெந்தன் பெண்மையைதன்னைக்கொண்டு *
ராமருமும்மையேநாக்கி களித்துடன்கடுகடுத்து *
தாமிஷமாயிநென்றுசந்தியிற் கோபங்கொள்வதே *
போமினியிவ்வரலோகேபூபதிஅயோத்திவரடே *

(வ-ம்) ஆகோமைத்துனதம்பி பூமியில் நான்பெண் பிறந்து எனக்குப் போதும் என்தலையில் யிப்படியிருந்தது நானென்னசெய்யப்போகிறே ன் உங்கள்தமையனாகிய ரகுநாயகர்இந்நேர மென்னென்றுமதுபே சிற்கோபங்கொள்ளப்போகிறாரோ யோத்திபோய்ச்சேருந்தம்பிலட்சுமணா

பொது-திபதை,

திடுக்கெனவெழுந்திருந்து சீதையைத்திரும்பிப்பார்த்து *
சடுக்கெனலுப்பவேதான் சலித்தவர்மனதுநொந்து *
முடுக்கியேவழிநடந்து மொய்குழற்சீதைதன்னை *
அடிக்கடிதிரும்பிநின்று அயோத்திக்குப்போகின்றாரே *

(பொதுவசனம்) ஆகோதெய்படியென்றால் அந்தச்சமயத்தில் சீதா ட்சாமி அறைப்பினைக்க லட்சுமணரானவ ரெழுந்திருந்துநின்று சரணம் பண்ணிக்கொண்டு சீதாக்களியைப்பார்த்து துயரப்பட்டுக்கொண்டு அ யோத்திநோக்கிப்போகிற விதங்காண்க,

லட்சுமணர்-சீதையைவிட்டுப்போகுங்காலையில்,பிரலாபிக்கிற

கண்ணிகள்- இ-ம்-கல்யாண-ஆதிதாளம்

அன்னைசீதையைவிடவென்னமாம்மனந்துணிந்தேன் ராமராமா
அன்னையெனுஞ்சீதையார்க்கு ஆதரவொருவருண்டோ ராமராமா
பாதகனுவிட்டேன் பாதனைப்போலேவளித்திடாமல் ராமராமா
பசலைப்புழுவதாகப்பதைக்குதெயோதிரேகமெல்லாம் ராமராமா
அச்சுதராமாவார்த்தை யன்பூணேதள்ளிடமால் ராமராமா
கொச்சையானகானகத்திற் கோதையைவிடத்துணிந்தேன் ராமராமா
என்னென்றுயென்தாய்சீதை யேங்கிமனஞ்சோருவாளோ ராமராமா
கன்னல்விளை அயோத்திகளைமழுங்கிப்போச்சுதையோ ராமராமா

இதுவும்-லட்சுமணர்-பிரலாபிக்கிற-தரு-இ-ம்,

எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

பல்லவி.

வனதேவதையோககூதியுங்களம்மா *
வனதேவதையோககூதியுங்களம்மா *

அநுபல்லவி.

கனமானமிதிலையில் ஜனகன்றன்மகளான *
கன்னிசீதையைமனங் கலங்கவிட்டுப்போறேன் (வன)

சரணங்கள்,

இநனரனகாட்டினி லொருவர்துணையுமில்லை *
ஆருமற்றியாகானகத்தி லக்தரமாய்விட்டுப்போறேன் (வன)
அண்டரண்டபட்சிகளா அம்மனைக்காத்திடுங்கள் *
வண்டணை சீதை தன்னை வனத்தில்விட்டுப்போறேன் (வன)
பஞ்சவர்ணக்கிளிகளா பரவையே அன்னங்களா *
அஞ்சாமற்கானகத்தி லந்தரமாய்விட்டுப்போறேன் (வன)

(பொதுவ-ம்) இப்படியாக லட்சுமணப்பெருமாள்சொல்லிக்கொண்டு வருந்தருணத்தில் சீதையானவள் லட்சுமணனைக் காணாமற்போகிற வர்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

சீதைசொல் கொச்சகம்

மனமதுமிகவுநொந்துமனக்குறைகடன்னுடனே *
எனமாகவேசீதையெடுத்துரைப்பாளிடங்களிலே *
என்னையிளையாய்மிருகக்களுக் கெழுந்னிரோபிரம்மலயி *
பிலமாகவேகாணும் பெண்பிறந்தேனேபாவி *

சீதைசொல்-பத்தியம்-இ-ம்-கண்டா,

ஏகோலஞ்சுமனாறு வுமக்கிதுஞாயமோ
போகுதேவும்முனைட்ப புத்திதானோ *
வேகுதேயென்மென மிகவும்விகற்பங்க *
ளாகுதேபிரம்மலயிப்படிவிதித்ததோதான் *
சாகிறபேர்போலே தயங்குதேயென்மனம் *
தனித்துயிப்படிக்காட்டிலிருப்பதேனோ *
பூமிதனிற்பெண்ணைப்பிறக்கதேதோ *
புவிஜனகராஜனென்னையெடுத்துவளர்த்ததேதோ *
ராமர்கைபிடித்தென்னைக்கொடுத்தன்மையேதோ *
ராவணன்சிறையெடுத்துப்போனதன்மை *
மாயமாயராக்கர்குல மாண்டதேதோ *



மதியிலங்கைவிபீஷணர்க்குவந்ததேதோ *
ராமருடனயோத்தியினில் வாழ்ந்ததேதோ *
ரசகனுல்வந்ததல்லோஇந்தகூ *

(பொதுவசனம்) இப்படியாகச் சீதைவனத்தில் ஒண்டியாய்இலவிகாணாமற் புலம்புகிறபோது லட்சுமணர் அயோத்தியைநோக்கிவருகையில் ரகுநாயகர் லட்சுமணர் வரவில்லையென்று அனுமாருடன்சொல்லித் துயரப்படுகிறவிதங்காண்க-

ஸ்ரீராமர்-அனுமாருடன்-துயரப்படுகிற-கண்ணிகள்.

இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

என்னதான்செய்வேனடா அனுமானே-தம்பி *
யிந்நகர்வரக்காணேனே அனுமானே *
வர்ணமானமேனியானை அனுமானே-தம்பி *
வனத்தில்விடப்போனவனை அனுமானே *
என்னகாரணமோதான் அனுமானே-தம்பி *
யின்னம்வரக்காணேனே அனுமானே *
பத்தினிசீதையானை அனுமானே-தம்பி *
பாங்குடன்கொண்டுசென்றான் அனுமானே *
சித்தத்திலேகோபமாகி அனுமானே-தம்பியைச் *
சினங்கொண்டுசபித்தாளோ அனுமானே *
கன்னிகைசீதைபாரும் அனுமானே-தம்பி *
காட்டிற்புலம்பிடவே அனுமானே *
இந்நகர்வாராமலே அனுமானே-தம்பி *
யெங்கேயிருக்கின்றானோ அனுமானே *
காட்டில்விடப்போனதொரு அனுமானே-தம்பி *
காணேயைக்காணேனிப்போ அனுமானே *
நாடிகமாய்நீயோடி அனுமானே-யென் *
தம்பியைப்பார்த்துவாடா அனுமானே *

பொது-திபதை

சொன்னசொல்லதனைக்கேட்டுச் சுருக்கினிலனுமார்தானும்
இந்நிலந்தன்னைவிட்டு நெடும்பிறைாகாயத்தில் *
மன்னவரிளையகோவும் வருகிறவேகந்தன்னில் *
மன்னவர்க்கறிக்கைவிட்டு மகிழ்வுகொண்டிருந்தாரங்கே *

(வ ம்.) அதேதெப்படியென்றால் அந்தசமயத்தில் அனுமார் பார்த்து லட்சுமணர்வருகிறசேதிசொல்ல லட்சுமணர்வந்து ரகுநாயகர்க்குச் சரணஞ்செய்துசொல்லுகிறவிதங்காண்க.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

கட்டளைப்படிக்குநானுங் காரிகைசீதைதன்னை *
கட்டமாந்தேரிலேற்றி வனத்தனிற்கொண்டுசென்று *

சட்டமாய்தேவர்காணச்சகத்திலுள்ளோரும்பார்க்க *
இஷ்டமாய்விட்டுவந்தே னிணையடிசரணமையா *

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி தங்களுத்தாரப்படிக்குஎன்தாயாராகிய சீதாலட்சுமியை வனத்தில்விட்டுவந்தேன்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்-பத்தியம் இ-ம்-கண்டா

தம்பிநானென்னசெய்வேன் ஜானகிதன்னையே *
நம்பிநானிருந்தேனே நஷ்டஞ்செய்தாய் *
துன்மையாய்மனதிலே அபயமாயிருப்பாளோ *
தர்சனஞ்செய்வாளோ சீதைமாது *
வம்பினல்ரசகன்சொல் வார்த்தையால்நானுமே *
மனைவியைக்காட்டிலில் விடவுஞ்சொன்னேன் *
கொம்புபோற்கருகியே கோதையாள்சீதையும் *
கொலைகளுந்நடுங்கியேயுருகிறாளோ *
என்னதானுந்துமே யுருகிறாளோ *
மன்னனைநிந்தித்து வருந்தினளோ *
அன்னநடையானவள் மனங்கலங்கினளோ *
மின்னற்கொடியானவளென்னசொன்னாள் *

ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம் நர்தனமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

என்னசொன்னாள்தம்பி-லக்ஷ்மணா-சீதை-ஏதுசொன்னாள்தம்பி *

அநுபல்லவி.

என்னசொன்னாள்தம்பி யெனதுஜானகிதானும் *
சொன்னவசனந்தன்னைச் சுகமாய்சொல்லுந்தம்பி (என்ன)

சரணங்கள்.

வர்ணவில்லைவளைத்துமணமும்புணர்ந்தபோது *
தம்பிக்கைசொன்னேனென்று நயந்துசொன்னாளோதம்பி ()
சிந்தைமிகக்கலங்க சீதைமெத்தவும்நொந்து *
யேங்கியழுதுருகியேகுமென்றாளோதம்பி (என்ன)
கோரவனத்தினிற் கன்னிசீதையாரும் *
கதறிநின்றமங்கை கலங்கினாளோதம்பி (என்ன)
ஆருமற்றபாவி யனாதியானேனென்று *
நேரயென்றபாரத்தைத் தீர்ப்பவரில்லையென்று (என்ன)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-தரு-கியால்-ஆதிதாளம்.

பல்லவி

பதைக்குதண்ணா மனம் பதைக்குதண்ணா சொல்ல
துடிக்குதண்ணா கொலை நடுக்குதண்ணா *

சரணங்கள்.

வேகுதையா நெஞ்சம் கோதையைவிட்டபின்பு *
சீதைபடுந்துயரம் ஆதியேசொல்லமாட்டார் (பதை



கண்ணினிற்காண்பதெப்போ என்றுயார்சீதைதன்னை *
புண்ணியமோவனத்தில்தின்னமாய்விடச்சொன்னீர் (பதை)
காட்டினில்மிருகத்துடன் தாழ்டிகமாயென்றுயாரும் *
வேஷிடைகள்படவேண்டாம் வீட்டுக்குப்போம்தம்பியென்றாள்
பட்டந்தரித்தபெண்ணை யிஷ்டமாய்விடச்சொன்னீரே *
பொட்டெனவேகாட்டில்விட்டுச்சுகடமாய்வந்தேனண்ணா (ப)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

என்னென்றுசொல்வேனண்ணா யென்மனம்பதைக்குதிப்போ *
அன்னமாஞ்சீதையாளை அடவியில்விட்டபோது *
தன்விதிதன்னைநொந்து சாமிக்கோர்சரணமென்று *
என்னையேபோகுமென்று யேங்கியேபுலம்புகின்றாள் *

(வ-ம்) அகோகேளும் அண்ணாவேகாட்டில்விட்டமாத்திரத்தில் பயனறிந்து தேவரீர்பாதத்திற்கும்வசிஷ்டருக்கும் மாமிமார் மூவரும் சரணஞ்சொல்லச்சொல்லி என்னைப் போகும்படியாய்ச் செலவுகொடுத்தாள் சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல் வசனம்.

அகோவாருந்தம்பிலட்சுமணா சீதையென்னமாயிருக்கிறாளோ யெனக்குத்தெரியச்சொல்லுந் தம்பிலட்சுமணா:

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுமாமி மிகவும்விசனத்துடன் மனம் நொந்திருக்கிறாள் சுவாமி.

ஸ்ரீராமர்-பிரலாபிக்கிற-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்

பல்லவி.

மனதுநொந்தாளோ யென்ஜானகி-மனதுநொந்தாளோ *

அநுபல்லவி,

மனதுமிகநொந்தாளோமங்கையாள்சீதையும் *
அங்கமுருகவேனும் அடவியில்விட்டேனென்று(மனது)

சரணங்கள்.

என்னைக்காணவருவாளோ யெனதுஜானகிசீதா *
உற்றதைச்சொல்லுந்தம்பி உயிர்விடுவேனென்றாளோ(மன)
விந்தையோவென்றவள் சிந்தையில்நைந்திட *
அந்தகாரமான அடவிதனிலேயவள் (மன)
மாதுசீதையாளை மணமும்புணர்ந்தபோது *
வாதுசொன்னராமர் வார்த்தைதப்பினாென்று (மன)
ஆதியிற்கௌசிகர் அடவுடன்கூடவே *
மேதினியில்நடந்து மிதிலைசென்றோமென்று (மன

இதுவும்-ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம்-ஆதிதாளம்

பல்லவி.

னகிபென்னே-ஜானகிநாயகி-நானென்னசெய்குவேன் அடி

கன்னலேமணி பொன்னலேஅடி *
அன்னமேயுனைப் பிரிந்தனடி (ஜானகி)
மருவியேசுகந் தருவையேஅடி *
அருவையேயுன்னை மறந்தனடி (ஜானகி)
காட்டிலிருப்பையோ உயிர்தரிப்பையோ இனி *
யெப்பிறப்பில் நானுன்னைக்காண்பனடி (ஜானகி)
போதும்போதும்-போதும்போதும்நீ *
பெண்பிறந்துபட்ட தொல்லைகள் (ஜானகி)

பின்னும்-ஸ்ரீராமர்-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்
எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

| | |
|---|---|
| கற்புடையசீதைதன்னை-தம்பி | அடாதம்பி |
| காட்டில்விட்டுவந்தபோது-தம்பி | அடாதம்பி |
| அங்கமுருகினளோ-தம்பி | அடாதம்பி |
| ஆவிதடுமாறினளோ-தம்பி | அடாதம்பி |
| கன்னிபெண்ஜானகியாள்-தம்பி | அடாதம்பி |
| கதறிப்புலம்புவாளோ-தம்பி | அடாதம்பி |
| பொன்மணியாள்சீதையாரும்-தம்பி | அடாதம்பி |
| புலம்பிதவிக்கிறளோ | அடாதம்பி |
| மாதுபெண்ஜானகியாள்-தம்பி | அடாதம்பி |
| மனதுருகிவாடினளோ-தம்பி | அடாதம்பி |
| நீதிநெறிபறித்ததம்பி | அடாதம்பி |
| நிந்தனைசெய்தாளோ-தம்பி | அடாதம்பி |
| மாதுருணம்வந்ததோடா-தம்பி | அடாதம்பி |
| வேறுபடச்செய்தாளோ-தம்பி | அடாதம்பி |

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

என்னதான்செய்வேன்தம்பி யேற்றிழையவளுக்காக *
இந்நிலத்தன்னிலுன்னோ ரியாவரும்நகைத்திடாரோ *
மின்னலாஞ்சீதையாளை வெகுதுயரத்தில்விட்டேன் *
வன்னமாய்லக்ஷ்மணாநீ வனமினிற்செல்லுவாயே *
(வ-ம்) அயோவாருந்தம்பி லட்சுமணா லோகநிந்தையை ஒருத்தரும் நிறுத்தக்கூடாது மானம்பெரிதேயல்லாமல் சீதைபெரிதல்ல நீ அந்தப்புறம்போம் தம்பிலட்சுமணா:

பொது-திபிதை,

போனவர்தம்மைநோக்கிப் புரிகுழற்சீதையாரும் *
கானகஞ்சென்றபின்பு கண்கள்நீராறுபாய *
மாநிலந்தனில்விழுந்து மயங்கியேமூர்ச்சையாகி *
வானவர்முனிவரெல்லாம் வந்துமேபார்த்திருந்தார் *
(பொது-வசனம்) அந்தச்சமயத்திற் சீதாதேவி அயோத்தி



நோக்கிப்போகிற லட்சுமணப்பெருமானைப்பார்த்து மூர்ச்சையாகி பூமியில்விழுந்ததைத் தேவஸ்திரிகளும் தேவர்களும் ஆகாயத்தில் நின்றுபார்த்து அவர்களும் விசனமடைய அப்போது மூர்ச்சைதெளிந்து புலம்புகிறவிதங்காண்க,

சீதை-பிரலாபிக்கிற கண்ணிகள்-இ-ம்-கண்டா-மீசுரதாளம்:

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லக்ஷ்மணரே *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகினிரோமைத்துனரே *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
வர்ணமதில்சூழயோத்திமாநகர்க்குச்சென்றீரையா *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
வர்ணமானதேரிலேற்றி வனந்தனிலேகொண்டுவந்து *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
இவ்வனத்திலென்னைவிட்டு யெவ்வனத்திற்போனீரையா *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
சொன்னதொருராமர்வார்த்தை துடுக்குடனேதள்ளாமல் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
என்னைநீரிவ்வனத்தி லினையவரோவிட்டுப்போனீர் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
விவேகமில்லாதென்னையிங்கே விட்டுநீர்போகுவீரோ *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
நலமுடனேகாட்டில்விட நன்மையேவுங்களுக்கு *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
என்னசெய்வேன்லக்ஷ்மணரேயிவ்வனத்தில்விட்டுப்போனீர் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
வன்னமதில்சூழயோத்தி மாநகர்க்குப்போனீரையா *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
கோசலைகமுசல்யாள்தேவி சுமித்திரைகைகேயியாளும் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
ஜெகம்புகழுமாமிமார்கள் சேதியுமறிகிலாரோ *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
பரிவுடனிருந்தவென்னைப் பரதேசிபோலாக்கிவிட்டீர் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
ஒருவருந்துணைகள்காணே னுபாயமுமறிகிலேனே *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
எரியுதையாவயிறுபற்றி யென்னசெய்வேன்ரகுநாதா *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *
இவ்வியவனத்திலென்னை யுண்மையாய்விடத்துணிந்தீர் *
லக்ஷ்மணா தம்பிமைத்துனா *

பாவிவையுமறுவாளால் மேவியேதுணித்திடாமல் *
லக்ஷ்மணு தம்பிமைத்துனு *
பாரவனந்தன்னிலென்னைப் பதைக்கவிட்டுப்போனீரையோ *
லக்ஷ்மணு தம்பிமைத்துனு *

சீதைசொல்-திபிதை,

அருவனந்தன்னில் விட்டு அலையவேசெய்தராமா *
கருணைதான்றப்பினீரோகாரணவிதியினவரோ *
மருமணஞ்செய்யும்போது வந்திடும்பெரியோரெல்லாம் *
இருதரம்வனத்திற்போவா யென்றுமேயுரைத்திட்டாரோ *

(வ-ம்) ஐயையோரகுநாயகரே என்பேரிற் கருணைதப்பினீரோ ஆதியிலேகலியாணஞ் செய்கிறபோது பெரியோர்களெல்லாமிரண்டுதரம் வனம்போவாயென்று வாழ்த்தினரோ ஐயையோநானும்மைவிட்டு யெப்படியிருந்திருப்பேன் சுவாமி,

சீதைசொல்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

ஆடகமாமண்டபமும் அரிவையர்கள்காணேனையோ *
கோடிஜனமுலையாள்பாங்கி கூட்டமுங்காணேனையோ *
பட்டணத்துராஜதேவி பாங்கியருங்காணேனையோ *
இட்டமின்றுவார்த்தைசொல்லுங் கிளிமொழியைக்காணேனையோ *
நாடுதானுஞ்சலியாதோயிந்த நவதிவார்த்தைகேட்டு *
காடுதான்சலித்தோயிப்போ கன்னியர்கள்நகையாரோ *
இன்னவபதிலென்னைச் சனகராஜன்பட்டணத்தில் *
வர்னவில்லொடித்து வந்துநீருமாலையிட்டீர் *
என்னயிதுகாரணமோ வென்னுடையதீவினையோ *
என்னையிந்தகாட்டில்விட்டு யோகினீரோஅயோத்தியில் *

சீதைசொல்-கொச்சகம்,

மன்னன்ரகுபதிதன் வார்த்தைதனைத்தள்ளாமல் *
என்னையிந்தக்காட்டில்விட்டு யேகினீரோமைத்துனரே *
பின்னையொருவரில்லை புலிகள்சிங்கம்வாழிடத்தே *
என்னமனந்துணிந்து யிருப்பேனோனிளையவரே *

(வ-ம் தம்பிமைத்துனு உங்களண்ணன்வார்த்தையைத்தள்ளாமல் என்னையிந்தவனத்தில் மிருகஜாதிகள் வாழப்பட்ட யிடமென்றறிந்தும் இரவிகாணமல் இருள்சூழ்ந்துக்கொண்டிருக்கிற வனத்தில்விட்டுப்போகமனம்வந்ததல்லவா இந்தவனத்திலே நானென்னமா இருக்கப்போகிறேன் ராகவா,

சீதைசொல்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-கன்டா-அடதாளம்,

உத்தனுக்கொருகுற்றம் ஒருநாளுஞ்செய்ததில்லைராமாராமா- இப்
பத்தன்மீதிற்குற்றம் மேதென்றறியேனே ராமராமா
எத்தநாளும்முத்தனின்னையடிமறவேனே ராமராமா இப்போ
வந்திருமெத்தன்மனத்துயரந்தன்னை ராமரா



உத்தனிருபதத்தை ஒருநாளுமறவேனே ராமராமாஇப்போ
யெந்தன்மாமிமாரை யெந்நாளுமறவேனே ராமராமா
மைந்தனில்லையென்று மாதவஞ்செய்தீரே ராமராமா - அந்த
மைந்தருடனென்னை வனத்தினில்விட்டீரே ராமராமா
மைந்தருண்டாச்சென்றுமன துகுளிர்ந்தேனேராமராமாஇப்பே
வனத்திலேவந்துநாய் மனதுதளர்ந்தேனேராமராமா
எந்தனுருயிரை யிவடத்தில்விடுவேனோ ராமராமா ஐயோ
சந்ததியாலேநான் சாகவுமொண்ணுதே ராமராமா
மைந்தனுடனே வனத்திலடிந்தாக்கால் ராமராமா - தேவர்
சுந்தரமாகிய சுவர்க்கமும்வாராதோ ராமராமா

சீதைசொல்-திபிதை,

என்னிடவிதியின்வன்மை யிப்படியிருந்ததையோ *
மன்னவர்பதியைவிட்டுவாழ்ந்திடும்மிருகங்களோடே *
மின்னியகாடுபார்க்கப் பிரியவும்விட்டராமா *
என்னிடவுயிரையிங்கே யிக்ஷணம்விடுவேனையா *

(வ-ம்) ஐயையோரகுநாயகரே என்விதியிப்படியிருந்தது இந்தவனத்தில்விட்ட குறைக்கு நானென்னசெய்யப் போகிறேன் என்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேனையா:

சீதைபுலம்பல் கண்ணிகள்-இ-ம் முகாரி-அடதாளம்,

என்னசெய்வேன்தெய்வமேஇனி ஏதுசெய்வேன்தெய்வமேராம
பொன்னின்பாதந்தனக்கேநான் என்னபிழைகள்செய்தேன ஐயோ
விதித்தவிதியிதுவோஅல்லாமல் விமலரருட்படியோ *
மதித்திடுங்காட்டிலேயான் இனிமயங்கித்தயங்குவேனோ *
தந்தைஜனகன்விட்டேனென் சாமிபதங்கள்விட்டேனே *
எந்தன்மாமியைவிட்டேன் காட்டிலேங்கிபுலம்பலுற்றேன் *
ப்ரதலட்சுமணனைவிட்டேன் இந்தப்பாரிலயோத்திவிட்டேன் *
திரள்கரிசேனைவிட்டேன் எந்தன்சேடியர்தன்னைவிட்டேன் *
அபையமபையுமையா எங்களாதிமறையவரே *
சமையமெனக்காக்க இதுவேனசாமிஅபையமையா *

சீதைசொல்-திபிதை

ஐயையோராமராமாயினையோனே அம்மைத்தாயேகவுசலையே *
பொய்யாமொழிசேர்பரதனே போதபாவஞ்செய்தேனோ *
மெய்யாயுயிரைவிடவென்றால் வேறோர்சதியுமெனக்கில்லை *
செய்யாகாரியங்காணுமிது ஜெனித்தகர்ப்பந்திதாமே *

(வ-ம்) ஹரிகரிராகவா தம்பிமைத்துனு பரதசத்துருக்கா என் மாமிமார்களே நானென்னபாவஞ் செய்தேன் இப்போது உயிரைவிடுவோமென்றால் வயிற்றிலே கெர்ப்பபாக்கியமிருக்கின்றது உயிரைவிட்டால் சொர்க்கப்பதவியில்லை ஆனபடியினால் என்னசெ

ய்வேன் நீங்கள் செய்யாதகாரியஞ் செய்துவிட்டீர்கள் நாங்கெ
ன்னசெய்வேன் என்னசெய்வேன் மாமிமார்களே

சீதைசொல்-திபிதை:

இந்தநல்வனத்தில்வாழு மியதுள்ளபுட்களேநான் *
சொந்தமாய்வனத்திலுள்ள துஷ்டமிருகங்களனைத்தும் *
சந்தமாய்நிறைந்தென்னோடுதனிவார்த்தைசொல்லொண்ணுதோ, *
வந்தனமிகவுஞ்செய்வேன வந்தெனனைக்காத்திடீரோ *

(வ-ம்) ஹரிகரிநான் பெண்சிவன் இந்தவனத்தில் தவிக்கிறேனே உங்களுக்குக்கொஞ்சமாகிலும் இரக்கமில்லையோ நீங்கள்வந்து எந்தனைக்காக்கொணுதோ நானென்னசெய்யப்போறேன்பட்சிகளே

சீதை-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பூஞ்சோலைக்குள்வீற்றிருக்கும் புள்ளிமான்பைங்கிளிகளா *
சாஞ்சாடியேநடக்கும் சாதகமாம்அன்னங்காளா *
பஞ்சவர்ணக்கிளிகளே பன்னகமேயிவ்வனத்தில் *
சஞ்சலமில்லாமலென்னைத் தற்காத்துக்கொள்வாரானோ *
வேதாளந்துற்கிகளே வீரியமாங்கழுகிகளே *
கண்டபேரண்டங்களே காண்டமிருகங்களே *
இருள்வனத்துமந்தகமே இருதலைபட்சிகளே *
பூதப்பசாசுகளே புருஷிமாமிருகங்களே *
ஸ்ரீராமர்தேவியானும் தெண்டகாரணத்தில்வந்தேன் *
வந்துநீங்களெந்தனோடே வார்த்தைகள்பேசொண்ணுதோ *
இருக்கிறபட்சிகளா யெந்தனையுங்காத்திடீரோ *
பரதசத்துருக்கரோ பாவியிங்கேயென்னசெய்வேன் *
மைத்துனரோலட்சுமணரோ வந்தவிதிக்கென்னசெய்வேன் *
அபிமானம்நீங்களென்னை அடைக்கலங்காத்திடீரோ *

பொதுதிபிதை

தலைதனையிரக்கங்கொண்டு ஜானகியிருக்கும்போது *
கலையுடன்காடிசிம்பங் கருப்புலியாளியோடும் *
பலபலபட்சியெல்லாம் பார்த்துமேகிட்டவந்து *
கலையெனுஞ்சிறகினாலே கதிரோனைமறைத்துதப்பா *

(வ-ம்)அந்தசமயத்தில் சீதாதேவிதாபந்திரியப்படஅந்தவனத்திலுள்ள மிருகஜாதிகளெல்லாம் தலையிறங்கிக் கொண்டு வெகுவிசாரத்துடன்சீதையம்மனைச் சுற்றிலுங்காவலாய்வெயிலதுவரயாமல் தங்களுடையசிறகினாலே காத்துக்கொண்டு வெகுதைரியவசனங்களைச் சொல்லிக்கொண்டிருக்கையில் சீதையம்மன்பிரலாபிக்கிறவிதங்காண்க:

சீதை-புலப்பல்-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

பெண்பிறந்ததோஷமையா போதவேதவிக்கிறேனே *
என்னபாவஞ்செய்தேனையோ யிவ்வனத்தில்வந்துழல *



வைப்பாட்சியாகினேனே வையகத்திலென்னைப்போலே *
பெண்பிறந்தபாக்கியமையோ பேருலகில்காணறியேன் *
மன்னர்குமாரனென்னை வன்காட்டில்தவிக்கவிட்டார் *
சொன்னதொருவார்த்தையெல்லாம் சொற்பனத்தில்காண்மறவேன் *
என்னசெய்வேரகுநாதா யேதுசெய்வேன்லட்சுமணரே *
பரதசத்துருக்கரே பாவியிங்கேயென்னசெய்வேன் *
மாமிமாரேயென்னசெய்வேன் வாழ்வாசேயேதுசெய்வேன் *
ஏதுசெய்வேனென்வயிற்றில் வேதனையாய்வந்துதையோ *

சீதைசொல்-கொச்சகம்,

ஐயையோவென்றயாம் ஆற்றுவாரொருவாரில்லைப் *
பையவேலட்சுமணரும் பதறிவேகாட்டில்விட்டார் *
தையலாள்காறெருந்தி தவிக்கவும்நீதியுண்டோ *
உய்யவோரிஷிகளுக்கு உரைப்பதுவுங்கேட்கிலையோ *

(வ-ம்) ஐயையோஇந்தவனத்தில் தவிக்கிறேனே என்துயரத்தை ஆற்றுவாருங்காரேனென் நான்பெண்சிவன் புலம்புகிறது தேவர்களும் ரிஷிகளுக்குங் கேழ்க்கவில்லையோ இப்படிபாதவிக் கவும் நீதியுண்டோ ரகவா,

பூமிதேவி-வருகிற-பொது-திபிதை,

பூமியிற்பிறந்தசீதை புலம்பிடும்வார்த்தைகேட்டு
நாமிதையில்லாமற்றான் சகிதியிற்பூமிதேவி
நாமினிலட்சுமிக்கு நலமுடனுரைக்கவென்று
வாமமாஞ்சீதைமுன்னே வந்துடன்கூறுவாளே

பூமிதேவி-வருகிற-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்,

பல்லவி.

வந்தாளே பூமிதேவி வனத்துக்குள்ளே *
வந்தாளே பூமிதேவி *

அநுபல்லவி.

வந்தாளேபூமாதேவி வனத்திற்சீதையைத்தேடி *
செந்தாமரைகள்போல் சிலம்பிகலகலென்ன (வந்தா)

சரணங்கள்,

நெற்றியிற்திலர்தப்பொட்டு சுற்றிலுமுக்காடுயிட்டு *
கைத்தலமேனகுலுக்க மெத்தனநடைநடந்து (வந்தா)
பட்டமாமுந்துவிர்க்கப் பலமலருஞ்செழிக்க *
எட்டுத்திசையுந்தாழ யென்றாய்சீதைமகிழ (வந்தா)
என்மகளேசீதையாரே யென்னத்திற்குப்புலம்புகின்றாய் *
முன்னாளிற்சந்திரவதி முறையிடலையோவென்று (வந்தா)

(வ-ம்)அகோவாருமம்மா நீயிந்தவனத்திலே என்ன காரணத்தினால் தாபத்திரியப்படுகிறாய் சொல்லுமம்மா,

சீதைசொல்-வசனம்,

நானுனக்கென்ன சொல்லப்போகிறேன் ரகுநாயகர் இந்தவனத்தில் என்னைக் காட்டில்விட்டார் நானென்ன செய்யப்போறேனம்மா,

பூமிதேவி-வசனம்,

ஆருக்கென்னமாயிருந்து விதியினுடைய வல்லமையாரை விட்டது சந்திரனிருக்குந்தமையந்தியும் வனத்திலே தாபத்திரியப்படவில்லையா நீயேன் விசாரப்படுகிறாய் உனக்குரிஷிகள்வந்து ஆதரவுசெய்வார்களம்மா நீ இருமம்மா சீதாநான்போய்வருகிறேனம்மா.

பொது-திபதை,

திருவுரைகமண்டலத்திதல் டென்பனைகரத்திற்கொண்டு *
மருமணிருத்திராட்சம் பன்னசீறெண்குலந்தன்ன *
அருந்தவமுனிவரென்றே யறையும்வால்மீகர்தானும் *
கருணையாஞ்சீதைபக்கல் கடிகியேவருகுவாரே *

வால்மீகர்-சிஷியருக்குச்சொல்வசனம்

அடாவாடாமவுனசிந்தாமணி ஞன்மார்க்கசிந்தாமணி நம்முடையவனத்தில் யாரோபெண் குரலாய்கேட்கின்றது போய்பார்த்துவருவோம் தெண்டுகமண்டலமெடுத்துக்கொண்டுவாரும் பிள்ளாய் ((சிஷியர்-வால்மீகர்க்குச்சொல்-வ-ம்) அப்படியேயெடுத்துக்கொண்டோம் சுவாமி,

வால்மீகர்வருகிற-கன்னிகள்-இ-ம்-மோகனம் மிசாதாளம்

திருமணித்தாழ்வடமுந் திருநாமவொளியுடன் *
அருமறைமாதவமுனி தோனினார் *
சடைமுடியதிரிவே சாஸ்திரத்தில்வல்லமுனி *
திடமுன்னகடையுடன்முனி தோனினார் *
விரித்தசடையடனேவென்புலித்தோல்மேலணிந்து *
வருத்தமாஞ்சீதைபக்கல் வந்துதோனினார் *

வால்மீகர்-சிஷர்களுக்குச்சொல்-வசனம்,

அடாவாடாமவுனசிந்தாமணி நாம்பூஜைபண்ணவேணும் திடமன்னடைக்கவனத்திற்குப்போய்புஷ்பங்கொண்டுவாரும்பிள்ளாய் அடாஞன்மார்க்கசிந்தாமணி நீமேலண்டை வனத்திற்குப்போய்புஷ்பங்கொண்டுவாரும்பிள்ளாய்,(அப்படியே செய்கிறோஞ்சுவாமி,)

வால்மீகர்சீதைக்குச்சொல்-திபதை,

ஆதிலட்சுமியைப்போல வனமத்தியென்றுமேயிங்கே *
சோதனைப்பார்க்கவேண்டி தாய்வனம்வந்திட்டாயோ *
மாதுமையாளோநீயும் வானவர்தேவிதானோ *
போதவேயெந்தனுக்குப் பொருந்துமுன்பதிற்சொல்வாய் *

(வ-ம்) அகோவாருந்தாயே நீயென்னகாரணத்தினால் இந்தவனத்தில் வந்தாய் உன்னைப்பார்த்தால் சூரியவமிசமும் போற்காணுது அதுவுமன்றி ஆதிலட்சுமியைப்போலுந்தோணுது சோதனைபார்க்கவந்தாயே நல்லது உன்பேரென்ன நீஆருடையதேவி எனக்குத் தெரியச் சொல்லுந்தாயே,



சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை.

ஆரென்றுகேட்டீரையா அறிகிலேனும்மையானும் *
பாரினிலயோத்தியாளும் பரப்பிரமசுரூபனை *
காரணதசரதற்குக் கருத்துள்ளகுமாரனை *
நாரணதேவிநானும் நளினமாஞ்சீதையென்பேர் *

(வ-ம்) அகோகேளுஞ்சுவாமி நான்ஜனகராஜனுடையபெண் என்பேர்சீதை நான்ரகுநாயகருடையதேவி இந்தஆரண்யத்தில் வந்திருக்கிறேன் தேவரீருடையநாமதேயம் அடியாளுக்குத்தெரியச் சொல்லுஞ்சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை,

கன்னிகைசீதையேநீ கருத்தினிலஞ்சவேண்டாம் *
வன்னமாம்வனத்தில்வாழும் வால்மீகரிஷியென்பேரம் *
முன்னியகாரணங்கள் முடிந்தல்லோ இராமனும் *
என்னகாரணத்தினாலே யிவ்வனம்விட்டாரம்மா *

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் நீமனத்தில்யோசனையும் விசாரப்படவேண்டாம் இந்தவனத்திலிருக்கப்பட்ட வால்மீகரிஷியென்பேர் முன்னால்செய்தவிதிப்பயன் இராமனும் ரகுநாயகர் இந்தவனத்தில் என்னகாரணத்தில் விட்டார் எனக்குத் தெரியச்சொல்லுமம்மா சீதாய்,

சீதை-வால்மீகருக்குச்சொல்,திபதை

துட்டனிராவணனென்னைச்சிறையில்வைத்து *
தோஷத்தாலவன்குலத்தைச்சுட்டிலங்கைப் *
பட்டணத்தைவிபீஷணர்க்குகல்கினனும் *
பரிவுடன்தீயினிற்குளித்துப்பலரும்போற்ற *
திட்டமுடனயோத்திவந்துவாழுநாளில் *
தேசத்திலேனிகழ்ந்துசெய்கிறார்களென்றே *
தொட்டமுடிராமனென்னைவனத்தில்விட்டார் *
சுவாமியுனைக்கண்டேனென்றுயிர்விண்டேனே *

(வ-ம்) அகோகேளுஞ்சுவாமி சண்டாளராவணன் என்னைச்சிறையெடுத்தற்கு அவன்குலத்தையும் அவனையுங்கருவறுத்து இலங்கையரசை விபீஷணர்க்குப் பட்டங்கட்டி நானும் அக்கினியிற் குளித்தெழுந்து அயோத்திவந்து அரசுசெய்து வரும் நாளையில் அதுகுற்றமாக உலகத்தில் வசைசொல்லுகிறார்களென்று ரகுநாயகரென்னைக் காட்டில்விட்டார் இவ்விடத்தில் நான்துயரப்பட்டுக்கொண்டிருக்கையில் தேவரீரைக்கண்டேன் உம்முடைய பாதாரவிந்தஞ் சரணஞ் சரணஞ் சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை,

சீதையேயுன்வயிற்றில் இருந்தவேதரித்தகெர்ப்பம் *
பூதலமெச்சவேதான் புத்திரனைப்பெற்று *
ஆதியாயயோத்தியெல்லாம் ஆளவேகடவிசிப்போ *
நீதில்லாஆசிரமத்திற் சீக்கிரம்வாருந்தாயே *

(வ-ம்) எழுந்திருமம்மாசீதாய் உன்வயிற்றில் தரித்கெர்ப்பம் அயோத்தியாபுரியை ஆளக்கடவது சுகமாயிருக்க வேணும் நம்முடைய ஆசிரமத்திற்குப்போவோம் வாருமம்மா,

சீதைசொல்-கண்ணிகள்-எதுகுலகாம்போதி-மிசிரதாளம்.

| | |
|---|---|
| அன்னைபிதாகுருதெய்வமும்நீயையா | முனிநாதா-இன்று |
| அவ்வடியேனும்மையடைக்கலங்காணையா | முனிநாதா |
| முன்னேயென்னபாவஞ்செய்துபிறந்தேனோ | முனிநாதா-இந்த |
| வர்னக்காடுதன்னில்வந்துதவித்தேனே | முனிநாதா |
| தசரதராமர்க்குத்தயைசற்றுமில்லாமல் | முனிநாதா-என்னை |
| விசமாதாய்வனந்தனில்விட்டேமாய்விட்டார் | முனிநாதா |
| யாதையாயிவ்வனம்வந்துதவித்தேனே | முனிநாதா-இந்தப் |
| பேதையைரட்சிக்கிற்புண்ணியமுண்டையா | முனிநாதா |
| நீதிதப்பிராமர்கெடுங்காட்டிலோட்டினார் | முனிநாதா-இப்போ |
| ஆதிமுனியேநீருமாதரிப்பீரென்றக்க | முனிநாதா |
| மாற்றநீசெக்தன்மனதுகலைவை | முனிநாதா-இதற்கு |
| மாறுவுபகாரமேதுமறியேனே | முனிநாதா |
| உற்றுறுதவின்முறைமையுள்ளவன்காணையா | முனிநாதா-இப்போ |
| சுற்றம்போல்வந்து துயரத்தைத்தீர்த்தீரே | முனிநாதா |
| வாராழிசூழுமயோத்தியைக்கண்டதுபோல் | முனிநாதா-இதற்கு |
| மாறுவுபகாரமேதுமறியேனே | முனிநாதா |

சீதைசொல்-திபதை.

மாதவமுனியேயெங்கள் வசனமேகேளுமையா *
சூதுபொல்ராமர்செய்த துயரத்தைத்தீர்த்தீரையா *
போதுகாலங்கள்வந்தால் பூவையரொருவரில்லை *
ஏதுதான்செய்வேனையா உனையடிக்கமலம்போற்றி *

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி எனக்குப்போதுகாலங்கள் வந்தால்யென்துணையொருவருமில்லையே இதற்கு நானென்னசெய்யப் போகிறேன் சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை.

நம்மிட ஆசிரமத்தில்நங்கைமாரனேகருண்டு *
செம்மையாயேவற்செய்வார்சீருடனிருப்பாயம்மா *
இம்மையில்வேணபாக்ய மிகுதனமழைப்பிப்பேனுன் *
செம்மையாயாசிரமத்திற் சீக்கிரம்போவோம்வாராய் *

(வசனம்) அகோவாருந்தாயே நம்முடைய ஆசிரமத்தில் ஏவற்



றொழில்செய்யவேணபேர்கன்னிமார்களுண்டு உனக்கொருகுறைவுமில்லை ஆசிரமம்போவோம் வாருமம்மா சீதாய்.

சீதையும்-வால்மீகரும்-ஆசிரமம்போகிற கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-மிசிரதாளம்,

முனிவருஞ்சீதையை முக்யமாயழைக்கவே
வனிதையராலாத்தியேந்த மாதுநடந்தாள்
வனத்திலில்வாழ்கின்ற வால்மீகாசிரமத்தில்
மனமகிழ்ந்துசீதையும் வந்துபுகுந்தாள்
வர்னமானபூவனமும் வால்மீகாசிரமத்தில்
கன்னியெனுஞ்சீதாதேவிகண்டுமகிழ்ந்தாள்
கானகமயில்போற்சீதை காரியமுனிவர்பின்னே
தேனெனுமொழியாள்சீதை சீருடன்வாராள்
கண்டவுடன்சீதையாரைக் கானகத்தில்வாழ்மாக்கள்
சென்றுமலர்தான்சொரிய செந்திருவாராள்
கன்றிழந்தபசுப்போலுங் கலங்கிப்வேனோதன்னில்
கண்ணெனவேவால்மீகரைக் கண்டுடன்வாராள்

பொது-திபதை.

வனத்தினிற்சீதைதானும் வையோகமாகவேதான்
கனத்ததோரிஷியோர்காமும் கருணையாய்வைத்திருந்தார்
மனத்தினிற்றுயரந்தீர்த்து மகாதேவியெனுஞ்சீதை
தினத்துடனாசிரமத்திற் சிறப்புறவிருந்தாளப்போ

வசனம்.

அந்தச்சமையத்தில் சீதைகாய்ப்பிருக்கையில் போதுகாலம்வந்து சகிக்கமாட்டாமல் தாபத்திரியப்படுகிறவிதங்காண்க

சீதைசொல்-கெர்ப்பத்தரு-இ-ம்ருபகம்-திரிபுடைதாளம்

மானினங்கள்மயிலினங்கள்வனத்திலுள்ளகுயிலினங்கள்
அன்னங்களேகிளிகளே யெந்தனடிவயிற்றைநோகுதையோ
பெண்பிறந்துபட்டகுறைப் போதுமையாயெந்தனுக்கு *
என்னசெய்வேனுருக்காணேன் எங்கணவாருகாதா *
சந்ததியைப்பெற்றெடுக்கால் சந்தோஷமாய்வருகுவீரோ *
எங்கடவோகாணேனே என்னுடையஅத்தையரே *
வந்துதையோவயிறுநோவு வாதைப்படயேதுசெய்வேன் *
சுந்தரமாம்ராகவரே கொஞ்சுகொஞ்சநோகுதையோ *
அத்தையரேயென்னசெய்வேன் அடிவயிற்றைநோகுதையோ *
கன்னியர்களாருமில்லை கட்டிப்பிடிப்பாராருமில்லை *
என்னரசேராமபத்திரா யேதுசெய்வேன்லட்சுமணரே *
பாதகரேசத்துருக்கனயென் பரிதாபந்தெரியாதோ *
ஆரிருந்துமென்னபலன் என் னடிவயிற்றைநோகுதையோ *
பூமியிற்பெண்பிறந்தது போதுமையாயெந்தனுக்கு *

(வ-ம்) அரிகரி என்னுடைய பாக்கியர்கள் அண்டையிலிருந்துவி

சிறிக்கொலவு உபசாரமென்னுவார்கள் இவ்விடத்தில் ஆனையுங்கா
ளேனும் என்னசெய்வேன் சுவாமி,

சீதைசொல்-திபதை,

குதுசேர்முலையாள்பாங்கி சுகத்துடனிருக்கக்காணேன் *
மாதவர்தேவிமார்கள் வந்துடனிருப்பார்காணேன் *
போதுகாலங்கள்போவு பொறுக்கவுமுடியவில்லை *
பாதகந்தீர்க்கராம பத்திரரேயருளில்வாரீர் *

வசனம்,

என்னண்டையில் யாருங்காணேன் போதுகாலம்வந்து பொறுக்க
ப்போகவில்லை என்னைப் பாதகமாக்கிவிட்டீரே நீராகிலும்அருகில்வாரு
ம் சுவாமி.

சீதைசொல்-கன்னிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

என்னசெய்வேனொருத்தியேதுசெய்வேனுருக்காணேன் *
வன்னாகுகாதவன்னை வுன்காட்டில்தயக்கவிட்டார் *
மன்னியதோர்கானகத்தில்லவிருமெத்தநோகுதையயோ
நித்திரைகள்பண்ணவில்லை நெஞ்சோமருகுதையோ
குற்றமில்லாகுபதிக்குக்கொம்பாவமேதுசெய்தேன்
அத்தையரேநீரும்வந்து ஆதரித்துசென்றுமம்மா

சீதைசொல்திபதை

என்னிடஅத்தையரே பெப்படிபொறுப்பேனம்மா
சென்றிடம்பரிவாரங்களொக்கனுமில்லையம்மா
உன்னிடஅருளேயன்றி வெயதுவருங்காணேனம்மா
மன்னியகாட்டிலுன்னை வந்துகீதனைசெய்வாயே

(வ-ம்) அகோவாருமம்மா மாமிமார்களே எப்படிபொறுப்பேனென்
னுடையதெல்லாங்குலைந்து இங்குவந்தலைகிறேனே உங்களுடைய
அருளேயல்லாமல் வேறேதுணைகாணேன் நீங்களாகிலும்வந்து எ
ன்னைக்காப்பீரம்மா மாமியார்களே.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை,

ஐயையோவொருகாலத்தில் ஆனையும்பிரிந்ததில்லை
உய்யவேவழிமெத்த வுனக்குதுயினியென்செய்வேன்
வையகவனத்தில்வாழு மாதவமுனியேஐயா
மெய்யதாபெற்றதுக்கு வேணதுமென்னசெய்வேன்

வசனம்,

அகோவாருமையா முனிசுரா யெனக்குக் கெர்ப்பவேதனைப்பொ
றுக்கப்போகவில்லை எனக்கு வேண்டியதற்கு யென்னசெய்யப்போறே
ன் சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை,

சுந்தரத்தாயே நீதான் சோகங்கள்படவேண்டாம்
கந்தனுருவினிலே கண்மணியைத்தென்றும்வாழ்வாய்
சிக்கையிற்றுயரம்வேண்டாம் சுகராசியர்போலே
அந்தமாய்வேதத்தியானம் ஆசனம்விடாதுவாடம்மா



(வ-ம்) அகோவாருமம்மா சீதாய் உனக்கு ஒருகுறைவும் வருவதில்
லை உனக்குவேண்டியதற்கு நான்முஸ்திப்பேறன் கப்பானவர்கட
ட்சத்தினால் மைந்தனைப்பெற்று அயோத்தியையரசாளப்போறாய் நீயு
ம்பார்ப்பாயம்மா, .

இதுவும்-வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை.

கானகம்வந்தோமென்று கருத்தினிலெஞ்சவேண்டாம்
வானவர்தேவிமார்கள் வந்துடனுதவிசெய்வார்
வேணதோர்பாக்கியங்கள் மிகுதியாயக்கவேணுமம்மா
ஞானமெய்யைப்புகுந்து சஞ்சலந்தவிராய்நீயே

(வ-ம்) அகோவாருமம்மா சீதாயிக்கவனத்திலே வந்தோமென்று தா
பந்திரியப்படவேண்டாம் இதோகன்னிமாரை யழைப்பிக்கிறேன் நீஅ
றையிலேபோயிருமம்மா.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை

சஞ்சலமெனக்கேனையா தானிலைகண்ட போதே
நெஞ்சினிற்றுயரந்தீர்ந்தே னிலக்கினிப்பரித்தேனையா
மிஞ்சியேகெர்ப்பந்தானும் வேதனையாகுதிப்போ
என்செய்வேன்முனிவரேயவ் விடர்தனையறிகிலேனே

(வ-ம்] அகோவாருஞ்சுவாமி முனிநாதரே எனக்கொருசஞ்சலமு மி
ல்லை தேவரீரைக்கண்டமாத்திரத்தில் இடறுகளெல்லாம் போய்விட்ட
து கெர்ப்பவேதனைசகிக்கவில்லை அதற்கென்னசெய்வேன்முனிநாதரே

பொது-திபதை,

மாவிடதேவியாரின் மனமதைத்தேறச்செய்து
வால்மீகரிஷியுமப்போ வன்மையாய்த்தியானஞ்செய்து
கோலமுங்குணமுமன்புங்கொண்டநற்கன்னிமாரை
சாலமாய்ச்சிருஷ்டிசெய்து சீதைமுன்பனுப்பினாரே

வசனம்,

அதேதெப்படியென்றால் சீதையின்மனதைத் திடப்படுத்தி வா
ல்மீகரிஷியானவர் நம்முடைய தியானதிருஷ்டியால் கன்னிமார்களை யு
ண்டாக்கி பணிவிடைசெய்ய சீதைமுன்பு அனுப்பினவைத்தலைக்காண்க.

ரிஷிகன்னிகள்-வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்

பல்லவி,

வந்தனரிஷிகன்னிகள்-வந்தனர்பாரீர் *

அநுபல்லவி.

மந்திரமிகுந்தரிஷி வால்மீகருளினாலே *
அந்தமுள்ளசேலைகட்டி விந்தையாடபொன்னூலையிட்டு(வந்த)

சரணங்கள்.

நெற்றியிற்றிலதப்பொட்டு மைத்துமேழுக்காடுமிட்டு
கைத்தலவளைகுலுங்க தத்தைகள்போலவேபசி (வந்த]

கொடியிடைதுவண்டிடவே அடிபின்னசிலம்பசைய
வடிவாளன்தனக்குஉங்க முடிதனில்மல்லிகைசூட்டி (வந்த)

வால்மிகர்-கன்னிமார்களுக்குச்சொல்-திபிதை,

சுந்தரக்கன்னிமாரே சொல்லுவேன்கேளிப்போ
அந்தக்கோள்ராமர்தேவி யானவள் துணையில்லாமல்
சிந்தையிற்றியங்குகின்றாள் சீக்கிரம்நீங்கள்சென்று
சந்துருஷ்டியாகப்பக்கஞ் சார்ந்தேவல்தனைச்செய்வீரே

(வ-ம்) அகோவாருங்கள் பெண்களே ஸ்ரீராமர்தேவியாகிய சீதாங்கனி துணையில்லாமல் சஞ்சலப்படுகின்றாள் ஆகையால்நீங்கள்போய்பாதுகாத்திருங்கள் பெண்களே (கன்னி-வ-ம்) அப்படியே செய்துவருகிறோஞ் சுவாமி,

கன்னிகள்-சீதைக்குச்சொல்-திபிதை

இந்தமாவனத்திமீது யேனம்மாபுலம்புகின்றாய்
மந்திரகன்னிகைகள் வால்மீகரனுப்பவந்தோம்
உந்தனுக்கருகேயாங்க ளொருமையாயிருக்கவல்லோ
சந்ததம்பெறுவாநீயுஞ் சஞ்சலம்விடுவாயம்மா

(வ-ம்) அகோவாருமம்மா சீதாய்இந்தவனத்தில்வந்தோமென்றுநீதாபத்திரியப்படுகிறாய் வால்மீகரனுப்பிய மந்திரகன்னிகளாகிய நாங்கள் வந்தோம் நீநல்லபுத்திரனைப்பெறுவாய் பயப்படவேண்டாம் பவ்வியசாலையறையே வாருமம்மாசீதாய்,

சீதை-கன்னிமார்களுக்குச்சொல்-கொச்சகம்,

மங்கையர்க்கரசியாரே வருந்துதேகெர்ப்பமது
சங்கையம்மெய்யுந் தளருதேயென்னசெய்வேன்
இங்குநீங்கட்களித்து யேதாவதோர்கதையைப்
பொங்கமுடன்சொன்னால் புண்ணியமுண்டுங்களுக்கே

(வ-ம்) அகோவாருங்களம்மா கன்னிமார்களே எனக்காருங் கெர்ப்பவேதனைச் சகிக்கக்கூடவில்லை ஏதாவதொருபுண்ணியகதைகளைச்சொல்லிக்கொண்டு வாருங்களம்மா

கன்னிமார்கள்சொல்-வசனம்,

நாங்கள்காட்டில் வாழப்பட்டவர்களாச்சுதே எங்களுக்கு என்னகதைதெரியும் நீசொன்னால்நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிறோமம்மா சீதாய் (சீ-வ-ம்)ஆனாற்சொலுகிறேன் கேளுங்களம்மா கன்னிமார்களே

சீதை-கன்னிமார்களுக்குச்சொல்-அகவல்-இ-ம்-மோகனம்,

அரக்கரிடவுபத்திரத்தால் அன்றுதேவர்முறைகள்கேட்டு *
தரணிதனில்யாவனுார் தசரதர்க்குப்பிள்ளையாகி *
ஸ்ரீராமருடன்கூட லெக்ஷ்மணரும்பரதருமாய் *
தாரியாணசத்துருக்கர் நான்குமையாகாஸ்வராகி *
வீட்டுருகும்விஸ்வாமித்திரர் வேள்விதன்னை முடிக்கவேண்டி *



நாடகையவதைசெய்து தனியில்வேள்விதன்னைமுடித்து *
அகலிகைதன்னைமங்கையாக்கி அட்சணமேமிதிலைசென்று *
மகிமையுடன்வில்வளைத்து மாலையிட்டுவருகையிலே *
பரசிராமர்கையின்வில்லை பாரியதோர்பலப்பறித்து *
சரிதமுடனேயோத்திவந்து சகமுடனேவாழ்கையிலே *
பிழைசேர்கைகேகியாலே பெரியவனம்போகையிலே *
குறையொடித்துஅனையுமித்தி தண்டகாவனஞ்சேர்த்தோம் *
பாரியதோர்லட்சுமணரும் பாங்குடனேகூடவர *
காரணமெய்ந்நெறுத்திருந்து கன்னைதனில்வந்துநின்று *
பர்ச்சரும்பின்னேவர பாங்குடனேகண்டுநின்று *
பெரியஅரசன்சேதிகேட்டு பெருந்தன்மைதான்முடிகி *
திராமப்பரதருக்குத் திருவடியைக்கொடுத்தனுப்பி *
காரணமாய்வந்துநின்ற கரதூஷணாக்கருவறுத்து *
சூர்ப்பனகைமூக்கரிந்து சுகித்திருக்கும்வேளைதன்னில் *
மாரீசனுமாறுப்வர வகைதனிலேஅட்சணமே *
அச்சுதனைத்தான்தேடி லட்சுமணரும்போகையிலே *
பிட்சையென்றுவந்திரேனான் பெரும்பாவிராவணனும் *
பன்னசாலையுடன் பதிவிருந்துபெயர்த்தெடுத்தான் *
அந்நிலையிற்சடாயுசாலும் அமர்பொருந்தும்வேளையிலே *
இறைகடலைத்தான்கடந்து இலங்கைசோகவனத்திலென்னைச் *
சிறையில்வைத்துராவணனுந் திரிசடையைக்காவல்வைத்தான் *
ராமருங்லட்சுமணரும் நல்வனத்திற்றேடிவந்தார் *
நேமஞ்சடாயுசொல்லத் திருவடியிற்சேர்த்துக்கொண்டார் *
வாலிதன்னைமார்பிளந்தார் வடிவுள்ளசுக்ரீவர்க்குத் *
கோலமுடன்கிஷ்கிந்தை கொற்றவனும்பட்டங்கட்டி *
அனுமானைத்தூதனுப்பி அன்றிலங்கைச்சுட்டெரித்து *
வனமாகச்சேதிசொல்லக் கடலிற்றாண்டிவானரங்கள் *
குப்புடனேராமர்சென்று கொடியவஞ்சகப்போர்புரிந்து *
கும்பகர்ணனதிகாயன் கூடியதோர்நீதி. இந்த *
சித்திரவதைசெய்தபின்பு சிரப்பத்துடையோனுஞ்சுரு *
சத்துருவாய்விபீஷணர்தம் நடையவிட்டயிர்நிலைபின் *
உத்தரதோருபாயமெல்லாம் உகமையுடன்ராமர்கேட்டு *
வெற்றியுள்ளராமபாணம் விட்டனவிராவணன்றன் *
அற்றவிழமார்பிளந்து அயிர்தனைக்கொண்டறிந்து *
நத்திவிழராவணனைத் தாம்வதைத்துவிபீஷணர்க்கு *
லங்கைதனைப்பட்டங்கட்டி ராச்சியத்தையாளுமென்று *
பொங்கமுடன்சிறைமீட்டு போதவேதிவளர்த்தி *
அக்கினியில்நான்முழுகி அபேர்த்துமிபின்வாழ்ந்திருந்தோம் *

துஞ்சோரேசவென்று திறமுடனேலட்சுமணரும் *
பெரியதோர்தேரிலேற்றிப்பரங்குடனேகொண்டுவந்து *
பயமாய்வனத்திலென்னை விட்டவரும்போனாரம்மா *
இடையகதையிதுதான் வந்திழையேகேட்டிடீரோதான் *
செய்வேனம்மமாரே இனியுங்கள் துணைதானே *

சீதை-கன்னிகளுக்குச்சொல்-வசனம்.

அம்மா கன்னிமார்களே எனக்காகுல் வயிறுநோவுபொறுக்கப்போகவில்லை என்தந்தையாகியவால்மீகருக்குச்சொல்லி ஒருமருத்துவச்சியை அழைப்பிக்கச்சொல்லுங்களம்மா (கன்-வ-ம்) அப்படியே செய்கிறோமம்மா.

கன்னியர்-வால்மீகருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ் சுவாமி நம்முடைய ஆசிரமத்தில் சீதையிக்குக் கெர்ப்பவேதனை தாளமாட்டாமல் தாபத்திரியப் படுகிறாள் இந்நேரம் ஒரு மருத்துவச்சியை அழைப்பிக்கவேணுஞ் சுவாமி.

வால்மீகர்-வசனம்-அப்படியே யிதோ அழைக்கிறேன்.

வால்மீகர்-சிஷிர்களுக்குச்சொல்-திபிதை.

பெருஞ்சிஷிரேயிந் நிமிஷத்திலிருவருந்தான் *
மையடியோரஞ்சென்று மருத்துவக்கிழவியைக்கண்டு *
குறுமுனிவருன்னை இட்சணமழைத்தாரென்று *
நலம்பெறவழைத்துக்கொண்டு நமதிடம்வருகுவீரே. *

(வ-ம்) அடாவாடா மவுனசிந்தாமணி அப்பா ஞான்மார்க்கசிந்தாமணி நம்முடைய மலையடிவாரத்துக்குப்போய் மருத்துவக்கிழவியை அதிகசீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வாருங்களடா.

(சி-வ-ம்) அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறோஞ் சுவாமி:

சிஷிர்-மருத்துவக்கிழவிக்குச்சொல்-வசனம்-அடிபாட்டி (என்னபேராண்டிகளே) வால்மீகமகாமுனி அழைத்துக்கொண்டுவரச்சொன்னார்வாடி (கி-வ-ம்) வால்நீண்டமுனியழைத்தால் நான்வருகிறதா (சி-வ-ம்) அடியடி அப்படியல்ல மகாதபோதனாகிய வால்மீகமகாரிஷியடி (கி-வ-ம்) அப்படியா யிதோவருகிறேன்.

பொது-திபிதை,

தரைத்திடுதலைபுமியினை நாடியகண்ணுவாயில் *
துரைத்திடுநீருங்கையில் துவன்றிடுதடியுநன்றாய்த் *
திரைத்திடுமெய்யும்பிறற் சேலையுங்கலையநீடிற் *
இரைத்திடுமிகமருத்வக் கிழவியுமிதோவந்தாளே *

(பொது வசனம்) அகோதெப்படியென்றால் மருத்துவத்தில் தேர்ந்த மலையடிவாரத்திலிருக்கப்பட்ட மருத்துவக்கிழவி வருகிறவிதம் காண்க.



மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கிழவிவந்தாளே மருத்துவக் கிழவிவந்தாளே

அநுபல்லவி.

அழைத்தசேதியை யறிருவோமென்று *
தழைத்தஆசிரமந்தன்னிற்போகவும் (கிழவி)

சரணங்கள்.

வனத்தில்வால்மீக-ரென்னையழைத்திடுங் *
கனத்தசேதியை-விதத்துடன்கேட்க *
தள்ளாதேதள்ளாதே கள்ளப்பசகளே *
துள்ளிவிழாதேநீர் மெள்ளநடவுங்கள் (கிழவி)
அஷ்டதிசையிலும் இஷ்டமாய்த்தேடினால் *
சட்டமுடனெனைப்போற் கெட்டியில்லையென்று *
ஆரப்போங்களடா-சோரப்பசகளே *
சேரவந்தீரானால்-சிறியடிப்பேனென்று (கிழவி)
சுக்கானும்வாயினில் மங்கிப்புகையெழ *
தொங்குமுலையிரண்டும்-அங்கனிலத்தில்விழ *
துஷ்டப்பயல்களே-யெட்டநின்றிடுங்கள் *
வெட்டியுதைத்திடுவேன்-பட்டிமக்களேயென்று (கிழ)

சிஷிர்-வால்மீகருக்குச்சொல்-வசனம்.

சுவாமி சுவாமி மருத்துவக்கிழவியை இதோ அழைத்துக்கொண்டுவந்தோ மையா.

வால்மீகர்-கிழவிக்குச்சொல்-திபிதை.

மருத்துவக்கிழவிகேளாய் மாயவன்ராமர்தேவி *
வருத்தமாய்க்கர்ப்பநோயின் வாதைகள்படமாட்டாமல் *
கருத்தினிற்றுயரமாகி கலங்கிறாளாசிரமத்தில் *
திருத்தமாய்ப்பார்த்தாயானாற் செம்பொனுமளிப்பேனே. *

(வ-ம்) அடிவாடி மருத்துவச்சி ஸ்ரீராமருடையதேவியாகிய சீதாங்கனிமெத்த வயிறுநோவு பொறுக்கமாட்டாமல் தவிக்கிறாள் சீக்கிரமாய்ப்போய் என்மனது சந்தோஷிம்படியாய்ப்பார்த்தையானால் உனக்குவேணது தருகிறேன் போய்ப் பத்திரமாய்ப்பாரடி மருத்துவச்சி.

மருத்துவச்சி. வால்மீகருக்குச்சொல்-வசனம்.

அப்படியே பார்க்கிறேனையா.

மருத்துவச்சிசொல்-வசனம்.

ஆரடி அம்மாகன்னிமாரே (ஏன்டியம்மா) என்னடியம்மா அழுதுகொண்டிருக்கிறாள்.

சீதைசொல்-வசனம்.

எனக்கு வயிறுநோவு பொறுக்கப்போகையில்லையே என்ன செய்யப்போறேனம்மா.

மருத்துவச்சிசொல்-வசனம்.

அம்மா-வொருநாளும் பிள்ளைபெறாதவளாச்சே தலைச்சனானபடியினாலே அப்படிதானிருக்கும் காக்கையேறின்கொம்பு அசையாதா கைப்பட்ட கண்ணுனது அழுகாதா அதுபோல வயிற்றில் பிள்ளையிருந்தால் உளைகளாமலுந் துளைக்காமலு மிருக்குமா பத்தைப்பெற்றவர்களெல்லாம் பயப்படும்போது தலைச்சன்பிள்ளைக்காரிக்குத் தைரியமிருக்குமா பயப்படாதே சும்மாயிரு இன்னஞ் சற்றுநேரத்துக்குள்ளே நின்றுபோம் பன்னசாலை அறையிலே போவோம் வாருமம்மா சீதாய்.

சீதைசொல்-கெர்ப்பவேதனை-கண்ணிகள்-இ-ம் எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

முதல்மாதந்தன்னிலேதா னுமம்மாதலை *
முழுகிக்குளித்தேனடி-அம்மமாரே *
அதுவேகுளியதாக நின்றதடி-கெர்ப்பம் *
அதிலேகருகூத்து-தம்மமாரே *
இரண்டாந்தான்மாதத்திலே யெந்தனுக்கே அம்மா *
நல்மசக்கைகொண்டதடி-அம்மமாரே *
கண்டபுளிமாங்கனியும் காட்டுக்களாக் *
காய்மேலிச்சைகொண்டனடி-அம்மமாரே *
மூன்றாந்தான்மாதத்திலே முகம்வெளுத்தேயெந்தன் *
முலைநுனிகறுத்ததடி-அம்மமாரே *
காணப்படாதசிறு நூல்போலிடையது *
காணபெருக்குதடி அம்மமாரே *
நாலாந்தான்மாதத்திலே யெந்தனுக்கேகெர்ப்பம் *
நாடிநிலைத்துமுலையிரண்டிலேயும் *
பாலாய்சுரந்துசுரந்துநுனியெழும்பி நுனி *
பசபசென்றூருச்சதடி-அம்மமாரே *
அஞ்சாந்தான்மாதத்திலே யெந்தனுக்கேகெர்ப்பம் *
அழகொழுகியேயிருக்குமேனியெல்லாம் *
மஞ்சள்நிறமாச்சுதடி யெந்தனுக்கே-சிறு *
வயிறுகனத்ததடி-அம்மமாரே *
ஆறுந்தான்மாதத்திலே பஞ்சணைக்கேநானும் *
அடியெடுத்தெடுத்துவைக்க யெந்தனுக்கே *
யெளுதிருந்ததடி மெள்ளமெள்ள நடந் *
திருக்கோனிருந்தோமடி-அம்மமாரே *



ஏழாந்தான்மாதத்திலே வசிஷ்டர்வந்தே-நாள்பார்த் *
தெனக்கு ஸ்ரீமந்தஞ்செய்தார்-அம்மமாரே *
தாயார்வரிசையெல்லா மெந்தனுக்கே-தந்தை *
தானமைத்திவைத்தாரடி-அம்மமாரே *
எட்டாந்தான்மாதத்திலேயெந்தனுக்கே-இந்த *
யிடையூறுவந்ததடி-அம்மமாரே *
கட்டளைசெய்தாதிமாரைக் காணேனடி-இந்தக் *
காட்டில்விட்டுவிட்டாரடி யெந்தனையுந்தான் *
ஒன்பதாமாதத்திலே பக்கத்துணையாயெனக் *
கொருவருமில்லையடி அம்மமாரே *
தென்பில்லாயிவ்வனத்தில் நான்றனித்தே இங்கே *
தேடிநின்றபெண்துணை-அம்மமாரே *
பத்தாந்தான்மாதமடி யிதுவெனக்கே-அம்மா *
பரதவிக்கவிட்டாரடி யென்னையுந்தான் *
வெற்றிரகுராமருக்கு நான்செய்தகுற்றமது *
மிப்படியிருந்ததடி-அம்மமாரே *

சீதைசொல்-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்:

பல்லவி

அண்டையில்வாருங்களம்மா கன்னிமாரே *
அண்டையில்வாருங்களம்மா *

அநுபல்லவி.

அண்டையில்வாருங்களம்மா- பண்டுநான்செய்தவினை-
தெண்டகாரண்யத்தில்-ஒண்டியாய்த்தவிக்கிறேன (அ)

சரணங்கள்.

தலையைச்சுழட்டுதேம்மா-தண்ணீர்-தாகமெடுக்குதம்மா *
தக்குமோயித்தவுயிர் நிற்குமோபோய்விடுமோ *
பக்குவமதாசதிகள்-ஒக்கத்துணையாய்க்காரும் (அண்)
ஏங்கும்வலிக்குதம்மா எந்த-வீடுப்புநோகுதம்மா *
யேதோயெனக்கு-வேதனையாகுதே *
மாதமோதிங்களெல்லாம்-ஆதரவாய்க்காரும் * (அண்)

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

அம்மமாரேதானென்னசெய்வேன்-என் *
னடிவயிற்றைப்பிடுங்கிநோகுதடி-அம் [illegible] *
தோழிமாரேநானென்னசெய்வேன்-என் [illegible] *
தொடைகளெல்லாம்பிடுங்கிநோகு [illegible] *

பாக்கிறானென்னசெய்வேன்-என் *
பக்கமெல்லாம்புண்ணாய்நோகுதடி-நல்ல *
உயிரின்மேலேயெனக்கு யிச்சையடி-அடி *
நாதிமாரேயிதுயென்னலச்சையடி *
இந்தகண்டமாத்திரந்தப்பிப் பிழைத்தேனானால்-நான் *
இவிபுருஷரோடேயென்றுஞ் சேரேனடி *

கிழவி-சிஷ்ர்களுக்குச்சொல்-திபதை:

அருளுடன்ஜானகிக்கு ஆனதோர்வயிற்றிற்கொப்பந் *
திரமுடன்றிங்கள்பத்துஞ் சென்றுபூரணமதாகி *
அரியமைந்தனைப்பயின்றா ளச்செய்திமுனிவருக்குப் *
பிரியசிஷ்ர்களேயோடி பொட்டெனச்சொல்லுவீரே. *

வசனம்.

அடாவாடா போராண்டி சிதையானவள் கோடிசூரியப் பிரகாசமாய் அந்த அயோத்தியையாளத்தக்கபுத்திரனைப்பெற்றாளென்று முனிவருக்குப்போய்ச் சொல்லுங்கள் சிஷ்ர்களே.

சிஷ்ர்கள்சொல்-வசனம்.

ஆ ஆ தம்பி பிறந்தானா சந்தோஷம் சந்தோஷம் கையிலெபெட்போம் முத்தங்கொடுப்போம் இனிகுறைவில்லை இதோவோடி எங்களையராகியவால்மீகரிஷிக்குச்சொல்லுவோம்அடிபாட்டி.

கிழவிசொல்-தரு-இ-ம்-முகாரி-சாபுதாளம்.

பல்லவி.

பிள்ளைபிறந்தது-நல்லதெள்ளுநட்மணிபோல-பிள்ளைபிறந்தது

அநுபல்லவி.

தெள்ளியரகுநாதர் தேவிதிருவயிற்றில் (பிள்ளை)

சரணங்கள்.

காலசைக்கிசைபசைக்கிக்-கண்கிபிட்டிவாய்திறந்து *
கோலமுலைப்பாலுண்ண கூவாகூவாவென்று (பிள்ளை)
கொஞ்சிக்குளிப்பாட்டிக்-கோதாட்டிசீராட்டி *
வஞ்சிசீதையின்திரு-வயிற்றிலுச்சிதமான (பிள்ளை)
நலபிள்ளையிதுவென்று-தாய்கிமார்கூறிடவே *
எல்லவருமோடிவந்து-யெடுத்தெடுத்துக்கொஞ்சிடவே (பிள்ளை)

சிஷர்-வால்மீகருக்குச்சொல்-திபதை.

பத்தரைமாத்துத்தங்கப் பசும்பொன்னையுருக்கிவார்த்த *
சித்திரப்பதுமைபோல ஸ்ரீராமமூர்த்தியாரின் *
பத்தினிசீதையாரும் பரிவுடனிப்போநல்ல *
புத்திரனைப்பெற்றாள்சுவாமி பொற்பாதம்போற்றிபோற்றி *



வசனம்.

அகோவாருஞ்சுவாமி எங்களம்மையாகிய சீதாங்கனியானவள் பத்தரைமாத்துத்தங்கம்போலொருபாலகனைப்பெற்றாள் சுவாமி

பொது-திபதை.

செந்திருவானசீதை சிறுவனைப்பயின்றாளென்று *
அந்துமிவாத்தியங்கள் அலங்கவேகாளமூத *
இந்திரர்மற்றுந்தேவ ரிஷிகளும்பார்த்திருக்க *
வந்துவால்மீகர்தாமும் வழங்குவார்வேணதெல்லாம் *

வால்மீகர்-சிஷர்களுக்குச்சொல்-வசனம்.

அடாவாடா மவுனசித்தாமணி அப்பா தர்மார்த்தசித்தாமணி ஒருசகடையின்பேரில் சர்க்கரையும்இரண்டுசகடையின்மீது விரையுங்கொண்டு வாரும்பிள்ளாய் (சிஷர்-வசனம்) அப்படியேயிதோவந்தோம் சுவாமி:

பொது-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சர்க்கரைவழங்கினாரையா - வால்மீகர்தானுஞ் - சர்க்கரைவழங்கினா [ரையா

அநுபல்லவி.

மைக்குழலாள்சீதையாரு மைந்தனைப்பயின்றாளென்று *
அக்குவலையங்கள்முற்றும் ஆனதோர்விரைகளீந்து (சர்க்)

சரணங்கள்.

ஜனகராஜன்மகளான ஜானகியென்னுமாட்டை *
தினகரன்போற்புத்திரனைச் சீர்பெறவேயீன்றதினால் (சர்க்)
நல்லோர்முதற்பெரியோ ரெல்லோர்களுந்தழைக்க *
வல்லசெங்கோற்பிடித்த மன்னவர்களுட்டிழைக்க (சர்க்)
வேதமுதற்கலைகள் விருப்பித்துதிகள்பண்ண *
மாதவர்களுவந்து மனதிற்களிப்புநண்ண (சர்க்)

சீதை-தாலாட்டு-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி.

ஆராரோ-ஆராரோ-ஆராரோ-ஆராரோ.

சீரானஅயோத்தியில்வாழ் தசரதனார்பேரனெனப் *
பேரானராமரிட பிரபலத்தால்வந்தபிள்ளாய் (ஆராரோ)
காரணத்தொலைக்கவென்று கனமாய்பதினையிட்டு *
ஆரண்யத்தன்னில் அமைந்தகுந்துவாரமிட்டு (ஆராரோ)
பூரணமாய்வால்மீகர் புண்ணியத்தால்வந்தபிள்ளை *
நாரணனார்பெற்றவிளக்க நன்மையுடன்வந்தபிள்ளை (ஆராரோ)

போதமிகுஞானப் பொக்கிஷமேமுக்கனியே *
வேதமேயென்னையென விளங்குவந்தகண்மணியே (ஆராரோ)

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை.

உயர்வொருமுனிவர்கோவே யளித்திடும்பாலனுக்கு *
வெயர்வன்குலத்தைப்போல விளங்கவேநாமகரணஞ் *
செய்யவும்வனுமைதன்னில் ஸ்ரீராமர்க்கறிகயாக *
வையகத்துறையவித்தை வண்மையைக்கற்பிப்பீரே *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே அடியாள்குமாரனுக்கு
ப்பெயர்கொடுத்துச் சகலவித்தைபுத்திகளையும் அனுக்கிரகஞ்செ
ய்யவேணுஞ் சுவாமி.

சீதை-வால்மீகருக்குச்சொல்-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

புத்திரர்க்குப்பேரிடவேணும்-சப்பிரமுடனே *
புத்திரர்க்குப்பேரிடவேணும் *

அநுபல்லவி.

வெற்றியுள்ளமுனிநாதா விளங்குங்கமலபாதா *
பத்தியுடன்பச்சரிசி பயறுதேங்காயெள்வழங்கி (புத்)

சரணங்கள்.

இத்திசையுரியோர்களு மற்றுமுள்ளபெரியோர்களும் *
சொற்றவரனைவருஞ்சுற்ற பத்தியுடனேநான்பெற்ற (புத்தி)
கோத்திரங்குடிவிளங்கப் பார்த்திருந்தபேர்க்கெல்லாம் *
நேத்தியாகச்சொர்க்கந்தோணும் சாஸ்திரத்திலுள்ளபடி (புத்தி)
வருமெதிரியின்றி யென்தன்வயிற்றுதித்த *
தவபலசுதனுக்குத் தகுமானயோகந்தன்னில் (புத்தி)

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை.

கன்னமேசேர்சீதாசேளாய் தாவுமிப்பாலனுக்கு *
உன்னுடையாய்ப்பெயருமிட்டு வொழுங்குடனவித்தைசொல்வ *
இன்னமயாய்நதிக்குச்சென்று சீக்கிரம்ஸ்நானஞ்செய்து *
வன்னமையாத்தீர்த்தப்புஷ்பம் வளமுடன்கொண்டுவாராய் *

வசனம்;

அகோவாருமம்மாசீதாய் உன்குமாரனுக்கு நாமகரணம் ப
ண்ணிவைப்போம் நீநதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து புஷ்பமு
ந் தீர்த்தமுங் கொண்டுவருவாயம்மா.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை.

ஆமையன்டபீச னடியிணைதுதிக்குமையா *
சாலவுநதிக்குச்செல்லு சலுதியில்ஸ்நானஞ்செய்து *



நலமாய்ப்புஷ்பத்தீர்த்தம் சீக்கிரங்கொண்டுவாரேன் *
பாலனைவிட்டுச்செல்வேன் பார்த்திருமுனிவர்கோவே. *

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி முனிநாதரே நான்நதிக்குப்போ
ய் ஸ்நானஞ்செய்து புஷ்பமுந் தீர்த்தமுங் கொண்டுவருகிறேன்
குமாரன் தொட்டிலிலிருக்கிறான் பார்த்துக்கொள்ளுஞ் சுவாமி.
(வால்மீகர்-வசனம்) அப்படியே நல்லதம்மா:

சீதை-கங்கைக்குப்போகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி
அடதாளம்.

பல்லவி.

கங்கைக்குப்போறாளே-சீதாதேவி-கங்கைக்குப்போறாளே *

அநுபல்லவி.

கங்கைக்குப்போறாளே மங்கைசீதாங்கனி *
தகிகக்குடங்கொண்டு மங்களமாகவே (கங்கை)

சரணங்கள்.

காலிற்சிலம்பு கலீல்கலீலென்னவே *
கானகமெங்கிலும் ஜோதிகள்மின்னவே (கங்கை)
வால்மீகராலேதன மகனுக்குப்பேரிட *
நலமாய்ச்சலப்புஷ்பஞ்சீராய்க்கொண்டுவரவே (க)
நீரிற்குளித்துநல்ல நியமநிஷ்டைமுடித்து *
பூரிப்புடனேராமர் பொற்பதத்தைத்துதித்து *

பொது-திபதை.

சீதையுநதிக்குப்போகச் சிறியேகுழந்தைதானப் *
போசமுச்சிதைகேட்டுப் பொட்டெனவோடிவந்து *
கர்தலாய்த்தூக்கிக்கொண்டு கடுகிற்போய்ப்புட்பந்திரும் *
தீர்த்தமாயெடுத்துக்கொண்டு தெரியுடன்வரவேபோறாள் *

(வ-ம்) அகோதெப்படியென்றால் சீதைநதிக்குப் போனபோ
து குமாரனழுகிறசத்தங்கேட்டு சீதையோடிவந்து குமாரனையெ
டுத்துக்கொண்டு புஷ்பமும் நீருங்கொண்டுவரப்போகிற விதங்
காண்க.

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-மிசிரதாளம்.

கங்கைநீராடக்கிளிமொழியாள்சீதை *
தங்கக்குடங்கொண்டு தண்ணிக்குப்போறாள் *
அங்கொருவானரந் தன்பிள்ளைதன்னை *
யணைத்துக்கொண்டு குருக்கோடவேகண்டு *
மகனையெடுத்து மார்பிலணைத்துக்கொண்டு *
கொஞ்சியேமகனே நீயுறிஞ்சியுண்ணடா *

சொந்தனமாட்டனே கோசலேசனே *
சோதனுடைராமரயோத்திக்ஷரனே *
விட்டுப்பிறந்தாதீ விற்றிருந்தாலடா *
வேணபேரிவேதியர் சாஸ்திரப்படிப்பார் *
காட்டிற்பிறக்கநீ வையிலேநிற்கொண்டேன் *
கண்மணியேநீ நீராடவாராய் *
கொப்பறையிற்றண்ணீர் வைத்துவிளாவி *
குளிப்பாட்டித்திருஷ்டி கழிப்பானேயாயி *
அப்பாவுன்னையர் அயோத்திக்குராமர் *
கர்ப்பூரஆலாத்தி யெடுப்பாரேசாமி *

பொது-வசனம்.

அந்தச்சமையத்தில் வால்மீகரெழுந்திருந்துகுழந்தையைத் தொட்டிலிற்காணுமல் வியசனப்படுகிற விதமெப்படியென்றால்.

வால்மீகர்சொல்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கையோகாணேனே-சீதாய்பிள்ளை -எங்கையோகாணேனே

அநுபல்லவி.

எங்கேயேகாணேனே-யிங்கேயிருந்தபிள்ளை *
மங்கைசீதைவந்தால்-வாய்விட்டழுவாளே (எங்)

சரணங்கள்.

யோகநிஷ்டையாலும் ஏகநிஷ்டைகள்செய்ய *
வேகக்காட்டுபுலி தாகங்கொண்டெடுத்ததோ (எங்)
பாகனூடாகவே பாலனைப்போக்கினேன் *
மீசுருசீதைவந்தால் ஏதென்றுசொல்லுவேன் (எங்)
சேந்தாமரைமுகத்தாள் வந்தால்பிசகுமனம் *
நொந்தழுதிடுவாளே எந்தவிதஞ்சொல்வேன் (எங்)

வால்மீகர்-சீஷர்களுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மனுசித்தாமணி அடா துன்மார்க்கசித்தாமணி சீதைபிள்ளையைத் தொட்டிலில் வளர்த்திவிட்டு நதிக்குப்போகுளே அந்தப்பிள்ளை எங்கேயோ காணுமே யென்ன சொல்லுங்கடா (மனுசித்தாமணிசொல்-வ-ம்) சுவாமி சுவாமி நான்கண்ணைமூடிக்கொண்டு காலைத்தூக்கிக்கொண்டுடனவியன்னி ன்வகையறிய யெண்ணங்கொண்டிருந்தேனே எனக்குத்தெரியாது சுவாமி (துன்மார்க்கன்சொல்-வசனம்) சுவாமி சுவாமி நான் தலைசீதாய் நீந்து சந்தரனைக் காணவென்று நவஞ்சபுரிந்திருந்தே



னே அறியமாட்டேன் சுவாமி (வால்மீகர்சொல்-வசனம்) அடடா நீங்கள் குருவுக்குமிஞ்சின சீஷர்களோ ஆம் ஆம் சுவாமி (வால்மீகர்சொல் வசனம்) அடா சீதைவந்தால் பிள்ளையெங்கேயென்று பிரலாபிக்கப்போகுளே அவள்வருமுன்பாகத், தேர்ப்பையிலும் ஒருபிள்ளையைச் சிருஷ்டிக்கவேணுமடா சீஷர்களே (சீ-வ-ம்) ஆம் ஆம் அப்படிதான்செய்யவேணுஞ்சுவாமி.

பொது திபதை.

பாலனுமிலாததாலே பரிகியேவிசாரமிட்டு *
சாலவேதருப்பைப்புல்லைத் தட்சணமத்திரித்துக் *
காலசூரியனைப்போல்தற்காத்திகோண்மைத்தனுக்கி *
ஆலியதொட்டில்வைத்து அலரவேயாட்டினரே *

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை.

மாதவாவேதயோர்ந்த மறையவாதவத்தோர்க்கெல்லாம் *
ஆதியேமுனியேயிதே ததிசயமறியேனையா *
சோதியாய்த்தொட்டில்மீது சுகமுடனிருந்தசேயைக் *
கோதைநானெடுத்துப்போனேன் குழந்தைவேறேது சொல்வீர்:

(வ-ம்) அகோவாருமையாமுனிநாதரே நானென்னுடைய குழந்தை அழுதசத்தங்கேட்டுவந்து எடுத்துக்கொண்டுபோனேன் இந்தக்குழந்தையேது ஆச்சரியமாயிருக்கிறது சொல்லுஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-வசனம்.

அகோவாருமம்மாசீதாய் நீகுமாரனையெடுத்துப்போனதைநா னறியமாட்டேன் தொட்டிலைநான்பார்க்கும்போது பிள்ளையில் லாதபடியினால் மந்திரத்தினாற்சிருஷ்டித்தேன் இதுவும்உன்னுடையபிள்ளைதானே எடுத்துக்கொள்ளுமம்மா சீதாய்.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபதை.

இதுவுமுன்பாக்யத்தாலே யென்னிடவந்தஷ்டதாலே *
சதுர்முகனருளினாலே தயவதாய்ப்பிழைக்கவேணும் *
அதவைகளாகமுன்னம் அன்புடனிவர்களுக்குப் *
பதமுடன்பேருமிட்டுப் பகருவீர்வித்தைதாமே *

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி இதுவும் முன்செய்தபாக்கியந்தான் இவர்களிருவரும் நன்றாய்ப்பிழைக்கவேணும் ஆகையால் வல்லமைபொருந் அப்படியாய் நாமதேயமமைத்து வித்தைபுத்திகளை கற்பிக்கவேணுஞ்சுவாமி.

பொது விருத்தம்.

குசலவனென்றுசொல்லிக் கூறியேபேருமிட்டுத் *
திசைபுகழ்சீதைதானுஞ் செல்வமேமிகுந்திபெற்று *
நிசமதாயயோத்தியாளும் நீலிலத்தரசரென்று *
இசைகொளுமுனிவர்நன்று யியம்பியட்சதைகளிட்டார் *

பொதுகன்னிகள்-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பாலகருடன்கூடி-இவர்கள்-பரிவாய்விளையாடி *
கோலிகெச்சாயாடி-இவர்கள்-குதித்துக்கைகொட்டாடி *
பட்டணத்துள்ளோரும் இவர்களைப் பார்த்துக்களிப்பாரும் *
கெட்டியிவர்கள்நன்று நல்ல கீர்த்தியடைவாரென்று *
சொல்லிமகிழ்வாரும் பார்த்துத் துதித்துப்புகழ்வாரும் *
வல்லவரென்பாரும் ராமரிடவடிவேயென்பாரும் *

சீதை-வால்மீகருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி என்குமாரர்களாகிய குசலவர்களுக்குஸ்ரீ ராமரைப்போல்நாலுவேதம்ஆறுசாஸ்திரம்வில்வித்தைகளெல்லாம் அனுக்கிரகஞ்செய்யவேணுஞ்சுவாமி (வால்மீகர்-வ-ம்) அப்படியே சொல்லிவைக்கிறேன் உன்குமாரர்களை வரச்சொல்லுமம்மா (சீ-வ-ம்) அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி.

சீதை-குசலவருக்குச்சொல்-வசனம்.

அப்பா என்கண்ணின்மணிகளே உங்களை ஐயராகிய வால்மீகர்வரச்சொன்னார் போங்களப்பா (குசலவர்கள் - வசனம்) அப்படியே போகின்றோந் தாயே.

குசலவர்-வருகிற-தரு-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி

வந்தானே-குசலன்-வந்தானே-லவன்-வந்தார் வாசிக்க வந்தாரே

அநுபல்லவி.

செந்தாமரையுதித்த-யென்றாட்சீதையாள்பெற்ற *
மைந்தரிருவரும் வால்மீகரிடத்தில் (வந்தானே)

சரணங்கள்.

நற்றவர்போற்றிய ராமருளிய *
சித்திரயாகசர் வெற்றியுடனே (வந்தானே)
சிற்றடியான சிறுவரிருவரும் *
சுத்தியவார்த்தை தாங்கள்பகர்ந்திடவே (வந்தானே)



கைத்தலந்தன்னிலே பத்தியாய்விலைபெற *
நித்தருகியமுனி பக்கமதனிலே (வந்தானே)

குசலவர்-வால்மீகருக்குச்சொல்-விருத்தம்.

மும்மலமொழித்துநின்ற முனிவரேபோற்றிபோற்றி *
தம்மைத்தானறிந்தஞான தத்துவப்பொருளேபோற்றி *
எம்மைநீரழைத்தசேதி யியம்புவீர்கருணைசெய்து *
செம்மையாயேவல்தன்னைச் சீருடன்செய்வோஞ்சுவாமி *

(வ-ம்) சரணஞ் சரணஞ்சுவாமி எங்களை யழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

வால்மீகர்-குசலவர்க்குச்சொல்-வசனம்.

வாழி வாழி குசலவர்களே உங்களுக்கு வித்தியாப்பியாசஞ்செய்யவேணும் எனவே செவிக்கருகாமையில் வாருங்களப்பா செல்வர்களே (குசலவர்-வ-ம்) அப்படியே யிதோவந்தோம் சுவாமி.

வால்மீகர்-குசலவர்க்குச்சொல் உபதேச ஓரடி-தரு இ-ம்-புந்நாகவராளி-மிச்ரதாளம்.

பல்லவி.

ஓமெனுமட்சரமொன்றே-அதில் - உயிரெழுத்தானதுமொன்றே

அநுபல்லவி.

சோமன்சடைதனிலேத்திபவர்த்தனுஞ் *
சுகமாகிநின்றதுந் தவமாமுயர்ந்ததும் (ஓமெனு)

சரணங்கள்.

மாயச்சமுசார வேலி-என்று *
மாலயன்பாதத்தைத் தேடி *
உபாயத்தாலேநீபாவத்தைநீக்கிடு *
உம்பர்கோன்பாதத்தை புன்மையாய்நோக்கிடு (ஓமெ)

வால்மீகர்-குசலவருக்குச்சொல்-வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே ஞானந்தெரிந்து கொண்டீர்களே இனி வில்வித்தைதைப்போதிக்கிறேன் இடதுகையில் வில்லைப் பிடித்துக்கொண்டுங்கள் வலதுகையில் அம்பைப் பிடித்துக்கொண்டுமன் வில்லைவளைத்து நாணியேற்றுங்கள் பார்ப்போம்.

இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்.

பல்லவி.

இடதுகையில்வில்லைப்பற்றி-அதில்-நீட்டிதொடுநாணியையேற்று

அநுபல்லவி.

சந்நிதியிலோர்ப்பை முநிகியேயெடுத்துக்கொள் *
சந்தராதிமார்புக்குச்சரியாசபார்த்துக்கொள் (இட)

சரணங்கள்.

மார்புக்குப்பாயிக்கும்நேரு-அதன் *
மத்தியிலேறி பாரு *
பாருக்குள்ராஜரை-அனுவாப்பார்த்திடு *
விராசிங்கரிபைவேல்கொண்டுயாட்டிடு (இட)

வால்மீகர்-குசலவருக்குசொல்-வசனம்.

தெரிந்துகொண்டீர்களா (குசலவர்-வம்)தெரிந்துக்கொண்ட
ோம்சுவாமி.

பொது திபிதை,

திறமுடன்சாஸ்திரங்கள் சிறுவருங்கற்றபின்பு *
அருள்புரிசீதைதானும் அகமகிழ்ந்திருக்குங்காலை *
அருணைவால்மீகர்தன்னைக் கருத்துடனழைக்கவேண்டி *
வருணராஜேந்திரன்றானு மகிழ்வுடன்வருகின்றானே *

(பொ-வசனம்)அகோதெப்படியென்றால் பாலகரிருவருங்கலை
க்கியானங்கள் கற்றபின்பு வருணராஜன் யாகஞ்செய்யவேணுமெ
று வால்மீகரை யழைக்க வருகிறவிதங்காண்க,

வருணராஜன்-வருகிற ஓரடிசரு-இ-ம்-புன்னாகவாரளி-ஆதிதாளம்.

பல்லவி.

வருணராஜன்வந்தான் உதார-வருணராஜன்வந்தான் *

அநுபல்லவி.

கருணைநிதியுதவி நந்திமிந்தகமாநிதி (வருண)

சரணங்கள்.

நவமணிமுடிதன்ன-நல்ல நானாபகிரிதிமின்ன *
கவலையில்ராஜனென்ன-உபரி-சதிமிருமிவனென்ன *
தவறில்லாதுநற்-றதியிறுதுதவிசெய் *
தாயாகவிசுவாச நாயகமென்றிடும் (வரு)

வருணன்-வால்மீகருக்குச்சொல் திபிதை.

நித்தரேமுனிவரேநமின் விஷ்டைசோறவோரேநீர் *
பத்தியாய்மனமகிழ்ந்து பாதாளவுலகந்தன்னில் *
உத்தமவேள்விதன்னை யுண்மையாய்ச்செய்துவைக்க *
சித்தரேவருகவேணுந் திருவுளமகிழ்ந்துதானே *



வசனம்.

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே பாதாளவுலகத்திலேயா
கஞ்செய்யவேணும் நீர்வந்து உம்முடையகையினால் அதை முடி
ப்பிக்கவேண்டும் எழுந்தருளுமுனிநாதரே.

வால்மீகர்-குசலவருக்குச்சொல்-திபிதை,

பாலரேகேளீரியானும் பாதாளலோகந்தன்னில் *
சிலமாய்வருணன்பின்போய்ச் சீக்கிரம்வருவேன்யானும் *
சோலைசேர்புவனத்தைச் சுற்றியேகாத்திருங்கள் *
சாலவேமலர்தனக்குச் சந்நிதியிலொருவன்போவீர் *

வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே வருணராஜன் பாதாளலோகத்
திலே யாகஞ்செய்யப்போகிறான் நாம்போகவேணும் நீங்களி
ருவரும் புவனத்தைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டிருங்கள்
தாயாருக்குப் புஷ்பம்வேணுமென்றால் ஒருவன்போய் கொண்டு
வந்துகொடுங்கள் பிள்ளாய் (குசலவர்-வ-ம்) அப்படியே செய்கி
றோஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபிதை.

அன்னையேசீதாய்நீயும் அஞ்சிடவேண்டாமம்மா *
என்னிடஆச்ரமத்தி லிருந்திடாய்மைந்தரோடும் *
வன்னமாயாகஞ்செய்ய வருணன்பின்சென்றியானும் *
தன்னையுடனேயிங்கு சந்நிதியில்வருவேனம்மா *

(வசனம்) அகோவாருமம்மாசீதாய் வருணராஜன் யாகஞ்செய்
யவேணுமென்று என்னையழைக்கிறான் நான்போய்வருகிறேன் இ
ங்கேபாலகரும் நீயுஞ் சுகமாயிருங்கள் நான்சந்நிதியில்வந்து சே
ருகிறேனம்மா (சீதை-வ-ம்) அப்படியே போய்வாருஞ்சுவாமி,

பொது திபிதை.

உயர்முனியும்பாதாளத் தலைனிற்சென்றபின்பு *
வீய்ல்திறையயோத்திவாழு மன்னனும்புகமாக *
இயலுடனஸ்வமேத யாகமேபண்ணவேண்டி *
நயமுடன்றம்பிமார்க்கு நவில்வரப்போகுதானே. *

(பொதுவசனம்) அந்தச்சமயத்திலே வருணராஜன்யாகத்திற்
கு வால்மீகர்போனபிறகு அயோத்தியில் ரகுநாயகர் வசிஷ்டரை
யழைப்பிக்கிற விதங்காண்க.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல் திபிதை.

படைநிலைக்கடற்குந்தியம் புகழ்ந்திடவேயிளங்கும் *
அடல்கொளுங்கிடமனுராம் அஸ்வயாகந்தனைச்செய்ய *

திடமுடன்குலப்விளங்கச் சீக்கிரஞ்சென் [illegible] *
சடைமுடிவசிஷ்டர்தப்மைத் தட்சணம் [illegible] *
(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணரே [illegible] குருவா
கிய வசிஷ்டரை அழைத்துவாரும்பிள்ளாய் (லட்சுமணர்-வ-ம்) அ
ப்படியே யழைத்துவருகிறேன அண்ணாவே.

லட்சுமணர் வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி வசிஷ்டமகா [illegible] சரணம் சரண
ம் தங்களை ஸ்ரீராமர் வரச்சொன்னார்சுவாமி (வசி-வ-ம்) அதற்கேபோ
வோம் வாரும் லட்சுமணரே.

வசிஷ்டர்வருகிற பொழுது [illegible].

கரத்திலிற்றங்கு [illegible] காவிவேஷ [illegible] *
திருத்தமாய்த்தர்ப்பைபுல்லிற் செய [illegible] *
அருந்தியாய்ரவிகுலத்திற் கல்லைலா [illegible] *
வருத்தமில்வசிஷ்டர்தாமு மகிழ்வுடன் [illegible] *
(வ-ம்) வாரும்பிள்ளாய் சிஷியர் [illegible] த்துக்
கொள்ளும்பிள்ளாய் அப்படியே [illegible] சுவாமி:

வசிஷ்டர்வருகிற-கண்ணிகள் இ-ம்-ஸ்ரீ [illegible]

நரைத்ததாடியும்விரித்தசடையும் [illegible] *
வருத்தமானநடையுடனே வசிஷ்டரும் [illegible] *
பருத்தபுஸ்தகங்கமண்டலமும் பாத [illegible] *
தரித்தநாமப்பூணூலும் சதிராணமா [illegible] (தாத்த)
சோதியானயாதுபாகர் பாதமேமனதில் [illegible] *
ஆதியானவேதமுனிவந் தருளினராய (தாத்த)

வசிஷ்டர் கட்டியக்காரனுக்குச்சொல் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா [illegible] டனே வ
சிஷ்டமகாமுனிவர் வந்திருக்கிறாரென்று சொல்லும்பிள்ளாய்(கட்
டியன்-வசனம்) அப்படியே சொல்லுகிறேன் [illegible].

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி தம்முடைய ஆசாரியரான வசிஷ்டமகா
முனிவர்வந்திருக்கிறார்சுவாமி (ஸ்ரீராமர்-வசனம்) மகாபாக்கியம்
கட்டியக்காரா.

ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம்-[illegible].

பல்லவி.

தெரிசனஞ்செய்வோம் வாருந்-[illegible] *
தெரிசனஞ்செய்வோம்வாரும் *



சரணங்கள்.

[illegible] அழகான [illegible] மண்டலமும் *
[illegible] வசிஷ்டர்ருபத்தில் (தெரி)
நரைத்தசடைமுடியும் அழகான நரீனத்திருமண்காப்பும் *
பருத்தமிருதோளும் தம்பியாரே பங்கானசெங்கைகளும்(தெ)
அருவேதிருபத்தொரு தலை முறைக்கும்பதவிதருந்
[illegible] வசிஷ்டர்-திருவடிதனைப்பணிந்து (தெரி)

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி(வ-வ-ம்) வாழிவாழி எழுந்திரும்பிள்ளாய்.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா-என்னையழைப்பித்தகா
ரியஞ்சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-திபதை.

அத்தனத்குருவேகேளீர் [illegible] யாகம் *
உத்தனத்திருக்கரத்தா லுங்கமையாம்முடிக்கவேண்டு *
சந்தமாயதற்குவேண சாமக்கிரிகைகளைத்தாங்கள் *
தொந்தமாய்ச்சொன்னாலிங்கே சுருக்கினிற்றருவிப்பேனே *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி வசிஷ்டரே- அசுவயாகஞ் செய்யவே
ணும் அதற்குவேண்டிய சாமக்கிரிகைகளைச்சொன்னால் அழைப்பி
க்கிறேன் உமதுகையினால் முடிப்பிக்கவேணுஞ்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

உன்னிதேவியின்றி யுயர்ந்திடும்யாகமிப்போ *
மன்னவாமுடிந்திடாது மகிழ்வுடன்முடித்தோர்மாருள் *
என்னதானசொல்லார்முத்தோ ரியல்புல்லவிக்ஷணத்தில் *
கன்னியாஞ்சீதைதன்னைக் கனிவுடனழைப்பிப்பாயே *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா அசுவயாகஞ் செய்ய
வேணுமென்றால் உன்தேவியல்லாமல் முடியாது ஆகையால் சீ
தையை அழைப்பியும்பிள்ளாய் ராமபத்திரா.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-திபதை.

அடவிபோஞ்சீதைதன்னை யழையுமென்றீரேயையா *
படர்மதிமன்னரென்னைப்போதவேநகைத்திடாரோ *
மடமயிற்சீதையைப்போல் வள்முடன்பொன்னாற்செய்து *
திடமுடன்வேள்விதன்னைத் தேவரீர்முடித்திடுமே. *

[illegible]

வசனம்.

அஹோவருங்கவாமி காயகஞ்செய்ற சிதையை நானடைப் பேனெயாகில் நாட்டிலுள்ளாராஜாக்கள்தகையார்களாஜூனபடியா ல் சீதையைப்போல் உருவப்பொன்னுற்செய்துவைத்து யாகத் தை நிறைவேற்றிவையுங்கவமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

எங்கணும்புகழ்படைத்த யிராமரேசொல்லக்கேளீர் *
துங்கமாத்தாகமொன்று துரிதத்தில்வேறுமிப்போ *
இங்கதுகாறுமில்லை யெப்படிவேற்விசெய்வோம் *
உங்களால்முடியாதப்பா வுற்றதுசொன்னேன்பாராய் *

வசனம்.

அஹோவாரும் பிள்ளாய் ராமபத்திராஇத்தயாகத்திற்கு ஒரு டாவிவேனும் அதிகிடையாது ஆகையால் அருமையாயிருக்கின் றது ராமபத்திரா (ஸ்ரீ-வ-ம்) அப்படியாஇதோஅழைக்கிறேனசுவா மி (வசி-வ-ம்) ஆனால் நம்முடைய அயோத்தியாபுரி பட்டணமுழு தும் அலங்கிர்தஞ் செய்யச்சொல்லுப்பிள்ளாய் ராமபத்திரரே,

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்,

அஹோவாருந்தம்பி லட்சுமணாநாம் அவ்வியாகஞ்செய்யவே ணும் அயோத்தியாபுரிபட்டணத்து வீதிகளெல்லாம் அலங்காரம் பண்ணத்திட்டஞ்செய்புந்தம்பி லட்சுமண (லட்-வ-ம்) அப்படி யேசெய்துவைக்கிறேன் அண்ணவே,

லட்சுமணர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபிதை.

படைத்தலைவீரர்தம்மைப் பகுத்திருபுறமாய்நீக்கிக் *
கடைத்தலைவாயால்திற்கும் கட்டியக்காரரேகளாய் *
வடித்தயிபுயோத்திமுழுது மலங்கிர்தஞ்செய்தபின்னும் *
திடத்துடனெப்பாருவந்து சோபிக்கவிச்சைசெய்வாய். *

வசனம்.

அஹோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா ரகுநாயகர்அவ்வியா கம் பண்ணவேணுமென்கப்போகிறாரென்று நம்முடைய அயோத்தியா புரிபட்டணமும், மற்றுமுண்டான தேசாதிதேசமும் அதிபட்ட ணணி நம்முடைய பட்டணவீதிகளெல்லாம்அலங்கிர்தம்பண்ணவி ருபிள்ளைமுதல் ஆபுகமெடுத்துக்கொண்டு வரச்சொல்லித் திட்ட ம்பண்ணும்பிள்ளாய் கட்டியக்காரா,

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே செய்துவைக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன் அயோத்தியாபுரியிலிருக்கப்பட்டவர்களுக்குத் திட்டம்பண்ணுகிற-வசனம்.

அஹோவாருங்கள் அயோத்தியாபுரிபட்டணத்துச்சனங்களே,



நம்முடையரகுநாயகரானவர் என்னமோயாகஞ் செய்யப்போ றாராம் நீங்களெல்லோரும் பொழுதுவிடிகிறதற்குள்ளாகத் தெ ருக்களெல்லாம் அலங்காரஞ்செய்து பெண்கள் முதல் மற்றவர்க ளெல்லாம் ஓடிப்போய்கள்சொன்னேன் சொன்னேன் ஆ ஆ ஆ ப்போகவேண்டாம் நம்முடைய ரகுநாயகர் யாகத்திற்குவரவே ண்டியது.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அப்படியே அயோத்தியாபுரிபட்டணத்தாருக்குந் திட்டம்ப ண்ணி வந்தேன்சுவாமி.

பொது-திபிதை.

வள்ளலாமுனிபுங்கவர்த்த வாய்மைமையகேட்டிராமர் *
உள்ளதோர்குதிரையெல்லாமுடன்வரவழைப்பித்து *
வெள்ளையாமிட்சணத்தில் விராமுழுதுள்ளதாகத் *
தெள்ளியயாகத்திற்குத் தேடியேகொண்டுவந்தார். *

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அஹோவாருஞ்சுவாமி, நாம்யாகஞ்செய்கிறதற்கு அசுவமுள் ளதாய் சவுரியமுள்ளதாய் தேகத்தில் குறைவில்லாததாய் முகக் குள்ளதாய் நாலுகாலும் நடுதெருவும் வெள்ளையாய் செவிமு லையாய்வையாய் இப்பேர்ப்பட்ட பஞ்சகல்யாணபரவி கொண்டு வந்தோம் இதுயாகஞ்செய்யலாமோ யாருங்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

லட்சணமுள்ளதிந்த நல்முன்னமேகேட்டதாலும் *
இட்சணந்திக்காரிக்குப் பொறுப்பட்டுக்கட்டி *
தெட்சணங்கிழக்குமேற்கு திக்கினிலெட்டிப்பார்க்க *
நட்சகனுஞ்சத்துருக்கன் நடத்தியனுப்புவாயே. *

வசனம்.

அஹோவாரும்பிள்ளாய் ராமபத்திரா இந்தப்புரவி லட்சண முள்ளது இது யாகத்திற்கு தேறுந்தான் இதனைத்தியைஸ்காரித்து வீரபட்டமுங்கட்டி இதன் பின்னே துணைநாடுதாதிகளையும் கூட்டி நாற்றிக்கும்னுப்பி இதற்கு நாயகனுக உம்முடையதம்பி சத்துரு க்கனை யனுப்பிப்பார்த்து வரச்சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்சொல் வசனம்.

அப்படியேசெய்கிறேன் சுவாமி.

ஸ்ரீராமர்-சத்துருக்கனுக்குச்சொல் வசனம்.

அஹோவாருந்தம்பி சத்துருக்கனு ராமசொன்னபடியே யெரு ஷமாய்தம்பி (சத்-வ-ம்) அப்படியேசெய்துவைக்கிறேன் அண்ணாவே.

அறிக்கை.

இசைறும்பத்தாறுதேசத் தரசர்களுக்கும் அறிவிப்பதுயா தெனில்; அயோத்தியாபுரியை அரசுசெய்கின்ற ஸ்ரீராமபிரான் அசுவமேதயாகஞ்செய்கின்ற நிமித்தியார்த்தமாகத் தேசியின்மேல் சத்துருக்கரன் நாளர்வேதசாஸ்திரன் ரணரங்கசூரன் சத்துருக்கனவருகிறான் வல்லமையுள்ளவர்களானால் தேசியைப்பிடித்துக் கட்டியுத்தஞ்செய்து வெற்றியடையலாம் அப்படியுத்தஞ் செய்யச் சக்தியற்றவர்களானால் கப்பங்கட்ட வேண்டியது என்றெழுதி நமதுதேசியின் (லலாடத்திற்) கட்டுத்தம்பி சத்துருக்கா.

சத்துருக்கர்-வசனம்.

அப்படியே தங்களுத்தாரப்படி யெழுதிக்கட்டினேன் சுவாமி.

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல்-திபதை.

தம்பிசத்துருக்காநீதான் சதுரங்கசேனையோடும் *
செம்மையாய்வாசியோசை சிறந்திடச்சென்றேயிந்த *
அம்புவிதாஇலிருக்கும் அவ்வத்தையதிபப்பண்ணி *
சம்பிரமதாகயிங்கு சதுதியில்வருகுவாயே *

வசனம்.

அகோகேளுந்தம்பி சத்துருக்கா இந்தக்குதிரையைச்சிங்காரித்து வீரபட்டங்கட்டி ரதகஜதுரகபதாதிகளோயுங்கூட்டிக்கொண்டு நீயுஞ்சென்று நான்குதிக்கும் அதிபப்பண்ணிவைத்துவாருந்தம்பி சத்துருக்கா (சத்துருக்கர்-வ-ம்) அப்படியேசெய்துவருகிறேன் அண்ணாவே.

சத்துருக்கர்-இராஜர்களுக்குச்சொல்-திபதை

தன்னுமன்னரோயிச் சதிருணதுரகந்தன்னை *
வல்லமையாய்லங்கரித்து வீரபட்டங்கட்டிவைத்தேன் *
மன்னுமவீரசூர பண்வவிரவாளுஇும் *
இன்னுமயினைப்பிடித்தாற் ஜெயம்பெறச்சண்டைசெய்வீர் *

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே யாராகிலுஞ் சூராதிசூரர்கள் தம்முடைய குதிரையைப்பிடித்துக்கட்டி வந்தெதிர்த்தால் நீங்களும் சண்டைசெய்யுங்கள் ராஜாக்களே:

ராஜர்கள்-வசனம்-அப்படியேசெய்கிறோமையா

குதிரைபுறப்படுகிற-தரு-இ-ம்- எதுகுலகாம்போதி - சாபுதாளம்!

பல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார்காண் -அயோத்திராமர்
வீரபட்டங்கட்டிவிட்டார்காண் *

அநுபல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார் சூரமுன்வதேசிதன்னை *
பாரிலுள்ளோர்களெதிர்த்தாற் காரியமுடிப்பேனென்று (வீர)



சரணங்கள்.

பேரிகைமுரசுவிம்ம காரியமுடிக்குஞ்செய்ய *
வாரிபோலிடிமுழங்க பாரிலுள்ளோர்மயங்க (வீர)
வெற்றியுள்ளராஜாக்களேர் இந்தவத்தினை வந்தெதிர்த்தால் *
சுத்தமாகவெட்டிவெல்லென்று பத்திஜெயங்கொள்வனென்று (வீர)
வெய்யவன்குலம்விளங்கச் செய்யவே அயோத்திராமர் *
வையகமதியவிட்டபோ வையவேதுரகத்திற்கு (வீர)

சத்துருக்கர்-இராஜர்களுக்குச்சொல்-திபதை.

வாருடன்குதிரைதன்னை வல்லமையாய்நடத்திக்கொண்டு *
போருவீர்நான்குதிக்கும் புகழுடனேவருவேனியானும் *
சாதகமுள்ளோரேனும் க்ஷத்திரியராஜரேனும் *
வேகமாய்வந்தெதிர்த்தால் விருதுகள்பறிப்பேனே. *

வசனம்.

அகோகேளுங்கள் ராஜாக்களே வீரியமுள்ளராஜாக்கள் வந்தெதிர்த்தால் அவர்களை நான் சம்மானிக்கிறதில்லை விருதுகளைப் பறித்துக்கொண்டு துறத்துகிறேன் பாருங்கள் ராஜாக்களே.

சத்துருக்கர்-வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

வந்தானே-சத்துருக்கன்-வாஜகூடவே *

அநுபல்லவி.

விந்தையாண்புரவிதன்னை-வீரபட்டங்கட்டிவிட்டு (வந்)

சரணங்கள்.

சிந்தையில்மகிழ்ச்சிபொங்கச் சேனைபுரப்பரிகளுடன் *
வந்தெதிர்த்தமன்னவனை வாளுடனேகேற்றுவேனென்று (வ)
சேனைக்கதிகாரிவந்து தொண்டுசொல்லவேகமாகி *
நானேராஜனென்றுலம்போல ராஜரொருவரில்லையென்று (வ)
நித்தநித்தஞ்சுத்தமான வெற்றியெனுங்கவம்விளங்க *
பத்தியானநீதிபிசகாது பாபவுங்குலம்விளங்க (வந்தா)
இந்தலத்திற்பேர்பெற்றவன் எவனேனும்புரவிதன்னை *
தெத்திதனில்வீரபட்டம் நீங்கள்பாருங்களென்று (வந்தா)

பொது திபதை:

நான்முடியேநகரத்தாளுந் தனைதவிற்காவலைமாமல் *
மாண்டிடச்செய்வெல்லாம் வகுப்படுமிதசத்துருக்கனே *

பின்னிருந்தால்வேகமாகி வெருண்டுமேபாவிபோக
குன்னடைசத்துருக்கன்சேனை யலறியேபதறிவிட்டாரே,

சேனாபதி-சத்துருக்கனுக்குச்சொல்-திபதை.

யாவரானாலுந்தேவரேனு மதிலைத்தான்பிடிக்கமாட்டார் *
தானதுபூமியிலிவர் தெரியவல்லவர்தானும் *
கானகங்கன்றுபோக்கக் கைதவித்திட்டபடாமல் *
தானதுவைத்திருந்து நீர்பிடித்துமேபிடிக்கலாமே *

வசனம்.

ஆதோவாருமையா சத்துருக்கராஜாவே குதிரை யிருவர்கை
யும் பிடிபடாமல் ஆகாயமார்க்கத்தி லெழும்பி வனத்தை நோக்
கிப்போகுது இப்பன்னசெய்யப்போகிறோம் சொலும்.

சத்துருக்கன்-இராசர்களுக்குச்சொல்-திபதை.

வனத்திலிருந்துதுபோன வடிவுள்ளதுரகந்தன்னை *
குனிந்துமேயெழுந்திச்சுக்கொட்டி கொம்பெனப்பிடித்துவாரீர் *
கனத்தகோரியாகத்துக்குக் காரியமுதவவேணும் *
அனர்த்தம்வந்தாலுமுன்ன மயோத்திதாம்சேரவேணும் *

வசனம்.

அகோகேளும் ராஜர்களே யாகத்திற்குக் குதிரையுதவவே
ணும் எப்படியாகிலும் உபாயமாய்ப் பிடித்துவருகுதிரைப்பிடித்து
வந்தபேருக்கு வெகுமதிசெய்விக்கிறேன் ராஜாக்களே,

சேனைகள்-குதிரையைத்தேடிவருகிற-கவிகள்,

இட்ட-அருகுநகரம்போற்றி-பீசாதனம்,

ஆளுமதிகத்திரமேசொச்சரித்துவகொண்டு *
அஸ்வத்தைத்தேடி வாரார் *
நத்திடிவாராட்டுமேல் ராயத்திருக்கு *
தாமிருந்திதனைபல்லன் *
விட்டபுரவிதன்னை யெட்டுத்திக்கிலுங்காணோம் *
வேதவேதக்கன்னமேசெய்வோம் *
பட்டங்கட்டிவிட்ட புரவிபிடிக்கவே *
படைத்தலை பின்னைவரிகள் *
முன்னேசொல்லிவந்த முனிதுமிழந்தோமோ *
போசங்கள்வந்துதென்று (அடிபட)

பொருதிபதை.

இப்படியிருக்கும்போது யிருடியாசிரமத்தேசேர்ந்த *
செவ்வியாளுசீதையானதன் சிறுவரும்பழுத்திருந்தார் *
அப்பிவித்தாங்கள்கற்ற சஞ்ஜீவித்தைபரிசைப்பார்க்கச் *
சொப்பனவேட்டையாடக் குசலவர்வருகிறாரே *



பொருது-வசனம்,

இப்படியிருக்கிறபோது வால்மீகாசிரமத்தில் சீதைகுமாரர்க
ள் வேட்டைக்குவருகிறவிதங்காண்க,

குசலவர்-வருகிற-தரு இட்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி.

வருகிறார் குசலராஜர்-வருகிறாரேயிதோ

அநுபல்லவி.

மருவுமொருகுமாரன்-வருகையிலடிகொண்டு (வருகிறு)

சரணங்கள்.

அங்கியையுமேற்றதித்து வங்கியைபசைபாய்ப்பூண்டு *
அடவுடன்வேட்டையாட ஆயுதவகையுடனே (வ.று)
சிரசினிற்கின்னரதுன சரிகைகருமாலைகட்டி *
அரையினிற்காலமட்டுஞ் சரிகைநிஜாருதொட்டு (வ.று)

குசலவர்-சீதைக்குச்சொல்-திபதை,

எங்களைப்பெற்றதாயே யினியநேரிவார்த்தைகேளும் *
சங்கையில்நாங்கள்கற்ற சஞ்ஜீவித்தைபரிபவனும் *
பொங்குமிவ்வனத்திலிவேட்டைப் புகழுடனாடிவாரோம் *
எங்களையனுப்புமித விளையாடிசரணமம்மா *

வசனம்.

அகோகேளுந்தாயே நாங்களிதுவரைக்கும் ஆயுதவித்தை க
ற்றதைப் பரிட்சைபார்க்கவேணும் ஆகையால் இன்றையத்தினம்
இங்குள்ளடாகிய வனத்திற்செலநு வேட்டையாடிவருகிறோம் செ
லவுகொடுத்தனுப்புமம்மா தாயே.

சீதை-குசலவர்க்குச்சொல் திபதை,

என்னிடமக்களேயிவ் விருவர்வளமதிசீர்திக்கள் *
வன்னமாம்வேட்டையாடி வனத்திலேதங்கலாகாதுபோகலாகாது *
முன்னமேவந்தெதிர்த்தால் மோசமாமதனிலேயே *
சின்னங்களாகுமென்று சிந்தையிலெண்ணுகிறமே, *

வசனம்

அகோவாருங்கள் குசலவர்களே இதுவரைக்கும் நீங்கள் வே
ட்டைக்குப்போய் அறியமாட்டீர்கள்வேட்டைக்குப்போகுவீய
ராகிலும்வந்தெதிர்த்தால் சின்னமாகுமென்று நினைக்கிறேன் வை
ந்தீர்களே,

குசலவர்கள்-சீதைக்குச்சொல்-திபதை,

என்னென்றுசொன்னீரம்மா யிப்படிசொல்லலாமோ *
உன்னிடமிருவரிற்றி அதித்தனைத்தாயேகேளும் *
வன்னவால்மீகர்தாமு மகிழ்ந்துசொல்லுபதேசத்தால் *
வன்னியுமேவேட்டையாடி வருவோமென்றாசீர்த்திடுவீரே

வசனம்.

அகோவாருந் தாயே என்னவார்த்தைசொன்னாய் உன்னு டையதிருவயிற்றில் நாங்கள்பிறந்ததுகண்டும்இப்படிசொல்லலா மோ வால்மீகருடையசிஷ்டை.அப்படி பசுதுவரானு யாராகிலு ம்வந்தெதிர்த்தால் எங்கள் சக்ரத்தினால் ஜெயம்பெற்றுவந்து உ ன்னுடைய பாதாரவிந்தஞ் சேர்வைசெய்வோமம்மா.

சீதை-குசலவர்க்குச்சொல்-வசனம்,

ஆனாற்சீக்கிரம் போய்வாருங்கள் எங்கண்மணிகளே

குசலவர்-வேட்டைக்குப்புறப்படுகிற-தரு

இ-ம்-சங்கராபரணம்-மிச்ரதாளம்.

பல்லவி.

வேட்டைக்குப்புறப்பட்டாரையா-குசலராஜர் *
வேட்டைக்குப்புறப்பட்டாரையா *

அநுபல்லவி.

வேட்டைக்குப்புறப்பட்டார்கள்-கிட்டிபதோரம்புகொண்டு *
போட்டியாகவெதிர்த்தால் மீட்டுவோஞ்சரங்களென்று (வேட்

சரணங்கள்.

சாலவேமனதுபொங்க பாலகரிருவர்தாமும் *
வேல்விழிமிகத்துலங்க நீலவர்ணகச்சைகட்டி (வேட்)
கத்திகைக்குட்பிடியம்பு கச்சைக்குளிறுக்கிக்கட்டி *
வெற்றிவிரியங்கள்பேசி வேடிக்கையாய்கையைவீசி (வேட்)
காட்டினிற்கலைமிருகம் கருப்புளியாளியெல்லாம் *
பூட்டியேசிரத்தணிந்து தாவிடிகமாய்வருவதற்கு (வேட்)
சிங்கங்கரடியானை திரளாகவருகுது *
யெங்குமோடாமற்கட்டி யெய்யுவோங்கணைகளென்று (வேட்)

குசலன்-லவனுக்குச்சொல்-திபிதை.

தம்பிநீலவகுமாரா சதுதியில்வாராயிப்போ *
வம்பெனுமிருகஜாதி வருகிறதனேகமாகச் *
சொம்பதாய்நாணிபூட்டி துரிதமாயெய்யவேணும் *
அம்புமேயெடுத்துக்கொள்ள யடவியின்வேட்டைபார்ப்போம்

(வ-ம்) அகோவாரும் தம்பி லவகுமாரா இந்தவனத்தில் மிருக ஜாதிகள் விஸ்தாரமாய்க்காணப்படுகிறது இதுகளைப்பிடிக்கவேணு ம் அம்பையெடுத்துக்கொள் வேட்டையாடுவோம் (லவன்சொல்- வ-ம்) அப்படியே யெடுத்துக்கொண்டேனண்ணாவே,

குசலவர்வேட்டையாடுகிற-தரு-இ-ம்-காம்போதி-திரிபுடைதாளம்

பல்லவி

வனத்தில்வேட்டையாடினாரையா-குசலராஜர் *
வனத்தில்வேட்டையாடினாரையா *



அநுபல்லவி.

கனத்தசிலைகள்-தனையுமெடுத்து *
கருப்புலிகளை மிகவுமடித்து (வனத்தி)

சரணங்கள்.

சிலைகள்தனையுமேந்தி வருங்கலைகள்மிகவும்பிடித்து *
மலைகள்முயலையடித்து வருமயிலினங்களைப்பிடித்து (வனத்தில்)
வெல்லுங்கணையையெடுத்து வரும்வேங்கைதனையுமடித்து *
கொள்ளும்படைகளெடுத்து வருங்குயிலினங்களைப்பிடித்து (வன

பொது-திபிதை:

இருவருங்காணிற்கூடி யியலுடனன்றாய்வேட்டை *
புரிந்துமேகைசலித்துப் புகழுடன்பிரிந்துபாலர் *
மருவியேவனத்திற்பின்னும் வாய்த்ததோர்பலாதிகொய்து *
திரும்பும்வேளைதன்னிற் சிறுவனும்பரியைக்கண்டான் *

(பொது-வ-ம்) அகோதெப்படியென்றால் அந்தச்சமையத்தில் குசலவர் வனத்தில்வேட்டையாடி கைசலித்து இருவரும் இணைபி ரிந்து கந்தமூலபலாதிகளைக்கொய்து வருகிறசமையத்தில் சிறியவ னாகப்பட்ட லவகுமாரன் அஸ்வத்தைக்கண்டுசொல்லுகிறவிதங்கா ணக.

லவன்சொல்-திபிதை

இதுயாவர்குதிரைதாம்வந்தெழில்வனம்வருவதென்ன *
புதுமையாய்ப்பணிகள்மிக்கப் பூட்டியும்நுதலிற்பட்டம் *
அதிவீரசூரராம ரஸ்வமென்றிருப்பதாலும் *
ததியிதுவிடேன்வந்தோரைச் சண்டையில்வெல்லுவேனே *

(வ-ம்) ஆ-ஆ-இதுயாவருடையகுதிரை அனேகப்பணிகள்பூட்டி நெற்றியில் ஸ்ரீராமருடைய பிரதாபத்தை யெழுதிக்கட்டியிருக்கி ன்றது ஆகிலும் நம்முடைய வனத்தில் வருவானேன் இனிவிடுகி றதில்லை இதனைத்தேடிவந்தவரைச் சண்டையில்வெல்லுவேன் சத் ருராதிகளைக் கொல்லுவேன் இதோயிந்தவாஜிமரத்திற்கட்டிவை த்தேன்,

சத்துருக்கர்சேனைகள்-குதிரையைத்தேடிக்கொண்டு வருகிற கண்ணிகள் இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்,

அந்தவேளைதன்னில் ராஜகூடவிதன்னிற்பரியைத்தேடி *
வந்தனர்பரிகாணாமல் மனதுதான்றளர்ந்து *
விந்தையானவனங்களெல்லாம் வேகமாகத்தேடி *
சிந்தைதன்னில்மெத்தநொந்துதேசிதன்னைத்தேடிவாரார் *
பந்தியங்கள்பேசிக்கொண்டு பரிதனைத்தேடிவாரார் (அந்த)

சேனைகள்-லவனுக்குச்சொல்-திபிதை,

இந்தமாவனத்தில்வந்த யெழிலுறுங்குதிரைதன்னை *
விந்தையாய்க்கட்டிவைத்து விளையாடும்பிள்ளாய்நீ *

யெ

சந்தமாய்வீரரோடு சவுரியமுனக்காடாது *
அந்தயாகக்குதிரைதன்னை அவிழ்த்துநீவிடுகுவாயே *

வசனம்.

அகோவாருந்தம்பி உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றது இந்தக்குதிரையைப் பிடித்துக்கட்டிவைத்தாயே உனக்கென்ன வீராதிவீரருடன் வீம்புமேவண்டாம் குதிரையை அவிழ்த்துவிடுவாய்தம்பி,

லவன்-சேனைகளுக்குச்சொல்-திபதை

குதிரையைப்பிடித்துக்கட்டிக் கொண்டவனிலவனென்னுமூர் *
பதியேயெந்தனோடே பராக்கிரமஞ்செய்யவேண்டாம் *
நிதியேயோடிவந்த சேனையைக்கொல்வேனுனை *
மதியுடனுயிர்காப்பாற்றி வனத்தைவிட்டோடுவீரே *

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே குதிரையைப்பிடித்துக் கட்டினவன் நான்றான் என்பேர் லவன் உங்கள் பராக்கிரமம் என்முன்னில்லாது உயிரைக்காப்பாற்றிக்கொண்டு ஓடிப்போங்கள் மன்னவர்களே,

பொது-திபதை,

சேனைகள்கோடிகோடி திரள்பரிநாலுகோடி *
யானைகளிரண்டுகோடி அணிமணித்தேர்கள்கோடி *
மானிலந்தானெழும்ப மலைகளும்பொடியதாக *
வானவர்பார்த்திருக்க வந்தனர்லவன்முன்னில் *

லவன்-ராஜர்களுக்குச்சொல்-திபதை,

மலையெனநீங்களென்னை வந்துமேவளைந்துகொண்டீர் *
பலையெனப்பஞ்சுசேர்ந்தால் வன்னிமுன்னிற்குமோதான் *
எலருடன்திரிபுரத்தைச் சங்கரனெரித்தாப்போல *
நல்முள்ளவாளினாலே நறுக்குவேனொடிவீருனே *

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே என்னை நீங்களெதிர்த்தால் நான் பயப்படுவேனோமுன்னாள்சிவன் திரிபுரத்தை யெரித்ததுபோல உங்களையெரித்துப்போடுவேன் ஓடிப்போங்கள் ராஜாக்களே

ராஜர்களுக்கும் லவனுக்கும்-தர்க்கம்-இ-ம்,

சங்கராபரணம்-அடதாளம்.

ராஜாக்கள் சொல்லல் { ஓடிப்போங்களென்று வேடிக்கைப்பேசுறாய் *
கூடிப்புரவிதன்னைக்கொண்டுபோவோமே *
லவன் சொல்லல். { கொண்டுபோவோமென்று குதிக்கிறீர்வீரரே *
கண்டரோதிக்கையிற் காலனைப்போலே *
ராஜாக்கள் சொல்லல். { காலனென்றாலுநாம் கட்டிப்போடுவோம்போடா *
பாலனென்றேயஞ்சிப் பார்க்கிறோம்போடா *



லவன் சொல்லல். { போடாவாடாவென்று புகல்கிறாயெத்தனைச் *
சாடுறேன்பாணத்தாற் றவித்திடப்பாரீர் *
ராஜாக்கள் சொல்லல். { பாரென்றேயெங்கள்மேற்பாணத்தைப்போடுறாய் *
கூரப்பிறாலுன்னைக் கொல்லுவோம்பாராய் *
லவன் சொல்லல். { கொல்லுவோமென்று வல்லமைப்பேசுதீர் *
நில்லுங்கள்சொல்லுறேன் நிமிஷத்திற்பாரீர் *
ராஜாக்கள் சொல்லல். { நிமிஷத்திற்பாரென்று நெடியவில்தொடுக்கிறாய் *
அமிசஞ்செய்யப்பாணந் தொடுக்கிறோம்பாராய்.

சேனைகள்பிரலாபப்பட்டோடுகிற-தரு-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்

பல்லவி.

சாத்திறான்சாத்திறானே-பாணத்தினாலே-சாத்திறான் சாத்திறானே

அநுபல்லவி.

சாத்திறான்பாணத்தினாலே க்ஷணத்தில்மனுவையெல்லாம் *
ஆத்திராறுபோல அக்கனிகிழிநாற்போலச் (சாத்தி)

சரணங்கள்.

ஓடயிடங்காணோமென்ன செய்வோமையோ *
கேடுகாலம்வந்து கிட்டிமுட்டிவெட்டி (சாத்தி)

வேறு-டி-ராகம்-தாளம்,

சாடிசாடிவிட்டான் தரையிலுதிரமோடக் *
காடுசெடிகள்தன்னிற் கலக்கவேட்டையாடாமல் (சாடி)

வாதுபேசிவந்த வல்லாளகண்டரெல்லாம் *
போதும்போதுமென்று பிணத்திலேறிமடியவே (சாடி)

ஒருகோடிசேனையு மொன்றாகமடித்தார்கள் *
எருவானராஜாக்கள் ளெதிர்த்துப்போர்க்களத்தில் (சாடி)

சத்துருக்கனிடம் ஒருவன்வந்துசொல்-கண்ணிகள்,

இ-ம்-எதுகுலகாம்போதி-சாபுதாளம்,

பல்லவி

தப்பிவந்தேனையா-புதலையாய்-தப்பிவந்தேனையா

சரணங்கள்.,

தப்பிவந்தேனையா சாகப்பயந்துநான் *
கொப்பனவேயோத்தியிற் கூசாமல்வாழவே (தப்)
எப்படித்தேடி யிங்கேவருவாய்காண் *
இப்படியிவ்விங்கே யிருக்கவுமொண்ணாது (தப்)

சேனாதிபதிசத்துருக்கருக்குச்சொல்-திபதை,

அரசர்களரசேகேளீ ரியாகப்புரவிதன்னை *
புரவியைப்பிடித்துக்கட்டிப் போனசேனைகளையெல்லாம் *

தரணியிலுருட்டிவிட்டான் தப்பியொருவனாக *
விரைவினிலோடிவந்து விட்டேனென்சரணமையா *

வசனம்.

அகோவாருமையா சத்துருக்கமகாராஜாவே ஒருசிறுபிள்ளை யாரோ ராஜவம்மிசம்போலொருகுதிரை அவன் நம்முடையகுதிரை யைப்பிடித்துக் கட்டி எதிர்த்தவர்களையெல்லாம் வெகுவாய்மாய்த் துவிட்டான் நான்மாத்திரந் தப்பித்துக்கொண்டோடி வந்துவி ட்டேன் சுவாமி.

சத்துருக்கர்-சேனாபதிக்குச்சொல்-திபதை.

சிறுபிள்ளைபோலேவந்து சேனைக்கொன்றனென்றாய் *
பரிதியின்குலத்தில்வந்த பையலாமவனைநாமும் *
அரிதியாய்க்கொல்லொணாது அவனைமூர்ச்சையாக்கி *
இரதத்திற்கட்டிக்கொண்டு யிட்சணம்வருவோம்வாரீர். *

வசனம்.

அகோகேளுஞ் சேனாபதி சிறுபிள்ளையா கொன்றவன் நல்லது அவனைக்கொல்லாமல் மூர்ச்சையாக்கி ரதத்திற்கட்டிக்கொண்டு வருவோம் வாரும் சேனகனே.

பொது-திபதை.

திக்கெனச்சத்துருக்கர் தினகரனதயம்போலப் *
பக்குவரதத்திலேறிப் பரிதனைநட்டிபோட்டி *
கொக்கரித்துக்கரங்கொண்டு கோபமாய்வனத்தில்வந்து *
திற்கிறலவனைப்பார்த்து நிலையுடனியம்புவாரே *

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் சத்துருக்கர் தேரிலேறி ரணக்களம்வந்து லவனைப்பார்த்துச்சொல்லுகிறவிதங்காண்க.

சத்துருக்கருக்கும்-லவனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-மோகனம்-டீசுரதாளம்.

சத்துருக்கர் சொல்லல்
ஆரடாசிறுபிள்ளாய் போரடாசெய்யுறாய் *
வீரிடச்செய்கிறேன் பாருப்வீரா *

லவன் சொல்லல்
செய்யுமேனென்று நீ வையுறாய்ராஜனே *
எய்யுறேன்வாளியா லோடிப்போகாய் *

சத்துருக்கர் சொல்லல்
ஓடவேவந்துநான் உடனேயுந்தனையிப்போ *
வாடிடச்செய்கிறேன் பாரும்பாலா *

லவன் சொல்லல்
ஆலமாயென்கணை கோலமாய்வருகுது *
சாலவேயோடுவாய் ராஜவீரா *

சத்துருக்கர் சொல்லல்
பாலனும்பாம்புகண் டாலும்மோதடியினால் *
பதறியேஜாடுறேன் பாரும்பாலா *

லவன் சொல்லல்
வெற்றியாய்க்கூடிய சுற்றியேநீவந்தா *
சற்றுநானஞ்சேனே பாரும்வீரா *



சத்துருக்கர் சொல்லல்
அஞ்சினேனென்று நீ யிஞ்சியேபேசுறு *
பஞ்சுபோற்ஜாடுறேன் பாரும்வீரா *

லவன் சொல்லல்
எஃசெய்வேனென்று நீ யிருசியேகிழ்விழப் *
பஞ்சுபோற்ஜாடுறேன் பாரும்வீரா *

சத்துருக்கர் சொல்லல்
விட்டிடுபாணங்கள்பட்டுமேசிறுலவன் *
இட்டெனப்பூமியில் விழுந்தனனே *

பொது-திபதை,

முடுகியேசத்துருக்கர் முன்னுதாப்பாணமெய்ய *
கடுகெனவிதுவேவந்து காளையாயவன்கழுத்தில் *
தொடுமலர்மாலையாகத் துன்னசத்துருக்கர்தானும் *
படமயிற்சிதையாளை மனதிலேயெண்ணுவாரே *

சத்துருக்கர்-லவனைக்கட்டல்-கண்ணிகள்.

இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

வரணிசத்துருக்கர் பிடித்ததேர்சிலையறுத்து *
வீரியமாகவேதான் விளையாடயிங்குவந்தீர் *
தார்குழற்சிதைதன்னைச் சதிருடன்போற்றிசெய்து *
வரணிசிலையைவாங்கி யிபனுடனேகும்போது *
ஓடியேமன்னன்வந்து ஒடித்ததோர்வில்லினாலே *
நாடியேபாலன்வீழ்ந்து நடுக்கவேபானபடிதான் *
வாடியேலவகுமாரன் வலியதோர்வி[illegible] *
நீடியேபூமிதன்னில் நின்றவன்தா[illegible] *
எடுத்தனன்சத்துருக்கராஜன் [illegible]ராமரென்று *
துடைத்தனன்மேனிதன்னைச் சிலையுளநீரினாலே *
திடுக்கெனப்பாலன்தன்னைத் தேரினிற்கட்டிக்கொண்டு
விடுத்தனன்குதிரைகொண்டு வேந்தனுமயோத்திநோக்கி

சத்துருக்கர்-சேனைகளைத்திருப்பிக்கொண்டுபோகிற-இ-ம்

எதுகுலகாம்போதி-அடதாளம். -

பல்லவி

ஜெயங்கொண்டுவாராரே-சத்துருக்கரும்ஜெயங்கொண்டுவாராரே

சரணங்கள்.

ஜெயங்கொண்டுவாராரே ஜெயலவனைப்பிடித்து *
மயங்கொண்டவுலகத்தில் மைந்தனென்றறிந்து (ஜெய)
சேனைகாவலர்சூழ திகிதிமியென்னவே *
திரளாய்வாத்தியஞ்சாட யானைமாவுநெருங்க (ஜெய)

பொது-திபதை,

சந்தோஷமாகராஜன் தனித்திடலவனைக்கட்டி *
அந்தமாயயோத்திநோக்கி அடவுடனடக்கும்போது

கந்தங்கொள்கன்னிமார்கள் கன்னடித்தசெய்திதன்னைச் *
சுந்தரச்சீதைமுன்போய்ச் சோபமாய்ச்சொல்லுவாரே *

வனக்கன்னிகள்-சீதைக்குச்சொல்-தரு-இ-ம்-

எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

சீதாயென்னசொல்வோம்-லவன்சேதியாதாயென்னசொல்வோம்

அநுபல்லவி.

சீதாயென்னசொல்வோ மாதாவுன்மைந்தனை *
ஏதோராஜர்காட்டித் தூதாயெடுத்துப்போறார் (சீதா)

சரணங்கள்.

தனியேலவன்காட்டிவருகவே பின்பு *
தாவுடைகுதிரகமென் னருகவோ *
முன்னவன்கன்னுகோபம்பெருகவே-அதை *
மூரிக்கழுடன்கட்டியிருகவே *
விரிவாய்வீரர்கூடி வேகந்துரகங்கேழ்க்க *
அருமுனியருளாலே கொண்டுனவர்களைச் (சீதா)
கன்னிராஜர்தேரிலேறியே-உந்தன் *
காலைமீறிற்சர மாரியே *
வின்போல்ன்றன்னை மீறியே-காலை *
வேலைகொண்டு சாத்துறியே *
துவிடனியானைகள் தளக்கள்துரகங்களைச் *
சதைக்கத்தேரிற்கட்டிப் பதைக்கக்கொண்டுபோறார் (சீ)

பொது-திபிதை.

மைந்தன்றன்வார்த்தைகேட்டு மாநிலந்தனில்விழுந்து *
சிந்தையுங்கூடுமென்னச் சிறுவனைநினைந்துவாடி *
சுந்தரமுகங்களெல்லாஞ் சோர்ந்துமெய்மறந்துவாடி *
சிந்தையில்ராமாவென்று சீதையும்புலம்புவாளே *

சீதை-பிரலாபக்கண்ணிகள்-இ-ம் முகாரி-ஆதிதாளம்,

ஐயையோதானென்னசெய்வேன் லவகுமாரா-மகனேயென்
றுசைபுள்ளகண்மணியே லவகுமாரா
என்னமாய்மனந்துணிந்தோ லவகுமாரா-மகனே
என் னுயிர்தரிப்பேனையோ லவகுமாரா-நீ
சொன்னதொருவார்த்தைகேட்டு லவகுமாரா-மகனே
துடிக்குதையோதேகமெல்லாம் லவகுமாரா
குட்டியானவாய்மொழியா லவகுமாரா-மகனேவெகு
நாழிகங்கள்சொன்னுயடா லவகுமாரா
கட்டவுன்னைராஜர்வந்தா லவகுமாரா-அப்போ
வெட்டவுங்கையில்லையோடா லவகுமாரா



எட்டுத்திசைராஜரெல்லாம் லவகுமாரா-உனக் *
கீடல்லவென்றுசொன்னாய் லவகுமாரா *
மன்மதனைப்போலவுன்னை லவகுமாரா-நான் *
வனத்தில்வேட்டைபோகவிட்டேன் லவகுமாரா *
காட்டிற்குப்போறபோது லவகுமாரா-அங்கே *
போட்டிவந்துநேர்ந்ததோடா லவகுமாரா *
வேட்டைக்குநீபோறபோது லவகுமாரா-வெகு *
நாழிகங்கள்சொன்னுயடா லவகுமாரா *
கூடியேவனத்திற்போனீர் லவகுமாரா-மூத்தக் *
குசலனெங்கேபோனுனேடா லவகுமாரா *

சீதைசொல்திபிதை,

வைபகமாள்வாயென்றுமனமகிழ்ந்திருந்தயென்னை *
உய்யவேயடவிதன்னிலொண்டியாய்விட்டாயோடா *
மையவேதேரிற்கட்டிப் பாரினிற் போராரோதான் *
ஐயையோமகனேநீதா னலறிபேயந்தாயோடா *

வசனம்.

அப்பா மகனே லவகுமாரா அயோத்தியைப் பட்டங்கட்டிக்கொண்டு அரசாட்சிசெய்வாயென் றிருந்தேன் இப்போது யெனினைஅலம்பும்படியாய்க்காட்டிலே தவிக்கவிட்டாய் உன்னைத்தேரிற்கட்டிக்கொண்டு போறார்களே நான் பெண்சீவன் என்னசெய்வேன் மகனே.

சீதை-பிரலாபத்தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்,

பல்லவி.

இக்கினிவேறுமுண்டோ-ஜகந்தனில்-இக்கினிவேறுமுண்டோ

அநுபல்லவி.

இக்கினிசேர்தில்லைச் சிறுவனுமடிந்தானே *
துக்கவேயவனுடன் உயிரைமாய்த்துக்கொள்வேன் (இ)

சரணங்கள்.

பெற்றவயிறெனக்குப் பத்திபெரியுதடா *
இத்தாரணிமீதுசிவனைவிடுவேன்டா (இக்)
பத்துமாதஞ்சுமந்து பெற்றவயிறெனக்கு *
மெத்தக்குழம்பியே வேதனையாச்சடா (இக்)

சீதைசொல்-திபிதை

உந்தனைப்பெற்றபின்பு வொருகுறையென்றுமற்றேன் *
செத்திருவயோத்திராமர்சேதியைமறந்திருந்தேன் *
பத்தமாய்க்குதிரைக்காகப் படைதனில்கைப்பட்டாயோ *
எத்தனுருயிரையிப்போரிய துடன்விடுவேன்மைந்தா *

வசனம்

அப்பா லவகுமாரா உன்னைப் பெற்ற பின்பு என்றுயரமெ

வலா மறந்திருந்தேன் எம்பிராண நாயகரான ரகுநாயகரையு மறந்தேன் இப்போது ஒரு குதிரைக்காகச் சண்டைபண்ணி கட்டுப்பட்டாயோ இனி எனனுயிலா இங்கேவிடுகிறேனடா மகனே

சீதைபுலம்பல்-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்.

பல்லவி.

வந்தவேளையிதுவோ.வனந்தனில்-வந்தவேளையிதுவோ *

அநுபல்லவி.

வந்தவேளைதன்னில் வனத்தினில் வேட்டைபோன *
சொந்தமைந்தரைநான் றுடிக்கக்கொடுத்தேனே (வந்த)

சரணங்கள்.

செந்திருவயோத்தி சுசரதராமா *
சொந்தநாயகரை துயரத்துடனேவிட்டு (வந்த)
மைந்தரிருவர்கள் வனத்தினிற்போகவும் *
சிந்தைதளர்ந்துநான் சிவனைவிடுவேனே (வந்த)

சீதைசொல்-திபிதை.

என்னிடந்தைதானு மிவ்விடம் வந்தாராகில் *
அன்னியசிறுவரெங்கே சொல்லெனறுனக்கேட்டாரோ *
என்னென்று சொல்வேனையோ இப்படிக்கியாதுசெய்வேன் *
சின்னதோர்புத்தியாலேசிறுவனையனுப்பினேனே *

வசனம்.

ஐயையோ என்தந்தையாகிய வால்மீகர் வந்து எங்கே உன்குமாரர் இவ்விடம் பூங்காவனத்தைக்காத்துக்கொண்டிருக்கவும் உனக்குங்காவலாக வைத்துப்போன மைந்தரெங்கேயென்றால்என்னசொல்வேன் ஆரி ஈரி.

குசலன்வந்து-சீதைக்குச்சொல்-திபிதை.

எம்னிடதாயேகேளா யித்தனைத்துயரமென்ன *
மன்னியவேட்டையாடி மகிழ்வுடன்லவனைநானு *
முன்னமேயனுப்பினேனேயோசம்போனுனேனோனேன் *
அன்னையேயெந்தனுக்கு அருளிச்செய்திடுகுவாயே *

வசனம்.

அகோகேளுந்தாயே நாங்கள் உன்னிடத்தில் செலவுபெற்று வேட்டைக்குப்போய் வேட்டையாடி தம்பியாகிய லவனை முன்னம் வீட்டிற்கு அனுப்பிவைத்தேனே அவனெங்கே நீ பிரலாபிக்கிறவிதமென்ன சொல்வாய்தாயே,

சீதை-குசலவனுக்குச்சொல்-திபிதை.

புவனந்தன்னில்வந்த புரவியைலவனுங்கட்டச் *
சேவகர்இரண்டுவந்து செத்தனர்தம்பிகையால் *
பாவியாமன்னர்வந்து பார்தனில்விழவடித்து *
தாவியேகட்டிக்கொண்டு சனுதியாய்ப்போகின்றாராம் *



வசனம்.

அகோவாராய்மகனே வனத்தில் ஒருகுதிரை வந்ததாம் அந்தக்குதிரையை லவன் கட்டினனும் யாரோராஜாக்கள்வந்து சண்டைசெய்து லவனைப்பிடித்துத் தேரிற்கட்டிக்கொண்டுபோனார்களாம் அதுகேட்டு என்வயிறுபத்திக்கொண்டெரியுதடாமகனே.

குசலன்-சீதைக்குச்சொல்-திபிதை.

எந்தனைப்பெற்றதாயே யித்தனைத்துயரமென்றான் *
மைந்தனுனிருக்கவுந்தன் மனதினிற்கிலேசமாமோ *
எந்தனமனுப்புமம்மா யிட்சணமவரைக்கொன்று *
சந்தமாய்லவனைக்கூட்டிச் சனுதியில்வருகுவேனே. *

வசனம்.

அகோகேளுந்தாயே உனக்குத் துயரம்வேண்டாம் நானிருக்க யென்னகுறை என்னையனுப்பிவைத்தால் அவர்களைக்கொன்று லவகுமாரனை யிட்டுக்கொண்டுவருகிறேனம்மா.

சீதை-குசலவனுக்குச்சொல்-திபிதை.

அண்டர்வந்தெதிர்த்தபோதும் அசுரர்வந்தெதிர்த்தபோதும் *
எண்டிசையுள்ளராஜ ரெவர்கள்வந்தெதிர்த்தபோதும் *
கண்டிதஞ்செய்வதாகக் கலக்கமில்லான் நானுனுல் *
கொண்டவிற்கணையால்மன்னர் கூட்டத்தைவென்றுவாராய். *

வசனம்.

அகோவாருமகனே முப்பத்துமுக்கோடி தேவர்கள் வந்தெதிர்த்தாலும் அசுரர்கள்வந்தெதிர்த்தாலும் மண்டலாதிபதியாகியராஜாக்கள்வந்தெதிர்த்தாலும் நான்பதிவிரதையாயிருக்கிறது மெய்யானால் இந்தப்பாணம் எதிராளிகளைக் கண்டிக்கவேண்டியது நீபத்திரமாய்லவனைமீட்டுக்கொண்டு சீக்கிரமாய் வருவாய்மகனே.

(குசல-வ-ம்) அப்படியே வென்றுவருகிறேன் தாயே.

பொதுதிபிதை.

பட்டயம்பரிசுசக்தி பாரியசிலைகள்பாணம் *
திட்டெனவாங்கிக்கொண்டு சீருடன்கவசம்பூண்டு *
மட்டறச்செல்லுஞ்சேனை வாரியைக்கொல்வேனென்று *
இட்டியேகுசலன்வந்து கிரியெனத்தோன்றினனே *

குசலன்சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

ஆரடாவனந்தனி லானைசேனையுடன் *
போர்செய்துலவனையே பிடித்துப்போரவர்கள் (ஆர)
பாரடாவென்னிட பாணத்திறந்தனைக் *
கூருள்ளவாளிறைற் கொல்லுவேனுன்னையே (ஆர)
சேரவேவந்துயென் சேதியைக்கேட்டுநீ *
போர்செய்துகுதிரையைப் பிடித்துப்போனீரோ (ஆர

நேரழலக்கதனி லெனக்கெதிரேவந்தால் *
பாரில்விழுந்திடவே பாணத்தைவிடுவேன் (ஆர)
ஏரணிசிலைகயி லெடுத்தவர்களாகில் *
மாரிபோற்சரங்களை வாவிப்போர்ப்போம் (ஆர)

சேனாபதி சத்துருக்கருக்குச்சொல்-திபிதை.

கண்டீரோவரசேயிக் கானையின்சுரூபந்தன்னைச் *
சண்டனோவன்றிச் சக்ரனோதன்றோ *
கொண்டலன்சுரூபன்றானோ குமரனோவதியோமையா *
அண்டமும்நடுங்குதந்த னடைக்கலங்காருமையா. *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி சத்துருக்னமகாராஜாவே இதோ வருகிறவன் ஆரோ, சண்டனோ, அல்லவென்று மிண்டனோ, காலனோ, குமாரவேளோ, எங்களுக்குப்பயமாயிருக்கிறதுகாக்கவேணும் சுவாமி.

சத்துருக்கர்-சேனாபதிக்குச்சொல் வசனம்.

பயப்படாதிர்கள் அவனைச்செயிக்கப்போகாதா சேனாபதிகளே

குசலன்-ராஜாக்களுக்குச்சொல்-திபிதை.

முந்தியவுங்கள்வீர முடிச்சுமாசாமர்த்தியமெல்லாம் *
எந்தன்கைப்பாணத்தாலே யெங்கியேசாகவேண்டாம் *
சந்தவென்றம்பிதன்னைச் சமரிதியில்விட்டுநீங்கள் *
சிந்தையிற்சிவன்றப்பிச் செல்லுவீர்வனத்தைவிட்டே. *

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே என் விருதாவிற்சாகவேணும் சுகமாய் குதிரையும் லவனையும் விட்டு நீங்கள் உயிர்தப்பிப்பிழையுங்கள் ராஜாக்களே.

சத்துருக்கர்-குசலனுக்குச்சொல்-திபிதை.

சிறுபிள்ளைபோலேவந்து சேனையைக்கொல்வேனென்றாய் *
அறிவையோவெங்கட்சேனை அரசர்கள்வலுமைதன்னைத் *
திறமைசேரமரின்சேதி தெரியுமோவுந்தனுக்கு *
நிறையவேசொரிந்தாற்பாணம் நிலைநிற்கமாட்டாய்நீயே. *

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சிறுபிள்ளைபோற்காணுது நீயாபெங்கள்சேனையெல்லாங் கொல்லுகிறவன் எங்கள்சேதியையறியமாட்டாய் சிறுபிள்ளையானபடியால் உனக்குத்தெரியமாட்டாது வீணாய்மடிந்துபோகவேண்டாம் ஓடிப்போவாய்தம்பி.

பொருநி-திதை.

பானைகள்பட்டுவீழ அடர்த்திரிப்பரவிவீழ *
சேனைப்பொடியதாகத் தேரணிமடிந்துவீழ *



மாநிலந்தனில்ரத்தாறு மதவுகள்போலேயோட *
ஞானகிமைந்தனன்றாய்ச் சாடினான்க்ஷணத்திற்றானே *

சத்துருக்கர்-குசலனுக்குச்சொல்-திபிதை.

அடாசிறுபிள்ளாய்நீ அசுரர்வங்கிஷமோசொல்லாய் *
பாரடாயெந்தன்கையின் பாணத்தைதொடுத்தேனுமிந் *
சாரவேவென்றுநீயுஞ் சரிசெய்துநிற்கமாட்டாய். *
காரியமதனைச்சொன்னேன் கானையேவிலகிப்போடா *

வசனம்.

அடா நீ அசுரர்வங்கிஷம்போற்காணுது என்னுடையபாணத்தைத்தொடுத்தேனுகில் நிற்கமாட்டாய் இந்தப்பாலவனம் அறியப்படியாய்ச் சொல்லுகிறேன் நீ அடிபட்டுவிருதாவாய்ச் சாகவேண்டாம் சுகமாய் விலகிப்போம்பிள்ளாய்.

சத்துருக்கருக்கும்-குசலனுக்கும் தர்க்கம்-கண்ணிகள்.
இ-ம்-மோகனம்-ஜம்பை-தாளம்.

| | |
|---|---|
| குசலன் | விலகிப்போகாவென்று வீரியம்பேசாதே * |
| சொல்லல் | தலங்கிவிழபாணம் தானவிடுவேனே * |
| சத்துருக்கர் | விடுவேன்பாணமென்று வீரியம்பேசாதே * |
| சொல்லல் | சடுதியிலுனைவிழச் சாடுவேன்பாராய் * |
| குசலன் | சாடுவேன்பாரென்று சவுரியம்பேசாதே * |
| சொல்லல் | போடுறேன்பாணங்கள் பிடியடாபார்ப்போம் * |
| சத்துருக்கர் | பிடியென்றுபாணத்தைப்பொடியாய்க்கணைகொடு |
| சொல்லல் | வடிவுள்ளபாணத்தை வாவிப்பார்ப்போம் [த்து |
| குசலன் | பார்ப்போமென்றென்றுடன்பராக்ரமங்காட்டாதே |
| சொல்லல் | தோர்ப்புகெலிப்புனக்குத்தோற்றுதுபோம்போம் |
| சத்துருக்கர் | போவென்றுமிவ்விதயும் பினத்துறாயென்னடா * |
| சொல்லல் | பாவப்பாலனென்று பாணமொன்றெறிந்தேன் * |
| பொதுவில் | எடுத்துக்கணைதொடுத்து எதிர்த்துள்ளபானை * |
| சொல்லல் | அடிக்காமற்பிடிக்கச் சத்துருக்கருமிழுந்தார் * |

பொது-திபிதை.

தேரினிற்கட்டுப்பட்ட சிறுவனையவிழ்த்துவிட்டான் *
சீரும்வந்தனுன்னன் திருவடிதனைவிட்டான் *
போரணிகுதிரைதன்னைப் பிடித்தவர்கட்டிக்கொண்டு *
வீரியமாகவேதான் விளங்கியேயிருக்கின்றாரே *

இதுவுமது.

பையவேரணக்களத்தில் பட்டவர்மீழ்விழுந்தார் *
தொய்யாமற்பிழைத்தபேர்கள் ஓடியேவனமறைந்தார் *

செய்புவதினியாதென்று திகைக்கிட்டுமனமயங்கி *
ஐயகோவென்றயோத்தி அட்சணமோடணுற்றுர். *

வசனம்.

அகோதெப்படியென்றால் சிறுபிள்ளைகையில்அடிபட்டசேனைகளயோத்தியைநோக்கிப் போகிறவிதங்காண்க:

சேனைகள்-அயோத்திக்குப்பிரலாபித்துக்கொண்டுபோகிற

தரு-இ-எதுகுலகாம்போதி-மிசுரதாளம்.

பல்லவி.

ஒருமட்டாய்மடிந்தாளையா-ராமர்சேனை *
ஒருமட்டாய்மடிந்தாரையா *

அநுபல்லவி.

ஒருமட்டாய்வனந்தனி லோடிமடிந்தபேர்க்கு *
எரியிட்டுச்சுடுவோமென்று லெருமுட்டைக்கிடாயாது (ஒரு

சரணங்கள்.

யானைகள்சேனைகள் அடர்ந்தபரிபினங்கள் *
கானகந்தன்னிலே கணக்கவேபோர்செய்து (ஒரு)
தோரணிதன்னோடே யோணிராஜர்கள் *
ஆரணியத்தனி லடவாகப்போர்செய்து (ஒரு)
வலுவுள்ளராஜர்கள் வாதுகூறிவந்து *
ஒருவருமெதிரில்லாச் சிறுபிள்ளைதன்கையால் (ஒரு)

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை.

சிருள்ளஅயோத்தியாளுந் தசரதராமாகேளீர் *
ஆரணயஞ்சிறுவராரோ அவ்வத்தைப்பிடித்துக்கட்டி *
பெருள்ளமன்னரோடே பெருஞ்சமர்செய்துவந்தார் *
தாரணிதனிலுன்றம்பி சத்துருக்கர்விழுந்தாரையா *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ராமபத்திரரே ஆரணியத்திலாரோசிறுபிள்ளைகள் அவ்வத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டார்கள் நாங்கள்சென்று குதிரையைவிடச்சொன்னால் விடுகிறதில்லையென்றுஎதிர்த்து யுத்தியஞ்செய்து சத்துருகர் மூர்ச்சையாய் விழுந்துபோனார்சுவாமி.

ஸ்ரீராமர்-சேனைகளுக்குச்சொல்-திபிதை.

ஜெயம்பெற்றோர்சிறுவர்தானோ திரும்பினோர்நீங்கள்தானோ *
பயந்துமேசொல்கிறீர் பசருமப்போர்க்களத்தில் *
நயங்கியேசத்துருக்கன் றானுமேவிழுந்திட்டானோ *
உயர்ந்தவரிஜெயித்தவாறு முன்பமுமுனைத்திடீரே. *

வசனம்.

அகோவாருங்கள் சேனாதிபதிகளே சிறுவராஜெயித்தபேர்கள் நீங்கள்பயந்து சும்மாசொல்லுகிறீர்களோ சத்துருக்கன்விழுந்



தானை நல்லதுஜெயித்தவர்கள் ரூபத்தை யெனக்குத்தெரிய ச் லவும் சேனாதிபதிகளே.

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

வாருசேர்சிறுவர்தங்கள் வடிவதுவுமைப்போலுற்றார் *
பூதலத்தினிலுள்ளோரப் புதல்வருக்கெதிருமில்லை *
வேதனைசிறுவர்நின்று மிகுசரத்தொடுத்தாரையா *
நாதனேயவர்கள்கையில் நாங்களுந்தப்பிவந்தோம் *

வசனம்.

அ காவாருஞ்சுவாமி ராமபத்திரரே வனத்திலிசண்டைபண்ணுகிற சி வர்கள் ஐந்தெழுத்துப்பாவனையும் தங்களைப்போலிருக்கிறார் அவர்களுக்கு எதிரானராஜாக்கள் இந்த எட்டுத்திக்கிலுமில்லை ர்களால் சத்துருக்கர் மூர்ச்சையானார் நாங்கள் தப்பிவந்தது மகா அருமைசுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்.

இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னவிந்தையென்னவிந்தை-தம்பி-கேளுங்க *
யென்மனப்பதைக்குதடா தம்பி *

அநுபல்லவி.

மன்னவரிதையறிந்தால்-தம்பி-வனப்பெறநகைத்திடாரோ -தம்பி

சரணங்கள்.

சுத்திபோனவிந்தை தம்பி-படைவிந்தைமூத்திட்டாரோ-தம்பி *
சுற்றிவந்தசேனையோடுதம்பி சோர்ந்துமூர்ச்சையானுயோடா(
சிற்றடிசிறுவனைகையில்-தம்பி-கெங்கியேமூர்ச்சை யானுயோதம்பி
தெத்தியிந்தாப்கேட்டாலொடா தம்பி புரிதியென்னசொல்வேனடா [தம்பி

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

தம்பிலட்சுமணரேகேளாய் சடுதியெனவேகிப்போ *
அம்பினாற்செயித்தபால வரைப்பிடித்துக்கொண்டு *
தென்புள்ளகுதிரைதன்னைச் சீக்கிரமாய்க்கட்டிக்கொண்டு *
தம்பிசத்துருக்கர்கூட சடுதியில்வந்திடாயே *

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா வனத்திற்சண்டைபண்ணுகிற சிறுவனைப் பிடித்துக்கொண்டு குதிரையும் விடுவித்துக்கொண்டு சேனைகளையும் தம்பிசத்துருக்களையும் எழுப்பிக்கொண்டு சீக்கிரம்வருவாய் தம்பி லட்சுமணா.

லட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை.

மன்னவர்க்கரசோயுந்தன் மனைபடிசரணமையா *
சொன்னசொற்படியேயிப்போ குயமேதாரிவனத்திலேகி *

அன்னகர்சென்றுதம்பி அல்லமும்பாலர்கூட *
இன்னகர்கொண்டுவாரே னிணையடிபோற்றிபோற்றி *

(வ-ம்) அகோவாரும் அண்ணாவே அப்படியே சென்றுநம்முடைய அல்லமும் தம்பிசத்துருக்கனையும் அந்தச் சிறுவர்களையும் கூட்டிக்கொண்டுவருகிறேன் அண்ணாவே.

பொது-திபிதை.

தேர்களுமொன்றுகோடி சேனைகளளவுமில்லை *
வீரியயானைமாவும் வேணதுகோடிமேவ *
கூரியபாணம்வில்லுங் குறிப்புள்ளசூலம்வாளும் *
சேரவேதானெடுத்துச் சீக்கிரம்பயணமானார். *

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணப்பெருமாள் ரகுநாயகர் சொன்னமாத்திரத்தில் அளவில்லாதசேனைகள் தேர்கள் யானைகள் பாணம் வில் சூலமுதலாகியது மெடுத்துக்கொண்டு வருகிற விதங்காண்க.

லட்சுமணர்-புறப்படுகிறகண்ணிகள்-இ-ம்-மோகனம்-திரிபுடைதாளம்

கொடிமுடியதிரவேகொக்கரித்தஆர்ப்பரித்துக் *
கடகமுடன்றுதேர்களோட்டி-கானகத்திற்றேடிவாரார் *
கொட்டியவிருதுமேளம்-சேனையிடிபோல்முழங்கத் *
திட்டமுடனரசர்சேன-லட்சுமணருந்தோணிலுமே *
மட்டில்லாதராமபாணம் வாளுடனேவில்லெடுத்து *
பதினெட்டுப்படைத்தலைவர்-பாங்குடனேதேர்களோட்டி *
எதிரில்லையென்றுசொல்லி யெதிர்த்துடனேமுன்னடக்க *
வடிவுள்ளலட்சுமணரும் வந்துமுன்னேறினரே *

பொது-திபிதை.

குடைவரைப்பொடியதாகத் தருக்குடன்ரதங்களோட்டி *
திடமுள்ளயானைசேனை தெளிவுள்ளபரிகளோட்ட *
பொடியினால்மேகமேவப் புழுதிபுகதிரைக்கப்பக் *
கொடியபோர்க்களத்தைத்தேடிக் கொக்கரித்துடன்வந்தாரே. *

வசனம்

அகோதெப்படியென்றால் சேனாதிபதிகள் ரதங்களையோட்டிப் பூமியெல்லாம் கிடுகிடென்று நடுங்கும்படியாய் எழும்ப சூரியன்மறையும்படியாய் அதிவீரத்துடனே ரணக்களம் வருகிறவிதங்காண்க.

சேனாதிபதி-குசலவருக்குச்சொல்-திபிதை.

இன்றைக்குன்புரவிதன்னை யிறுதுடன்விடாமற்போனால் *
நன்றல்லநீயும்பாராய் நாங்களும்பிடிக்கவந்தோம் *
வென்றுங்கள்செருக்குமாற வெருவியேயினிக்கட்டாகப் *
பந்திகள்போலக்கட்டிப் பதிகொண்டுபோவோம்வாரீர் *



வசனம்.

அகோவாருங்கள் தம்பிமார்களே நீங்கள் புரவியை விடுவதில்லையா நாங்கள் வெகுஜனங்கள் வந்திருக்கிறோம் சும்மாய் குதிரையை விட்டுப்போங்கள் பிள்ளாய்.

லவன்-இராஜர்களுக்குச்சொல்-திபிதை

புரவியைவிடுவதில்லைப் புல்லரசர்களேகேளீர் *
வீரவிறல்மலைகள்போலே வேணதுகுவிகுவித்து *
திரளெனவன்னிகூடித் திக்கெனும்வாறுபோல *
உருளவேசேனையெல்லா மொருவனைகொல்வேன்பாரீர் *

வசனம்.

அகோவாரும் ராஜாக்களே நான்குதிரையை விடுகிறதில்லை நீங்கள் என்னை மிரட்டினால் நான்பயப்படுவேனோ அப்படிபயப்படுவதில்லை இதோபார்த்தீர்களா உங்கள்சேனையோ மலைகள்போலவிழுந்தது நீங்களும் சாகவேண்டாம் ஓடிப்போங்கள் ராஜாக்களே இனியிருந்தால் நான் ஒருவனே கொல்லுவேன்.

சேனாதிபதிகளுக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-மிச்ரதாளம்.

ராஜாக்கள் — ஓடிப்போங்களென்று வேடிக்கைப்பேசாதே *
சொல்லவ் — கூடப்புரவிதன்னைக் கொண்டுவிடோமே *
லவன் — கொண்டுபோவோமென்று குதிக்கிறீர்வீரரே *
சொல்லவ் — அண்டிநாலுங்களை அதற்குசெய்திடுவேன் *
ராஜாக்கள் — அதற்குசெய்யுமுன்னிட ஆண்மையைக்காட்டுவோம் *
சொல்லவ் — இதக்கமாய்ப்பாலனொன் றிறன்னிறோப்போடா *
லவன் — போடாவாடாவென்று புகல்கிறீர்நீங்களும் *
சொல்லவ் — கூடப்பாணத்தாலே சாடுறேன்பாரீர் *

பொது-திபிதை.

கவலையில்லாமல்வந்திங் கானகமேலேதாமும் *
அபஜெயமாகுமென்று அலறிடக்கால்சிக்கச் *
பவனியைவெட்டிவென்று பாலருங்களைகளைவி *
நவமணித்தோருந்து நகைத்திடச்செய்திட்டாரே *

சேனாதிபதிகள்-பிரலாபித்தோடி-லட்சுமணருக்குச்சொல்

கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

என்னசெய்வோம்லட்சுமணரே ஏதுசெய்வோம்லட்சுமணரே *
வர்ணமானராஜரெல்லா மடிந்தார்களிவ்வனத்தில் *
சிறுபிள்ளையிருவர்களுந் தேடியேகானகத்தில் *
கட்டியேவருகிறார்கள் கலங்கியேயோடிவந்தோம் *
மலைக்குமலைநம்மவே லட்சுமணரே *

கலங்கித்தவிக்கிறோமே லட்மணரோ *
சானகத்திராஜரெல்லாம் லட்மணரோ. *

பொது-திபிதை,

பயப்படவேண்டாம்நீங்கள் பரிவுடன்வாரீரென்று *
ஜெயப்படுலட்மணருமப்போ செத்தவர்தமையெழுப்பி *
தியப்புறுந்தம்பிமூர்ச்சைத் தெளிவித்தப்போரினின்று *
நயப்புறுங்குசலவர்க்கு நன்மொழிகூறுவாரே *

வசனம்,

அகோதெப்படியென்றால் லட்மணரானவர் சேனைகளுக்கு தைரியஞ்சொல்லி போர்க்களம்வந்துஇரதகஜ துரகபதாதிகளுடன் எழுப்பி சத்துருக்கனையும் மூர்ச்சைதெளிவித்து குசலவர்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல்-திபிதை.

வடிவினில்நீங்கள்க்ஷத்திரிய வம்ஷம்போற்காண்பதாலே *
திடமுடனுமஸ்திரஞ் சீருடன்றொடுக்காமுன்னம் *
கடிகியேயுங்கள்பேருங் கதித்ததாய்தந்தைபேரும் *
அடவுடன்றெரிவதாக அறைந்திடவேண்டும்மிப்போ *

வசனம்

அகோவாருந்தம்பிமார்களே உங்களைப்பார்த்தால் க்ஷத்திரியவம்மிசம்போற் காணுகின்றது நீங்களார் உங்கள் பேரென்ன சிறுபிள்ளையா யிருக்கிறீர்கள் சீக்கிரஞ்சொல்லுங்கள் சிறுவர்களே

குசலவர்-லட்மணருக்குச்சொல்-வசனம்

அகோவாரும் ராஜரே பனங்காட்டுநரிசலசலப்புக்கஞ்சுமா அஞ்சாது (அதுபோல) எங்களை மிரட்டவந்தாய் நாங்கள் பயப்படுவதில்லை உன்னாலானதைப்பாரும்.

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல்-திபிதை.

எந்தனற்புரவிதன்னை யிப்படிபிடிக்கலாமோ *
வந்தவர்புரவிகேட்டால் வப்பரிதனைவிடாமல் *
தொந்தமாய்ச்சேனையெல்லாந் துணுக்குறக்கொல்லலாமோ *
உந்தன்பேர்தந்தைபேரு முரைத்திடாயினியானும் *

வசனம்.

அகோவாருஞ் சிறுவர்களே என்னுடைய குதிரையைப்பிடித்ததுமல்லாமல் வந்துகேட்டசேனைகளையும் கண்டித்தீர்கள் இது ஞாயமா இனியாவது உங்கள் தாய்தந்தைபேரையும் உங்கள் பேரையுஞ் சொல்லுவீர்கள் சிறுவர்களே.

குசலவர்-லட்மணருக்குச்சொல்-திபிதை.

பந்தயம்பேசிமெத்தப் படைவந்துசெயித்திடாமல் *
எந்தனுர்தந்தைதாய்பேர் எங்கள்நல்பேரும்பின்னும் *



[illegible] *
[illegible] *
(வ-ம்) அகோவாரும்ராஜரே [illegible] உன் [illegible] நீ [illegible] எங்கள்பேர் கேட்கவந்தாய் [illegible] உன்னால் [illegible]

லட்சுமணருக்கும்-குசலவருக்கும்-[illegible]

[illegible]

லட்சுமணர் சொல்லல் { ஏடாசிறுபிள்ளாய் வார்த்தைகள்தப்புறும் *
சட்டோநீயிப்போ யெதிர்த்துபேச *
குசலவர் சொல்லல் { எதிர்த்துப்பேசமட்டாநாளிதக்கமாய்ப்பேசவோ *
[illegible] சொல்வாய்
லட்சுமணர் சொல்லல் { சொல்லென்று [illegible] மல்லாசவருகிறாய் *
வல்லுயிர்தன்னை நானே வாங்கிப்போறனையாராய் *
குசலவர் சொல்லல் { வல்லுயிர்தன்னைநீ கொல்லுநீவைமிடாமல் *
[illegible] பேசிடாமல் *

குசலவர்-லட்மணருக்குச்சொல்-திபிதை,

என்னுடன்சொன்னவார்த்தை [illegible] மறக்கவேண்டாம் *
உன்னிடம் [illegible] செய்யும்பார்ப்போம் *
[illegible] போதாலும் *
[illegible] தன்னை வாருடன்றெறித்தேன்பாராய் *

(வ-ம்) அகோவாரும் ராஜரே இப்போது சொன்னீரே அந்த வார்த்தையை மறந்துவிடவேண்டாம் உன்னாலே திராணி யுள்ளதானால் பாணந்தொடு இல்லாவிட்டால் நானடிக்கிறேன் பாரும் நீரென்ன மிரட்டவேண்டாம் நீர்வில்லெடுத்து மிரட்டினால் நாங்கள் பயப்படுவோமோ இதோ பாணந்தொடுத்தேன் பாரும்ராஜரே.

லட்சுமணர்சொல்-திபிதை.

என்னதான்செய்வேனையோ சிறுவர்கள்பாணத்தாலே
[illegible] கலங்கித்திரிகிறவர்கள் முன்னே
[illegible]
[illegible] போவதில்லேனே.

(வசனம்) [illegible] சிறுவர்கள் [illegible] பயப்படத்தவர்களோடு [illegible] செய்வேனாகவோ

[illegible]

லட்மணர் சொல்,

புரவியைநானிப்போவிடுவேனோ-உன்னுடன் *
போர்செய்யநான்பயப்படுவேனோ *

அறிவையோ பெங்கள்தன் யானைசேனையெல்லா *
திறமையாய்ப்பேசுருய் சிதைக்கிறேன்பாரடா (பு)
மெத்தமெத்தப்பேசி விருதுசெலுத்தாதே *
தத்திவிழுகிருய் பாரடா-உன்னை *
இத்தலமதிலே குத்திமெதிக்கிறேன் *
இத்தத்திவைத்து நீ கூறடா *
அத்துமத்திலாமல் அதட்டுகிருய்மெள்ள *
யெத்திக்குத்திச்சுற்றிப் பற்றிப்பிடித்திடுவேன் (புர)

குசலவர்-சொல்லல்.

ஆகட்டுமுங்களை விடுவேனே-நீங்கள் *
அடர்த்துவந்தாற்பயப் படுவேனே *
வேகத்துடனிங்கே விருதுபேசிவந்திர் *
சாகத்திறலே சதைக்கிறேன்சேனையை (ஆகட்)
காட்டில்வந்தவுன்னை வாட்டிடாமல்நானும் *
கையிலாசாமென்று போவனோநீ *
கூட்டிவந்தசேனையைக் கொல்லாமலேயிப்போ *
சொருசத்திரச்சண்டையும் விடுவேனே *
எட்டிபோட்டிபன்னி யெதிர்த்தருராமெல்லாம் *
எட்டிக் கிட்டிக்-கட்டி-வெட்டிக் துணித்திடுவேன் ()

லட்சுமணர்-சொல்லல்.

வெட்டித்துணிப்பேனென்று யெட்டுதிக்கதிரவே *
திட்டமாய்ச்சொன்னுய்நீ பயலே-இதோ *
ஓட்டிக்குதிரையைப் பட்டணமேயுன்னைக் *
கட்டிக்கொண்டுபோவேன் கையிலே *
கெட்டுப்போகவேண்டாம் துஷ்டப்பயல்களே *
கூட்டிமாட்டி ஆட்டி வாட்டுவேனுயிராயும் (புரவி)

குசலவர்-சொல்லல்.

உருட்டவந்தாயென்னை மிரட்டவேண்டாமுன் *
மிரட்டுகளெல்லா மறிவேண்டா-அடா *
திருட்டுப்பயலேநீ வரட்டுத்தவளைபோலே *
அதட்டினுலென்ன பலமடா *
முறுக்கிப்பயத்திலுல் நொறுக்கவுமுன்னாமோ *
விட்டுக்கட்டுசுட்டுக் கொட்டைப்பறப்பிடுவேன் (ஆ

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல்-திபிதை.

எதடாசிறுபிள்ளாநீ யித்தனைக்கடினஞ்சொன்னுய்
சூதடாசெய்தேயம்பால் துள்ளவேவிழவடித்தாய்
வாதடாசெய்யவேண்டாம் வன்மையாய்த்திராகம்விட்டுப்
போதடாபோருமுன்னே பணிந்தையோடிப்போடா



வசனம்

ஆகோவாரும்பிள்ளாய் எங்கள் குதிரையைப்பிடித்துக்கட்டி அதன்பின்வந்த சேனைகளையெல்லாங் கொன்றவனியாநல்ல துதிரையைவிட்டுக் குதியாயோடிப்போனு லாயிறு இல்லாவிட்டால் அனியாயமாய் மடிந்துபோவாய் பாரும்பிள்ளாய்.

லவன்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

புற்றினிலீசல்கூடிப் பெருபோர்க்குப்புறப்பட்டாற்போல் *
இத்தனைசேனையோடு மேதடாயிங்குவந்து *
சத்துருமஞ்சாமலென்முன் சாமர்த்தியம்பேசித்தோற்ற *
க்ஷத்திரியநீயேயானுஞ் சண்டையில்வென்றிடாயே *

வசனம்.

அடாவாடா ராஜனே புற்றிலே யீசலானது பெருப்போக் குவந்தாற்போல் சேனைகளைக் கூட்டிக்கொண்டு தோற்றும்சாமர்த்தியம்பேசுகிருய் நல்ல க்ஷத்திரியனுனால் என்முன்னே நில்லடா பார்ப்போம்.

லட்சுமணருக்கும்-குசலவர்க்கும்-தர்க்கம்-இ-ம்
புந்நாகவராளி-அடதாளம்.

லட்சுமணர் சொல்லல் { சண்டைசெய்யவுன்றலாகுமோசிறுபிள்ளாய் *
தனுவெடுக்கவகையுண்டோ *
குசலவர் சொல்லல் { வகையென்றுசொல்வது மலைபொருந்தியவின்பு *
வல்லமைகாணுவாய் ராஜனே *
லட்சுமணர் சொல்லல் { வல்லமைபேசியே வில்லைநீயெடுக்கிருய் *
வாருவலழிக்கப்போறேனை பாரடா *
குசலவர் சொல்லல் { வாருவலழிப்பேனென்று வலியவில்தொடுக்கிருய் *
வாவிடுத்தேனஸ்திரம் பாராய்ராஜனே *
லட்சுமணர் சொல்லல் { விடுத்துடனஸ்திரந் தடுத்துமேசிலேபத்து *
யெடுத்தேதொடுக்கிறேன் பாரும்பாலா *
குசலவர் சொல்லல் { தொடுக்கிறேன்பாரென்று துடிக்கிருய்ராஜனே *
மடித்திடபாணமிதோ பாராய்ராஜனே *
லட்சுமணர் சொல்லல் { மடித்திடும்வலுமைகள் எடுத்துநீபேசுருய் *
முடிக்கிறேன்மோகன அஸ்திரம்பாராய் *
குசலவர் சொல்லல் { முடிக்கியராஜனே மடித்திடமூர்ச்சையாய் *
தொடுத்தவன்குசலவன் பாராய்ராஜனே *

லவன்-குசலனுக்குச்சொல்-திபிதை.

விட்டதோர்பாணத்தால் விழுந்திடவுறத்தேன்பாராய் *
[illegible] *
திட்டனைவிழவறுத்தேன் சேருடன்ஜனங்களெல்லாம் *
பட்டதோர்மன்னன் வித்தான் பார்த்திடுபன்னுதிப்போ *

வசனம்.

அகோவாரும் அண்ணாவே அதிவீரபராக்கிரமத்துடனே வி
ல்லைவளைத்து நாணியேற்றிப் பாணந்தொடுத்தாளை தொடுத்தபா
ணத்தைத்தடுத்து பாணம்விட்டு அறுத்தேன் அவன் படுத்தான்பா
ரும் அண்ணாவே.

சேவகன்-பிரலாபித்துவருகிற தரு-இ-ம்-காம்போதி -ஆதிதாளம்.

பல்லவி

சேவகம்வேண்டாமடா-அண்ணைமாரே-சேவகம்வேண்டாமடா *

அநுபல்லவி.

சேவகம்வேண்டாமடா சிறுபிள்ளையவன்மெத்த *
சாவுக்குத்துணிந்தல்லோசதைக்கிறான்சேனையைச் (சே

சரணங்கள்.

கூவாதேபோடாநீ கொப்பனைவென்றிலேனே *
இவரமாய்போடி செடியிற்பதுங்குவோம் (சேவ)
ஆவுமெய்த்துண்டாலும் அடவாய்த்திரியலாம் *
சாவுகளில்லாமல் தனியேபிழைக்கலாம் (சே)
வல்லாளகண்டரை வாளாலேவெட்டினான் *
யெல்லாரையுங்கொல்லுறு விந்தசிறுபிள்ளை (சேவகம்)

சேனாபதி-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

ஓடியேநாங்கள்சென்று ஓயாமற்சண்டைசெய்தோம் *
நாடியசிறுவரானோர் நம்பிடபடையையெல்லாம் *
கூடியேகொன்றுவிட்டு கோல லக்ஷுமணருஞ்சேர்ந்து *
வாடியேவிழுந்தார்வாச மலரடிசரணஞ்சுவாமி *

வசனம்.

அகோவாருஞ்சுவாமிரகுநாயகரேநம்முடைய ஜெனங்களை
ல்லாம் அந்தசிறுவர்கையினால் மடிந்தார்கள் அதில் லட்சுமணரும்
மூர்ச்சையானார் சுவாமி

பொது-திபிதை

எக்கியேதரையில் வீழ்ந்து துயிலையவர்சேதிகேட்டு *
நாங்கியேமனந்தளர்ந்து சதிர்ப்பரதனையும்பார்த்து *
பாங்குள்ளநிலையின்றி பண்ணப்போம்யாகத்தாலே *
இங்கதுவந்ததென்று சிந்தையிற்றுயரமானார் *

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணர் மூர்ச்சையானசேதி
கேட்டு ஸ்ரீராமர் துயரப்படுகிற விதங்காண்க

ஸ்ரீராமர்-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி

திரிபுடைதாளம்

அதிகாயனிந்திரசித்து அரக்கர்முதல்சேனையெல்லாம் *
பதியாமல்நின்றுவெட்டு வலியதோர்தம்பிநீயே *



சதிரானவீரியத்தைத் தளர்ந்துநீமரந்தாயேயடா *
எதிரானபேருமில்லை என்றல்லவோநானிருந்தேன் *
பரதரேசேதிகேளும் பாலரும்ருபம்நானும் *
இறமுள்ளசீதைதனைச் சினந்துநாம்வனத்தில்விட்டோம் *
இருவரையுந்தெரிலேற்றி யின்னகர்கொண்டுவந்தால் *
தெரியுமோவவர்கள்தம்மைச் சேதியுங்கேட்கலாமே *
என்னசெய்வேன்பரதரே யினையவனும்விழுந்திட்டானும் *

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை,

போனவர்தம்மைநோக்கிப் புலம்பவுந்நீதியுண்டோ *
ஞானசமெரித்திடாமல் கண்டதுபோலிருப்பார் *
வானவரொருவரில்லை வண்மைசேர்தம்பிமார்க்கு *
யென்னையாதொந்துசொன்னீ ரெந்தனையனுப்புவீரே *

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரேதம்பியையுத்தத்திற்கு
அனுப்பிவிட்டுப் புலம்பலாமோ அதுநல்லதல்ல, அவர்களேது
மூர்ச்சையாகிறது அவர்களுக்குத் தேவர்களுமீடல்ல ஆனாலும்
என்னமாயிற்று என்னையனுப்பிவித்தால நான்போய் ஜெயித்
துவருகிறேன் அண்ணாவே,

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்-திபிதை,

பரதரேகேளாய்நாமும் பண்ணப்போமஸ்வயாகம் *
குறைவரமுடியவேணுங் கொப்பெனப்படையைக்கூட்டி *
இரதங்கள்துரகயானை யித்துடனேகியிப்போ *
திறமுள்ளதம்பியோடுஞ் சிறுவரையழைத்துவாராய் *

வசனம்,

அகோவாருந்தம்பி பரதா நாம்செய்யப்போகிற அஸ்வயா
கங்குறைவராமல் முடிக்கவேணும் ஆகையால் சேனைகள் யானை ர
தங்களைக்கூட்டிக்கொண்டுபோய்தம்பிமாரும் குதிரையுஞ்சேனைக
ளையும் அந்தச்சிறுவர்களையுங்கூட்டிக்கொண்டுவாரும்பரதா(பரத
ர்-வ-ம்) அப்படியேசென்றுவருகிறேன அண்ணாவே

பொது-திபிதை

தேருடன்யானைசேனை நீரன்மனுமாரோடுந் *
காரணமானராஜர் கருத்துள்ளஜாம்புவந்தன் *
வீரியஅங்கதனுங்கூட வேணதோரிராஜர்சூழ *
பாரியதேரிலேறிப்பரதருந்தோனினாரோ *

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீராம ரிடத்தில் பரதர்செல்வு
வாங்கிக்கொண்டு ரணக்களம் வருகிறவிதங்காண்க.

பரதர்வருகிறகண்ணிகள் இ-ம்-எதுகுலகாம்போதிதிரிபுடைதாளம்

பரதருமனுமாரும் பாங்குடையசாம்புவனும் *
வெற்றியுள்ளராஜர்களு மற்றுமுள்ளசேனைகளும் *

வீரமுள்ளரணகளத்தை வேகமுடன்றேடிவாரார் *
ராமபாணங்கையிலெடுத்து தாமிஷங்களில்லாமற்றான்
கோபமாகிப்பரதருங் கொக்கரித்துநாணிபூட்டி *
அண்டம்புவனமெல்லாம் அலறிடவேதேர்களோட *
தெண்டிரைதான்படைத்த தேவர்கள்தாங்பார்க்க *
மண்டியேரணகளத்தில் வாகுடன் பரதர்வாரார் *
வாகுடனேபரதரும் வடிவுடையசேனைகளும் *
சேவகர்புடைசூழ தேரிலேபரதர்வாரார் *
வெற்றியுள்ளயானைசேனை வெனபரிதனுடனே *
சித்திரரதத்திலேறி பரதர்வந்துதோணிறாரே *

பொது திபதை.

பட்டதோர்தம்பிமாரைப்பரதருமந்திரத்தால் *
திட்டெனவெழுப்பிக்கொண்டு சீருடன்கவசமாட்டி *
மட்டிலாரணக்களத்தை வகையுடன்வந்துபார்த்து *
சட்டமாய்மனதிற்கோபந் தான்கொண்டுகூறுவாரே *

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் பரதரானவர் போர்க்களம்வந்து பார்த்து மந்திரத்தால்தம்பிமார்களையும் மற்றவர்களையும் எழுப்பிக்கொண்டு பரதர் சொல்லுகிறவிதங்காண்க

பரதர்-குசலவருக்குச்சொல் திபதை

உங்களைப்பார்த்தாற்சிறுவருகளையாயிருக்குதிப்போ *
இங்குள்ளமனுஷவக்கொன்று மெதிரில்லாச்சூரரானீர் *
சங்கையிலென்கணைக்குச் சற்றுமெதிர்க்கமாட்டீர் *
திங்கள்சேர்முடியாரன்றிச் செகத்தினிலொருவருண்டோ *

வசனம்

அகோவாருங்கள் தம்பிமார்களே உங்களைப்பார்த்தால் சிறுவராகக்காணுகிறது எங்களுடையசேனை யெல்லாங்கொன்று எதிரில்லையென்றிருக்கிறீர்கள் யென்கையாணை நீதொடுத்தால்நீங்கள் நிற்க மாட்டீர்கள் ஏன்விருதாவில் மடிந்துபோறீர்கள் குதிரையை விட்டுவிடுங்கள் தம்பிமார்களே

லவன்-பரதருக்குச்சொல்-திபதை

சிறியதோர்நெருப்புமல்லோ ஜெகமெலாந்தகனஞ்செய்யும் *
பரிவுடனெந்தனோடு பராக்கிரமம்பேசவேண்டாம் *
கறுவியேவந்தசேனை களைக்கொலையேன்தப்பமற்றான் *
குறியதாயுயிர்பிழைத்துக் கொப்பெனவோடிப்போவாய் *

வசனம்

அகோவாரும் ராஜாவே சிறியவனென்று மனதிலெண்ணவேண்டாம் சிறுநெருப்பானது பெரியவூரைக்கொளுத்துவதுபோல் உங்களைப் பஸ்மீகரப்படுத்திப்போடுவேன் ராஜாவே.



பரதருக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்
இ-ம்-மோகனம்-அடதாளம்.

பரதர் சொல்லல் { வாரீர்சிறுவரே வல்லாண்மைபேசுமீர் *
தேறீரோதன்கைக்கிணையல்லபாரீர் *

குசலவர் சொல்லல் { இணையல்லவோவென்று என்னசெய்கிறாய் *
கணையொன்றுவிடுகிறேம் கலங்கவேசிராய் *

பரதர் சொல்லல் { கலங்கவேசேனைதனைக் கண்டித்திதோபெருந் *
துலங்குமஸ்திரமொன்று தொடுத்தனன்பாராய் *

குசலவர் சொல்லல் { தொடுத்தஅஸ்திரந்தனைத் துகள்படச்சாடியே *
ஐயகணைகள்மிகத் தொடுத்தனன்பாராய் *

பொது-திபதை.

சிறுவர்தேரிலேயே கொடுஞ்சரந்தொடுத்தபோதில் *
அந்திரச்சேனையெல்லாம் நெருங்கியேவிழுந்ததப்போ *
வெற்றியேபரதர்மீதில் வெகுசரந்தொடுத்தபோதில் *
கனதியேபரதர்தாமுங் கலங்கியேமூர்ச்சையானார். *

வசனம்.

அகோதெப்படியென்றால் ஒருவர்க்கொருவர் யுத்தம் பண்ணி பரதர்சேனையனைத்து மடிந்தது அந்தரணகளத்தில் பரதரு மூர்ச்சையானார் அதில் தப்பிப்பிழைத்தபேர்கள் அயோத்தியை நோக்கிப்போகிறவிதங்காண்க.

சேனைகள்-பிரலாபித்து-அயோத்திக்குச்செல்கிற-தரு-இ-ம்
எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியென்னசேவகந்தான்-சிறுவரோடே *
இனியென்னசேவகந்தான் *

அநுபல்லவி.

இனியென்னசேவகமித்தச்சிறுவர்கள் *
சனியன்போலரசரைச் சாடுறாரேடியவே (இனி)

சரணங்கள்

அனியாயமாகவே அநேகப்படைகளை *
தனியாகக்கொன்றதைச் சாற்றிடலாகுமோ (இனி)
இங்கிருந்தாலவர்கள் இனிவிடப்போறதில்லை *
பொங்கமாயோடிப் பிழைப்பதேதன்மைகாண் (இ)
தேடுறார்சிறுவர்கள் சிலையிலம்புதொடுத்து *
ஓடிப்போயுயிர்தாமறைப்பதேதன்மைகாண் (இ)

சேனாதிபதி-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

மன்னவர்சேனையெல்லாம் மடிந்ததுகளத்திலேபோர் *
முன்னமேயெதிர்த்தார்ன்றூர் மூர்ச்சையாய்விழுந்தாராயா *
இன்னிலந்தனில்நமக்கு யிவர்களையெதிரியாளூர் *
இன்னமுமென்னசென்றோரைத் தேவரீர்நினைக்கவேண்டாம் *

வசனம்.

அகோமகோஞ்சுவாமி ராமபத்திரரே நம்முடையசேனைக ளெல்லாம் ரணகளத்தில் மடிந்துபோய் விட்டது அதிலபரதரு மூர்ச்சையானூர் இனிமேலவர்களை நமக்கெதிரியானோர்கள் அவர்க ளைச்செயிக்கக் கூடாது சுவாமி.

ஸ்ரீராமர்-வியசனப்பட்டுச்சொல்-திபிதை.

இந்தமாமொழிகள்கேட்க வென்னுயிர் துடிக்குதையோ *
பந்தமாமுயிரதான பரதர்லட்டமணரோடு *
அந்தமாஞ்சத்துருக்க ரானவர்மூர்ச்சையானல் *
எந்தவலைவயர்க மெவ்வாறுமுடியுந்தானே *

வசனம்.

அப்பாபரதலட்சுமணசத்துருக்கா நீங்கள் மூவரும்மூர்ச்சை யானல் இனிநா னெப்படியிருப்பேன் அலவயாசமம் எவ்வாறு நிறைவேறும் தம்பிமார்களே

ஸ்ரீராமர்-சுக்கிரீபருடன்-பிறலாபிக்கிற-தரு-இ-ம்

துசாவந்தி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியென்னசெய்வேன் நம்பிசுக்கிரீபனே *
இனியென்னசெய்வேனயோ *

அநுபல்லவி.

தனியேயிருந்துநாம் நலியானுமோ *
அனியாயமாய்த்தம்பி அடவியிற்கொடுத்தேனே (இனி)

சரணங்கள்.

ஆனசேனையாவும் அட்டிகளுந்தோற்றேனே *
நானேயர்சுன நாட்டிக்கரிப்பேனோ (இனி)
தம்பிகளைக்கொடுத்து தனித்துநானிருப்பேனோ *
அப்புனியதியவே அரைத்துமடித்துக்கொள்வேன் (இனி)
அந்தச்சிறுவர்கையிலரைநானாக்கொடுத்தும் *
சிந்தைகலங்கித் திரிப்பித்தனிக்கிறேனே (இனி)

ஸ்ரீராமர்-சுக்கிரீபனுக்குச்சொல்-திபிதை.

நாமினிபோகவேணும் நமதுன்னதம்பிமார்கள் *
பூமியில்விழுந்திட்டாரப் பொல்லாதபசகளாலே *
தாமிதப்படாதுசேனைச்சகதியில்நடத்திப்போது *
சேனைப்பந்பயணமேறிக்கோமுழங்கிவைப்பாய் *



153

வசனம்.

அகோவாருஞ் சுக்கிரீபா என்னுடைய தம்பிமார்கள் அந்த ப்பசகளாலே பூமியில் விழுந்தார்களாம் நாம்போகவேண்டும் கார்மேகமென்னப்பட்ட தேரைக்கொண்டுவா நம்முடைய சே னைகளுக்குத் தெரியும்படியாய்ப்பயணபேரி முழக்கச் சொல்லு ம்பிள்ளாய் சுக்கிரீபா (சுக்-வ-ம்) அப்படியே செய்துவைக்கிறேன் சுவாமி.

ஸ்ரீராமர்-ரணக்களம்வருகிற-கண்ணிகள்-இ-ம்

எதுகுலகாம்போதி-சாபுதாளம்.

பூமியாகாயமெங்கும் பொடிபடரகுநாதர் *
தாமிஷமில்லாமலே தரணியில்தேரையோட்டி *
பாதகவனத்திற்சென்று பார்ியதம்பிமார்கள்
தோதமாமூர்ச்சைதன்னைச்சுருக்கினிற்றீர்க்கப்போறூர்
தானவரைச்செயித்திடுந் தன்மைபோல்ரகுராமர் *
வானவர்கள்போற்றிசெய்ய வனத்திற்குப்போறூர்பாரீர்
ஆதியாஞ்சோதியான அயோத்தியரகுராமர் *
நீதியானதேரிலேறி நெளிந்திடப்பூமிதானும் *
வாதெனுமனுமார்சேனை வந்துமுன்னேறினரோ *

ஸ்ரீராமர்சொல்-திபிதை.

பரதலட்மணரேதம்பி பாங்குள்ளசத்துருக்கா *
அரனிடவகையால்வந்த அனுமந்தாசாம்புவந்தா *
உறமுள்ளவரக்கர்மாய்கை யொடுங்கிடமாய்த்தநீங்கள் *
சிறுவர்கைப்பாணத்தாலே ஜெகந்தனில்மூர்ச்சையானீர் *

வசனம்

அப்பா பரதலட்சுமணசத்துருக்கா அனுமந்தா ஜாம்புவந் தா வெகு வீரசூரபராக்கிரமம்பொருந்திய ராவணன் இந்திரஜி த்து அவர்களுடைய சேனையெல்லாம் ஒரு நிமிஷத்திற்குள் ஜெ யித்தீர்களே அப்போர்க்கொத்த பலன் எங்கேபோய்விட்டது இ நான் பூமியிலிருக்கமாட்டேன் தம்பிமார்களே.

சேனாதிபதி ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை.

தரணிவாழிராஜருக்குள் சாகசமிகவுமுள்ள *
இரணியகுலத்தோரான ராட்சதமாய்கைதானே *
அரனிடகிருபையுண்டோ அருகிலோமவர்கட்குற்ற *
சுருபமுந்தேவரீர்போற் றுலங்குதுசடையொன்றில்லை *

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே இந்தப் பூமியிலிருக்கிற ராஜாக்கள் இவர்களுக்கு நிகராய்ச்சொல்லக் கூடாது ஆனதால்இ ரணியகுலமோ ராட்சதமாய்கையோசிவன்கிருபையுண்டோ அறி

யமாட்டோம் அவர்களுடைய சுரூபம் தேவரீருடைய சுரூபத்திற்குச் சரியாயிருக்கின்றது ஸ்வாமி.

பொது-திபிதை.

ஸ்ரீமுசுக்ரீபர்தானும் பெரும்வெள்ளஞ்சேனையோடு ❋
கூடவேகுஞ்சரங்கள் குதிரைகள்வெகுவாய்சூழ ❋
நாடியேபோர்க்களத்தில் நடந்தனருயித்தியமாக ❋
நீடியேபாலர்தாமும் நிபுணராயெதிர்வந்தாரே ❋

ஸ்ரீராமர்-குசலவருக்குச்சொல்-திபிதை.

சிலையுடன்கணைகைக்கொண்ட சிறுவரேகேளிருங்கள் ❋
குலமென்னதந்தைதாயார் குடிப்புடனுங்கட்குத்தான் ❋
இலகியபேர்தானென்ன யிவையெலாமெந்தனுக்கு ❋
நலமுடன்விபரமாக நவில்வீரிப்போதுதானே ❋

(வ-ம்) அயோவாருங்கள் தம்பிமார்களே உங்கள் குலமென்ன தாய் தந்தையார் உங்கள்பேரென்ன எனக்குத் தெரியச்சொல்லுங்கள் சிறுவர்களே.

குசலவர் ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

இப்படியாகவந்தோ ரியாவருங்கேட்டுச்சண்டை ❋
செப்பமாய்ச்செய்துதோற்றுச் செருக்குளமூர்ச்சையானார் ❋
சொற்படி நீங்கள்சுட்மாய் துரிதமாயோடிப்போவீர் ❋
அப்படியல்லவென்று லமர்செய்வோம்வருகுவீரே. ❋

(வ-ம்) அகோவாரும் ராஜனே உன்னைப்போல்தான்வந்தராஜாக்களெல்லாம் என்னைக்கேட்டு வெகுவாய் சவுரியம்பேசி எங்கள் பாணத்தினால் மூர்ச்சையானார்கள் அப்படியாகாமல் நீயும் வந்த வழியைப்பார்த்துக்கொண்டு ஓடிப்போம் ராஜனே,

ஸ்ரீராமருக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்:

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்,

ஸ்ரீராமர்-சொல்லல்.

ஓடிப்போகாதேநில்லு-ஒரு-உத்தரவாகிலுஞ்சொல்லு-அடா ❋
உன்கையிலாகுமோமல்லு-இதோ-ஓங்கியெடுக்கிறேன்வில்லு ❋
வேடிக்கையாகவே விளையாட்டுப்பேசாதே ❋
வீரானுலென்முன் வில்லெடுபார்க்கலாம் (ஓடிப்)

குசலவர்-சொல்லல்.

அதட்டிமிரட்டுறுயென்ன உங்க-ளாண்மைகளானதுமன்று ❋
யானைமுன்னேசிங்கம்பின்னேநீ- ஆச்சரியந்தானென்னசொல்லு
பனங்காட்டுநரியது சலசலப்புக்கஞ்சி (ஓடிப்)
பயப்பட்டுவோடுமோ திகிதப்பட்டுநாடுமோ (அதட்)

ஸ்ரீராமர்-சொல்லல்.

பிரசண்டகோதண்டமெடுத்தேன் அதில்
பிரளயமாய்ச்சரந்தொடுத்தேன்-இந்த ❋



புவியாகாயத்தையும் விடுத்தேன் உன்னைப்
போகவொட்டாமலேதடுத்தேன் ❋
விபரீதயகச்சரத்தொடுத்தேன்- இனிமேல் ❋
வில்லைப்போட்டுவிட்டுச் சொல்லாமலோடிப்போ (ஓடி)

குசலவர்-சொல்லல்.

சிறுபிள்ளையென்றுநீ பார்த்தாய் நாங்கள்
சினந்தாலுன்னுயிர்தானாவார்த்தாய்-எங்கள் ❋
சேவகம்நீயெங்கே பார்த்தாய் உன்னைச்
சிதைக்கிறேன் பாணங்கொண்டெடுத்தாய் ❋
பரிபடாதபாணம் வருகுதிதோபாரு ❋
பன்னனேயுன்னுயிர்-வணக்குமுன்னோடிப்போம் (அதட்)

ஸ்ரீராமர் சொல்லல்.

வருணாஸ்திரமிதோ பூட்டினேன் பின்பு
வாயுவாஸ்திரமிதோ மாட்டினேன்-இதோ ❋
பிரம்மாஸ்திரமொன்று நீட்டினேன் உன்மேற்
பெரியசாகிமந்திரந்தாட்டினேன் ❋
என்னுதைஅஸ்திர மேகமாய்வருகுது ❋
சொன்னதுங்கேட்கில்லை அடித்திதோவிழப்போறாய் (ஓடி)

குசலவர்-சொல்லல்.

விடுத்தஅஸ்திரமெல்லாந் தடுத்தேன் வந்த
வீரர்சூரர்தன்னை முடித்தேன் ❋
தொடுத்தபாணம்நூறு அடித்தேன் இப்போ
சோர்ந்துவிழராஜனே முடித்தேன் ❋
அபரிமிதமாகவே அலைகொண்டசேனையக் ❋
காற்றிலிலவம்பஞ்சாய்த் தூற்றிவிட்டேன்வேறி (அதட்)

பொது-திபிதை.

விளங்கியகுசலராஜன் வீறுடன்கோபித்து ❋
தெளிந்தவிரனிடுபெருந் திசையைப்போற்றிசெய்து ❋
வளர்த்ததோர்சேனையெல்லா மாண்டபின்மனதறிந்து ❋
கிளர்ந்தெழுபுவனத்தைநோக்கிக் கிட்டியேபார்த்திருந்தார் ❋

லவன்சொல் கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

நல்லதுகண்டாயன்னே நம்மிடபாணப் பூட்டி ❋
செல்லியேவுலகமெல்லாம் சிந்மேலுஞ்சுற்றிவந்த ❋
வல்லமையரசர் தம்மை வகையுடன்சுற்றிக்கொண்டு ❋
எல்லையில்மன்னர்மாண்டார் எத்திசைவல்லமையாராய் ❋
தம்பிநேரிறந்தோர்போகத் தரியமானபேர்கள் ❋
மெத்தவும்மூர்ச்சையாகி மெலிவுடன்கிடப்பாரன்று ❋
காடேபாணத்தாலே தயக்கியேவிழுந்திட்டாரே ❋

பொது-திபிதை.

பட்டதோர்சேனையெல்லாம் பரிவுடனின்றுபார்த்து *
இட்டதோர்குண்டலங்க ளியல்பணியாடையெல்லாம் *
திட்டெடுத்தாம்பரித்துச் சீதைக்குக்காட்டவேண்டி *
கட்டியேதேரிலவைத்துக் கருத்துடனிருந்திட்டார்கள் *

லவன் குசலவனுக்குச்சொல்கண்ணிகள் இ-ம் நவரோஸ் மிசுரதாளம்.

பாரினிலரசர்கள் பரிதனைக்காணவே *
படவென்னவிட்டிடுந்தார்கள்பாரும் அண்ணா
சீருடனவரவர் தேசத்திலிருக்காமல் *
சிந்தையடங்கினார் பாரும் அண்ணா
ஆராகிலுமின்றும் அசையாமற்பட்டபேர் *
அமர்ந்திங்கிருப்பார்கள் பாரும் அண்ணா
நேரமப்போருவோம் நெருங்கியிருக்குஞ்சேனை *
பூராயமாய்மெள்ளப் பாரும் அண்ணா
சதத்திற்குப்புரவி தலைமுடன்கட்டமந்த *
ஒருபுரவியைநன்றாய்ப் பாரும் அண்ணா
இந்தவத்தனிலே செத்தாப்போலிருக்கும் *
பத்தியிருக்குதப்போவோம் பாரும் அண்ணா
குத்துயிராயிருந்தாலும் குத்துப்பட்டிருந்தாலும் *
அத்தையாகிலுமென்ன பாரும் அண்ணா

லவன்-குசலனுக்குச்சொல்-திபிதை.

இத்தனைநாரம்வந்தோ மேத்தகுதேர்ப்பரியைக்காணோம் *
சத்தியேபார்த்துவந்தோம் துய்யனேயென்றுங்காணோம் *
குத்துயிரிருந்தாலுந்தான் கொண்டுநாம்போவோமென்றால் *
இத்தினைதனிலிந்தநோ மிருந்திடவர் முடித்தல்பார் *

(வ-ம்) அகோவாருமண்ணாவே இத்தனைதூரம்பார்த்துவந்தோம் எங்கும் ஒருகுதிரையாவது காணோம், காலாளிகளிருந்தாலுமப்பிடித்துக்கொண்டு போகலாமென்றால் அதுவுமில்லை இதோபார்த்தீரா அண்ணா திருட்டுமுழிமுழித்துக்கொண்டு தலையெடுத்து மறைக்கிறார்கள் இவர்களையாவது பிடித்துக்கொண்டுசீக்கிரமாய்ப்போவோம்வாரும் அண்ணாவே.

பொது-திபிதை

இனமுடனிரண்டுபேரும் ரணக்களந்தன்னிற்பார்க்க
அப்பொழுதன்காற்றுவரவும் அடிக்கடிமூச்செறிந்து
மனைசினிற்கபடமாகமாண்டவர்போற்கிடக்க
தனதாய்க்குசலவர்களாமோர்சுறுடன்பிடித்துக்கொண்டார்
(பொது-வ-ம்) அகோதெப்படியென்றால் அனுமானையும் சாம்பவானையும் பிடித்துக்கொண்டு குசலவர்கள் பேசிநவிதங்காண்



லவன்-குசலக்குச்சொல்லிக்கொண்டு-ஆசிரமப்போகிற-தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி

வாரும்வாருமண்ணா- ஆசிரமம்போவோம்-வாரும் வாருமண்ணா

அநுபல்லவி.

ஆருமெதிரில்லை அடவிவிட்டுநாமுஞ் *
சீருடன்றுயண்டை சேருவோமெய்ப்போ (வாரும்)

சரணங்கள்.,

வந்துவெகுநேரமாச்சுதே நாமிங்கே- *
சிந்தைகலங்கித் திகைக்கிறுளோதாயும் (வாரும்)
இந்தக்கரடியும் அந்தக்குரங்கையும் *
முந்திவிட்டோமாகில் சந்தோஷிப்பளோவாரும்
இந்தப்பணிகளெல்லா மெடுத்துக்கொண்டுநாமும் *
சிந்தையகிழவே சீதைமுன்னேவைப்போம்(வாரு)

குசலவர்கள்-சீதைக்குச்சொல்-திபிதை

அன்னையேயுந்தன்திவ்ய அடியிணைகமலம்போற்றி *
மன்னவராயெங்கள்வில்லால் வதைத்துமேகீர்த்திபெற்று *
பொன்மணியாடையெல்லாம் பொருந்தவேயெடுத்துக்கொண்டு
உன்னியகரடிமந்தியுபாயமாய்ப்பிடித்துவந்தோம் *

(வ-ம்) அகோகேளுந்தாயே எங்கள்பேரில் சண்டைக்குவந்தசேதீர்த்தராஜர்களைவென்று அவர்களுடைய கிரீடங்கள் மதாணிப்பதக்கம் ஆடையாபரணங்களெல்லாம் நாங்கள் விளையாடுகிறதற்கு எடுத்துக்கொண்டு இந்தக்கரடியும் குரங்கையும் பிடித்துக்கொண்டுவந்தோமம்மா

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி மிசுரதாளம்

ஆ-ஆ-அனுமாரோசிதென்னகுறை *
ஐயையோஅனுமாரே *
பாரினிலங்கைக்குப்பெருங்கடல்தாண்டிய *
பலனையெக்கேவிட்டுப்பாலர்க்கடங்கினும் (ஆ-ஆ-அனு

அனுமார்-சொல்லல்.

அன்னையேசொல்லுகிறேன்ஸ்ரீராமர் *
அவ்வயாகஞ்செய்யவே *
மன்னராமர்புரவியை வையகஞ்சூழவிட்டார் *
அந்தப்புரவிகட்டி-சிறியவர்-அரசரைமடித்தாரம்மா-அன்னே *

சீதை-சொல்லல்

சாமியும்வந்தாரோ-பரதருஞ் *
சமர்செய்யமுந்தாரோ *
பூமியிற்கீர்த்திபெற்றலட்சுமணரும் *
போர்செய்யவந்தாரோ-ஆ-ஆ-அனுமாரோ *

அனுமார்சொல்லல்

அவரும்வந்தாரம்மா-சிறியவர்மேல் *
ஆயுதமுந்தாரம்மா *
வந்தவர்தங்களையே-இந்தப்பாலர் *
வதைத்துமே மூர்ச்சை செய்தார் (அன்னை)

சீதை சொல்லல்

மைந்தனுமாரோ-ஸ்ரீராமர் *
தந்தையென் றுரைக்கொணுமோ *
விஜயலட்சுமணர்பரத சிறிய *
தந்தையென் றுரைக்கொணுமோ (ஆ-ஆ-அனு)

அனுமார்சொல்லல்.

தந்தையென்றறியேனம்மா-தாயே சீதாயுன் *
மைந்தரென்றறியேனம்மா *
இந்தச்சேதியறிந்தால்-கட்டுப்படவெனக் *
கிந்தவிதியேனம்மா (அன்னை)

சீதை-சொல்லல்.

விதியென்றுசொல்வீரையா-உம்மிட *
வீரமெங்கேயொளித்தீர் *
வீரியசவுரியத்தால் சிறியோரை *
வெல்லவகையில்லையோ (ஆ-ஆ-அனுமாரோ)

அனுமார்-சொல்லல்

வெல்லவகையேனம்மா இவர்கோலம் *
சொல்லிமுடியாதம்மா *
சண்டைமுனையிலம்மா-இவர்கள்விடும் *
சரங்களெமன்தானம்மா (அன்னையே)

சீதை-சொல்லல்.

சாமிதானெங்கே உடன்பிறந்த *
தம்பிமார் மூவரெங்கே-எங்கள் *
மாமிமாரெங்கே குலகுரு-வசிஷ்டரெங்கே *
என்னகாரணமையா கட்டுப்பட்டது காரணமையா (ஆ-ஆ-அ)

அனுமார்சீதைக்குச்சொல் இதிதை.

அண்டர்கள்போற்றுமெங்களன்னையே கேளாய்சீதாய் *
கொண்டல்போலிந்த்ராமர் கொடும்பரியாகஞ்செய்ய *
மண்டலம்பரியைவிட்டு வெருப்போதுபிடித்துக்கட்டி *
துண்டகரானபாலர் துரைகளை மூர்ச்சைசெய்தார் *

வசனம்.

அகோவாருந்தாயே ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ்செய்ய ஒருபுரவியைப்பூமிபிரதட்சணமாகவிட்டார் அந்தப்புரவிகாட்டைடைநோக்கியோடிப்போச்சுது அந்த இந்தப்பிள்ளை பிடித்துக்கட்டி



வைத்திருந்தான் அதனைக்கேட்கவந்தசேவகனை அடித்துக்கொன்றான் அதையறிந்து சத்துருக்கனர்வர அவனையும் மூர்ச்சைசெய்தானே இந்தப்பெரியபிள்ளைவந்து சத்துருக்னையும் ராம லட்சுமணனையும் பரதனையும் மூர்ச்சையாக்கி அவர்களுடைய ஆபரணங்களை எடுத்துக்கொண்டு யெங்களையும்பிடித்துக்கொண்டு வந்தார்களம்மா

பொருதிமிதை

சாம்புவனுமானுக்குஞ் சாகைவிடைகொடுத்து *
வேம்பெனபாலர்செய்த வினையெனமகிமைத்தால் *
வீம்புள்ளராகவர்க்கு வியாகுலம்வருமேயென்று *
தேம்பிநெஞ்சமிகமயங்கிச் சீதையுங்கூறுவாளே *

சீதைசொல்-கண்ணிகள்-இப்-கின்டா அடதாளம்.

தந்தைதனைவதைக்கவெந்தன்வயிற்றில்வந்தீர் பாலர்களே- இதைத்
தாரணியோர்கேட்டால்வெகுதாழ்ச்சியுமே பாலர்களே (அன்னம்
இந்தப்பாவக்குழுவையெந்தப்பிறப்பில்தீர்ப்பேன்- பாலர்களே
எங்கேயோமானமிடுக்கு தெரிந்தேனே- பாலர்களேஇப்போ
தங்காமலெந்தன் தம்பியிருக்கவிதோ பாலர்களே *
ஆங்கறும்படத்தி அனலாயெரியுதே பாலர்களே இந்த
துவிலிடையானுமனை வில்லாமேவேறு பாலர்களே *
பிள்ளையில்லாமல் பெருந்தவமிருந்தார்- பாலர்களே நீங்கள்
பிள்ளைபிறந்து பிதாவைக்கொன்றீர்களோ பாலர்களே *
எள்ளளவுகருணை யிருக்கமகிழ்த்தேனே பாலர்களே என்
வள்ளலைக்கொன்று வதுவைப்படுத்தீரோ பாலர்களே *
வில்லுமேனியினிற்கொல் லும்பாசகா பாலர்களே உங்கள்
வல்லமையிருமேல வெல்லத்துணிந்தீரோ பாலர்களே *
இல்லைநீதனித்துயிருக்கத்துணிவேறு பாலர்களே நான்
இட்சணமாவினைத்துட்சனமாய்ச்செல்வேனே பாலர்களே *

சீதைசொல்-திமிதை

கோத்திரந்தழைக்கவென்று குலமைந்தர்கள் பெற்றதற்குச் *
சாத்திரவிதியைமீறித் தந்தையைக்கொல்லவந்தீர் *
சத்தியதியில்லீடுவேமென்று துயிர்தரிக்கமாட்டேன் *
போற்றியமுனிவர்செய்த பிழையிதற்கென்னவேன் *

குசலவர்-சீதைக்குச்சொல்-கண்ணிகள் இ-ம்-
சதுகுலகாம்போதி ஆதிதாளம்:

அன்னையேயினிவென்ன செய்வோம் அறுப்பானியாமேதையா *
அந்தத்தையவதைத்தவர்கள் தரணியிலிருக்கொணுமோ *

ஆவியைவிடுவோமம்மா அன்னைநீகாண்பதற்கு. *
மேவியேதணலைமூட்டி வேகமாவிழுவோமம்மா *
ஐயமொன்றறிந்தோமான லர்ச்சித்துத்தொழுதிடோமோ. *
பிதாவென்றறிந்தோமானால் பூசித்தப்பணிந்திடோமோ *
ராமனென்றறிந்தோமானால்நாங்கள்விளையாடோமோ *
அப்பனைவதைத்தபாவம் ஆர்முழுகித்தீர்ந்திடுமோ-உன் *
னெள்ளளவுதாலிக்கம்மாநாங்காளெமனாகவந்தோமோதான் *
கடுகளவுதாலிக்கம்மா நாங்கள் காலனாகவந்தோமோதான்- *

குசலவர்-சீதைக்குச்சொல் திபிதை

அன்னையேயென்னசெய்வோம் ஆவியைவிடுவோமிப்போ.
உன்னிபதந்தைதன்னையுண்மையாய்வதைத்தாலே *
பன்னியகாசிபோயும்பாவமுந்தீராதம்மா *
வன்னியிற்குதிப்போமெங்கள் மாதாவேசிலவுதாரீர் *

வசனம்.

அகோவாருந்தாயே பிதாவைக்கொன்ற நாங்கள் காசியாத்திரை சென்றாலுந்தீராது ஆகையால் அக்கினிவளர்த்தி அதில்விழுறதேயல்லாமல்வேறென்னசெய்வோமம்மா.

சீதைசொல்தரு-இம்-ஆகிரி மிசுரதாளம்,

பல்லவி.

முனிநாதனைக்காணேனே இன்னமெங்கள் *
முனிநாதனைகாணேனே *

அநுபல்லவி.

முனிநாதனைகாணேன் முடிவெறயின்னம் *
அநியாயமோதெய்வ மலைச்சல்படுத்துதே (முனி)

சரணங்கள்.

பட்டயிடத்திற்படுங் கெட்டகுடியேகெடும் *
திட்டமிட்டிடுபுவிதிற் காட்டியகதையாச்சே (முனி)

ஐயருநாதர் மெய்யனைக்காணேனே *
துய்யராம்வால்மீகர் செய்யன்வரக்காணேனே (முனி)

இன்றுயாவக்குறை யென்றுசெய்தேனையோ *
மன்றனவாயிக்கித்து யிடாவுலாச்சுதே (முனி)



நாரதர்-பாதாளலோகம்-வருகிற-பொது-திபிதை.

சத்தையோற்சீதைகாணிற் முனமூய்வார்த்தையெல்லாம் *
உற்றுநாரதருங்கேட்டுவுளமிக மயங்கியப்போ *
சித்ரபாதாளலோகஞ் சென்றுவான்மீகருக்குப் *
பத்தியாயுரைப்பதாகப்பரிவுடன்வருகின்றாரே. *

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் சீதையானவள் புத்திரரால் நடந்தசேதியைப் பாதாளலோகஞ்சென்ற வால்மீகருக்கு நாரதர்சொல்லவருகிறவிதங்காண்க.

நாரதர்வருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்:

பல்லவி.

நாரதர்வந்தாரே-மகாமுனி-நாரதர்வந்தாரே.

அநுபல்லவி.

காரணகாரியுங் கண்டறிந்திடுங் *
கலகத்தினில் மிகுந்தெறிந்திடும் (நாரதர்)

சரணங்கள்.

சடைமுடியசைந்தாட-கரத்-தாழ்வடமொலியாட *
இடையில்வேஷ்டியாட-தோள்-விருக்குங்கீர்த்திகள்நீட
படையன்னவர்கள் யாவரும்பணிந்திடும் *
பாதம்வருந்தவே நாதகீதத்துடன் (நாரதர்)
வருணனிடத்திற்பேரான-அந்த-வால்மீகர்க்கினிதான *
கருணைவாரிதியான-ஞானக்-காட்சியினில்மேலான *
பெருமைமிகுந்த சீதையின்சேதியைப் *
பிரியத்துடனே தெரிவித்திடவே (நாரதர்)

நாரதர்-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

திடங்கொள்வால்மீகரேநம் சீதையின்மைந்தர்தானும் *
அடவியிற்போர்கள்செய்து அயோத்தியாளரசர்தம்மைப் *
படியினில்மூர்ச்சையாக்கிப் பாலர்கள்தாய்பாற்சென்றார் *
கொடியிடையழுகின்றாளக் கோலத்தைப்பாரீரோ. *

வ-ம்-அகோவாருமையா வால்மீகமகாரிஷியே சீதாதேவியைந்தரிருவரும் அயோத்தியையாளப்பட்ட ஸ்ரீராமனையும் அவர் தம்பிமார்களையும் மூர்ச்சையாக்கிவிட்டார் அதுகேட்டு சீதாதேவி புலம்புகின்றாள் நானதைச்சொல்லவந்தேன் நீர் சீக்கிரம் ஆசிரமம்போமையா வால்மீகமகாரிஷியே (வால்மீகர்-நாரதருக்குச்சொல்-வசனம்) அப்படியா யிதோபோகிறேன் நாரதமுனிவரே.

பொது திபிதை.

சீதையாள்புலம்பும்போது இருந்தநாரதருமப்போ *.
மேதினிவார்த்தையெல்லாம் விளம்பினார்பாதாளத்தில் *

காதலாய்முனிவர்கேட்டுக் கடினவேகத்திலோடு *
போதவால்மீகர்தானும் பூவனம்வருகின்றாரே *

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தச்சமையத்திலே ராமலட்சுமணர் பரதசத்துருக்கன் குசலவர்களுடைய பாணத்தினால் மூர்ச்சையாய் விழுந்தசேதியை நாரதரால் வால்மீகர்கேள்விப்பட்டு மிகவும் ஆதிரமாய் வருகிறவிதங்காண்க.

வால்மீகர்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம் அடதாளம்.

பல்லவி.

வந்தனர்வால்மீகர்-மனதில்மகிழ்வுகொண்டு *
வந்தனர் வந்தனரே *

அநுபல்லவி.

அந்தமாய்நாரதர் சொல்லியமொழிகேட்டு *
அகத்திற்சஞ்சலங்கொண்டு *

சரணங்கள்.

கடுமலைகள்விட்டு காவ்யாறுகடந்தாண்டு *
நாடுஞ்சீதையின்முன்பு (வந்தனர்)
காயத்துறுந்தவத்தை நீக்கியருட்பழுத்த *
கனதிகண்டைதன்னுடைய (வந்தனர்)
பவமாய்வினைதனைப் பரிகாரஞ்செய்திடும் *
பாக்யசிலாக்கிய ரிதேச (வந்தனர்)

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

எந்தையேமுனிவர்கோவே யென்னுடைபாலகர்க்கு *
தந்தையைக்கொல்வதற்கோ தனுர்க்கடிவித்தைசொல்லீர் *
எந்தனுக்குகந்தநாவி யிருக்கவேமனதுவைத்து *
அந்தராமர்சேதி தோசைகுதானுமாக்கக்கேளீர். *

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-ஆகுலகாம்போதி-[illegible] *
ஐடசேதிசேதிகேளீர் பாகஞ்செய்யப்போனவிடு *
உப்பவேவனத்திற்பாலர் உண்மையாகவேட்டைபோனார் *
வையகம்புகழும்[illegible]யாகஞ்செய்யச் *
சிய்யவோர்பரிதன்னைச் சிறுடனேபட்டயங்கட்டி *
யெய்யனுஞ்சத்துருக்கர் வேத்தர்கள்திரளாய்க்கூடி *
வையமுழுதுஞ்சுத்தி வருகையிலேயிந்தஊரில் *
வெய்யவனதியாக்காட்டில் வேகமாய்க்குதிரைவர *
மையலான்லவனுங்கண்டு பாய்ந்துடனேபிடித்துக்கட்டி *
செய்யவேசேவகர்கூட தேசிதன்னைக்கேட்கவுந்தார் *
கேட்டதொருத்தவரை மாட்டிஞர்சரங்களாலே *
நாட்டியசத்துருக்கர் தனுவெடுத்துவிட்டவே *
பூட்டியசரத்தாலிந்த புரியலவன்மூர்ச்சையானான் *
காட்டிலிலவனைக்கொண்டு தலுடனேபோகையிலே *



நீட்டியசிலைவிழியாள் சேயிழையாளோடிவந்து *
நாட்டியலவனார்சேதி நானறிந்தழுகுப்போது *
வேட்டைபோனகுசலன்தேடி வில்லெடுத்துவோடியந்த *
போட்டியாகவந்தெதிர்த்தபுஜபலனைமூர்ச்சைசெய்தான் *
சத்துருக்கலட்சுமணருந் தாவியதோர்பரதரும் *
உத்தமரானராமபத்ரர் ஒன்றாதப்பிப்போகொட்டாமல் *
வெற்றியாகச்சரங்கள்பூட்டி வேதையாகமூர்ச்சைசெய்தான் *
நத்தியேயவர்பூஷணங்கள் ஞாயிறொளிகிரீடங்கள் *
வெற்றியானையெல்லாம் விளையாடவேணுமென்று *
சுத்தியேமூட்டைகள்கட்டித் தூரிதமுடன்வருகையிலே *
புத்தியினுயர்ந்தவீரர் புஜபலவனுமான்றன்னை *
சத்தியவான்சாம்புவானைத் தகமையாக்கயிற்றாற்கட்டி *
வெற்றியாகக்கொண்டுவந்தார் வேடிக்கையறிந்திலீரோ *
ஐயரேநீர்செய்தகோலம் ஆவிவையவிடுவேனிப்போ *
மங்கிலப்பிச்சையையா மாதவரேதாருமையா *
ஐயரேயெழுப்புமையா அருமுனியரசர்கோவே *
சாமியையெழுப்புமையா தையலாள்தழைக்கவேணும் *
லட்சுமணர்பரதர்தம்பி ஞாயிறொலிசத்துருக்கர் *
உத்தமரேசேனையெல்லாம் ஒழியேயெழுப்புமையா *
இப்பொழுதெழுப்பினாலே யென்னுயிர்தரிப்பேனையா *
பாலர்கள்முகத்தைப்பார்த்து யென்பத்தாவையெழுப்புமையா *
சரணஞ்சரணமையா தவத்திற்சிறந்தவரோ *

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபிதை.

அஞ்சிடவேண்டாமம்மா அமர்க்களத்தன்னிலிப்போ *
துஞ்சிடும்ராமர்சேனை துரைகளையெழுப்பித்தாரேன் *
மிஞ்சியேமூர்ச்சையாகி விழுந்திடும்ராமர்தன்னை *
அஞ்சனவிழியாளேநா மடவுடன்பார்ப்போம்வாராய் *

வ-ம் அகோவாருமம்மா நீபயப்படவேண்டாம் ஸ்ரீராமருடைய தம்பிமார்களையும் சேனைகளையும் எழுப்பித்தருகிறேன் மூர்ச்சையாயிருக்கின்ற ரகுநாயகனைப்பார்ப்போம் வாருமம்மா.

சீதைசொல்-வசனம்-அப்படியே போவோம் வாருமையா.

பொது-திபிதை.

கண்டனள்சீதைதானுங் கார்முகில்ராமனென்னும் *
விண்டுவையயர்ந்திப்பூமி விழுந்தவள்மூர்ச்சையாகிக் *
கெண்டைசேர்விழியாள்ராமர் கீர்த்திக்குக்குறைவாமென்று *
வண்டணிகுழலாள்சீதை மயங்கியேபுலம்புவாளே *

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-மிசரதாளம்.

ஐயோதானென்செய்வே னுவிபதறுதே ராமராமா-உ நமக்கு
அன்னமகளெந்தனையோ அடவியில்விட்டீரோ ராமராமா

கூடியிராவணன் கும்பகர்ன்முதலானோரை — ராமராமா-அந்த
கொன்றவனுமையை யின்றுமொழித்தீரோ — ராமராமா
ஆழியின்மாய னனந்தல்வளர்ந்தாற்போல் — ராமராமா-இந்தக்
கூழியகாட்டில் தூங்கவிதியேனோ — ராமராமா
பாவிகைப்பாணந்தாற் பட்டதனாலேதேச — ராமராமா-இந்தப்
பாவியைப்பார்த்தொரு பால்மொழிபேசீரோ — ராமராமா
வாயைத்திறந்தாலும் வாய்முத்தஞ்சிந்துமோ — ராமராமா-உந்தன்
மாயத்தைவிட்டு மறுவார்த்தைசொல்லீரோ — ராமராமா

சீதைசொல்-கலி.

ஐயையோவென்னுயி ராகியநாதா *
உய்யவேவனந்தி லிருகுபாலகரால் *
மெய்யெலாந்தளர்ந்து விழுந்திசோவதேனோ *
ஐயனேவுமக்கு அனைத்தேனோவதியேன் *

சீதைசொல்-பிரலாபக்கண்ணிகள்-இ ய்-எதுகுலகாம்போதி யீசுரதாளம்,

மூகம்தவேறான முக்கனிகளுக்கள்ளெண்டும் *
செகத்தனில்மனமேசெய்வதுநீதீதியோ *
வனத்திற்பதினாலுவருஷம் வாராதிருந்தீர்கள் *
மகனிடவாளினாலே மயக்கமாய்விழுந்திட்டீரோ *
பத்திரமாய்ப்போகவெல்லாம் பாரையாளுமென்று *
இத்தினத்தைவிட்டுநாங்க ளேகும்போதில்லாதிருந்தீரோ *
சுத்தமானமைந்தராலே தூங்குறீரோபரதரே *
அன்னவேசிமையாண்டு அன்னீதம்வராமலேதான் *
சொன்னபடியிருவராகி சுகத்துடனிருந்தீர்கள் *
வர்ணமானமைந்தன்கையில் மயங்கினீரோசத்ருக்கா *

சீதை வால்மீகர்க்குச்சொல்-திபதை.

மாதவமுனிவரேயென் மன்னவர்முதலோரை *
போதுபோமுன்னேயிந்தப் புனிதரைஎழுப்புமையா *
இதனமுகத்தைப்பார்த்து சேனநானாச்சகிப்போ *
ஆசியேமுனியேதிரு மனுக்கிரகஞ்செய்குவீரே *

வசனம்-அகோவாருமையா முனிநாதரேபொழுதுபோமுன்னே ராமலட்சுமணர் பரதசத்ருக்கனா என்மேல் அநுக்கிரகஞ்செய்து எழுப்பவேணுஞ் சுவாமி.

வால்மீகர்-வசனம்.

அப்படியே நல்லதம்மா சீதாய்.

வால்மீகர்-சிஷ்யர்களுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்விவேகசித்தாமணி, அப்பா நான்மாரிக்க சித்தமணிதென்கமண்டலத்தில்ஜலங்கொண்டுவாரும்பிள்ளாய்.

சிஷ்யர்சொல்-வசனம்

அப்படியே கொண்டுவந்தோம் சுவாமி.



வால்மீகர்-ஸ்ரீராமர்முதலானவர்களை-எழுப்புதல்-கண்ணிகள்
இ-ம்-பூபாளம்-ஏகதாளம்.

ஆதிமூலத்தருளானசாந்தனே அரிகுமாரனே — யெழுந்திரும்
ஜோதிகயிலாயர் திருவையால்வளர் சந்த்ரபரதரே — யெழுந்திரும்
இத்தினமுடையதேவராருளினால்பிறந்த சத்ருக்கனா — யெழுந்திரும்
சந்திரமுனிவர்களருளினால்தான சத்ருக்கனரேநீ — யெழுந்திரும்
பத்துதம்கட்டுப்படைத்தஅயோத்திநகர்பாரியருமாரே — யெழுந்திரும்
பாதுவீரவாழ்விரேன்றுருகியிந்த மன்றுனிளசாலமும்வாழ்வீரோ, அதையமென்றுவாழ்வீரேயிந்த அலைகடல்போலவேவாழ்வீர்.

ஸ்ரீராமர் மூர்ச்சைதெளிந்தெழுந்து வால்மீகருக்குச்சொல்-திபதை

எங்களையெழுப்பிவிட்ட மிசைபெறுமுனியேகேளீர் *
உங்கள்தவமுடையதேவ முனைந்திடவேணும்வீட்போ *
சங்கையில்லாமல்வென்ற சமர்த்துள்ளசிறுவரோ *
இங்குடன்விவரமாக வெடுத்துக்குறைசெய்வீரே *

வசனம்-அகோவாருமையா முனிநாதரே நாங்கள் மூர்ச்சையாயிருந்தவனை எழுப்பிவிட்டீரே நீங்களாக உங்கள் தவமேதவ மேன்மை மகாசிரஞ்சீவியாய்நிற்கிற இந்த இரண்டுபிள்ளைகளார் தெரியச்சொல்லும் சுவாமி.

வால்மீகர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை

பல்பிருந்தகுமாரா சீதைதன்னைப் *
பகரியகாட்டில்விட்டா பவமமெலிந்து *
இயல்பெருக அழுகையினிமேலானந்தமன்டு *
ஜாதகங்கள்சொல்லவொரு தனயனீன்றாள் *
திலகமிருந்தக்காட்டையிலொருவனீன்றாள் *
சமயந்தனமனவால்மீகர் சாற்றக்கேளும் *
குலவீரத்தியவர்களுக்கு மணமியற்றி *
நாட்டினவரசட்டடங்கட்டுவரவே. *

வ-ய்-அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா உன்தேவியாகிய சீதையை அகோரமானகாட்டில் நீவிட்டமாத்திரத்தில் அவள் கோடுகொடுஞ்சீனிப்புடப்போதுயாங்கண்டு நம்முடைய ஆசிரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோனேன் அவ்விடத்தில் இந்தமூத்தப்பிள்ளையைப்பெற்றாள் இதோயிந்த இளையப்பிள்ளையை நான்தருப்பையினால் சிருஷ்டித்தேன் இந்தஇரண்டுபிள்ளைகளின்பெயரோ மூத்தவன் குசலன்-இளையவன்லவன்-என்பேர்வால்மீகர்-ஆகையால் உனது தேவியான சீதையையும் இப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுபோய் அயோத்தியாபுரியில் இவர்களுக்குத் திருமணமுடிப்பித்து குசலனுக்கு இளவரசுபட்டங்கட்டி வாழ்ந்திரும் பிள்ளாய் ராமச்சந்திரா.

ஸ்ரீராமர்-வால்மீகருக்குச்சொல் திபிதை.

மாதவமுனியேயுத்தம மலரடிபோற்றிபோற்றி
காதினிலிதனைக்கேட்டீக் கருணை[illegible]தோஷமானேன்
ஆதலாற்றேவரீரும் அயோத்தி[illegible]
ஓதியவாறேசெய்ய [illegible]வேவேண்டும்

வ-ம்-அகோவல்மீகருஷிகளே முனிநாதரே நடந்தவிர்த்தாந்தங்களையெல்லாங்கேட்டீர் அதிகசந்தோஷமானேன் தாங்கள்சொல்லியவண்ணம் சிறுவர்களுக்கு [illegible] இதைகண்ட[illegible]நடத்துவதற்குத்தாங்களும் அயோத்திக்குவரவேண்டியது சுவாமி.

வால்மீகர்-வசனம்-அப்படியேவருகிறேன் ராமச்சந்திரா.

குசலவர்-ஸ்ரீராமர்முதலோர்க்குச்சொல் திபிதை.

மறைமுறைதெரியதித்த மன்னவாநின்றாள்போற்றி
இறைகுடிதாவெயிற்றச் சிறுவனைக்காப்பாய்போற்றி
அறிவிலாச்சிறியோர்செய்த அபசாரம்பொறுப்பீர்போற்றி
சிறியதம்மக்களேயுங்கள் திவ்வியமலர்த்தாட்போற்றி

குசலவர்க்கு ஸ்ரீராமர்முதலானோர்-வாழ்த்து-திபிதை.

பதியினிலிணையிலாத பாக்கியரேநீங்கள்வாழி
சதுர்மறைபுணர்த்தவெங்கள் தவக்குலநீங்கள்வாழி
மதியினிலுணர்ந்தநேத்ர மணிகளேநீங்கள்வாழி
அதிவிதரணச்சிங்கார அழகரேநீங்கள்வாழி

சீதை-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

என்றுயிர்க்குயிர[illegible]யின்றவரேநின்றாள்போற்றி
அன்றுமென்கண்ணுளாநின்ற ஜோதியேநின்றாட்போற்றி
மன்னவர்வணங்குகின்ற வற்புதமலர்த்தாட்போற்றி
தன்னிலயோத்தியாளும் நான்மறைப்பொருளேபோற்றி

ஸ்ரீராமர் சீதைக்குச்சொல்-திபிதை.

அருகமொழிக்கிசைந்த [illegible]தமேவாழிவாழி
[illegible]கேயெந்த [illegible]வாழிவாழி
[illegible]யராகுமென் [illegible]வதனவாழி
அருசிடமேவண்டாருசித[illegible]வாழி.

மைத்துனர்கள்-சீதைக்குச்சொல்-திபிதை.

பெற்றிருந்தாய்க்குமேலாய்ப் பெட்புறுந்தாயேயெங்கள்
குற்றங்கள்தவிர்ப்பதும்பொறு [illegible]விளக்கேபோற்றி
கற்றவால்மீகர்கிருபை கடாட்சத்தா[illegible]தம்மைப்
பெற்றஜானகியேயுத்தம [illegible]மலர்த்தாட்போற்றி

[illegible]மைத்துனருக்குச்சொல்-திபிதை.

பேதையான்[illegible]யில் [illegible]செய்ததந்தை
[illegible]மைத்துனரேவாழி
[illegible]திசரப்பாதுகாத்த
[illegible]வாழிவாழி



ஸ்ரீராமர்-தேரின்மீதேறிச்சொல்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

போவோம்வருவீர்கள்-அயோத்திக்குப் - போவோம்வருவீர்கள்

அநுபல்லவி.

திவேழுந்துதிக்குந் தியானவால்மீகரே
செப்பும்தம்பிமாரே இப்போதேநாம் (போவோ)

சரணங்கள்.

அனுமானே ஜாம்புவானே காலசித்தனே
அடல்கொளரண்ய ராஜனே
தனதாஞ்சுவேல ராஜனே மகாப்பிரதாபந்
தங்குமட்ச யந்தனே
கலமிகுமாருதியின் காளையெனவுதித்த
கனிவுள்ளமட்சயந்த அனுமானேயெல்லவரும் (போ)
படிபுகழ்ராஜ தீரரே விஸ்வாசமிகப்
படைத்தக்கட்டிய வீரரே
கெடிபெருஞ்சேனை தீரரே கரிபரிதேர்க்
கெல்லா மதிகாரரே
வடிவுள்ளவாள்சூலம் வளைதடிசக்கரங்கள்
வளையுடன்[illegible] அளகர்த்தராஞ்சூரரே (போ)
உத்தம ஜானகியே யெந்தனுடைய
உயிராகு வைதேகியே
புத்தமுதத் தேனே அன்னமெனவே
பொருந்துமினிய மானே
இத்தரையினில்யாரு மிணையின்றியேயுதித்த
சித்தசனைப்பழித்த செல்வக்குசலவரே (போ)

பொது-திபிதை.

வையகத்துள்ளோர்போற்ற மாதவர்மிகவும்வாழ்த்த
துய்யனல்லயோத்திமேவிச் சுகமுடன்வந்தோரியாரும்
பையவேயமுதுட்கொண்டு பன்மணிக்கொலுவிற்சேர
ஐயனும்ராமச்சந்திர ரப்போதுகூறுவாரே

பொது வசனம். அகோதெப்படியென்றால் ஸ்ரீராமருடன் சகலருங் கொலுவில்வந்து வீற்றிருக்கையில் ரகுநாயகர் சொல்லுகிறவிதங்காண்க.

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல்-திபிதை

சமையத்திலுசிதஞ்சொல்லுந் தம்பிசத்துருக்காகேளாய்
அமைவுறுமஸ்வயாகம் அன்புடன்செய்வதற்கு
நமதுபட்டணங்கள்முற்றும் நலமுடனலங்கரிக்க
விமலமாய்ச்சேருவைக்கு விளம்புவாய்விரைவிற்றனே

வசனம்-அகோவாருந்தம்பி சத்துருக்கா நாம் அஸ்வமேதஞ்
செய்யவேணும் ஆகையால் நம்முடைய அயோத்தியாபுரிமுழு
துயிப் பச்சைப்பந்தல்களிட்டு அலங்காரஞ்செய்யும்படியாய்ச்சே
வைக்காரனுக்குத்திட்டஞ்செய்வாய் தம்பி சத்துருக்கா (சத்து
ருக்கர்சொல் வசனம்) அப்படியே செய்கிறேனண்ணாவே.

சத்துருக்கர்-சேருவைக்காரனுக்குச்சொல்-திபதை.

காரியகாரியங்கள் கண்டுடனே நித்தியத்தனுஞ் *
சேருவைக்காரனேவாய் சீக்கிரமாகச்சென்று *
பாரியயோத்திமுற்றும் பார்ப்பவர் மகிழ்வதாகச் *
சீர்தாயலங்கரித்துச் சீக்கிரம்வருகுவாயே *

வசனம்-அகோவாருஞ் சேர்வைகாரா நம்முடைய அயோ
த்திமுற்றும் யாவரு மதிசயிக்கும்படியாய்ப் பச்சைப்பந்தல் ம
கரதோரணம் வாழை கமுகு முதலியதுகள் கட்டும்படியாய்த்
திட்டஞ்செய்துவாரும்பிள்ளாய் (சேர்வைக்காரன்-வசனம்) அப்
படியே செய்கிறேனசுவாமி.

நயனா-அலங்கரிக்கிற-சங்கதிகள்-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பச்சைப்பந்தல்களைச் — கூட்டினார்-நல்ல
பாக்குவாழைகமுகு — நாட்டினார்
உச்சிதமாக்க — எமைத்தார்-ஒளி
யுமிக்கண்ணாடிகள் — சமைத்தார்
நடைமணிமுடைகள் — பூட்டினார்-திவ்ய
ரனத்துக்கோப்பேட்டிகள் — மாட்டினார்
வளங்கள்பலவித்த — தூக்கினார்-மகரத்
தோரணமேவிக்கும்படி — டாக்கினார்
குத்துகத்தப்பத்தால் — தீத்தினார்-சந்தன
கஸ்தூரியாத்கோலஞ் — சாத்தினார்
பத்திபத்தியாய்ப்பட்டம் — பரப்பினார்-வாத்தியம்
பலவாகமுழுதும் — திரப்பினார்

பொது-திபதை.

தேவாதிதேவனே அஸ்வயாகஞ் *
செயவசிஷ்டர் முதலோர்கள்தாயச்செய்து *
மூவருக்குமுனிவோர்க்குந் தேவருக்கு *
முயற்சிசெய்யுமஷ்டதிக்கும் பாலகர்க்கும் *
யாவருக்குமினி அடனே அவிர்ப்பாகத்தை *
அயோத்திநாடாருமன்ன னளிக்கவிப்பால் *
பூவிருந்தயியாவருக்குந் தெரிவதாய்ப் *
புகழ்அயராமருடனே மகிழுவாரே *



(பொது-வசனம்) அகோதெப்படியென்றால்ஸ்ரீராமர் அஸ்வமேத
யாகத்தைவசிஷ்டர்வால்மீகர்முதலாகியபெரியோர்களால்நடப்பி
த்துயாவர்க்கும்அவிர்ப்பாகங்கொடுத்து மகிழ்வுற்றிருக்கையில்ஸ்ரீ
ராமர் குசலராஜனுக்குத் திருக்கலியாணஞ்செய்து வைக்கிறவிதங்
காண்க.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

இஷ்டங்கொளலக்ஷ்மணநம் மிளவலாங்குசலனுக்கும் *
சட்டங்கொளரண்யராஜன் றன்மகள்விபுதையாட்கும் *
திட்டமாயுதையத்திற்குத் திருக்கலியாணமென்று *
பட்டணமுழுதும்பேரி பாங்குடனறையச்செய்வாய் *

(வ-ம்) அகோவாருந்தம்பிலட்மணநம்முடைய (குசலராஜனுக்
கும்) அரண்யராஜனுடையகுமாரத்தியாகிய(விபுதையம்மாளுக்கு
ம்)நாளைசூரியவுதயத்திற்குத்திருக்கலியாண முகூர்த்தமென்றுபட்
டணமுழுதும் பேரிகையறையும்படிசெய்வாய் தம்பிலட்சுமணா.
லட்சுமணர்சொல்வ-ம்-அப்படியேசெய்துவைக்கிறேனண்ணாவே

லட்சுமணர்-சேனாதிபதிக்குச்சொல்-திபதை.

நயமிகுந்தசேனாதி பதியேகேளாய் *
ஸ்ரீராமர்மகன்குசல ராஜனுக்கும் *
நயமிகுந்த அரண்யமகா ராஜனீன்ற *
நற்குணஞ்சேர்விபுதையெனும் நாயகிக்கும் *
வயமிகுந்தநாளையுதயத்தினுக்கு *
மணமெனவே அயோத்திநகர்முழுதுநீதான் *
சயமீதிற்பேரிகைவைத் தறிக்கைசெய்து *
கடிதினிலேயிங்குவந்து கழறுவாயே *

(வசனம்) அகோவாருஞ் சேனாதிபதியேஸ்ரீராமமூர்த்தியின்
குமாரனாகிய (குசலராஜனுக்கும்) வாரணபுரியை யாளப்பட்ட
சோமகாசமகாராஜனுடைய புத்திரராகிய அரண்யமகாராஜன் கு
மாரத்தி சௌபாக்கியவதி (விபுதையம்மாளுக்கும்)நாளைசூரியவு
தயத்தில் திருக்கலியாணமென்று யானையின்மீது பேரிகைவைத்
து அயோத்திமாநகர முழுதும் அறிக்கைசெய்வாய் சேனாதிபதி
யே (சேனாதிபதி-வசனம்) அப்படியே செய்துவருகிறேனையா.

சேனாதிபதி-மாவுத்தனுக்குச்சொல்-கவி.

திடங்கொள்மாவுத்தனே திரள்கரியொன்றில் *
அடல்கொளச்சிங்காரித் ததைக்கொண்டுவாராய். *

மாவுத்தன்சொல்-வ-ம்-அப்படியே இதோகொண்டுவந்தேனையா.

சேனாதிபதி-யானையின்மீதேறி-பேரிகையறைகிற-வசனம்.

அகோராஜாதிராஜன் ராஜப்பிரகாசன் அயோத்திமகாராஜன் ஸ்ரீ
ராமச்சந்திரமூர்த்தியின்திருக்குமாரராகிய குசலராஜனுக்கும் வா
ரணபுரியை யாளப்பட்ட சோமகாசமகாராஜன்மூத்தபுத்திரராகி

ய-அரண்யமகாராஜன்குமாரத்தி சௌபாக்கியவதி (விபுதையம்மாளுக்கும்) நாளையத்தினஞ் சூரியவுதயத்திற்குத் திருக்கலியாணமாகையால் அதிகாரியத்திற்கு மச்ச-மராட-கற்னாட-காம்போஜ-காளிங்ப-குருகு-குடகர்-மகதர்-குகுதர்-சாளவர்-வங்கர்-அங்கர்-கொங்கணர்-குச்சரர் ஈழர் கவுடர்-யவனர் முதலாகிய ஐம்பத்தாறுதேசத்து ராஜர்களும் எங்கள் அயோத்தியாபுரியிலுள்ளவர்களும்வந்து சேரவேண்டியது திமிம்-திமிம்-திமிம்-திமிம்.

திருக்கலியாணஞ்செய்தல்-பொருத்தவிதை.

துங்கமுகமுத்து நவரத்நத்தாலுஞ் சொல்வரியமரகதமாணிக்கத்தாலும், பொங்குமுகஞ்சதுர்ப்பந்தலமைத்தவின்றேர் புனைமுறைபேதினியோர் வியப்பதாகத், திங்கள்முகவிபுதையெனுமின்னுள்வந்து சேர்ந்தவுடனாசாங்களிச்செய்திட்டுத், தங்கள்தவிஷ்பதியைவிட்டு வந்தெல்லோருங் கார்த்திட்டார்மனக்களிப்புகூர்ந்திட்டாரே.

கன்னிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

| | |
|---|---|
| ராஜர்பவர்கள்வந்து | சேரவேராரு |
| ராமராச்சியங்களிட் | பேறவே |
| வாசம்பலவிதமாய் | விசவேவத்த |
| மறையவர்துத்களோம் | பேசவே |
| மதர்குருதர்மூர் | வருகவே-பல |
| வாதியவோசைகள் | பெருகவே |
| கனத்திற்பூமழை | பெய்யவேதிருக் |
| கல்யாணச்சடங்குகள் | செய்யவே |
| சித்திரதீபங்க | ளேற்றினர்-அத்தத் |
| தெருவெங்குந்தூபங்கள் | சாற்றினர் |
| முத்துநகைகளை | யிட்டனர்-மண |
| மொய்க்கவேபுறம் | பட்டனர் |
| அரண்யராஜர்மனம் | பூரிக்க-அவரை |
| யண்டினோர்கள்மெய் | பாரிக்க |
| கருணையுள்ளவர்கள் | மெய்க்கவேசில |
| கணிகைமார்களிகள் | பிரம்மிக்கவே |
| மின்னார்கநடனங்க | ளாடவும்-சில |
| பின்னார்கள்சங்கீதம் | பாடவும் |
| பொன்னார்க்கவரிகள் | வீசவும்-சில |
| பூவையர்புதுமைகள் | பேசவும் |
| மணவறைமீதினி | லேறவே-பக்கம் |
| வதிஷடர்வால்மீகருட் | காரவே |
| இளையிலோமார்க்கினி | வளர்த்தார்-நரும |
| மென்னும்பயிலா | விளைத்தார் |
| ஈதுமனங்களிப் | பேறவும்-எங்கள் |



171

| | |
|---|---|
| ஸ்ரீராமர்களிப் | பூறவும் |
| மாதவராசிகள் | சாற்றவும்-வேத |
| மறையவரட்சதை | தூற்றவும் |
| திருமங்கிலியத் | தரித்தார்-யாருஞ் |
| சேர்ந்தட்சதையை | விரித்தார் |
| இருவருங்கைப் | பிடித்தார்-வதிஷ்ட |
| ரெல்லாச்சடங்கு | முடித்தார் |

பொருது-திபிதை.

சந்தனப்புட்பத்தோடு தாம்பூலமளித்தியார்க்கு *
பந்திபோஜனங்களிட்டுப் பாங்குடனுபசரித்து *
சுந்தரமணத்தின்சேதி சொல்லிக்கொண்டிருக்கலிப்பால் *
அந்தமாய்ச்சோபனங்களஞ்செயநினைத்திட்டாரே *

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபிதை.

கனமுடனெதிரில்நிற்குங் கட்டியக்காராகேளாய் *
மனையினிற்குசலனுக்கு வளர்சுபசோபனங்கள் *
இனிநடனடப்பதாலே யிரவிற்பிராமணமின்னுரைத்து *
தனதுடனழைத்துச்சோப னப்பாடச்செய்குவாயே *

(வ-ம்) அகோவாருப்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய குசலராஜனுக்குச் சுபசோபனமாகையால் இன்றிரவில் பிராமணமாதரை அழைப்பித்துச் சோபனப்பாடச்செய்வாய்கட்டியக்காரா (கட்டியக்காரன்-வ-ம்) அப்படியேசெய்துவைக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன்-பிராமணமாதர்களுக்குச்சொல்-திபிதை.


தனமிகத்தருவோருங்கள் தனமனவுறுதிக்கொங்கள் *
இனமிகமகிழ்வதாக யிருகரங்கூட்டிநன்றாய்க் *
கனமுடனிடைகுறுக்கக் கட்டியனுனமகிழ்வதாகத் *
தொனியுடன்வந்திப்போது சோபனப்பாடுவீரே *

(வ-ம்) அகோசாருப்பிராமணமாதர்களே உங்களுக்கு நல்ல வெகுமதிதருகிறோம் யாவரும் நாலுமெச்சும்படியாய் ஸ்ரீராமர் மனையில் சோபனப்பாடவேணும்வருகுவீர்பிராமணமாதர்களே (பிராமணமாதர்கள்-வசனம்) இதோவருகிறோம் ஐயா.

சோபனம்-நாத-இ-ம்-புந்நாகவாரளி ஆதிதாளம்.

சோபனமடி சோபனமே சுபசோபனம் சோபனமே

| | |
|---|---|
| புகழ்ஸ்ரீ | ராமனுக்கும் |
| புன்னையவதிஷ்டர் | வால்மீகர்க்கும் (சோப) |
| லட்சுமணருக்கும் | பரதருக்கும் |
| தாடரியத் | திருக்கருக்கும் (சோப) |
| மும்மூர்த்திகளுக்குத் | தப்பிருகனுக்குக் |
| முகுந்தனுக்கும் | நவகிரகத்துக்கும் (சோப) |
| முப்பத்திமுக்கோடி | தேவர்களுக்கும் |
| முனிவர்சத்திய | ரிஷிகளுக்கும் (சோப) |



ஸ்ரீராமஜெயம்.

குசலராஜனுக்கு

# இளவரசுபட்டங்கட்டல்

பொது-விருத்தம்.

மாதவவசிஷ்டர் வால்மீகர்பிருகு மகிழ்ந்தலைக் கோட்டுமாமுனிவர் *
போதகஞானருவங் கௌசிகர்முதலாய்ப் பூதலமன்னவர் சூழக் *
காதல்சேரயோத்தி ரகுராமமூர்த்தி காளையாங் குசலராஜனுக்குப் *
பூதலமகிழ யிளவரசதனைப் பூணுவர்களிப்புகா னுவரோ *

ஸ்ரீராமச்சந்திரர்-குசலராஜனுக்கு-இளவரசுபட்டங்கட்டுதல்-சரு-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி

இளவரசுபட்டங்கொண்டானே-குசலராஜன்-இளவரசுபட்டங்கொண்டானே *

அநுபல்லவி

தவமுனிவர்களும் சனமனிதர்களும் உளமகிழ்ராஜர்வச தனகர்த்தரனைவரும் (இளவரசு)

சரணங்கள்

தேவதுந்துமிபோட சித்தர்கின்னரர்பாட பாவலர்தந்தணர் பலவாழ்வாழிகள்பாட (இளவரசு)
வசிஷ்டர்விஸ்வாமித்திரர் வால்மீகர்மகிழ்வுற இஷ்டமுடனேநாட்டியேசுவாத்தியஞ்சாட (இளவரசு)
பரதசத்துருக்கரும் பாங்குடனருகில்வர நரபதியோர்களகாண நங்கையர்நடனமிட (இளவரசு)

வாழி-விருத்தம்.

சீர்மிகுந்தகுசலவநாடகமும்வாழி ஸ்ரீராமர்வாழிபினையோருமவாழி *
பேர்மிகுந்தஞானியோரறவோர்வாழிபெருமைமிகுமுனிவோர்கள்மன்னர்வாழி
பார்மிகுந்தயிந்தநன்னூடகத்தைப் பண்புடனேயாடினபேர்பார்த்தபேரும் *
ஏர்மிகுந்தவுலகிவிதைப்படிப்போர்கேட்போரியாவர்களுமின்பமுறவாழிமாதோ

குசலவநாடக முற்றிற்று.

சிவமயம்.

# விளம்பரம்

இதனாலறிவிப்பது யாதெனில், இந்தக் குசலவநாடகம்பட்டு ப்பிரதிகளிற் பலவிதமாகச் சிலவற்றிற் குறைந்தும், சிலவற்றில்மி குந்தும், கூறியதையேகூறியும் இருந்தமையால் அதுகளை உத்தர ராமாயணத்திற் கொள்ளும்படியாய்த் திபிழைகளைத் திருத்தியும், தருக்கள் கண்ணிகளைப்பிரித்தும் நூதனதிபிழைகள் தருக்கள் பாடியும் வாசிப்பவருக்கு மனவுச்சாக முண்டாகும்படியாயும் இந்நாடகத்தைச் சொல்லிவைக்கும் உபாத்தியாயர்களுக்குச்சங்கடமில்லாமலிந் நாட்டியமாகப்படிக்கவும் சபைகளிற்பிரசங்கிக்கவும், இராகதாளங்களைப்பொருத்திவைத் தச்சிட்டோம்.

சென்னைப்பட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை செங்காங் கடைச்சந்திக்க நாட்டுபிள்ளையார் கோயிலுக்கருகில் ரங்கப்பட் டணம்சுப்பிரமணியமுதலியார்தெருவில்மேன்மை வாடை (உ அ) வதுகதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் [illegible] மணி[illegible] அச்சுக்கூடத்தில் அகஸ்தியர்தேவாரத்திர ட்டு [illegible] திருவிளையாடல் திருப்பல்லாண்டுபெரியபுராண [illegible] இவைமுதலிய

அருட்பாவும்
சானந்தசௌபூரணமும்.
[illegible]வசனமும்
ஞானவாசிட்டமும்
[illegible]மும்-உரையும்
இராமாயண[illegible] மூலமும்-உரையும்
[illegible]மும்
ஜோதிநாடகமும்.
சதவீர[illegible]வணங்களும்
சாரங்கதரா கதை
திருப்பராணம்மூலமும்-உரையும்
சிவநேசவாசிலாசம்
பத்திரசலராமதாஸகீர்த்தனை.
பெரிசி-சின்னசாமிகீர்த்தனை
மன்மதநாடகம்
சுப்பரமணியர்-பதம்
பிரகலாதனவிலாசம்
ருக்குமாங்கதவிலாசம்

இந்நாட்டுபலவித தமிழ் புத்தகங்கு வர்த்தியமுதலான புத்த கங்களும் விலைசாகமாய் விற்பனைசெய்கிறபடியால் வேண்டியவர் கள் மேற்சொன்ன வீட்டில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.